# கலைக் கல்வி

## வள நூல்

**ஒன்று முதல் நான்கு வரையுள்ள வகுப்புகளுக்கு**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2014

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா,
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா,
விந்திய ஹிமாசல யமுனா கங்கா,
உச்சல ஜலதி தரங்கா,
தவ சுப நாமே ஜாகே,
தவ சுப ஆசிஸ மாகே,
காகே தவ ஜய காதா
ஜனகண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
ஜய ஹே, ஜயஹே, ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு . இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்து கொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

நான் எனது நாட்டினுடையவும், நாட்டு மக்களுடையவும் வளத்திற்காகவும், இன்பத்திற்காகவும் முயற்சி செய்வேன்.

State Council of Education Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala.
website : www.scert.kerala.gov.in
email : scertkerala@gmail.com
phone : 0471-2341883, Fax : 0471-2341869
First Edition : 2014
Printed at : KBPS, Kakkanad, Kochi

நண்பர்களே,

கல்வி உரிமைச் சட்டத்தின்படி, கலைக்கல்வி பிற பாடங்களின் அதே முக்கியத்துவத்துடன் நடைமுறையில் வரப்போகிறது. இதனடிப்படையில் ஒன்றாம் நிலை முதல் ஒழுங்கு முறையிலான பாடத்திட்டம் உருவாக் கப்பட்டுள்ளது. இதற்கேற்ற வகுப்பறைச் செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் ஆசிரியர்களுக்கான வளநூற்கள் எஸ். ஸி. ஆர். டி தயாரித் துள்ளது.

ஓவியக்கலை, இசை, நடனக்கலை, நாடகம் ஆகிய நான்கு துறைகள் கலைக்கல்வியில் உள்ளடங்கி உள்ளன. இவை ஒவ்வொன்றினுடைய வும் கற்றல் அடைவுகளும், கருத்துகளும், திறன்களும், கற்றல் செயல் பாடுகளும், மதிப்பீட்டு முறைகளும் இங்கே விளக்கப்பட்டுள்ளன. ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்பு வரை, ஐந்தாம் வகுப்பு முதல் ஏழாம் வகுப்பு வரை, எட்டாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை என மூன்று புத்தகங்களாக வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

நமது பொதுக் கல்வி நிலையங்களில் கலைக்கல்வி, செயல்பாட்டுத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு இது அதிக அளவில் உதவும் என எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்,
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## ശില്പശാലയിൽ പങ്കെടുത്തവർ

- കുഞ്ഞിരാമൻ പുതുശ്ശേരി ചാത്തോത്ത്, ലക്ചറർ, ഡയറ്റ്, എറണാകുളം
- ആർ.കെ. രാമദാസ്, ലക്ചറർ, ഡയറ്റ്, തിരുവനന്തപുരം
- എൻ. പ്രസാദ്, ലക്ചറർ, ഡയറ്റ്, കൊല്ലം
- ഡോ. കെ.എസ്. വാസുദേവൻ, ലക്ചറർ, ഡയറ്റ്, കോഴിക്കോട്
- സുനിൽകുമാർ, ലക്ചറർ, ഡയറ്റ്, കണ്ണൂർ
- ഡോ. ഗോകുൽദാസൻ പിള്ള, കരിക്കുലം മേധാവി (റിട്ട:), എസ്.സി.ഇ.ആർ.ടി, കേരള
- ഡോ. വേണുഗോപു, റിസർച്ച് ഓഫീസർ (റിട്ട:), എസ്.സി.ഇ.ആർ.ടി, കേരള
- ഡോ. എം.എസ്. രാധാകൃഷ്ണൻ, സിനിയർ ലക്ചറർ (റിട്ട:), ഡയറ്റ്
- ഡോ. കെ. ജി. രാജൻ, സിനിയർ ലക്ചറർ (റിട്ട:), ഡയറ്റ്
- ഡോ. വിനീത നെടുങ്ങാടി
- സി. രാജേന്ദ്രൻ, എ.വി.ഗവ: ബി.എച്ച്.എസ്, തഴവ
- ബി. കാർത്തികേയൻ പിള്ള, ജി.വി.എച്ച്.എസ്.എസ്, പൊരുവഴി
- പി. സുനിൽകുമാർ, പാവണ്ടൂർ എച്ച്.എസ്.എസ്, കോഴിക്കോട്
- മധുസൂദനൻ, ഗവ: എം.എച്ച്.എസ്.എസ്, കൊയിലാണ്ടി
- വി. വർഗീസ് കളത്തിൽ, ജി.വി.എച്ച്.എസ്.എസ് പള്ളിക്കുന്ന്, കണ്ണൂർ
- ഡോ. അബ്ദുൾ ലത്തീഫ്, വി.എച്ച്.എസ്.എസ്, എൻ.ജി.ഒ ക്വാർട്ടേഴ്സ്, കോഴിക്കോട്
- സുവർണ ചന്ത്രോത്ത്, തോട്ടട നേർത്ത് എൽ.പി.എസ്, കണ്ണൂർ
- ബി. പ്രേമലത, ജി.വി.എച്ച്.എസ്.എസ് കൊറ്റങ്കുളങ്ങര, ചവറ
- എം. ജയകൃഷ്ണൻ, ജി.യു.പി.എസ്, മഞ്ചേരി
- ടി. പ്രദീപ്കുമാർ, സി.എച്ച്.എം.കെ.എം.എച്ച്.എസ്, കവനനീർ, മലപ്പുറം
- എം.പി. ബാലകൃഷ്ണൻ, ജി.വി.എച്ച്.എസ്.എസ് നോർത്ത് ഇടപ്പള്ളി
- എ.ജി. സേതുനാഥൻ പിള്ള, ജി.വി.എച്ച്.എസ്.എസ് വടക്കത്തുകാവ്, അടൂർ
- സി.വി. അനൂപ്, എസ്.എസ്.ഡി.എച്ച്.എസ്.എസ്, ലക്കിടി
- പി.ഡി. രേവമ്മ. കെ.പി.ആർ.ജി.എച്ച്.എസ്.എസ് കല്യാശ്ശേരി, കണ്ണൂർ
- ജി.എസ്. ജയലക്ഷ്മി, ഗവ: എച്ച്.എസ്, കരിക്കുളം
- ആർ. പ്രസന്നകുമാർ, ഗവ: എച്ച്.എസ്, കടമ്മനിട്ട
- എ.വി. സിന്ധു, ജി.വി.എച്ച്.എസ് അഗളി
- കലാമണ്ഡലം സത്യവ്രതൻ. എ, കെ.കെ.ആർ ഗേൾസ് എച്ച്.എസ്.എസ് ചേളന്നൂർ
- ഡോ.പി.എ. മേരിലിറ്റി, സി.സി.പി.എൽ.എം.എ.ഐ.എച്ച്.എസ് പെരുമാനൂർ, എറണാകുളം
- സി.എസ്.രാജേന്ദ്രൻ, എച്ച്.എസ്.എ (റിട്ട:)
- എം. ശ്രീഹർഷൻ, നമ്പ്രത്ത്കര യു.പി.എസ്, കൊയിലാണ്ടി, കോഴിക്കോട്
- രമേശ് കാവിൽ, ഗവ: എൽ.പി.എസ് ആഴ്ച്ചവട്ടം, കോഴിക്കോട്
- സുഭാഷ് ചന്ദ്രബോസ്.ഡി.പി, ഗവ:എച്ച്.എസ്.എസ് കോന്നി

## അക്കാദമിക് കോഡിനേറ്റർ

- ഡോ. എൻ. ഗോപാലകൃഷ്ണപിള്ള, റിസർച്ച് ഓഫീസർ എസ്.സി.ഇ.ആർ.ടി. കേരളം

# உள்ளடக்கம்


1. கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 - பொதுஅணுகுமுறை ...... 7
2. கலைக்கல்வி- முக்கியத்துவம் ...... 32
3. கலைக்கல்வி அணுகுமுறை ...... 36
4. கலைக்கல்வி- பல்வேறு துறைகள் ...... 40
5. கலைக் கல்வி- மதிப்பீடு ...... 45
6. கலைக்கல்வி- அமைப்பு ...... 50
7. கலைக் கல்வி - உள்ளடக்க விவரங்கள் ...... 51

7.1 ஓவியக் கலை ...... 52
- முதல் வகுப்பு ...... 54
- இரண்டாம் வகுப்பு ...... 64
- மூன்றாம் வகுப்பு ...... 71
- நான்காம் வகுப்பு ...... 79

7.2 இசை ...... 89
- முதல் வகுப்பு ...... 92
- இரண்டாம் வகுப்பு ...... 103
- மூன்றாம் வகுப்பு ...... 114
- நான்காம் வகுப்பு ...... 124

7.3 நாட்டியக் கலை ...... 141
- முதல் வகுப்பு ...... 144
- இரண்டாம் வகுப்பு ...... 155
- மூன்றாம் வகுப்பு ...... 163
- நான்காம் வகுப்பு ...... 171

7.4 நாடகம் ...... 181
- முதல் வகுப்பு ...... 184
- இரண்டாம் வகுப்பு ...... 192
- மூன்றாம் வகுப்பு ...... 201
- நான்காம் வகுப்பு ...... 208

மாதிரி வினாத்தாள்

# 1. கேரளப் பள்ளிப் பாட ஏற்பாடு 2013 பொதுஅணுகுமுறை

## 1.1 முன்னுரை

இந்தியாவில் வாழ்க்கைத் தரத்தில் பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழும் மாநிலம் கேரளமே. பொதுக்கல்வி, கேரள மக்களின் சுகாதாரம் இவற்றின் மேன்மைகளே கேரளத்தின் இச்சிறப்புக்கு காரணம். சமூகத்திலுள்ள எல்லா குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்திருந்தாலும் அவர்களுக்கு தரமான கல்வி அளித்தல் என்பது கல்வித்துறை எதிர்கொள்ளும் மிக்பெரிய சவாலாகும். 1986- இல் ஆரம்பிக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையின்படி தரமான கல்வியை நோக்கமாகக்க கொண்டு அடிப்படை வசதிகளும் ஆசிரியர் பயிற்சிகளிம் நடத்தப்பட்டன. இத்துடன் பாடத்திட்டத்தைக் குழந்தை மையமாகவும், செயல்பாட்டு வழியிலும், செயல்முறை அடிப்படையிலும் காலத்திற்கேற்ப மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தன. இதன் பயனாக அறிவாக்கம் குழந்தைகளிடம் சுயமாக நடக்கும் செயல்முறை என்பதை நாம் கண்டடைந்தோம். இதன்முலம் குழந்தையை மையமாகக் புதிய கற்றல் செயல்முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளும் அன்றாடம் மாறிக்கொண்டே இருக்கின்றன. அதற்கேற்ப கற்பிக்கும் முறை, கற்றல் உளவியல், கற்றல் துணைக்கருவிகள், கற்றல் அனுபவ பரிமாற்றம், மதிப்பீடு போன்றவற்றிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். அனைத்து பிரிவு குழந்தைகளின் கற்றல் வளர்ச்சியை நாம் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

“வேறுபட்ட சமூக பொருளாதாரச் சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளாலும் வேறுபட்ட உடல் உள்ளத் திறனுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பதற்கும் பள்ளிக்கூடங்களில் வெற்றி கல்வியில் பெறுவதற்குமான வாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டும். ஆண், பெண், சாதி, மொழி, பண்பாடு, மதம், உடற்குறைகள் இவைமூலம் உருவாகும் ஏற்றத் தாழ்வுகளை எதிர் கொள்ளும் கொள்கைகளும் சட்டங்களும் மட்டும் போதாது. மாறாகக் குழந்தைப் பருவம் முதலே பொருத்தமான கற்றல் நோக்கங்களையும் கற்பித்தல் முறைகளையும் தேர்ந்தெடுத்து வடிவமைக்க வேண்டும்” (N.C.F. 2005 Page-27)

- பலதரப்பட்ட சமூக பொருளாதாரச் சூழலை உடையவர்கள்
- பலதரப்பட்ட உடல் உளத் திறனுடையவர்கள்.

இவ்வாறு எல்லா பிரிவைச் சார்ந்த குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற கற்றல் செயல்முறைகளின் எல்லா மண்டலங்களிலும் நுட்பமாகவும் நுணுக்கமாகவும் மாற்றங்களை

ஏற்படுத்த வேண்டுமென NCF கூறுகிறது . காலத்திற்கேற்பப் பாடத்திட்டத்தைச் சீரமைத்து கல்வியைச் செயல்படுத்தும் அமைப்புகள் சீராகச் செயல்பட்டால் மட்டுமே இந்த நோக்கத்தை அடைய முடியும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் தற்போது பாடப்புத்தகம் சீரமைக்கப்படுகிறது. கல்வித் தொடர்பாக செயல்படும் வல்லுஞர்களின் அனுபவங்களையும், கண்டுபிடிப்புகளையும், ஆராய்ச்சிகளையும் ஒருங்கிணைத்து இச் சீரமைப்பு நடைபெறுகிறது. சரியானதிலிருந்து மிகவும் சரியானதை நோக்கி என்ற அணுகுமுறையே இங்குக் கடைபிடிக்கப்பட்டுள்ளது.

## 1.2 பாடஏற்பாடு சீரமைப்பின் முக்கியத்துவம்

கடந்த 5 வருட காலமாகக் கல்வித்துறையில் ஏராளம் நவீன கொள்கைகள் உருவாகி உள்ளன. இந்தியாவில் 2009 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி உரிமைச் சட்டம் குழந்தைகளுக்குத் தரமான கல்வி அவர்களின் உரிமை அடிப்படையிலான பள்ளிக்கூடம் (Right based Educational Institution) என்ற நோக்கத்தை அடைய முழுப் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நமது ஏற்பாட்டை சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும். சர்வதேச தரம் என்பது ஏதேனும் ஒரு நாட்டின் நிலையல்ல. மாறாக ஒரு குறிப்பிட்ட கால அளவைக் கடந்து செல்லும் குழந்தை உலகில் எங்கிருந்தாலும் காலத்திற்கேற்ற அறிவுகளையும் , கற்றல் அனுபவங்களையும் பெற வேண்டும். ஆகவ் உலகளாவிய நிலையில் செயல்படுத்தப்பட்ட நவீனமாக சிறந்த கற்றல் கற்பித்தல் உத்திகள் கேரளக் குழந்தைகளுக்கும் கிடைக்கும் வேண்டும்..

கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பாட ஏற்பாடு, மதிப்பிடுதல் ஆகியவை தொடர்பான சட்டங்களை பாடத்திட்ட சீரமைப்பிற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

---

### கல்வி உரிமைச் சட்டம் – 2009
### பிரிவு – 29 (அத்தியாயம் 5)
### பாடஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும்

(1) *ஆரம்பக் கல்விக்கான பாட ஏற்பாடும் மதிப்பீட்டுச் செயல்முறை வரிசையும் அரசு அறிக்கை மூலம் குறிப்பிடும் ஒரு கல்வி அமைப்பினால் செயல்படுத்தப்பட வேண்டும்.*

(2) கல்வி அதிகார நிலை 1- ம் துணைபிரிவின்படி பாடத்திட்டமும் மதிப்பீட்டையும் செயல்முறை வரிசையையும் செயல்படுத்தும் போது கீழே வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் :-

(a) *அரசியலமைப்பில் வலியுறுத்தப்படுகின்ற மதிப்புகளுக்கு பொருத்தமாக அமைதல் வேண்டும்.*

(b) *குழந்தையின் பன்முக வளர்ச்சி*

(c) *குழந்தையின் அறிவும் திறனும் புலமையும் படிப்படியாக வளரச் செய்தல்.*

(d) *உடல் உளத் திறமைகளின் முழு வளர்ச்சி*

(e) குழந்தைக்கு நெருக்கமானதும் குழந்தைமையமானதுமான செயல்பாடுகள், கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் இவற்றின் மூலம் கற்றல்.

(f) கற்பிக்கும் மொழி குழந்தையின் தாய்மொழியில் அமைய வேண்டும்.

(g) பயம், மன அழுத்தம் ஏற்படும் சூழ்நிலை, மனக்கவலை போன்றவற்றில் இருந்து குழந்தையை விடுபடச் செய்வதும் சுதந்திரமாகக் கருத்துகளைத் தெரிவிப்பதற்குக் குழந்தைக்கு துணைபுரிதலும்.

(h) அறிவை உள்வாங்குவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்குமான குழந்தையின் திறன்களை ஒருங்கிணைத்து தொடர்மதிப்பீடு செய்தல்.

---

கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சூழலில் தொடர்ச்சி மற்றும் முழுமையான மதிப்பீட்டை நடத்துவது நமது தலையாய கடமையாகும். இதை உறுதி செய்யும் வகையில் பாடத்திட்டத்தைச் சீரமைப்பது இன்றியமையாதது. இந்தச் சூழலின் அடிப்படையில் தான் நாம் பாடத்திட்ட சீரமைப்பைப் பார்க்க வேண்டும்.

கேரளப் பள்ளிப் பாடத்திட்டம் (2013) இன் தனித்தன்மைகள் என்னவென்று பார்க்கலாம்.

1. குழந்தை மையமானதும் செயல்முறைகளுடன் இணைந்ததும் சிறந்த செயல்பாடுகளுடையதும் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டதுமான பாட ஏற்பாட்டை அமைக்க வேண்டும்.

2. பௌதீக நிலையிலும் செயல்முறையிலும் மனநிலையிலும் குழந்தைகளைச் சென்றடைய வேண்டிய கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்தும் அளிக்க வேண்டும்..

3. அறிவாக்கம் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

4. கல்விப் பரிமாற்றச் செயல்களில் பலவிதமான யுக்தி பூர்வமான கற்றல் உத்திகளைக் கையாளவும் உபயோகிக்கவும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும்.

5. கற்றல் அடைவு, பொருளடக்கத் தன்மை குழந்தைகளின் பல்வேறு தரம் போன்றவற்றைப் பிரித்தறிந்து பல்வேறு கற்றல் கற்பித்தல் உத்திகளைச் செயல்படுத்த வேண்டும்.

6. இலவசமாக அனைவருக்கும் கல்வி அளித்தல் என்பது போலவே அனைத்துக் குழந்தைகளின் கற்றல் அடைவுகளை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

7. மழலைப் பள்ளி முதல் மேனிலைப் பள்ளி வரை ஒன்றாகக் கருத்திற் கொண்டு பாடத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு வகுப்பிலும் வெவ்வேறு பாடங்களின் உள்ளடக்கம் தேசிய அளவில் உருவாக்கப்பட்ட உள்ளடக்கங்களுக்கு இணையாக கேரளத்திலும் புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்..

9. தேசிய அளவிலுள்ளதைப் போன்று ஒன்று இரண்டு வகுப்புகளில் தாய்மொழி ( சுற்றுச்சூழல்- கல்வியை உட்கொண்டு கணிதம் ஆங்கிலம் என மூன்று பாடப்புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

10. 1 முதல் 4 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆங்கில வழி புத்தகங்கள் தயார் செய்ய வேண்டும்.

11. செம்மொழி என்ற நிலையிலும் தாய்மொழி என்ற நிலையிலும் தமிழ்மொழி கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் அறிக்க வேண்டும்.

12. மழலைப் பள்ளி கல்விக்காக ஒருங்கிணைந்த பாடத்திட்டத்தை உருவாக்கி மழலைப் பள்ளியை அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் பகுதியாக மாற்ற வேண்டும்.

## இலவசமும் கட்டாயமுமான கல்விக்கான குழந்தைகளின் உரிமை – கேரளச் சட்டங்களும் துறைகளும் 2011

### அக்காதமிக பதவி மையம்

1. 29 –ம் பிரிவின் தேவைக்காக மாநில கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) ஆகும் அக்காதமிக பயிற்சி மையம்.
2. (1) –ஆம் துணைச் சட்டத்தின் கீழ் அறிக்கை செய்யப்பட்டுள்ள அக்காதமிக பதவி மையம், பாட ஏற்பாடும், மதிப்பீட்டுச் செயல்முறைகளும் உருவாக்கும் போது இந்தச் சட்டத்தின் 29–ம்பிரிவின் (2) –ம் துணை பிரிவின் துணைப் பாகம் (a) முதல் (f) வரை யிலான வரையறைகளுக்கு தீங்கு விளைவிக்காத விதம்

(a) சிறப்பானதும் எளிமையானதுமான பாடத்திட்டத்திற்கும் பாடப்புத்தகங்களுக்கும் அடிப்படை வாழ்க்கைத் திறனை பகிர்ந்து கொடுப்பதற்குத் தேவையான கற்றல் துணைக்கருவிகளுக்கு உருவம் அளிப்பது.

(b) ஒன்று முதல் எட்டு வரையிலான வகுப்புகளில் ஒவ்வொரு பாடத்திற்கும் தேவை யான குறைந்கபட்ச கற்றல் விளைவை நிர்ணயிக்க வேண்டியதும், குழந்தைகளுக் கான மேன்மையான தரநிர்ணயக் குறிப்புகள் வளரச் செய்வதுடன் குழந்தைகளின் கற்றல் விளைவிற்கான ஆசிரியரின் பொறுப்புணர்வின் எல்லைகளுக்கு வடிவம் அளிப்பதும்

(c) கற்றல் கற்பித்தல் விளைவின் அடிப்படையில் ஆசிரியரின் பணியிடைப் பயிற்சி தொடர்பான பொருட்கள் வளரச் செய்வது;

(d) 1995 – ல் ஊனமுற்ற நபர்கள் ( சம உரிமைகள், உரிமைகளின் பாதுகாப்பும், முழு மையான பங்கேற்பும்) சட்டத்தின் வரையறைகளுக்கேற்ப ஊனமுற்ற குழந்தைக ளுக்கு கல்வி அளிப்பதற்காக ஆசிரியருக்கு பணி பயிற்சி (Pre- Service) பணியி டைப் பயிற்சி ஆகியவற்றிற்கு வடிவம் அளிப்பதும்;

(e) தொடர்ச்சியானதும் முழுமையானதுமான மதிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டுதல்கள் தயாரிப்பதும்;

(f) நயத்திட்டங்கள், நிகழ்ச்சிகள், பாட ஏற்பாடு குழந்தைகளின் கற்றல் விளைவு ஆகி யவை குறித்த ஆராய்ச்சிஞம், கற்றல்களும் பொறுப்பேற்கவும் அது கமிஷன் செய் வதும். .

13. தகவல் தொழில் நுட்பத்தை (ICT).ஒரு தனியான பாடம் என்பதற்கு மேலாக பிற பாடங்களின் பரிமாற்றத்திற்கான கருவியாகவும் உபயோகிக்க வேண்டும்.

14. தனிக்கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு வெவ்வேறானதும் புதியதுமான கற் றல் உத்திகளை உருவாக்கிச் செயல்படுத்துவதுடன் வெவ்வேறு மதிப்பீட்டுச் செயல்பாடுக ளையும் உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும்.

15. கற்றல் அடைவுகளின் அடிப்படையிலான ஒருங்கிணைந்ததும் தொடர்ச்சியானதுமான மதிப்பீட்டை (CCE) உறுதி செய்ய வேண்டும்.

16. சுகாதார உடற்கல்வி, கலைக்கல்வி, பணி அனுபவக் கல்வி போன்ற பாடங்களைக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கட்டாயப் பாடப்பகுதிகளாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.

17. மேனிலைப் பிரிவில் காலத்திற்கேற்ற பாடப்புத்தகங்களைத் தயார் செய்ய வேண்டும்.

18. தேசியக் கல்விச் சட்டத்தின்படி கல்வி பெறும் உரிமையை உறுதி செய்தல் வேண்டும்.

19. எல்லா ஆசிரியர்களும் ஒரு நெறியாளர் (Mentor) என்ற நிலையில் உயர்ந்த செயல் பாட்டுத் தேவையான வாய்ப்புகளையும் வசதிகளையும் பள்ளிக்கூடத்திலும் வகுப்பறையி லும் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்..

20. ஆசிரியர்கள் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிச் சட்டங்களுக்கு (Code of Professional Ethics for School Teachers) முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

21. 21-ம் நூற்றாண்டிற்கு ஏற்றமுறையில் கற்றல் திறன்களை (21st Century Learning Skills) காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும்.

22. நற்பண்புகளைக் கடைபிடிக்கும் தலைமுறையை உருவாக்கத்தக்க வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும்.

23. சமவாய்ப்பும் சமத்துவமும் (Equity and Equality) கிடைக்கும் வகையில் பாடத்திட் டம் அமைய வேண்டும்.

இயல்பான கற்றலை உறுதிப்படுத்தக் குழந்தைகளின் உடல் மன அளவிலும் செயல்பாட்டு முறையிலும் பன்முக வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அறிவு, எண்ணம் செயல் இவற்றிற் கேற்ற பாடஏற்பாடு (Curriculum for the harmony of Head, Heart and Hand) வேண்டும். எனில், பாடத்திட்ட அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும்? அதன் கொள்கையும் நடை முறையும் எவ்வாறு இருக்க வேண்டும்?

## 1.3 பாட ஏற்பாடு- அணுகுமுறை

ஐம்புலன்களை உபயோகித்து சூழ்நிலைகளிலிந்து சுயமாகவே கற்கும் திறமைகளுடன் ஒரு குழந்தை பிறக்கிறது. உலகத்தைப் புதிய நோக்கில் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் செயல்படுவதற்கும் மதிப்பிடுவதற்கும் வாய்ப்புகள் முறைசார்ந்த கல்வி மூலம் குழந்தைக ளுக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து கிடைக்க வேண்டும்.

குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைச் சூழல்களுக்குத் தீர்வு காண்பதன் வழியாகவே கற்றல் நடைபெறுகிறது. பாடத்திட்ட பரிமாற்ற அணுகுமுறையின் சிறப்பியல்புகள் எத்தகைய னவாக இருக்க வேண்டும்?

- செயல்பாட்டு அடிப்படையிலானது
- செயல்முறை தொடர்பானது
- கற்றலை உறுதிப்படுத்தும் விதம்.
- கற்றல் அடைவுகளை அடைய உகந்தது.
- சூழலுக்கு ஏற்றது
- வளர்ச்சி மண்டலங்களை உட்படுத்தியது
- கற்பவரின் விருப்பத்திற்குப் பொருத்தமானது.
- கற்றலுடன் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து அமைந்தது..

அறிவு உருவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையிலான கற்றல் முறையே பாடத்திட்டத் தின் அடிப்படை. குழந்தையின் அறிவு, கருத்து, சூழல் இவற்றைக் கருத்தில் கொண்டு சிறந்த கற்றல் செயல்பாடுகள் உருவாக்குவதன் மூலம் இயல்பாக அறிவு பெற இயலும் என்பதே இதன் சிறப்பு.

### கற்றல் அனுபவங்கள்

வெவ்வேறு வாழ்க்கைச் சூழலிலிருந்து வரும் குழந்தைகளின் அறிவுஸகிறமை ஆர்வம் போன்றவை வேறுபட்டதல்லவா? தனிநபர் வேறுபாட்டையும் பன்முக அறிவையும் கருத்தல் கொண்டு கற்றல் அனுபவங்களை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

### கற்றல் சூழல்

குழந்தைகளின் ஆர்வத்தையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு வேறுபட்ட கற்றல் செயல்பாடுகளில் பங்கேற்க இயலும் விதம் வகுப்பறை செயல்பாட்டை அமைக்க வேண்டும். குழந்தை மையமான கற்றல் செயல்பாடுகளைச் செயல்படுத்த எவ்வாறு கற்றல் செயல்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### கற்றல் செயல்முறை

- குழந்தைகள் ஒவ்வொருவரும் அவர்களுடைய முன் அறிவுகளுடன் தொடர்புபடுத்தி அறிவு உருவாக்கம் (Knowledge construction) நடத்துகின்றனர்.
- அறிவு உருவாக்கத்தைத் தனிநபர் நிலையிலும் சமூக நிலையிலும் பார்க்க வேண்டும்.
- பலவித கற்றல் நடைகளைக் (Learning Styles) கருத்தில் கொண்டு ஐம் புலன்கள் மூலம் பல்வேறு அனுபவங்களை (Multi sensory experiences) கொடுப்பதன் மூலம் கற்றல் சிறப்படைகிறது..
- குழுவாக கலந்துரையாடல் நடைபெறும் போது கற்றல் கூடுதல் மேன்மையடைகிறது.
- கற்றல் வேகத்தை கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை அளிப்பதன் மூலம் குழந்தைகளின் கற்றல் மேம்படுகிறது.
- பாடப்பொருள்கள் ஆர்வத்தைத் தூண்டுவதும் பொருள் உடையதுமாக அமைவதன் மூலம் கற்றல் மேலும் சிறப்பாக அமையும்..

*குழந்தைகள் அறிவு உருவாக்கும் கட்டத்தில் ஆசிரியர் சிறந்த முறையில் செயல்பட்டால் அது குழந்தைகளுக்குக் கிடைக்கும் அறிவினை உறுதிபடச் செய்யும். கற்றலில் ஈடுபடும் குழந்தை தனது அறிவை சுயமாகவே உருவாக்குகிறது. தனது பள்ளியில் கற்கும் கருத்துகளை வெளியில் நடக்கும் காரியங்களுடன் தொடர்புப்படுத்தி த் தேவையான கேள்விகளைக் கேட்க குழந்தைக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மனப்பாடம் செய்து ஒரு சரியான விடையை அளிப்பதற்கு பதிலாக தனது அனுபவங்கள் வாயிலாகத் தனது வாக்கியங்களில் விடை அளிக்க ஊக்குவிக்க வேண்டும். இவையாவும் குழந்தைகளின் அறிவா வளரச் செய்ய உதவும் முக்கியமான படிகளாகும். அறிவுபூர்வமாக ஊகித்தல் என்பது ஒரு கற்றல் உத்தியாகும். இதை நாம் ஊக்குவிக்க வேண்டும். பலவேளைகளிலும குழந்தைகளின் அன்றாட அனுபவங்களிலிருந்தும் ஊடகங்களிலிருந்தும் அவர்களின் மனதில் சில கருத்துகள் உருவாகி இருக்கலாம். ஆனால் ஆசிரியர் எதிர்பார்க்கும் வாக்கியங்களில் அவர்களால் கூற இயலாது. அறிந்த அறிவிற்கும் அறியப்போகும் அறிவிற்கும் இடையில் தான் புதிய அறிவு உருவாக்கப்படுகிறது. பலவேளைகளிலும் பள்ளிக்கு வெளியிலோ அல்லது சமூகத்திலோ புதிய அறிவு உருவாகிறது. இவ்வாறு உருவாகும் எல்லா அறிவுகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அறிவும் பொறுமையும் உடைய ஆசிரியை இதைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டும். குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் செயல்பாடுகள் அளித்தும் கேள்விகள் கேட்டும் குழந்தையை ஆசிரியரால் வழி நடத்திச் செல்ல முடியும்*

*தேடல்கள், கேள்விகள் கேட்டல், விவாதங்கள், கொள்கைகள் உருவாக்குதல், கருத்துகள், நிலைபாடுகள் இவைகளின் உருவாக்கத்திற்கு வழிநடத்தும் செயல்களும் சிந்தையும் ஆசிரியர்களின் பங்கேற்பினால் ஏற்படுகின்றன. பள்ளிக்கூடங்கள் கேள்வி கேட்கவும், விவாதங்கள் செய்யவும் தேடல்களுக்கும் ஊகித்து புதிய கருத்துகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்*

*(N. C. F. 2005, பக்கம் – 41, 42)*

- கற்றல் அனுபவங்களைச் சுழற்சிமுறையில் (Spiralling) அமைப்பதன் மூலம் கற்றல் கூடுதல் சிறப்புடையதாக மாறுகிறது
- கற்றல் செயல்பாடுகளை நெகிழ்வு (Flexibility), கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் அமைத்தல் (Adaptations), கற்றல் செயல்பாடுகளைத் தேரந்தெடுத்தல் (Selection) இவற்றின் மூலம் வேறுபட்ட கற்றல் தேவையுள்ளவர்களையும் விருப்பம் உள்ளவர்களையும் கருத்தில் கொள்ள முடியும்
- போதுமான கற்றல் அனுபவங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கும் போது மட்டுமே கற்றல் அடைவு (Learning outcome) உறுதிப்படுத்தப்படுகிறது.
- கற்றலும் மதிப்பிடலும் ஒருங்கிணைந்து நடைபெறவேண்டும்.
- பாடத்தோடு தொடர்புடைய உள்ளடக்கமும் (Content), குழந்தைகளின் கற்றல் தேவைகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் கற்பித்தல் செயல்முறைகளும் உத்திகளும் உபயோகிக்கும் போது எல்லாக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளை(Learning outcome) அடைய முடியும்.
- ஒவ்வொரு குழந்தையின் பன்முக வளர்ச்சியையும் (All-round development) நோக்கமாகக் கொண்டு கற்றல் செயல்கள் திட்டமிடப்பட வேண்டும்.

## 1.4 கற்றல் அடைவுகள் (Learning Outcomes)

பலவித பாடங்களின் கற்றல் செயல்களின் மூலம் அறிவு திறன்கள், மனநிலைகள் கருத்துகள் என்பவை குழந்தையிடம் உருவாகின்றன. இவற்றுள் சில குறுகிய கால அளவிலும் சில நீண்ட காலத்திலும் கிடைப்பவை ஆகும். இவ்வாறு குழந்தையிடம் உருவாக வேண்டிய மாற்றங்களை முன்னரே நம்மால் தீர்மானிக்க முடியும். பாடத்திட்டம் உருவாக்கும் போது பள்ளிக்கூடக் கல்வியின் வாயிலாகப் பல நிலைகளில் குழந்தை அடைய வேண்டிய இலட்சியங்களே கற்றல் அடைவுகள் ஆகும். கற்றல் செயல்பாடுகளின் வாயிலாக ஒவ்வொரு அலகிலும் பெறுகின்ற கற்றல் அடைவுகள் வளர்ச்சி அடைந்து வகுப்பின் இறுதியில் கற்றல் அடைவுகளாக மாறுகின்றன. கல்வி கற்கும் கட்டத்தில் குறிப்பிட்ட கால அளவில் கற்றல் அடைவுகளாக வளர்ச்சி அடைகிறது. கற்றல் அடைவுகளின் முக்கியத்துவம் என்னவென்றால் அவற்றை உற்றுநோக்கவும் (Observable) அளவிடவும் (Measurable) இயலும். ஒவ்வொரு அலகிற்கும் பருவத்திற்கும் வகுப்பிற்கும் முடிவில் குழந்தை அடைய வேண்டிய அறிவு திறன்கள், கருத்துகள், மனப்பான்மை போன்றவைகளை மதிப்பிடக் கற்றல் அடைவுகளைப் பகுத்தாய்ந்தால் போதும். பாடத்திட்டத்தின் சிறப்பான பரிமாற்றம் மூலம் அனைத்துக் குழந்தைகளும் கற்றல் அடைவுகளைப் பெற்றுள்ளனர் என்று உறுதிப்படுத்த வேண்டும்..

*கற்றல் அடைவுகளின் சிறப்பியல்புகளை இவ்வாறு தொகுக்கலாம்:*

- பாடத்தோடு தொடர்புடைய கற்றல் வழியாகக் குழந்தை பெற வேண்டிய அறிவு (knowledge), திறன்கள் (Skills), மனப்பாங்குகள் (Attitudes), மதிப்புகள் (Values) என்பவையே கற்றல் அடைவுகள்
- கற்றல் அடைவுகள் உற்றுநோக்கக் கூடியதும் (Observable) அளவிடக்கூடியதுமாக இருக்க வேண்டும் (Measurable)
- குறுகிய நீண்ட காலங்களில் பெற்ற கற்றல் அடைவுகள் உள்ளன.

## 1.5 கற்றல் ஆதாரங்களும் கற்றல் அமைப்புகளும்

பாடத்திட்டத்தைப் பரிமாற்றம் செய்வதற்குப் பயன்படுத்துகின்ற பல நிலைகளே கற்றல் உறைவிடங்கள் கற்றல் செயல்முறை முழுமை பெற பலதரப்பட்ட கற்றல் உறைவிடங்களைப் பயன்படுத்த வேண்டும்.

- நூலகம்
- அறிவிப்பு பலகைகள்

- ஆய்வுக்கூடம்( கணிதம், அறிவியல்)
- கணினி ஆய்வுக்கூடம்
- கற்றல் துணைக்கருவிகள்
- தகவல் தொடர்புக் கருவிகள்
-

இதற்கு மேலாகக் குழந்தைகளின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள். பள்ளிக்கூடங்களில் உண்டல்லவா? அவற்றையும் கற்றல் அடைவுகளைப் பெறுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்

- சிறுவர் மன்றம்
- காலைக் கூட்டம்
- மன்றங்கள்
- விவாதமேடை
- கல்விச்சுற்றுலா
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் (SPC, NSS, Scout, NCC)
-

குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு இது போன்ற அமைப்புகள் இன்றியமையானவையாகும்.

## 1.6 கலைக் கல்வியும் பணி அனுபவக் கல்வியும்

### கலைக்கல்வி

படைப்பாற்றல் உற்றுநோக்கும் திறன் மாற்றுச் சிந்தனை போன்றவற்றைக் குழந்தைகளிடம் வளரச் செய்யக் கலைக்கல்வி இன்றியமையாததாகும். புதிய பாடத்திட்ட அணுகுமுறையில் பொதுவான பாடங்களைப் போன்ற முக்கியத்துவம் கலைக்கல்விக்கும் அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிப் பாடத்திட்டத்தில் கலைக்கல்வியில் இசை. நடனம், படம் வரைதல். சிற்பங்கள் உருவாக்குதல் நாடகம், திரைப்படம் போன்றவை உட்படுத்தப்பட்டுள்ளன. குழந்தைகளின் இந்தத் குறைகளிலுள்ள திறமைகளைத் தெரிந்து கொண்டு அவற்றை வளரச் செய்ய வேண்டும்.

*கலைக்கல்வியின் பொதுவான இலக்குகள்:*

- குழந்தைகளிடம் மறைந்திருக்கும் கலைத்திறன்களைக் கண்டுபிடித்து வளர்க்க வேண்டும்.
- கலைகளைப் பிரித்தறியவும் குழந்தைகளின் திறமைக்கேற்ப கலைகளைப் பயிற்றுவிக்கும் வாய்ப்பை அளிக்க வேண்டும்.
- பல்வேறு கலைகளை இரசிக்கவும் கலைகளின் அழகை உட்கொள்ளவும் வேண்டும்.
- கலையை இரசித்து சமூக வாழ்க்கையில் மனித நேயத்தை உருவாக்க வேண்டும்.
- பண்பாட்டு வேறுபாட்டைப் பிரித்தறிந்து பண்பாட்டு விழிப்புணர்வை வளர்க்க வேண்டும்..
- கலையின் கருத்தை உட்கொண்டு புதுமையான சிந்தனைகளில் ஈடுபடவும் இணையான சமூகச் செயல்களில் ஈடுபடவும் வேண்டும்.
- கலையைப் பயன்படுத்தி பிற பாடங்களின் கற்றலைச் சிறப்புடையதாக்க வேண்டும் (Art applied learning).
- பன்முக அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு அறியவேண்டும்.
- பல்வேறு திறமைகள் உள்ள குழந்தைகளுக்குக் கற்றல் செயல்பாடுகளில் ஆர்வம் பெருகச் செய்ய வேண்டும்

- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை வளரச் செய்ய வேண்டும்..

**பணி அனுபவக் கல்வி**

உணர்வு, அறிவு போன்ற மண்டலங்களின் ஒருங்கிணைப்பும் முன்னேற்றமும் உருவாகப் பணி அனுபவக் கல்வி உகந்தது..

ஒவ்வொரு பணி அனுபவக் கற்றல் வகுப்பும் அடிப்படை மனிதவள மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளின் திறன்களும் தனித்தன்மைகளும் நாட்டு நன்மைக்கு ஏற்ற வகையில் வளர வேண்டும் என்பதே மனிதவள மேம்பாட்டின் நோக்கம், தொழிலை நேசிப்பதும் தொழில் செய்பவர்களை மதிப்பதும், சமூக உணர்வுடைய புதிய தலைமுறையை உருவாக்குவதும் பணிஅனுபவக் கற்றலின் முக்கிய இலக்குகளாகும்.

- மனிதவள மேம்பாடு
- தேசிய முன்னேற்றம்
- தொழில் ஆர்வம்
- உற்பத்திதுறையில் தனித்துவம்
- பன்முகத் தனிநபர் வளர்ச்சி
- நற்பண்புகளையும் மனநிலைகளையும் வளர்த்தல்

கலைக்கல்விக்கும் பணிஅனுபவக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்துப் பாடத்திட்டப் பரிமாற்றம் நடைபெற வேண்டும். இவைகளின் தனித்தன்மைகளையும் வாய்ப்புகளையும் உட்படுத்திப் பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்வது அவசியமாகும்.

## 1.7 விளையாட்டு உடல் நலக் கல்வி

உடல்- மன வளர்ச்சியின் அடிப்படை உருவாவது தொடக்க நிலையிலாகும். எனவே இந்தக் கால அளவில் எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் அனுவங்கள் கிடைத்துள்ளன என்பதை உறுதி செய்ய வேண்டும். குழந்தையின் ஆரோக்கிய, விளையாட்டு முன்னேற்ற நிலைகளை அறிவியல் முறையில் வளரச் செய்யவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளும் மனநிலைகளும் வளரச் செய்தல் என்பதே ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் முக்கிய நோக்கம், ஆரோக்கிய உடல்நலக் கல்வியின் வாய்ப்புகளை நிலைநிறுத்துவதோடு வெவ்வேறு பாடங்களை ஒருங்கிணைத்துப் பரிமாற்றம் செய்யவும் வேண்டும்.

*ஆரோக்கிய- உடலநலக் கல்வியின் முக்கிய இலக்குகள் இவை:*

- பல்வேறு குழந்தைகளில் பொருத்தமான முறையில் உடலை அசைப்பதற்கான திறனைப் பெற்றுக் கொள்வது,
- உடல் அசைவை கட்டுப்படுத்தும் பல்வேறு கட்டங்களைப் பிரித்தறியவும் உடலைப் பன்முக அசைவுகளின் ஊடகமாக முன்னேறவும் செய்வது.
- சமூகக் கடமைகள் குறித்த விழிப்புணர்வு உருவாக்கவும் மக்களாட்சி முறையிலான வாழ்க்கை முறைகளைக் கடைபிடிக்கவும்.
- குழந்தையின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்வது

## 1.8 உட்படுத்திய கல்வி

## (Inclusive Education)

*தங்கள் வகுப்பிலுள்ள சக மாணவனுக்கு வீடு இல்லை; வழியோரத்தில் குடி நீர்க்குழாயிலி சேர்த்துக் கட்டிய தகரமே அவனுடைய வீடு என்ற தகவலைப் பற்றிக் குழந்தைகள் கலந்துரையாடினார்கள். கவலைகளைப் பங்கிடுவதன் வழியாகத் தீர்வு காண இயலாது எனப் புரிந்து கொண்ட குழந்தைகள் ஆசி ரியரின் உதவியுடன் சேகரித்த தொகையை உபயோகித்து நண்பனுக்கு வீடு உருவாக்கிக் கொடுத்து அந்தப் பள்ளிக்கூடம் நல்ல மாதிரியாக அமைந்தது.*

*(ஒரு பள்ளி அனுபவம்)*

வகுப்பறையில் எல்லாக் குழந்தைகளையும் உட்படுத்தி யாரையும் புறக்கணிக்காமல் ஒரு கற்றல் சூழலை உருவாக்க வேண்டும். நமது பள்ளிக்கூடங்களில் இரு பிரிவினருக்கும் தனிக் கவனமும் கற்றல் உதவியும் அளித்து சமசீரான தரமான கல்வி (Equitable Quality Education) உறுதி செய்யப்பட வேண்டும்..

*தனிக்கவனமும் கற்றல் உதவியும் பாதுகாப்பும் தேவைப்படுவோர் யார்?*

(அ) சமூகப் பொருளாதாரக் காரணங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களின் குழந்தைகள்

- பல்வேறு பாகுபாடுகளால் சமூகப் பண்பாட்டுக் குடும்பப் பின்னனியில் புறக்கணிக்கப் பட்ட குழந்தைகள் வறுமையில் வாடுபவர்கள், ஆதிவாசிகள், பெண் குழந்தைகள், தாழ்த் தப்பட்ட பிரிவைச் சார்ந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து குடியேறியவர்கள், நிலையாகத் தங்கும் வசதியற்றவர்கள் போன்ற அனேகப் பிரச்சினைகளை அனுபவிப்பவர்கள் இதில் அடங்குபவர்.

  இவ்வாறான குழந்தைகளின் குறைகளையும் குறைபாடுகளையும் பிரித்தறிந்து அவர் களை அங்கீகரித்து மதித்து நடப்பதாக நமது அணுகுமுறை இருக்க வேண்டும். பள்ளி களில் குழுச் செயல்பாடுகள் வழியாக இவர்களின் பிரச்சினையை ஓரளவு தீர்க்க முடியும்.

(ஆ) உடல்– மனக் குறைபாடுகளைக் கொண்ட குழந்தைகள்

உடல்– மன அளவிலான குறைபாடுகள் குழந்தைகளுக்கும் கற்றலில் சிரமம் அனுபவிக்கும் குழந்தைகளுக்கும் சிறப்புக் கவனம் தேவை (Special Educational Needs). கேள்விக் குறை வு, பார்வைத் திறன் குறைவு, புத்திக் குறைவு, கை, கால் ஊனம், கற்றலில் பின் தங்கிய நிலை ஆட்டிசம், செரிபிரல் பால்சி, பன்முகக் குறைபாடு மனநிலை பாதிக்கப்பட்ட குழந்தைகள், கவனக் குறைவுள்ளவர்கள் ஆகியோர் இதில் அடங்குவர்.

*இவர்களுக்காகப் பாடத்திட்டத்தின் பரிமாற்ற வேளையில் கையாள வேண்டியவை எவை?*

- கற்றல் தேவைகள், ஆர்வம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கற்றல் செயல்பாடுக ளைத் திட்டமிடுதல்.
- கற்றல் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளும் பங்கேற்கும் வகையில் பாடத்திட்ட மிடல் சீரமைக்கப்பட வேண்டும்.
- பல்வேறான கற்றல் வேகம், கற்றல் முறை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஐம்பு லன்களுக்குட்பட்ட அணுகுமுறையை (Multisensory Approach) நடைமுறைப்ப டுத்துதல்.
- குறைநீக்கும் செயல்பாடுகள் (Remedial Practices), ஊக்கச் செயல்பாடுகள் (Enrichment Practices) போன்றவற்றை ஒவ்வொரு குழந்தைக்கும் தேவைக்

கேற்பத் திட்டமிட்டுச் செயல்படுத்துதல்

- பல்வேறு மதிப்பீட்டு வாய்ப்புகளை நெகிழ்வுடன் (Flexibility) செயல்படுத்துதல்.
- சிறப்பு வள ஆசிரியர்கள் மற்றும் வல்லுணர்களின் உதவியை உறுதி செய்தல்
- குழந்தையின் கல்வி பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோரின் தொடர்ச்சியான உதவியை உறுதி செய்தல்.

இந்த இரு பிரிவுகளிலுமுள்ள குழந்தைகளைத் தவிர சிறப்பு கவனமும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டிய குழந்தைகளே தனிப்பட்ட திறனும் புத்திக்கூர்மையும் மிகுந்த குழந்தைகள் (Gifted Children). எல்லாப் பிரிவிலுள்ள குழந்தைகளையும் கவனத்தில் கொண்டு பள்ளிச் செயல்பாடுகளையும் சூழல்களையும் சிறப்பாக அமைக்க வேண்டும்..

## 1.9 தகவல் தொழில் நுட்பக் கல்வியின் வாய்ப்பு (ICT)

தகவல்களைப் பரிமாறுவதற்கு ஏராளமான முறைகள் நடைமுறையில் உண்டல்லவா? இதில் முக்கியமானது ICT கல்வி. குழந்தைகள் பல்வேறு வழிமுறைகளில் இந்தத் தொழில் நுட்பத்தை ஏறக்குறைய தெரிந்திருப்பார்கள். இந்த அறிவை வகுப்பறைக் கற்றலில் உபயோகப்படுத்த வேண்டும். கற்றலை எளிமையாக்கவும் உற்சாகமாக்கவும் இதன் வழி இயலும்.

### ICT இன் தேவை

பாடத்திட்டப் பரிமாற்றத்திற்காகப் பொருத்தமான சூழல்களில் ICT துணைக் கருவிகளை தேவைக்கேற்ப உட்படுத்த வேண்டும். பாடப்புத்தகத்தின் குறைகளாகிய அசைவு இன்மை, ஒலிகள் கேட்க இயலாத நிலை போன்றவற்றை ICT வாய்ப்புகள் உட்படுத்தி எதிர் கொள்ள முடியும். ICT இன் தேவை எந்தெந்தச் சூழல்களில் வேண்டும் என்பதையும் அதை எப்படிச் செயல்படுத்தலாம் என்பதையும் திட்டமிட ஆசிரியர் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

### பொருத்தம்

குழந்தையின் படைப்பாற்றலையும் அறிவின் பன்முக தன்மைகளையும் ஊக்குவிக்க ICT வாய்ப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பாடங்களில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் நிலை நிறுத்துவதற்காக ICT வாய்ப்புகளை அமைக்க வேண்டும். ICT இன் உபயோகம் ஐம்புலன்களில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அதிகமான பயனளிக்கிறது. ஒலி வழியாகவும் பார்வை வழியாகவும் கருத்துகளை அதிகமாக உட்கிரகிக்க ICT பயன்படுகிறது. வெவ்வேறு கற்றல் திறனுடைய குழந்தைகளைக் கருத்தில் கொண்டு கற்றல் அனுபவங்களை ICT மூலம் அளிப்பதற்கு இது உதவுகிறது.

### நம்பகத்தன்மை

தகவல் தொடர்பு ஊடகங்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். அரசு வலைதளங்கள், கல்வி வலைத்தளங்கள் Portal, Blog, Social Net Work போன்றவற்றிலுள்ள தகவல்களை அதிகாரபூர்வமாக உறுதி செய்ய வேண்டும். வகுப்பறை பரிமாற்றத்திற்கு உபயோகிக்கக் கூடிய கருவிகளின் செயல்பாட்டுத் தன்மையை உறுதி செய்ய வேண்டும். இத்தகைய கருவிகள் செயல்படுவதற்குப் பொருத்தமான மென்பொருள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும் உபயோகிக்க இயன்றதாகவும் இருக்க வேண்டும். ICT வாய்ப்புகள் குழந்தைகளின் வயது, மனநிலை போன்றவற்றிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

## 1.10 மதிப்புகள், மனநிலைகள், கடமையுணர்வு போன்றவற்றை வளர்க்க உதவும் மண்டலம்

குழந்தைகள் மனிச நேயதேதைப் பற்றியும் அரசியலமைப்பின் மதிப்புகளைப் பற்றியும் விழிப்புணர்வு உடையவர்களாக வளர வேண்டும். சமூக வாழ்க்கையை ஊக்குவிக்கும் மனநிலையை உருவாக்குதல் சமூக கடமையுணர்வை வளர்த்தல் போன்றவை பாடத்திட்டத்தில் முக்கியமாக உட்படுத்த வேண்டிய பகுதிகளாகும். இவற்றை வளரச் செய்ய மேற்கூறிய கருத்து மண்டலங்களில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

### மக்களாட்சி உணர்வு

பல்வேறு பாடங்களின் உள்ளடக்கத்தைத் தேர்வு செய்யும் போது மக்களாட்சி தொடர்பான கண்ணோட்டத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். கற்றல் செயல்பாடுகளின் திட்டமிடுதலிலும் பரிமாற்றச் செயல்களிலும் மக்களாட்சி அணுகுமுறை அமைய வேண்டும். மக்களாட்சி முறையிலான வகுப்பு, பள்ளி இடங்கள் ( மக்களாட்சி அரங்குகள்) மக்களாட்சி வாழ்க்கை அணுகுமுறை போன்றவை வழியாக மக்களாட்சி உணர்வு உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் இலக்காகும்.

### அரசியலமைப்பு இலக்குகள்

நம்முடைய அரசியலமைப்பு கூறும் மதிப்புகளும் இலக்குகளும் பாடத்திட்டத்தில் பிரதிபலிக்க வேண்டும். அரசியலமைப்பு, மதிப்புகளை மாணவன் அடைவதற்கு உகந்த உள்ளடக்கதைதையும் மரிமாற்று செயல்பாடுகளையும் தேர்வு செய்ய வேண்டும்.

### மதசார்பற்ற மனநிலை

மதசார்பற்ற மனநிலையை வளர்க்க உதவக்கூடிய பாட மண்டலங்களை உள்ளடக்கத்தில் சேர்க்கவும் அதற்கு உதவும் வகையிலான பரிமாற்ற முறையைக் கையாளவும் வேண்டும்.

### சகிப்புத் தன்மை

பொருத்தமானவர்கள் மட்டுமல்ல பொருத்தமற்றவர்களோடும் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பாடத்திட்டம் இலக்காகக் கொள்ளவேண்டும்.

### செயலாக்க- படைபாற்றல் சிந்தனை

மாணவர்களிடம் செயலாக்கமும் படைப்பாற்றலுமான சிந்தனையும் தேடலையும் வளரச் செய்ய வேண்டும். பாடத்திட்டத்தின் உள்ளடக்க மண்டலங்களிலும் கற்றல் உத்திகளிலும் படைப்பாற்றல் வழியான தேடலுக்கான வாயப்புகள் இருக்க வேண்டும். பன்முக அறிவின் (Multiple Intelligence) தலங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

### பண்பாட்டுடனும் பாரம்பரியங்களுடனும் உள்ள ஆதரவு

நமது பண்பாடு, பாரம்பரியம், வரலாறு இவற்றிற்கு ஆதரவு காட்டும் மனப்பான்மையை உருவாக்குதல் என்பது பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

### சமத்துவம் என்ற கருத்து

பல்வேறு சூழ்நிலைகளிலும் கற்றல் செயல்பாடுகளிலும் சமத்துவம், சமநிலை போன்றவற்றை உறுதி செய்ய வேண்டும்.

## தலைமைப் பண்பு

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர் கொள்ளவும் வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் தகுந்த தலைவர்களை உருவாக்கப் பொருத்தமான கற்றல் உத்திகளை உருவாக்க வேண்டும். வகுப்பறைச் செயல்பாடுகளில் எல்லாக் குழந்தைகளின் பங்கேற்பையும் உறுதி செய்து தலைமையேற்கும் திறனை வளர்க்க உதவும் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.

## வாழ்கைத்திறன் கல்வி

அன்றாட வாழ்க்கையில் தனிநபர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் சவால்களையும் திறம்பட எதிர்கொள்ள உதவும் சாதகமான மற்றும் திறமையான பண்புகளே வாழ்க்கைத் திறன்கள், தன்னைஅறிதல், சகஊடுபாடு, கருத்துப் பரிமாற்றத் திறன், தனிமனித உறவு, படைப்பாற்றல் , விமர்சிக்கும் திறன், முடுவுகளை எடுத்தல். தீர்வு காணுதல், உணர்வுகளைக் கட்டுப்படுத்துதல் மன அழுத்தத்தைக் கையாளுதல் போன்றவை முக்கியமான வாழ்க்கைத் திறன்களாகும். குழந்தைகளின் சூழ்நிலைகளோடு தொடர்புபடுத்தி இந்த மண்டலங்களின் காரணிகளைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் அணுகவும் முன்னேறவும் இத்திறன்கள் குழந்தைகளுக்கு உதவுகின்றன.

## குடிமகனின் கடமை

நாட்டிற்கு மக்களிடம் உள்ளதைப் போன்று குடிமக்களும் நாட்டிற்காகச் சில கடமைகளையிம் பொறுப்புகளையும் கடைபிடிக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சி என்பது மனிதத் திறனின் வளர்ச்சி என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தக் காலகட்டத்தில் நாட்டிற்கு உதவும் நல்ல குடிமகனை உருவாக்குவதே கல்வியின் முக்கிய நோக்கம். ஒரு சுதந்திரமான சமூகத்தை உருவாக்குவதுடன் ஒழுக்கமான பொறுப்புள்ள சமூகத்தை உருவாக்கும் குடிமக்களைப் படைப்பதே கல்வியின் முக்கிய நோக்கமாகும்.

## மனித உரிமைகள்

தனிமனிதன் என்ற நிலையில் மதிப்புடன் வாழ்வதற்கான உரிமையே மனித உரிமை. ஐக்கிய நாட்டுச் சபையின் மனித உரிமை விளம்பரத்தின் மூலம் உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளுக்குப் பாடத்திட்ட உருவாக்கத்திலும் அதன் பரிமாற்ற வேளையிலும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

.

## குழந்தைகளின் உரிமைகள்

குழந்தைகளின் எல்லாவித உரிமைகளையும் பாதுகாப்பது நமது கடமையாகும்.

## இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு- சுற்றுப்புறத் தூய்மை

இயற்கை- இயற்கைப் பாதுகாப்பு, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கடைபிடிக்க வேண்டிய அடிப்படைக் கண்ணோட்டங்களை ஆரம்ப வகுப்பு முதலே உட்படுத்த வேண்டும். தனிமனிதத் தூய்மையைப் போன்று முக்கியமானதே சுற்றுப்புறத்தூய்மை என்பதையும் தூய்மையுணர்வு குடிமகனின் கடமைகளில் அடிப்படையானது என்ற உணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும். இயற்கை மனிதனின் தேவைக்கு மட்டுமுள்ளதல்ல. இயற்கையின் சமநிலையில் ஏற்படும் மாற்றங்கள் எதிர்காலத்தில் சீரழிவுகள் ஏற்படக் காரணமாகும் என்ற மனப்பான்மையைக் குழந்தைகளிடம் வளர்க்க வேண்டும். இயற்கையைப் பாதுகாப்பும் சுற்றுப்புறத் தூய்மையும் உருவாக்குவதற்குத் தகுந்த செயல்பாடுகளை அளிக்க வேண்டும்.

## சமாதானக் கல்வி

தனிப்பட்ட முறையிலும் பிறரோடு சமாதானமாகவும் அன்பாகவும் பழகும் திறனையும் மனப்பான்மையையும் உருவாக்குவதே சமாதானக் கல்வியின் நோக்கம். கலவரங்களையும் கலவரங்களைத் தூண்டும் சூழல்களையும் தவிர்க்கவும் அமைதியை நிலைநாட்டவும் சமாதானம் அன்பு இவற்றின் வாய்ப்புகளைப் பாடத்திட்டத்தில் பல்வேறு பாடங்களின் வழியாகச் செயல்படுத்த வேண்டியது சமாதனக் கல்வியின் நோக்கமாகும்..

## சட்ட அறிவு

சட்டங்கள் பற்றிய அறிவையும் விழிப்புணர்வையும் ஒரு குடியரசு நாட்டில் வாழும் பொது மக்கள் கொண்டிருக்க வேண்டும். சட்ட அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்கும் விதத்தில் பாடப் பகுதிகளில் இவற்றை உட்படுத்த வேண்டும். சட்ட உதவி மன்றம், சட்ட கிளப், சட்ட கிளினிக், சட்ட விழிப்புணர்வு போன்ற பல்வேறு செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

## சைபர் குற்றங்கள்

தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் அன்றாட வாழ்வில் இவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதும் குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன. குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடாமலிருக்க உதவும் விழிப்புணர்வுச் செயல்களைப் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். இணையதளம், சமூக வலைதளம், மின்னஞ்சல் போன்றவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான தெளிவான அறிவும் பகுத்தறிந்து செயல்படும் தன்மையும் மாம் படத்திட்டத்தின் மூலம் அளிக்க வேண்டும். சைபர் குற்றங்களுக்கு வழங்கும் தண்டனைகளைப் பற்றியும், இணைய தளத்தை ஞுறையாகப் பயன்படுத்தும் அறிவையும் பாட ஏற்பாட்டில் உட்படுத்த வேண்டும்.

## ஊடக விழிப்புணர்வு

நமது சமூகம் ஒலி, ஒளி ஊடகங்களுக்கு அதிகமுக்கியத்துவம் அளிக்கிறது. குழந்தைகளிடம் ஒளி ஊடகம் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. எனவே, ஊடக விழிப்புணர்வை உருவாக்கும் பல்வேறு கூறுகளைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்..

## நிலைமுன்னேற்றக் கண்ணோட்டம்

நாம் வாழும் பூமி மனிதனுக்கு மட்டும் உரிமையானதன்று என்ற சுற்றுப்புற விழிப்புணர்வைப் பாடத்திட்டம் அளிக்க வேண்டும். சுற்றுச்சூழலுக்கு ஊறுவிளைவிக்கும் மனிதனின் பழக்க வழக்கங்கள் சுற்றுப்புறத்தை இத்தகைய வீழ்ச்சிகளிலிருந்து எப்படிக் காப்பாற்றலாம் என்றும் அறிதல் இக்காலகட்டத்தில் முக்கியமானதாகும். சுற்றுப்புறமும் முன்னேற்றமும் எப்படி ஒருங்கிணைந்து செல்லலாம் என்ற ஆராய்ச்சியும் நிலைமுன்னேற்றம் தொடர்பான கண்ணோட்டமும் ஆராய்ச்சிகளும் பாடத்திட்டம் வெளிக் கொணர வேண்டியதாகும். ஒருங்கிணைந்த சுற்றுப்புற விழிப்புணர்வு உருவாக்குவதென்பது பாடத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

## இளைஞர் கல்வி

குழந்தை உளவியல் வல்லுஞர்கள் சுகாதார சேவையாளர்கள். மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சிகள் வழியாக இளைஞர் கல்விக்குப் பொருத்தமான உள்ளடக்க மண்டலங்கள் பல்வேறு பாடங்களில் உட்படுத்துவதற்கான வாய்ப்பைக் கருத்திற் கொள்ள வேண்டும். கற்பவர்களின் உடல்நிலை, தூய்மை போன்றவை தொடர்பான சந்தேகங்களும் தெளிவின்மையும் அறிவியல் நிலையில் கருத்தில் கொள்ளுவது பொருத்தமானதாகும்.

## நுகர்வோர் பண்பாடு- விளைவுகள்

நுகர்வோர் பண்பாட்டின் தீய விளைவுகள் குறித்த உண்மைகள் தொடக்க வகுப்புகளில் முதல் பாடத்திட்டத்தில் உட்படுத்த வேண்டும். நுகர்வோர் என்ற நிலையில் நமது உரிமைக ளும் நுகர்வோர்ச் சட்டங்களும் பாடத்தோடு தொடர்புடையதாக அமைய வேண்டும்.

## போதைப் பொருள் எதிர்ப்பு மனப்பான்மை

மது, போதை மருந்துகள், புகையிலை போன்றவற்றின் பயன்பாடு புதிய தலைமுறையின் ஆரோக்கியத்தைப் பாதிப்படையச் செயகிறது என்பதை நாம் உணர வேண்டும். வருங்கால தலைமுறையை இவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்காகப் போதைப்பொருள் உப யோகத்தின் உடல் மன உளைச்சல்களையும் விபத்துகளையும் சித்தரிக்கும் படங்கள், சிறு குறிப்புகள், காட்சிகள் போன்றவை உள்ளடக்கத்தில் உட்படுத்த வேண்டும். போதை எதிர்ப்பு மனப்பான்மையை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கம்.

## ஆண், பெண் சமத்துவம்

பாட ஏற்பாடு ஆண் பெண், சமத்துவத்தை உறுதிப்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆண் பெண் வேறுபாடு பாட ஏற்பாட்டில் இருந்தல் கூடாது. பாடநூலில் உள்ள பாடங்களில் கூட ஆண் பெண் சமத்துவம் இருக்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளை நடத்தும் போது ஆண் பெண் சமத்துவத்தை உறுதிப்படுத்துவது ஆசிரியரின் கடமையாகும்.

## சேமிப்பு மனப்பான்மை

ஆரம்பக் கல்வி முதலே குழந்தைகளுக்குச் சிக்கனமாக செலவு செய்து சேமிக்கும் மனப் பான்மையைப் பற்றிக் கற்பிக்க வேண்டும். சிக்கனத்தின் சிறப்பையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த வேண்டும். சிக்கனப் பண்பினைக் கடைபிடிப்பதற்கான செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.

## சாலைப் பாதுகாப்பு

சாலை விதிகள், சாலை விபத்தைத் தடுப்பதற்கான அறிவுரைகள், செயல்கள் போன்றவை சாலைப் பாதுகாப்பு காரணிகளாகும். சாலை என்பது ஒரு பொது இடமென்றும் நம்மைப் போலேவே மற்றவர்களுக்கும் சாலையைப் பயன்படுத்துவதற்குச் சுதந்திரம் உண்டு என்ற மனப்பான்மையையும் உருவாக்க வேண்டும். சாலையைப் பாதுகாப்போடி தொடர்புடைய செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பாடஏற்பாட்டில் இந்தத் துறைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவங்களை உறுதிப்படுத்த வேண்டும். பலவித பாட பாகங்களின் உட்கருத்துகளைத் தேர்ந்தெடுக்கும் போதும் இதற்கு செயல்பாடுகளை முறைப்படுத்தும் போதும் தேவையான முன்னுரிமை கிடைக்க வேண்டும். கற்றல் செயல்பாட்டின் போது இது தொடர்பான அறிவு, நற்பண்புகள் மனப்பாங்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தொடர் மதிப்பீடு மூலம் இந்த இலட்சியங்களை அடைய முடிந்ததா என்று பார்க்க வேண்டும். பலவித மன்றங்களின் செயல்பாடுகள் SPC, NCC, Scout & Guides, JRC, வித்யாரங்கம்- கலை இலக்கிய மன் றம் காந்தி தர்ஷன் ஆகிய இயக்கங்கள் மாணவர்களிடையே நல்ல மனப்பான்மைகளும், கடமை உணர்வும், நற்பண்புகளும் வளர வழிவகுக்கின்றன.

## 1.11 உரிமை அடிப்படையிலான கல்வி

## (Right based Education)

குழந்தைகளின் உரிமைகளைத் தீர்மானித்து அவற்றை உலகமெங்கிலும் நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாட்டு கல்வி சமூக பண்பாட்டு அமைப்பு (UNESCO) முன் வந்தது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளில் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஏராளமான சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் தேசிய கல்வி உரிமைச் சட்டம் 2009- ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும். குழந்தைகளின் எல்லாவிதமான உரிமைகளையும் பாதுகாக்கின்ற பொறுப்பு பெரியவர்களின் கடமையாகும். கல்வி உரிமைச் சட்டத்தைப் பற்றிக் கூறும் போது அவற்றை முக்கியமாக மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தலாம்.

- பங்கேற்பு (Participation)
- வாயப்பு (Provision)
- பாதுகாப்பு (Protection)

தனக்கு கிடைத்த உரிமைகளைப் பற்றி குழந்தை எவ்வாறு சிந்திக்கும்?

### பங்கேற்பு (Participation)

- குழந்தைகளோடு தொடர்புடைய எல்லாத் தீர்மானங்களைப் பற்றியும் என்னிடம் கலந்தாலோசிப்பது உண்டு.
- எடுக்கக் கூடிய முடிவுகளில் எனது கருத்துகளுக்கு முக்கியத்துவம் கிடைப்பதுண்டு.
- என்னுடைய திறன்களையும் வரைமுறைகளையும் அறிந்து செயல்பாடுகளில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கின்றன.
- எனது திறன்கள் வளரவும் , வரைமுறைகளுக்கு அப்பாற் செல்லவும் உதவும் கற்றல் செயல்முறைகளை செயல்முறைகள் எனக்குக் கிடைக்கிறது.
- எனது கருத்துகளுக்கு முன்னுரிமை கிடைக்கிறது.
- எனக்கும் எனது நண்பர்களுக்கும் வகுப்பில் நடக்கும் செயல்பாடுகளில் நல்ல முறையில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கிறது.
- எனது திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கிறது.

### வாய்ப்பு (Provision)

- தகுந்த கல்வித் தகுதியுடைய, காலத்திற்கேற்ப அறிவை வளர்க்கும் ஆசிரியர்களின் சேவை எங்களுக்கு கிடைக்கிறது.
- ஒதுக்கப்பட்டுள்ள நேரம் முழுவதும் கற்றல் அனுபவங்கள் எங்களுக்கு கிடைக்கின்றன.
- உடல் மன வளர்ச்சிக்குப் பொருத்தமான வகுப்புச் சூழல் எங்களுக்கு கிடைக்கிறது.
- எங்கள் ஆசிரியர்களால் கற்றல் செயல்பாடுகளுக்கு உகந்த கற்றல் கருவிகளைப் பொருத்தமான நேரத்தில் அளிக்க முடிகிறது.
- கலை, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கத் தேவையான கருவிகளும் வாய்ப்பு

களும் எங்களுக்கு கிடைக்கின்றன.

**கல்வி உரிமைச் சட்டம் (2009) இப்படி கூறுகிறது**

- *1* முதல் 5 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 200 வேலை நாட்களும் 800 மணிநேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.
- 6 முதல் 8 வரை படிக்கும் குழந்தைகளுக்கு 220 வேலை நாட்களும் 1000 மணி நேரம் கற்றல் நேரமும் கிடைக்க வேண்டும்.

### பாதுகாப்பு (Protection)

- பள்ளிக்கூடத்திலும் வெளியிலும் நான் எந்தவிதமான பாகுபாடுகளையும் அனுபவிப்ப தில்லை.
- என்னை யாரும் எந்தவொரு வகையிலும் புறக்கணிப்பதில்லை.
- உடல் மனரீதியில் யாரும் என்னைத் துன்புறுத்துவதில்லை.
- பயமின்றி ஆசிரியர்களுடன் பழக முடிகிறது.
- குழந்தை என்றாலும் எனக்கு தனித்துவம், உரிமை உண்டு என்று அனைவரும் அங்கி கரிக்கின்றனர்.
- பள்ளியிலும் வீட்டிலும் நான் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று என்னால் உறு தியாகக் கூற முடியும்.

**கேரள மாநில பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்**

*2002 -இல் மே மாதம் சேர்ந்த ஐக்கிய நாட்டுச் சபையின் குழந்தைகளுக் கான சிறப்பு மாநாட்டில் குழந்தைகளுக்கேற்ற ஒரு உலகம் என்னும் தலைப் பில் சட்டம் கொண்டு வரப்பட்டது. 2005 -ஆம் ஆண்டில் மத்திய அரசு உருவாக்கிய பாலர் உரிமை பாதுகாப்புக் குழு சட்டம் 2012 இல் கேரள மாநி லப் பாலர் உரிமைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் கேரள மாநில பாலர் உரிமை ஆணையம் செயல்படுகிறது. அரசியலமைப்புச் சட்டம் உறு திப்படுத்தும் பாலர் உரிமைகளைப் பாதுகாப்பதே இந்த ஆணையத்தின் முக் கிய கடமையாகும்.*

குழந்தைகளின் உரிமைகளை உறுதிப்படுத்த என்னால் என்ன செய்ய முடிந்தது. நான் இனி என்னென்ன செய்ய வேண்டும் என ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டும்.

## 1.12 நெறிப்படுத்துதல்

தேசிய கல்வி உரிமைச் சட்டத்தில் ஆசிரியர் ஆசிரியை ஒரு நெறியாளர் (mentor) என்று கருதப்படுகின்றார். பள்ளியின் முழுமையான வளரச்சிக்கு நெறியாளர் முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். கற்றல் அடைவுகளை உறுதிப்படுத்த நல்ல வழிகாட்டுதல் தேவை்..

கற்பித்தல் செயலில் முக்கிய காரணிகளான ஆசிரியர் - குழந்தை உறவில் இன்று நல்ல மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆசிரியரை அறிவை அளிக்கும் நபராகக் கருதாமல் குழந்தைகள் தாமாகவே அறிவை அடைய உகந்த பல்வேறு வாய்ப்புகளை ஏற்படுத்தும் நபராகக் கருதி அவர் செயல்பட வேண்டும்.

சரியாகக் கூறினால் பள்ளிக்கூடம் என்பது தனது வீடு போன்று வேறொரு வீடாகும். எனில் ஆசிரியர்கள் பெற்றோர்களைப் போல செயல்பட வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டிலிருந்து கிடைக்கும் அன்பு, அரவணைப்பு, முக்கியத்துவம், பாதுகாப்பு உணர்வு, அங்கீகாரம் இவை ஒவ்வொரு குழந்தைகளுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். இவற்றைப் பிரித்தறிந்து ஒவ் வொரு குழந்தைக்கும் தேவையின் அடிப்படையில் ஆசிரியர் அளிக்கும்போது தான் அவ ரது பொறுப்பு முழுமையடைகிறது. அப்போது தான் பள்ளி வீடாக மாறுகிறது.

ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட குடும்பச் சூழலைத் தெரிந்து கொள்ள கீழே கொடுக் கப்பட்டுள்ளவற்றை ஆசிரியர்கள் செய்தல் வேண்டும்.

- குழந்தைகளின் வீடுகளுக்குச் செல்லுதல்.
- பெற்றோர்களுடனான கருத்தப் பரிமாற்றம்
- குழந்தையைத் தொடர்ச்சியாகக் கவனித்தல்
-
-

இவ்வாறு குழந்தைக்கு அன்பும் அரவனைப்பும் பாதுகாப்பு உணர்வும் அங்கீகாரமும் அளித்து ஒரு பெற்றோர் போல் நடந்து கொண்டு, குழந்தைகளுக்குக் கற்றல் அடைவுகள் கிடைக்க உதவும் நபராக நாம் மாறும்போது தான் இந்தப் புதிய காலகட்டத்தின் ஆசிரயராக மாறுகிறோம்.

நெறிப்படுத்துதல் மூலமாக வழிகாட்டுதல், அறிவுரை வழங்குதல், ஆதரவு கொடுத்தல் மேம்படுத்துவதற்கான வாயப்பளித்தல் இவற்றை ஆசிரியர் குழந்தைகளுக்கு அளிக்கிறார். அனுபவம் வாய்ந்த நபர் என்ற முறையிலும் பின்பற்றத் தகுந்த மாதிரி நபர் என்ற முறையி லும் நெறியாளர் குழந்தைகளுடன் பழக வேண்டும். கற்றலுக்குத் தேவையான உத்திகளும் ஆலோசனைகளும் அளிக்க வேண்டும். குழந்தைகளிடம் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக் கொண்டுவர ஒரு நல்ல நெறியாளரால் மட்டுமே முடியும்.

. *நெறிப்படுத்துதல் வாயிலாக;*

- ஆசிரியருக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த கல்வி அனுபவங்கள் கிடைக்கின்றன.
- ஆசிரியர் மற்றும் குழந்தைகளின் அறிவு மண்டலம் வளர்ச்சியடைகிறது.
- குழந்தை பள்ளி உறவு வலுவடைகிறது.
- குழந்தையின் கற்றல் வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
- ஒன்று சேர்ந்து சிந்திக்கவும் முடிவு எடுக்கவும் செயல்பாடுகள் செய்யவும் இயலுகின்றது
- பெற்றோருக்கும் பள்ளிக்குமிடையே தொடர்பு வலுப்படுகிறது. குழந்தையின் கற்றல் நிலைப் பற்றிய அறிவு பெற்றோருக்கு கிடைக்கிறது..
- கலை விளையாட்டு. சுகாதாரம், பணி அனுபவக் கல்வி போன்ற மண்டலங்களில் குழந் தையின் பங்கேற்பும் மதிப்பிடலும் வலுப்படுகின்றன.

நெறிப்படுத்துதல் நடக்க உதவும் விதத்தில் பதிவேடுகளை உருவாக்கிப் பதிவு செய்ய வேண்டும் . பள்ளியில் உள்ள எல்லா ஆசிரியர்களையும் நெறியாளர்களாகவும் எல்லாக் குழந் தைகளையும் நெறிப்படுத்துபவர்களாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

வகுப்பிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சிறு குழுக்களாகக் கருதி ஒவ்வொரு குழுவின்

வளர்ச்சியை உறுதிப்படுத்த அந்த வகுப்பாசிரியருக்குப் பொறுப்பை அளிக்கலாம்.

## 1.13 ஆசிரியர் தொழில் ரீதியாகக் கடைபிடிக்க வேண்டிய விதி முறைகள் (Code of Professional Ethics for School Teachers)

### 1. ஆசிரியர்களின் கடமைகள்

*1.1 எல்லா மாணவியரிடமும் அன்பும் அரவணைப்பும் காட்ட வேண்டும்.*

- எல்லாக் குழந்தைகளுடனும் ஒரே போல் அன்புடன் பழக வேண்டும்.
- கல்வியில் பின் தங்கிய குழந்தைகளுக்குத் தனிப்பட்ட கவனம் அளிக்க வேண்டும்..
- குழந்தைகளுக்குத் தன்னம்பிக்கை, ஆர்வம், எதிர்பார்ப்பு உருவாகும் விதம் நடந்து கொள்ள வேண்டும்.

*1.2 ஜாதி, மத, இனம், நிறம், பொருளாதார நிலை, மொழி, ஆண்- பெண் வேறுபாடு, பிறந்த இடம் இவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் நீதியுடன் பாரபட்சமின்றி நடந்து கொள்ளுதல்.*

- ஆசிரியர்கள் ஜனநாயகக் கொள்கை, பொறுமை. சமூக நீதி மீதான நம்பிக்கை ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு அளிக்க வேண்டும்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நம்பிக்கைகள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக இருந்தால் அது பள்ளிக்கூடத்தை மிகவும் பாதிக்கும்.

*1.3 குழந்தையின் உடல் உள உணர்வு, பண்பாடு சமூக ஆண்ம வளர்ச்சிக்கு ஏற்றசூழலை உருவாக்குதல்.*

- உடல், உளத் திறன்கள் முழு வளர்ச்சியடை.யும் காலம் தான் பள்ளிக்காலம்.
- கல்வியால் அறிவு மண்டலம் மட்டும் வளர்ச்சி அடைந்தால் போதாது.
- முழுமையான தனிமனித வளர்ச்சியே கல்வியின் முக்கிய நோக்கம்.

*1.4 பள்ளி வாழ்க்கையில் எல்லா நிலையிலும் குழந்தையின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்கப் படுகிறது.*

- மனிதன் என்ற நிலையில் ஒரு குழந்தையின் ஜனநாயக உரிமைகளும் கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- ஆசிரியரிடமிருந்து உருவாகும் மோசமான செயல்கள் குழந்தைகளின் அபிமானத்திற்கு இழுக்கு ஏற்படுத்திக் கற்றலைப் பாதிப்படையச் செய்கிறது.
- பள்ளியின் எல்லாச் செயல்பாடுகளிலும் எல்லாக் குழந்தைகளின் முழுமையான ஈடுபாட்டை ஊக்குவிக்க வேண்டும்.
- ஐக்கிய நாட்டுச் சபை அங்கீகரித்து இந்தியா ஒப்புதல் அளித்த குழந்தைகளின் உரிமை விளம்பரத்தையும் குழந்தைகளின் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்தின் அறிக்கையையும் ஆசிரியர்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட வேண்டும்.
- பள்ளிகளில் ஒழுக்கம் கட்டுப்பாடு இவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கிய சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகளை மறுக்கக் கூடியவனாக இருக்கக் கூடாது.

*1.5 குழந்தைகளின் பரம்பரைத் திறன்களும் சிறப்புத் திறன்களும் வெளிப்படும் வகையில் திட்டமிட்ட ஒழுங்குபடுத்திய செயல்பாடுகளை வடிவமைக்க வேண்டும்.*

- ஒவ்வொரு குழந்தையின் கற்றல் அடைவுகளை மட்டுமன்றிக் குழந்தையின் திறன்களையும் சிறப்புத் திறன்களையும் தெரிந்து கொள்வது ஆசிரியரின் முக்கிய கடமையாகும்.
- ஒரு குழந்தையின் எல்லாத் திறன்களும் வளரத் தேவையான செயல்பாடுகளை அவர் அளிக்க வேண்டும்.

*1.6 அரசியலமைப்புச் சட்டம் எடுத்துரைக்கின்ற மதிப்புகளையும், மனப்பான்மைகளையும் உட்கொள்ளும் விதத்தில் பாடத்திட்டம் அமைய வேண்டும்.*

- ஜனநாயகம், மத நல்லிணக்கம், சமத்துவம், நீதி சுதந்திரம் ஆகிய அரசியலமைப்பு மதிப்புகள் பாட ஏற்பாட்டின் முக்கிய கூறுகளாக அமைய வேண்டும்.
- அரசியலமைப்பில் குடிமகன்களின் கடமைகளைப் பற்றிக் கூறும் 51 A புரிந்து கொண்டு அதில் A முதல் K வரையுள்ள பத்திகளை உட்கொண்டு அதன்படிச் செயல்பட வேண்டும்.

*1.7 குழந்தைகளின் தேவைக்கேற்ப ஆசிரியர்/ ஆசிரியையின் கற்பித்தல் முறை புனரமைக்கப்படுகிறது.*

- தொசர் மதிப்பீட்டின் அடிப்படையில் குழந்தைகளின் தன்மை, பெற்ற அடைவு, விருப்பம், கற்கும் முறை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு கற்பித்தல் உத்திகளில் தேவையான மாற்றங்களைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.

*1.8 குழந்தைகளின் தனிப்பட்ட தகவல் இரகசியங்களைப் பாதுகாத்து அந்தந்த தகவல்களைச் சட்டப்படியாக யாருக்குத் தெரிவிக்க வேண்டுமோ அவர்களிடம் தெரிவித்தல்.*

- ஒரு கவுன்சிலராக செயல்படும் ஆசிரியருக்குக் குழந்தைகளின் தனிப்பட்ட தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியும்.
- இந்தத் தகவல்களைக் குழந்தைகளின் நன்மைக்காகப் மட்டும் அறிவுபூர்வமாக பயன்படுத்த வேண்டும்..

*1.9 குழந்தைகளைப் பயமுறுத்துதல், உடல் ரீதியாகத் தண்டனை அளித்தல், மனரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது.*

- குழந்தைகளைப் பாலியல் கொடுமைகளிலிலிருந்தும் புறக்கணிப்பிலிருந்தும் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கும் கடமை ஆசிரியருக்கு உண்டு.
- தண்டனை அளித்தால் குழந்தைகள் நன்றாகப் படிப்பார்கள் எனும் கருத்தை மாற்ற வேண்டும்..
- இவ்வாறான சூழலில் குழந்தைகளுக்கு கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

*1.10 எல்லாவிதமான பாலியல் கொடுமைகளிலிருந்தும் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும்*

- எல்லா விதமான பாலியல் கொடுமைகளும் உடல்காயங்களை மட்டுமன்றி நீண்ட காலம் நிற்கும் மனக்காயங்களையும் ஏற்படுத்துகின்றன.
- வேலை செய்யும் இடங்களிலும் பள்ளிகளிலும் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிராக இந்திய உச்ச நீதிமன்றமும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு சட்டம் விதித்துள்ள விதிகளை ஆசிரியர்கள் மதித்து நடக்க வேண்டும்..

## 2. பெற்றோர்களிடமும் சமூகத்தோடும் உள்ள கடமைகள்

*2.1 பெற்றோர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் தொடர்பு கொள்ள வேண்டும்..*

- ஆசிரியர்கள் குழந்தையைப் பற்றி நன்றாகத்தெரிந்து கொள்ள அவர்களின் பெற்றோர் களுடன் நல்ல உறவுகளை வளர்க்க வேண்டும்.
- ஆசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள சிறந்த தொடர்பு குழந்தையை ஆசி ரியருடன் கூடுதலாக நெருங்க முடியும்.
- பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் பள்ளிச் செயல்களைப் பற்றி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்து கொள்ள ஆவலாக இருப்பார்கள்
- குழந்தையில் வளர்ச்சிக் கட்டத்தில் ஏற்படும் தவறுகளையும் மேன்மைகளையும் பெற் றோர்களோடு பகிர்ந்து கொள்ளும் போது பெரிய ஆபத்துகளைக் கூட தடுக்க முடி கிறது.

*2.2 குழந்தைகளின் தன்மானத்திற்கு தீங்கு விளைவிக்கும் எந்தச் செயலிலும் ஈடுபடக்கூடாது.*

- பிற குழந்தைகளின் முன்னிலையில் குழந்தைகளின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத் தில் பேசக்கூடாது.
- அதுபோலவே பெற்றோர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் விதத்தில் நடந்து கொள் ளக்கூடாது.
- ஏதாவது ஒரு பிருவு குழந்தைகளின் சூழலை ( ஜாதி, மதம் பொருளாதாரம் ) புகழ்வது மற்ற குழந்தைகளிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தும்.

*2.3 குழந்தைகள் இந்தியாவின் பண்பாட்டைக் குறித்துப் பெருமைப்பட ஆவண செய்ய வேண்டும்.*

- ஏராளமான பண்பாடு மொழி, மதம் நம்பிக்கை கொண்ட நாடே இந்தியா இது ஒவ் வொரு வகுப்பிலும் பிரதிபலிக்க வேண்டும்..
- இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை கடைபிடிக்கப்படுகிறது.
- பரஸ்பர சகிப்புத் தன்மையும் எல்லாக் கலாச்சாரங்களையும் மதிக்கும் மனப்பான்மை வேண்டும்.
- இந்தக் கொள்கைகள் பாடத்திட்டத்தின் மூலம் வளரச் செய்ய முயற்சிக்க வேண்டும் .

*2.4 பல்வேறு பிரிவினரிடையே ஏற்படும் எதிர்ப்பை உருவாக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும்.*

- வகுப்பறையில் எல்லா மதத்தினரையும் நம்பிக்கைகளையும், மொழிகளையும் சமமாக மதிப்பளிக்கும் விதத்தில் செயல்பாடுகளை அமைக்க வேண்டும்.
- தேசிய ஒருமைப்பாட்டின் அடிப்படை முதலில் இந்தியன், பின்னர் மட்டுமே ஒரு பிரி வின் அங்கம் என்ற கருத்து.
- ஏதாவது ஒரு பிரிவினரின் விளம்பரத்திற்காகப் பள்ளி/ வகுப்பறையைப் பயன்படுத் தக் கூடாது
- தற்கால சமூக அரசியலைப் பற்றி உரையாடும் போது ஆசிரியர்/ ஆசிரியை ஏதாவது ஒரு பிரிவினருக்காகப் பேசக்கூடாது.

**3. ஆசிரியர் என்ற தொழிலோடும் சக ஆசிரியர்களோடும் ஆற்ற வேண்டிய கடமை.**

*3.1 தொழில் திறன் வளரத் தொடர்ச்சியாக முயற்சி செய்ய வேண்டும்.*

- ஒரு குழந்தைக்கு நிரந்தரமாகக் கற்பிக்க முயலும் ஆசிரியரும் அதே போன்று கற்க வேண்டும்,
- எப்போதும் வளர்ந்து கொண்டிருக்கும் அறிவு மண்டலங்களைக் குறித்தும் கற்பிக்கும் முறைகளைக் குறித்தும் தககவல்களைத் திரட்டிச் செயல்படுத்த வேண்டும்.
- எங்கிருந்தெல்லாம் தனக்கு புதிய அறிவுகள் கிடைக்குமென்று விசாரிப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

*3.2 பிற ஆசிரியர்களோடும் மற்றுள்ளவர்களோடும் கருத்துப் பரிமாற்றம் நடத்த வேண்டும்.*

- கல்வித் தொடர்பான உணர்வு உருவாக்குவதற்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தன்னாலான படைப்புகளை உருவாக்கும் வண்ணம் ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்.
- இவ்வாறான உணர்வு உருவாக்கத் திட்டமிடலும், பயனுள்ள ஒத்துழைப்பும் ஆசிரியர்களிடம் உருவாக வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்கு அனைத்து ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவும் செயல்படவும வேண்டும்.
- ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பள்ளிக்கூடத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருபவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தல் வேண்டும்.

*3.3 சக ஆசிரியர்களோடு பெருமையோடும் மரியாதையோடும் பழகுகிறேன்.*

- பள்ளியிலுள்ள அனைத்து ஆசிரியர்களையும் அவர்களின் கல்வித் தரத்தையோ அவர்கள் கற்பிக்கும் பாடத்தையோ கருத்தில் கொள்ளாமல் பெருமையோடும் மதிப்போடும் பழகுதல் வேண்டும்.

*3.4 ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்தவோ தனியார் நிறுவனங்களில் செயல்படுவதோ இல்லை.*

- ஆசிரியர்கள் தனியாக டியூசன் நடத்துவது அவருடைய பள்ளிக்கூட செயல்பாடுகளைப் பாதிக்கின்றது.
- சொந்தச் செயலை மேம்படுத்துவதற்கான நேரம் இல்லாமல் போகிறது.
- சொந்த மாணவர்களுக்குத் தனியாக டியூசன் கொடுக்கும் போது பள்ளிக்கூடத்தின் அடிப்படைத் தத்துவங்களுக்கு எதிராகச் செயல்படுவது போன்று ஆகிறது.

*3.5 தன்னுடைய செயல்களிலும் தீர்மானங்களிலும் தாக்கம் செலுத்தி விடுவார்கள் என்பதால் எந்த விதமான பரிசுகளோ வேறு உதவிகளோ வாங்குவதில்லை*

- பலனை எதிர்பார்த்துக் கொடுக்கப்படும் விலை உயர்ந்த பரிசுகளை ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்தோ பெற்றோர்களிடமிருந்தோ வாங்கக் கூடாது.

*3.6 சக ஆசிரியர்கள் குறித்தோ, பெரிய அதிகாரிகள் குறித்தோ தேவையற்ற குற்றம் கூறுவதில்லை*

- ஒருவருக்கொருவர் குற்றம் கூறுகின்ற குழுக்கள் ஆசிரியர்களுக்கிடையில் தேவையற்றதாகும்.
- சக ஆசிரியர்களுக்கு எதிராக நீருபிக்க முடியாத குற்றங்களைக் கூறுதல் கூடாது.

- ஏதாவது ஒரு சக ஆசிரியர்/ ஆசிரியையிடமிருந்து தவறு தென்படுமெனில் அதனை மூத்த ஆசிரியர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும்.

*3.7 சக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இவர்களின் முன்னிலையில் சக ஆசிரியரைக் குற்றம் கூறுவதில்லை*

- ஆசிரியர்கள் குறித்து வேறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் அவற்றை வெளிப்படுத்தும் முறை சரியானதாக இருக்க வேண்டும்.
- சக ஆசிரியர்கள் கற்பிக்கும் முறையைக் குற்றம் கூறும் விதம் பேசக் கூடாது.

*3.8 சக ஆசிரியர்களின் கற்பிக்கும் முறைகளை மதிக்கிறேன்.*

- சிறப்பாகக் கற்பிப்பவர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்தவும் அப்படிப்பட்ட சிறப்பை உட்கொள்ளவும் வேண்டும். ஆனால் அவற்றை முழுவதும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது.

*3.9 சக ஆசிரியர்கள் குறித்து தனிநபர் விவரங்களை இரகசியமாக வைக்கவும், சட்டரீதியாகத் தேவைப்படும் போது மட்டும் வெளிப்படுத்த வேண்டும்.*

- ஏதாவது தேவைக்காகச் சேகரிக்கின்ற சக ஆசிரியர்களின் தனிநபர் விபரம் இரகசிய குணம் உடையதெனில் அவைகளைச் சட்ட ரீதியான செயல்களுக்கு மட்டுமே வெளியிடுதல் வேண்டும்.

## 1.14 கற்பித்தல் கையேடு

ஒரு கற்றல் அடைவுகளை இலட்சியமாகக் கொண்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் சுயமானமுறையில் செயல்பாடுகள் உருவாக்க இயலவேண்டும். பாடநூலிலும், கற்பித்தல் கையேட்டிலும் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளைத் தன்னுடைய வகுப்பறையில் உள்ள குழந்தைகளுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்தும், கூடுதல் சேர்த்தும் செயல்படுத்தியும் சிறப்படைய வேண்டும். ஒவ்வொரு கற்றல் அடைவை அடையவும் தேவையான செயல்களைத் திட்டமிடலில் உட்படுத்த வேண்டும்.

கற்றல் செயல்பாடுகளுடன் மதிப்பிடலையும் ஒன்று சேர்த்துத் திட்டமிட்டுச் செயல்பக்கத்தில் எழுத வேண்டும்.

தொடர் மதிப்பீட்டின் வழியாகக் கிடைக்கின்ற விவரங்களை அடையாளப்படுத்துவதே மதிப்பீட்டுப் பகுதியில் அமைய வேண்டும்.

அடுத்து வரும் ஒரு வாரத்திற்குத் தேவையான கற்பித்தல் கையேடு பள்ளி வளக்குழு, பாடக்குழு இவைகளில் வெளியிடுவது நன்று. ஒரு வார காலத்திலுள்ள மதிப்பிடுதல் பகுதியிலுள்ள விவரங்களை அடிப்படையாக்கி ஆசிரியர் ஒரு சிறு பிரதிபலிப்புக் குறிப்பு (Reflection Note) தயாராக்கவும் SRG/Subject Council யில் விவாதிக்கவும் செய்யலாம். இந்தக் குறிப்பின் அடிப்படையில் ஆசிரியரின் தொடர் திட்டமிடல் குறிப்பு தயாராக்க வேண்டும்.

*கற்பித்தல் கையேட்டின் மாதிரி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.*

**கற்பித்தல் கையேடு**

ஆசிரியர்/ ஆசிரியையின் பெயர் :
வகுப்பு :
பாடம் :
அலகு/ மண்டலம்
நேரம் :
கற்றல் அடைவுகள் :
கருத்து :
பாடம் சார்ந்தது :
பணி அனுபவம் சார்ந்தது :
திறன் :
பாடம் சார்ந்தது :
துணைக் கருவிகள் :

| *செயல்முறைப் பக்கம்* | *மதிப்பீட்டு பக்கம்* |
|---|---|
| *(செயல்பாடுகளும் மதிப்பீடும் அடங்கிய செயல்முறை* | *மதிப்பீட்டு விபரங்களை இங்கே எழுத வேண்டும்* |

தலைமை ஆசிரியர் கையொப்பம் ஆசிரியர் கையொப்பம்

## பிரதிபலிப்புச் சிந்தனை (Reflections)

**எனது கண்டுபிடிப்புகளும், பகுத்தறிவும்**

(கற்றல் செயல்பாடுகளின் மதிப்பீட்டு செயல்முறை வழியாக கிடைத்த தகவல்களின் அடிப்படையில்)

- 
- 
- 
- 

தொடர் செயல்பாடுகளும், தீர்வுச் செயல்பாடுகளும்

- 
- 
- 
- 

**பிரதிபலிப்புச் சிந்தனை ( பிரதிபலிப்புக் குறிப்பு ) எதற்கு?**

குறிப்பிட்ட கற்றல் அடைவுகளுக்கேற்ப கற்றல் செயல்பாடு முழுமையாக நிறைவடைந்த பின்னரே பிரதிபலிப்பு தயாராக்குதல் வேண்டும்.

- இந்தக் குறிப்புகளை SRG கூட்டத்தில் வெளிப்படுத்த வேண்டும்.
- தொடர் திட்டமிடலுக்கு வழிவகுத்தல்
- நிலைத் தேர்வின் தொடர் மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு.

# 2. கலைக்கல்வி- தேவையும் முக்கியத்துவமும்

உலகின் எந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கும் கருத்துப்பரிமாற்றம் நடத்துவதற்கு ஏற்றதொரு பொது மொழியாகும் கலை. கலையின் மூலம் ஒரு நபர் தன்னைத்தானே புரிந்து கொள்ளவும் உலகில் அவனுக்குள்ள இடத்தைப் புரிந்து கொண்டு வாழ்க்கையின் பொருளை கண்டுபிடிக்கவும் செய்கிறான் எனக் கூறலாம். அதனால் தான் கலைக்கல்வி என்பதை மனதை அறிந்து கொள்வதற்கான ஒரு வழிமுறையென்று கூறலாம்.

சாதாரணமாக சுகலோப ஆசைகளிலிருந்து தன்னைச் சுற்றியுள்ள அழகான உலகிற்கு குழந்தையை அழைத்துச் செல்லும் மிகமுக்கியமான பங்கையே கலைக்கல்வி நிறைவேற்றுகிறது. தனியாகவும் குழுவாகவும் சேர்ந்துள்ள செயல்களின் வாயிலாக பல்வேறுபட்ட சமூக வாழ்க்கைத் திறன்களில் கைதூக்கி உயர்த்துவதற்கு கலைக்கல்வி உதவியாக உள்ளது. கலாச்சார அறிவு, மதிப்பு, தன்னம்பிக்கை போன்றவற்றை ஊட்டுவதற்கும் கலைக்கல்வி உபயோகப்படுகிறது.

கல்வியின் முக்கிய நோக்கம் ஒருவரின் முழுமையான வளர்ச்சியென்றும், அறிவும்...... மண்டலத்தைப் போலவே உணர்வுபூர்வமாகவும் வளர்ச்சி அடையவேண்டுமென்று உளவியல் சித்தாந்தங்கள் உலகிற்கு எடுத்துரைத்துள்ளது. இதன்மூலம் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்ட பல்வேறு நாடுகள் தங்களின் பாடத்திட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறவும் செய்துள்ளது. பன்முக அறிவு சித்தாந்தத்தின் அடிப்படையில் அறிவின் பல்வேறு நிலைகள் வளர்ச்சியடைவதற்கு மிகப் பொருத்தமான ஊடகம் கலை ஆகும். இசை இயற்கைச் சார்ந்ததும், உள்ளுணர்வு சார்ந்ததுமான புத்திமண்டலங்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பை கலைக்கல்வி முன்வைக்கிறது. இத்துடன் மொழிசார்ந்த, கணிதம் சார்ந்த அறிவு வளர்ச்சிக்கான கருத்துகளை உருவாக்குகிறது.

கலைகளுக்கு மனித மனதை விரிவடையச் செய்து வாழ்க்கையில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் தனித்திறன் உள்ளது. பள்ளிகளிலிலிருந்து கலையை மாற்றி நிறுத்துவதென்பது நாம் இராம ராஜ்ஜியத்திற்கு பதிலாக இராவண இராஜ்யமாக இருக்குமென்று காலத்தால் அழிக்கமுடியாத சிறந்த ஆசிரியரும் தீர்க்கதர்சியுமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குழந்தைகளை கர்மயோகிகளாகவும், அதிக உற்சாகமுள்ளவர்களாக ஆக்குவதற்கான அதிக சக்தியை சரியான வழியில் திசை திருப்பி விடாமலிருந்தால் அது தீய சக்தியை வெளிப்படுத்தும். குழந்தைகளின் இத்தகைய அதிக சக்தியை கலை இரசனையிலும், கலையை வெளிப்படுத்துவதிலும் திருப்பி விடுவோமெனில் அது அவர்களுக்கும் சமுகத்திற்கும் ஒரு முதலீடாக மாறும்

செல்வாக்கும், பரந்ததும், வேறுபாடுகள் நிறைந்ததுமான கலைப் பாரம்பரியம் இந்தியாவிற்கு உள்ளது. சங்கீதம், நாட்டியம், சிற்பம், நாடகம் முதலிய கலைகள் பாரத மக்களின் வாழ்கை யுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்திருந்தது. நாட்டிய சாஸ்திரம் போன்ற முழுமை யான மிகப்பெரிய நூல்கள் தோன்றியதே கலைத்திறனுக்கும், கலைக்கல்விக்கும் இங்கு நில வியிருந்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறது. குருகுல கல்வி முறையிலும், புத்தமத கால கட்டத்தில் நிறைந்திருந்த கல்விக்கூடங்களின் பாடத்திட்டத்திலும் கலைக்கல்வி முக்கிய பாடமாக இருந்தது.

நவீன கல்விமுறை இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் பாடத்திட் டத்தில் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தது. காந்தியடிகள் அறிமுகம் செய்த அடிப்படைக் கல்வித்திட்டத்திலும் கைத்தொழிலுடன் கலைகளும் இடம் பெற்றிருந்தன. சுதந்திர இந்தி யாவின் பல்வேறு பாடத்திட்ட சீரமைப்பு கட்டங்களிலும் கலைக்கல்வி இடம் பெற்றிருந்தா லும் அதை நடைமுறைப்படுத்தும் போது ஒதுக்கப்படவே செய்தது. கேரள மக்களின் சமூக வாழ்க்கையில் கலையுடனான உயிரோட்டமான உறவைக் காணலாம். விவசாயத்திலும், பிற தொழில் துறைகளிலும் நம்பிக்கைகளுடன் தொடர்புடைய கலைகள் குருகுல சம்பிரதாயத் திலுள்ள கலைத் திறன்கள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கைமாறி வந்ததாக சரித் திரம் கூறுகிறது.

நவீன கல்வியின் ஆதிக்கம் வரை குருகுல கல்வி முறையே கலைக்கல்வி கற்றலி லும் இருந்தது. அருபதாம் ஆண்டின் தொடக்கத்தில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் ஒன்றுமுதல் 8 வகுப்பு வரையிலுள்ள மாணவர்களுக்கு பெயிண்டிங், மோடலிங், சங்கீதம் போன்ற துறைகளில் கற்றல் அனுபவங்கள் கொடுப்பதற்கான அறிவுரை வழங்கப்பட்டிருந் தது. தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தில் பல்வேறு வகுப்புகளுக்கான விரவான பாட ஏற்பாடு உட்படுத்தப்பட்டிருந்தது. பின்னர் நடை முறைப்படுத்திய பாடத்திட்ட சீரமைப்புகளில் எல்லாம் கலைக்கல்வி அவசியமான ஒரு காரணி என்ற நிலையில் உட்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர் இல்லாததும் நிலவில் இருந்தவர்களுக்கு பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான பயிற்சி கிடைக்காததும் இந்தத் துறையை புறக்கணிப்பதற்கு காரண மாக இருந்தது. கலைக்கல்வியை சரியாக மதிப்பீடு செய்யவோ கற்றல் அடைவுகளை பெற் றோருடன் பங்கிடவோ செய்வதில்லை. இதனால் சமூகமும் இந்தத் துறையை கற்றலின் பாகமாக ஏற்றுக்கொள்ளாத நிலை ஏற்பட்டது.

சர்வதேச அளவில் கலைக்கல்விக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தைப் பற்றி யுனஸ்கோ போன்ற அமைப்புகள் அறுதியிட்டு கூறிய காரியத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறவேண்டும். இந்தியாவிலுள்ள பல்வேறு கல்விக்குளுக்களும், அறிக்கைகளும் கலைக்க கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவுபடுத்தியுள்ளது. இந்த சூழலில் கேரளத்தில் கலைக்கல்வி பாட்த்திட்டத்தில் காலத்திற்கேற்றவாறு சீர்திருத் தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

### *கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்*

கலைக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி சர்வதேச அளவிலும், சேசிய அளவி லும் பல்வேறு குழுக்களும், அமைப்புகளும் முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான கருத்து களை கூறியிருக்கிறது. குழந்தைகளில் தன்னம்பிக்கை, சுய அறிவு, பிறரை அங்கிகரித்தல் போன்ற குணங்கலை விரிவடையச் செய்வதில் கலைக்கல்வியின் பங்கினைப் பற்றி யுனஸ்கோ எடுத்துரைக்கிறது. கலைக் கல்வியினால் குழந்தைகளில் மனவெழுச்சியும், சமூ கமுன்னேற்றமும் ஏற்படுமென்று யுனஸ்கோ கருதுகிறது.

பாரதத்திலுள்ள பல்வேறு கல்விக் குழுக்கள் குழந்தைகளின் பன்முக வளர்ச்சிக்கு கலைக்கல்விக்கு முக்கியமான பங்களிப்பு உள்ளதென்று தெளிவுபடுத்தியுள்ளது.

முதலியார் கமிஷன் அறிக்கை (1952–53) இவ்வாறு கூறுகிறது:

'Release of creative energy among the students so that they may be able to appreciate cultural heritage and cultivate rich interest, which can pursue in their leisure and, later in life'

பள்ளிக் கல்வி பாட ஏற்பாட்டில் ஓவியம், கைத்தொழில், சங்கீதம்,, நாட்டியம், நாடகம் போன்றவைகளுக்கு முக்கிய இடம் வழங்க வேண்டுமென்று கமிஷன் கூறுகிறது.

கோத்தாரி கமிஷன் அறிக்கையில் (1962–64) இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

'Adequate facilities for the training of the teachers in music and the visual art do not exist. The neglect of the arts in education impoverishes the educational process and leads to decline of aesthetic tastes and values'

கோத்தாரி கமிசன் சிபாரிசின் அடிப்படையில் கலைக் கல்வியின் அவலநிலையையும், வாய்ப்புகளையும் படிப்பதற்காக வல்லுனர்களின் சிறப்புக் குழு பின்னர் உருவாக்கப்பட்டது.

1986 ன் தேசிய கல்விக் கொள்கையின் பாகமாக 1992 ல் ஏற்படுத்திய செயலறிக்கை (POA) கலைக் கல்வியைப் பற்றி இவ்வாறு கூறுகிறது:

'An illustrated view on the cultural perspective inter linking education and culture in order to promote the process of child personality development particularly in terms of discovering the inherent potentialities of the child'.

இவ்வாறாக மழலையர் பள்ளிமுதல் உயர்கல்வி வரையுள்ள கல்விமுறையில் பாடத்திட்டத்தை சீரமைப்பதற்கான தீர்மானம் ஏற்பட்டது.

என். ஸி. இ. ஆர். டி தயாராக்கிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக்கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.2005 ன் தேசிய பாடத்திட்ட வரைவுச் சட்டத்தில் கலைக் கல்வியைப் பற்றிய கருத்தை மறு சீரமைக்கவும் அதனுடைய வாய்ப்புகளை பலமுறைகளில் விளக்கவும் செய்யப்பட்டுள்ளது.

- கலைக் கல்வியை கணிதம், அறிவியல் போன்றவையுடன் ஒரு அடிப்படை பாடத்திட்டமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
- கலைகள் அக்காடமிக பாடங்களுடன் தொடர்புடைய அறிவு பெறும் செயல்பாடுகளை வேகப்படுத்துவதற்கு மட்டுமே உதவி செய்கிறது என்ற பரம்பரை கருத்தை திருத்தியுள்ளது.
- கலை என்பது அறிவு மண்டலம், மனவெழுச்சி, இரசித்தல் வாயிலாக குழந்தைகளில் உட்புகும் செயல்பாடாக மாறுகிறது.
- புதிய கற்றல் செயல்பாடுகளாக வளரவேண்டிய ஒரு மண்டலமாகும் கலைக்கல்வி என்ற கண்ணோட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது

- குழந்தைகளின் கலைத்திறன் வளர்ச்சியும், மேம்பாடும் நன்றாக பிரதிபலிப்பதற்கு உதவியாக மதிப்பீட்டுத் தந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்துடன் கலைக்கல்வி தொடக்க மேல்நிலை வகுப்புகளில் கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்கிறது.

அறிவுருவாக்க செயல்பாடுகளில் சுயத்திறனையும் விருப்பங்களையும் உபயோகப் படுத்துவதற்கு குழந்தைகளை தகுதியுள்ளவனாக மாற்றுவதில் கலைக்கல்வியின் முக்கி யத்துவத்தைப் பற்றி 2007 ன் கேரள பாடத்திட்ட வரைவுச் சட்டம் எடுத்துக் கூறுகிறது.

இந்த சிபாரிசுகளின் அடிப்படையில் நடந்த ஒவ்வொரு பாடத்திட்ட சீரமைப்பிலும் தொடர்ந்து அதை நடைமுறைப்படுத்துவதிலும் கலைக்கல்விக்கு எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றமடைய முடியவில்லை. தொழில் வாய்ப்புகளை மட்டும் முன்வைத்து முன் னேறும் பள்ளிக் கல்வியின் இன்றைய நிலையில் குழந்தைகள் சமூக தீமைகளையும் பண்பாட்டு இழப்பையும் நோக்கிச் செல்கிறார்கள் என்பதைக் காணலாம். கலையின் மூலம் குழந்தைகள் பெற வேண்டிய முக்கிய சமூக வாழ்க்கைச் சூழலையும் கலாச்சார அறிவையும், முழு வளர்ச்சியையும் ஏற்றுக் கொள்ளாமல் போவது இந்த பண்பாட்டு இழப்பு ஒரு முக்கிய காரணமாகும். இந்த சூழ்நிலையில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்வியும் அறிவுமண்டலத்தில் ஒரு பாடமாக வேண்டிய ஒரு சரிசமமான கல் விமுறையை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது

2009 ன் கல்வி உரிமைச் சட்டம் இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு மைல்கல்லாக மதிப்பிடப்படுகிறது. குழந்தையின் முழு வளர்ச்சி என்பது அவனுடைய அடிப்படை உரி மையாக மாறியுள்ளது என்பதை எடுத்துக்கூற வேண்டியதாகும். இந்த சூழ்நிலையில் கலைக்கல்வி உட்படும் காரியங்களை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியது இந்தக் காலகட்டின் அவசியமாகும்.

# 3. கலைக்கல்வி – கற்றல் அணுகுமுறை

கலைக்கல்வி பாடத்திட்டத்தின் அவசியமான பகுதியாக அங்கிகரிக்கப்பட்ட சூழ்நிலையில் கற்றல் அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டுமென்ற சரியான கருத்து இருக்கவேண்டும். முன்காலங்களில் அறிவிற்கு அப்பாற்பட்ட ஒரு மண்டலம் என்ற நிலையில் கலைகல்வியின் அணுகுமுறை இருந்தது. நவீன உளவியலின் கண்ணோட்டத்தில் ஒரு நபரின் முழு வளர்ச்சி என்பது அறிவின் பல்வேறு நிலைகளின் வளர்ச்சியாகுமென்று உணர்ந்துள்ளோம். அறிவு வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை ஆழமாக சுவாதீனிப்பதும் பரம்பரையான வேரோட்டமுள்ளதுமான கலைகள் தனிநபர் ஆளுமையை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. மழலையர் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையுள்ள பள்ளிக்கல்வியில் ஒரு முக்கிய பாடஏற்பாடு என்ற நிலையில் கலைக்கல்வியை அணுகவேண்டும்.

நம்முடைய கல்வித்திட்டத்தில் கலைகள் கற்பிப்பதை ஊக்குவிப்பதில்லை என்று மட்டுமின்றி குழந்தைகளை கலைக்கல்வியிலிருந்து பின்வாங்கச் செய்கிறோம் என்ற பாடத்திட்ட வரைவின் ( 2005) உற்றுநோக்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கலைவிழாக்களுக்கான தயாரெடுப்புகளும் அதன்மூலம் கல்வி நிலையங்களுக்கு கிடைக்கும் அங்கிகாரம் என்ற குறுகிய இலட்சியத்தில் பெரும்பாலும் கலைக்கல்வி சுருங்கிவிடுகிறது. பள்ளிக்கூடத்தில் சேரும் அனைத்து குழந்தைகளையும் இலட்சியமாகக் கொண்ட கற்றல் அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு குழந்தையிடமும் உள்ள சிறந்த கலை ஆர்வத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குழந்தை மையக் கல்வித்திட்டம் பொதுவாக அங்கிகரிக்கப்பட்டிருந்தாலும் கலைக்கல்வியின் விசயத்தில் அந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக காண முடியவில்லை. ஒவ்வொரு குழந்தையின் திறமைகளையும் வாய்ப்புகளையும் பிரித்தறிந்து முழு திறன் வளர்ச்சிக்கு உதவும் வகையில் பாடத்திட்ட செயல்பாடுகள் உருவாக்கப்படும் போது தான் குழந்தை மையக்கல்வி முழுமையடைகிறது. குழந்தைகளின் கலை என்பது பல்வேறு சிறப்புகளுள்ள ஒன்றாகும். குழந்தையின் கற்பனையில் பொருட்களின் எதார்த்தமான படங்களோ பாவனைகளோ சப்தங்களோ அதே போல் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒவ்வொரு காரியத்தையும் குழந்தையின் கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கான திறன் ஆசிரியைக்கு வேண்டும். குழந்தைகளின் பாவனைகளை புரிந்து கொள்ளுதல் என்பதுதான் குழந்தை மையக் கலைக்கல்வியின் நோக்கமாகும். குழந்தைகளுக்கு அறிமுகமான சூழலிலிருந்துதான் எப்பொழுதும் கலைக்கல்வி தொடங்கவேண்டும்.பழக்கமான

குழந்தைக்கு இசையுடன் தொடர்புடைய அனுபவ சூழல் என்பது நாட்டுப்புறப் பாடல்கள், சினிமா பாடல்கள் போன்றவையாகும் . இவ்வாறான பாடல்களுக்கோ வாய்மொழி சிந்துகளுக்கோ ஏற்ற தாளத்துடனான அசைவுகளே குழந்தையின் நாட்டியத் திறனுக்கான அடிப்படையாகும். பிறருடைய தூண்டுதல் இல்லாமல் சுயமாக குழந்தை வரையும் படத்தைப் பார்க்கும் பெரியவர்களுக்கு அந்த நேரத்தில் படம் முழுமையற்றதும், அளவில்லாததுமாக தோன்றக் கூடிய படங்களே ஓவியக் கலையில் அவர்களின் அடிப்படையாகும்.

இவ்வாறு இயல்பாக தோன்றக் கூடிய கலைஞானத்தை ஆசிரியர்கள் கண்டறிந்து கை கொடுத்து உதவியும் அதை வளரச் செய்தும் சிறந்த கலைஞனாக மாற்ற வேண்டும். இத்துடன் அந்தந்த பகுதியின் கலாச்சார பொக்கிஷம் என்ற நிலையில் வளர்ச்சியடைந்துள்ள இசை, நாட்டிய நாடக கலைகளையும் கலையம்சம் கொண்ட கைத் தொழில்களையும் குழந்தையின் அனுபவ அறிவுச் சூழலுடன் ஆசிரியர்கள் புரிந்து கொள்ளவேண்டும். குழந்தைகள் இவ்வுலகை அறிந்து கொள்வது ஐம்புலன்களின் மூலமாகும். பார்த்தல், தொடுதல், கேட்டல் போன்றவற்றின் வாயிலாக இயற்கையை முழுமையாக உட்கொள்ளும் போது தான் கலைத் திறன் மேம்படுகிறது. பிற பாடங்களை கற்பதற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் கலைகல்வியின் முலம் பெற்றுக் கொள்ளும் உற்றுநோக்கல் திறன் மிக அதிகமான பலனைத் தருகிறது.

பள்ளிக்கூடங்களில் கலைத் திறன்களுக்கே எப்பொழுதும் முன்னுரிமை கிடைக்கிறது. ஒலி ஒளிக் காட்சிகளின் அழகுணர்வை புரிந்து கொள்ளவும் இரசிக்கவும் வேண்டுமென்பதே கலைக் கல்வியில் நாம் மேற்கொள்ளும் அணுகுமுறையாகும். ஒவ்வொரு நபரும் திறமைகளை வெளிக்காட்டுவதில் வேறுபட்டவர்களானதால் இரசனையிலும் திறன்களை வெளிக்கொணர்வதிலும் வேறுபாடு இயல்பானதாகும். ஒவ்வொரு குழந்தையும் அவரவர் திறமையை முடிந்தளவு உயர்த்துவதற்கான வாய்ப்பை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இயல்பான வளர்ச்சி என்ற நவீன கண்ணோட்டமும் திரும்பத் திரும்ப கற்றலும் ஒன்றுக்கொன்று பொருத்தமுடையதன்று. முடிந்தளவிற்கு குழந்தைகளின் முழு வளர்ச்சியை கருத்தில் கொண்டு இயல்பான வளர்ச்சியை நோக்கிச் செல்லும் முறையாக இருக்க வேண்டும். இதற்காக ஒருங்கிணைந்த கற்றல் முறைகளை முதலாவதாக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் தொடக்கம் முதலே கலைக் கல்விக்கு அதற்குரியதான அடித்தளம் உள்ளது. பிற பாடங்களுடன் ஒருங்கிணைந்த வாயப்புகளை பயன்படுத்துவதுடன் கலையின் பல்வேறு நிலைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கலைக்கல்வியில் சங்கீதம். நடனம், ஓவியம், நாடகம் போன்ற பகுதிகள் அடங்கியிருக்கிறது.

மழலையர் பள்ளிக்குழந்தைகள் (3–5 வயது) எதையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் சுறுசுறுப்பும் உள்ளவர்கள். குழந்தைகளின் இத் தன்மையை பல்வகைத் திறன்கள் மூலம் கற்றலுக்கு உபயோகப்படுத்தலாம். இந்த கட்டத்திலும் முதல் இரண்டாம் வகுப்புகளில் முழுமையாக ஒருங்கிணைந்த கற்றல் அணுகுமுறையையே பயன்படுத்த வேண்டும். தொடர்ந்துள்ள கட்டங்களிலும் பலவிதமான கலை வடிவங்களின் மூலம் குழந்தையின் மனதிலுள்ள திறன்களை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். பல்வேறு கலைத்துறைகளில் நிபுணத்துவமும் பயிற்சியும் பெற்றவர்களின் சேவையை எல்லா கட்டங்களிலும் பயன்படுத்த வேண்டும்.

நிகழ்த்து கலைகள் (Performing Arts) காணொளி கலைகளும் கற்றல் வழிமுறைகள் என்ற நிலையில் பயன்படுத்துவதை மேல்நிலைகல்வி வரை தொடரலாம். ஆனால் இது முடிந்த அளவிற்கு போலிதனமற்றதாக செயல்படுத்த வேண்டும். தேசிய பாடத்திட்ட சட்டக்கூடு. –2005 ன் கலைக்கல்வி பொசிஷன் பேப்பர் எடுத்துரைக்கும் கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பல்வேறு பகுதிகளிலுள்ள வகுப்பறைகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது என்னவென்றால் குழந்தைகளுக்கு சுதந்திரம் கொடுத்தால் அவர்களின் கலைத்திறனில் சிறந்த முன்னேற்றம் தோன்றுகிறது. குழந்தையின் சிந்தனைத் திறனுக்கு மங்கல் ஏற்படாத வகையில் படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கான ஒரு அணுகுமுறையை ஆரம்பத்திலிருந்தே கடைபிடிக்க வேண்டுமென்ற முக்கியத்துவத்தையே இது தெளிவுபடுத்துகிறது.

கற்றலில் ஆசிரியரின் பங்களிப்பை போன்றே பெற்றோர்களின் பங்களிப்பும் பொதுவாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதல்லவா. கலைக்கல்வியின் முக்கிய சிறப்பம்சங்கள் பொது சமூகம் சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை. அதனால் பெற்றோர்களின் உதவி ஒத்தாசைகளை உறுதிப்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டும். உள்ளுர் வளங்களை (Local Resources) கண்டறியவும் அதைப்பயன்படுத்தி கலைக்கல்வியை கூடுதல் மேம்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும்.

## கலைக்கல்வி- பல்வேறு உற்றுநோக்கல்கள்

கலை தனிநபர் அனுபவமாகும். குழந்தையின் கலைத்திறன் ஆளுமை வளர்ச்சிக்கு தேவையான ஊக்கமும், செயல்பாடுகளும், அறிவுரைகளும், உதவியும் கலைக்கல்வி வகுப்பறையின் வாயிலாக குழந்தைக்கு கிடைக்க வேண்டும். அதற்காக நிறம், வடிவம், உருவம், அசைவு, தாளம் சப்தம் போன்றவற்றின் அழகை பிரித்தறியவும் அவற்றுடன் பிரதிபலிப்பதற்கான இரசிப்புத்தன்மையை உருவாக்கவும், வளர்க்கவும் செய்யும் பல்வேறு கற்றல் அனுபவங்களை கலைக்கல்வி வகுப்புகளில் உட்படுத்த வேண்டும். இசை, நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், சினிமா போன்ற பல்வேறு மண்டலங்களாக இவற்றை ஒழுங்குபடுத்தலாம்.

ஒரு பாடத்திட்டம் என்ற நிலையில் கலைக்கல்வியின் இலட்சியங்களையும், நோக்கங்களையும் கீழ்வருமாறு எடுத்துரைக்கலாம்.

- பிறவியிலேயே குழந்தைகளிடம் காணப்படும் கலைத்திறனை கண்டறிந்து வளரச்செய்தல்.
- பல்வேறு கலைகளை இரசிப்பதற்கும் அழகுணர்வை உட்கொள்வதற்கும்.
- கலைகளை இரசித்து அதனை மனதில் கொண்டு சமூக வாழ்க்கையில் மனிதத்துவ கண்ணோட்டத்தை உருவாக்குவதற்கும்.
- கலாச்சார வேறுபாட்டை பிரித்தறிந்து கலாச்சார அறிவை வளர்ப்பதற்கும்.
- கலையின் சக்தியை மனதில் கொண்டு சிந்தனைகளை நவீனமயமாக்குவதற்கும் பராபட்சமின்றி சமூக சேவைகளில் ஈடுபடுவதற்கும்.
- கலையைப் பயன்படுத்தி பிற பாடங்களை சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும்.
  (Art applied learning)
- பன்முக அறிவு வளர்ச்சியின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும்.
- கற்றலில் பலதரக் குழந்தைகளை ஒரே போல் கற்றல் செயல்பாடுகளில் விருப்பமுள்ளவர்களாக்குவதற்கும்.
- உருவமற்ற அனுபவங்களை உருவமுள்ள பிம்பங்களாக மாற்றுவதன் மூலம் மனதில் உற்சாகம் ஏற்படுவதற்கும்.
- பல்வேறு கற்றல் செயல்பாடுகளின் ஒருமித்த வாய்ப்புகளை கண்டடைவதற்கும் உப

யோகிப்பதற்கும்.

- குழந்தைகளின் இரசிப்புத் தன்மையை உயர்த்துவதற்கும்.
- பல்வேறு கலைகளில் தனித்திறனுள்ள குழந்தைகளின் திறமையை வளர்ப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் மீது ஆதரவு காட்டுவதற்கும்.
- கலைஞர்களை தெரிந்து கொள்ளவும் அவர்களுடைய நன்கொடைகளை அறிந்து மதிப்பளிப்பதற்கும்.
- பெற்றுக் கொண்ட கலைஞானத்தை தகுந்த சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கும்.
- பல்வேறு கலைகளை சமூக சீர்திருத்த இலட்சியத்துடன் உபயோகிப்பதற்கும்.
- பல்வேறு கலைகளின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிவதற்கும் உபயோகப்ப டுத்துவதற்கும்.

# 4. கலைக்கல்வி - பல்வேறு மண்டலங்கள்

மனித இனத்தின் வளர்ச்சியோடு வளர்ந்ததாகும் கலைகள். சுற்றிலுமுள்ள இயற்கையிலிருந்து புலன்கள் வாயிலாக மனதில் உருவான பிரதிபலிப்புகளே கலையாக உருமாறுகிறது. அதனால் வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு காரணியாகும் கலை. இயற்கையின் இயல்பு நிலையும், வேறுபட்ட பாவனைகளும் மனிதரிடம் உருவாக்கிய மனவெழுச்சியின் தாக்கமே கலைகளிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். ஐம்புலன் அனுபவங்கள், காட்சிகள், சப்தங்கள், அசைவுகள், நடத்தைகள் போன்ற அனுபவங்களின் பிரதிபலிப்புகள் முறையே ஓவியமாகவும், சங்கீதமாகவும், நடனமாகவும், நாடகமாகவும் உருமாறியது. அதனால்தான் இக் கலைகளில் பங்காளிகள் ஆவதற்கும் இரசிப்பதற்கும் உள்ள திறன் வளர வேண்டியது வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது.

இந்த நான்கு மண்டலங்களின் வாயிலாகவே கலைக்கல்வி செயல்படுகிறது. குறிப்பிட்ட திறன்களும் திறமைகளும் வளர்ச்சியடைவதே இவற்றைக் கற்பதன் நோக்கமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு மண்டலங்களிலும் வேறுபட்ட நிலையிலுள்ள கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் செயல்பாடுகள் நடைபெறுமாறு அவைகளின் கற்றல் அடைவுகள் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளின் தன்மைக்கும் குழந்தைகளின் குழந்தைகளின் தகுதிக்கும் ஏற்ப ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவைப் பற்றிய சில விளக்கங்கள் கீழே சேர்க்கப்படுகிறது.

## 4.1 ஓவியம்

கோடுகளும் வண்ணங்களும் ஒன்றுக்கொன்று கூடிக் கலர்வதே ஓவியமாகும். இரு பரிமான மேற்பரப்பில் வெளிச்சத்தையும், நிழலையும் பொருத்தமாக இணைத்து உருவாக்கப்படும் உருவங்கள் தோற்றுவிக்கும் பாவனையை இரசிகனிடம் பகிர்ந்தளிக்கும் செயலே இங்கே நடைபெறுகிறது. கோடுகளும், வண்ணங்களுமே ஓவியனின் சிறப்பம்சங்களாகும். சுற்றிலுமுள்ளவற்றை உற்றுநோக்கி மனதில் தோன்றும் காட்சிகள் ஏற்படுத்தும் பிரதிபலிப்புகளை தனக்கே உரிய கண்ணோட்டத்துடன் அவர் வரைகிறார். அதற்குப் பொருத்தமானதென்று அப்பொழுது தோன்றும் ஊடகங்களை ஓவியர் ஏற்றுக்கொள்கிறார்.

ஓவியத்தின் பல்வேறு நிலைகளை ஒவ்வொரு கட்டத்திலும் அறிமுகம் செய்வதும் பயிற்சி தருவதுமே ஓவியக் கலையின் முக்கிய நோக்கமாகும். மனிதர்கள் குகைகளில் வாழ்ந்திருந்த காலம் முதலே வளர்ச்சியடைந்த சரித்திரம் ஓவியக் கலைக்கு உரியதாகும். வரலாற்றுடனும் வாழ்க்கை கலாச்சாரத்துடனும் இந்த கலைக்கு பிரிக்கமுடியாத உறவை ஏற்றுக்கொள்வதே ஓவியக் கலையின் ஒரு பகுதியாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- ஓவியக் கலையின் பல்வேறு கட்டங்களை புரிந்து கொண்டு ஓவியம் வரைவது.
- பலவிதமான ஓவியமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் கருத்துகளை அடைவதற்கும்
- ஓவியம் வரைவதன் மூலம் கிடைக்கும் அறிவை உல்லாச வேளைகளாக்கவும் (Infotainment) ஓவியம் வரைவதன் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி கிடைக்கும் அறிவை (edutainment) உல்லாசமாக்குவதற்கும்.
- ஓவியர்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும்.
- பிற பாடங்களைக் கற்பிப்பதற்கு ஓவியத்தின் வாய்ப்புகளை பயன்படுத்துவதற்கான கருத்தை உருவாக்குதல்,
- படங்களை உற்றுப்பார்ப்பதற்கும் இரசிப்பதற்குமான திறனை வளர்ப்பதற்கும்.
- பலவிதமான சிற்பங்களை பார்ப்பதற்கும் சிற்பங்களை வடிப்பதற்கும்.
- சிற்பக் கலைக் கூடங்களை பார்வையிடுவதற்கும் அவைகளின் கலாச்சார முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதற்கும்.
- சிற்பக் கலையின் வரலாற்றை சேகரிப்பதற்கும் புதிய தேடல் மண்டலங்களை கண்டடைவதற்கும்.

***பல்வேறு பகுதிகள்***

- பென்சில் ஓவியம், கிரையான்கள், கலர் பென்சில்கள். ஸ்கெச் பேனாக்கள் போன்றவற்றை உபயோகித்து வண்ணப்ப படங்கள், வாட்டர் கலர், ஆயில் கலர் போன்றவற்றாலான ஓவியங்கள் வரைகிறார்கள்.
- கோட்டுப் படங்கள், பெயிண்டிங்குகள், கார்ட்டூன்கள், காரிக்கோச்சர்கள் போன்ற பலவகை ஓவியங்கள் உண்டு.
- பல்வேறு மேற்பரப்பில் பலவிதமான கருவிகளைப் பயன்படுத்தி படங்கள் வரையப்படுகிறது.

## 4.2 இசை

இயற்கையின் இன்பமான ஒலிகளே நாதங்கள். நாதங்கள் முறையாக சேர்வதே இசை. ஆதி காலம் முதல் இசை உள்ளது. மனிதர்கள் மாற்றமடைந்ததற்கு ஏற்ப இசையும் மாற்றமடையத் தொடங்கியது. சத்தம், வாரத்தை, அசைவு போன்றவற்றின் ஒருங்கிணைப்பே சங்கீதம். இது ஒரே நேரத்தில் கலையாகவும் அறிவியலாகவும் உள்ளது. மனித உணர்வுகளை மொழிக்கு அப்பாற்பட்டு வெளிப்படுத்த முடியுமென்பதே இசையின் சிறப்பம்சமாகும்.

குழந்தைகளின் மனதை பிரித்தறிந்து நல்ல குணமுள்ளவனாக மாற்றுவதில் இசை முக்கிய பங்கு வகிக்கிறது. மனதை தூய்மையாக்கவும் அறிவை வளர்க்கவும் அதன் மூலம் பாவனையை உயர்த்தவும், திறன்களை வளர்க்கவும் இசைக்கல்வியினால் முடியும். அறிவு வளர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் இசைக் கல்வியின் மூலம் பெறமுடியும்.

பல்வேறு கட்டங்கள் மூலமே ஒரு குழந்தை இசைக்கல்வியில் முன்னேறுகிறது. சரியான நுணுக்கமான உற்றுநோக்கல், கருத்துப் பரிமாற்றம், வெளியீடு, இரசனை, செயல்பாடு போன்றவையாகுமிது. தாள அறிவும், சப்த எழுங்கமைவும் இசைக்கல்விக்கு தேவையானதாகும். தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை ஏற்படவும் அறிவு கிடைக்கவும் செய்வதே இசைக்கற்றல் செயல்பாட்டின் மூலம் நடைபெற வேண்டும். குழந்தைகளின்

திறமைகளை அறிந்து கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் ஊக்குவிக்கவும் பெரியவர்கள் தயாராகும் போது தான் இசை முழுமையான வளர்ச்சி அடைகிறது. பிற பாடங்களைப் போன்று தெரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும், வெளியிடவும், வாய்ப்புகள் ஏற்படவும், ஏற்கவும் வேண்டும்.

பிற பாடங்களின் கற்றல் செயல்பாடுகளுடன் இசைக் கல்வியை பயன்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் இசைத் திறன்களையும், சாதனைகளையும் சமூகத்தில் எடுத்துரைக்கவும், உபயோகப்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல்வேறு இசைவடிவங்களை அறிமுகம் செய்வதற்கும் இரசிப்பதற்கும்
- குழந்தைகளுக்கு இசையின் மேல் ஆர்வம் ஏற்படுத்துவதற்கு
- இசை வடிவங்களை அறிமுகம் செய்வதன் மூலம் கலாச்சார தனித்தன்மைகளை பிரித்தறிவதற்கும் கலாச்சார உணர்வை வளர்ப்பதற்கும்
- தேச பக்திப் பாடல்களை பாடுவதற்கும் தேசிய உணர்வை உருவாக்குவதற்கும்
- இசையமைப்பாளர்களை தெரிந்து கொள்வதற்கும் அவர்களுடை நன்கொடைகளை அறிந்து கொள்வதற்கும்
- இசையின் சரித்திரத்தை புரிந்து கொள்வதற்கும்
- இசைக் கருவிகளைப் பற்றி தெரிந்துகொண்டு அவற்றை இசைப்பதற்கான திறனை வளர்ப்பதற்கு
- தனியாகவும் குழுவாகவும் பல்வேறு பாடல்களை பாடுவதற்கு
- இசையின் தாளங்களையும், ராகஙங்களையும் அறிந்து கொள்வதற்கு
- இசையின் வாய்ப்புகளை உபயோகப்படுத்தி பிற பாடங்களை இரசிப்பதற்கு.

***பல்வேறு பகுதிகள்***

- வாய்மொழி சிந்துகள்
- குழந்தை பாடல்கள், விடுகதைப் பாடல்கள், பழமொழிப் பாடல்கள், கதைப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- மெல்லிசைப் பாடல்கள்
- பல்வேறு கலை வடிவங்களுடன் தொடர்புடைய பாடல்கள்
- தேசிய கானம், தேசபக்திப் பாடல்கள்
- வாத்திய சங்கீதம்

## 4.3 நாட்டியம்

உடலே நாட்டியத்தின் ஊடகம். அங்கம், பிரத்தியங்கம், உப அங்கம் போன்ற எல்லா உறுப்புகளும் உடல் அசைவில் உட்படுகிறது. மனவெழுச்சியே நாட்டியம் என்றாலும். நாட்டியத்தின் மூலம் மனவெழுச்சி உணர்வு தோன்றவும் செய்கிறது. சுய வெளிப்பாடென்பதால் நாட்டியமாடுபவரும் பார்பவரும் ஒரே போல் இன்பம் அனுபவிக்கிறார்கள்.

அழகியலுணர்வு வளரவும், தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும், ஒழுக்கத்தை கடைபிடிப்பதற்கும் அறிவியல் முறையிலான தாள அறிவு உண்டாவதற்கும் நாட்டியக்கல்வி உதவுகிறது. ஒருமித்த உணர்வு உண்டாவதற்கும் புத்துணர்ச்சியும் சமூக ஒற்றுமையும் ஏற்படுவதற்கும் நாட்டியம் உதவுகிறது..

எல்லா குழந்தைகளுக்கும் நடனத்தில் ஆர்வத்தை ஊட்டுவதே பள்ளிகளில் நடன வகுப்புகளின் நோக்கமாகும். நடனத்தில் ஆற்றல் மிக்கவர்களுக்கு அவர்களுடைய திறமையை வளர்ப்பதற்கும் நாட்டிய வகுப்பிற்கான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். பல்வேறு நாட்டிய முறைகளையும் நுணுக்கங்களையும் அறிமுகப்படுத்துவ துடன் பாரத, கேரள நடனங்களின் மேன்மைகளையும் அறிந்து கொள்வதே இதன் நோக் கமாகும்.

***கற்றல் நோக்கங்கள்***

- நான்கு விதமான நடிப்புகளைப் பற்றிய அறிவு உருவாவதற்கு.
- பல்வகையான நடனமுறைகளை தெரிந்து கொள்வதற்கு
- நடனத்தை இரசிப்பதற்குமே நடன விழாக்களில் பங்கேற்பதற்கும்
- பல்வேறு நடனங்களின் கலாச்சார மேன்மைகளின் முக்கியத்துவத்தை புரிந்து கொள் வதற்கு
- நாட்டியத்தின் வரலாற்றுக் கருத்துகளை உருவாக்குவதற்கும் கலையுடன் தொடர்புடைய தேடுதல் செயல்களில் அதிகமாக ஈடுபடச் செய்வதற்கும்
- காணொளிக் காட்சிகளை ஏற்படுத்துவதற்கும் கற்றலை இரசிப்பதற்கும்

***பல்வேறு பகுதிகள்***

- நாடோடி நடனங்கள்
- கிளாசிக் ( செவ்வியல்) நடனங்கள்
- செமி கிளாசிக் நடனங்கள்

## 4.4 நாடகம்

செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு கலையே நாடகம். உள்ளுணர்வுகளை உணர்ச்சி ததும்ப வெளியிடும் ஓர் அரங்க கலையாகவும் நாடகத்தைக் குறிப்பிடலாம். நாடகத்தின் வெளிப்பாடுகள் மனவளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாக அமையவேண்டும். ஒவ்வொரு நாடகத்திற்கும் அதற்கே உரிய ஓர் உட்பொருள் அமைந்திருக்கும். அந்த உட்பொருளைப் பார்வையாளர்களுக்கு மறைமுகமாக உணர்த்துவதற்கே நாடக ஆசிரியரும் இயக்குனரும், நடிகரும் முயற்சிக்கின்றனர்.

செயல்களுக்கு ஏற்ற பின்புலங்களும் நாடகங்களுக்கு இன்றியமையாததாகும். கதை யின் நோக்கம் கதாபாத்திரம் பிரச்சினைகள், உரையாடல் என்னும் நான்கு அடிப்ப டைக் கூறுகள் ஒன்றோடொன்று இணைந்து வெளிப்படும் போது ஒரு நல்ல நாடகம் உருவாகின்றது. ஓவியம், சிற்பம், இசை, நடிப்பு, நடனம் முதலான எல்லாக் கலைக ளும் நாடகத்தில் ஒருங்கிணைந்திருக்கக் காணலாம்.

***கற்றல் நோக்கங்கள்***

- பல நாடகங்களைப் பார்ப்பதற்கும் அதிலுள்ள சமூக முக்கியத்துவத்தை உணர்வதற் கும்
- எளிய நாடகங்களில் நடித்து நடிப்பைப் பற்றிய அறிவைப் பெறுவதற்கும்
- நாடகங்கள் எழுதுவதற்கும் நடிப்பதற்குமான ஆர்வத்தை வளர்ப்பதற்கும்
- நாடகத்தின் தொழில்நுட்ப நுணுக்கங்களை பிரித்தறிந்து நாடகங்களை அரங்கேற்று வதற்கும்
- நாடகத்துடன் தொடர்புடைய காரணிகளை ( மேடை அமைப்பு, உரையாடல், நடிப்பு, இசை...)பிரித்தறிவதற்கும். நாடக நடிப்பின் மூலம் இரசிப்புத் தன்மையை உட்கொள் வ.தற்கும், கலையுடன் தொடர்புடைய கூடுதல் ஆராய்சிகளில் ஈடுபடுவதற்கும்.

- பலவிதமான நாடகக் கூறுகளை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடிப்பதற்கு.
- நாடகத்தின் கலாச்சாரக் கூறுகளை பிரித்தறிவதற்கு.
- பல்வேறு பாடப் பகுதிகளில் நாடகத்தின் வாய்ப்புகளைப் பிரித்தறிந்து பயன்படுத்துவதற்கும் கற்றலை இன்பமுள்ளதாக்குவதற்கும்

***பல்வேறு பகுதிகள்***

- ஓரங்க நாடகங்கள்
- தனிநபர் நாடகங்கள்
- தெரு நாடகங்கள்

# 5. கலைக்கல்வி- மதிப்பீடு

கலை, கற்பவரின் இரசிப்புத் தன்மையை எப்போதும் வளர்த்துக் கொண்டிருக்கும் முக்கியமான காரணியாகும். நடிப்பதற்கு (Preformance) மிகமுக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும் கலை. வளர்ந்து வரும் தலைமுறையிலுள்ள குழந்தைகளுக்கு ஏற்படும் மனச்சிக்கல்களையும், மன அழுத்தங்களையும் குறைப்பதற்கு கலைக்கல்வியின் வாய்ப்புகளை பிரித்தறிய வேண்டும். பள்ளி அளவிலான கலைக்கல்வியில் ஓவியம் (drawing), இசை (music), நடனம் (dance), நாடகம் (drama) போன்றவை உட்படடுகிறது. இந்த நான்கு மண்டலங்களின் சமஅறிவும் பாடத்திட்டத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது. கலைக்கல்வி தொடபாக பல்வேறு வகுப்புகளில் குழந்தைகள் அடையவேண்டிய கற்றல் அடைவுகள் (Learning outcomes) தயாராக்கப்பட்டுள்ளது. பள்ளிப்பாடத்திட்டத்திலுள்ள பொதுவான பாடங்களான மொழி, கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்றவைகளில் கூறப்படும் கற்றல் முறைகளே கலைக்கல்வியிலும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும். கலைக்கல்வியின் எல்லா மண்டலங்களிலும் கிடைக்கும் அறிவு குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டடைவதற்கும் திறமையை வெளிப்படுத்தும் மண்டலத்தில் குழந்தையை வழிநடத்தி செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும்.

கற்றல் கற்பித்தல் செயல்பாட்டின் முக்கிய காரணியாகும் மதிப்பீடு. கலையுடன் தொடர்புபடுத்தி உருவாக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை திருப்திகரமாக நிறைவேற்றுகிறார்களா? குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டுபிடிக்கவும் கற்றலை ஆனந்தமுள்ளதாகவும் மாற்ற முடிந்துள்ளதா? போன்றவற்றை மதிப்பீட்டின் மூலமாக மதிப்பிடப்பட வேண்டும். கலைக்கல்வியின் மதிப்பீடு பற்றிய விளக்கங்களையே இங்கே கலந்துரையாடுகிறோம்.

## மதிப்பீடு என்றால் என்ன?

கலைதொடர்பாக பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் குழந்தை அடைந்த திறனும், திறமையும் எவ்வளவு சிறப்பாக அடைய முடிந்தது என்ற தேடலே மதிப்பீடாகும். கற்றல் அடைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மதிப்பீடே வேண்டும். மதிப்பீடு கலைக்கல்வியின் முன்னேற்றத்திற்கான மதிப்பீடாக இருக்க வேண்டும். தவறுகளை சுயமாக திருத்திக் கொண்டு குழந்தைக்கு எந்தளவிற்கு முன்னேற முடிந்தது என்ற மதிப்பீடாக இருக்க வேண்டும்.

## மதிப்பீடு எப்படி?

கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பாடத்திட்டமே 2013 ல்தயாரித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மதிப்பீடு செய்யும் போதே கற்றல் அடைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கலைக்கல்வியுடன் தொடர்புடைய கற்றல் அடைவுகளை திருப்திகரமாக அடைந்துள்ளார்களா என்ற மதிப்பீட்டை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.

அதற்காக நிரந்தரமானதும், முழுமையானதுமான மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும். இம்முறையிலான ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தும் போது கலைக்கல்வியின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் தொடர்புபடுத்தி இரண்டு

இத்தகைய ஒரு மதிப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தும் போதுகலைக்கல்வியின் வகையான மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்

- வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு
- செயல் (Performance) அறிவுசார் மதிப்பீடும்

இவை ஒவ்வொன்றையும் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

**1. வகுப்பறையில் கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீடு ( தொடர் மதிப்பீடு (C.E):**

***செயல்பாடுகளை மதிப்பிடுதல்***

கற்றல் செயல்பாடுகளை செயல்படுத்தும் போது ஆசிரியரின் உற்றுநோக்கல், வகுப்பறையில் குழந்தைகளின் செயல்கள், கலைக்கல்வியுடன் தொடர்புடைய விவரசேகரிப்பு, கலைக்கல்வி- நாட்குறிப்பு, போர்ட்போளியோ அலகு மதிப்பீடு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்றல் செயல்பாடுகளுடனான மதிப்பீட்டை நடத்த வேண்டும். கற்றல் செயல்பாட்டை மதிப்பிடுவதற்கு பொதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தலாம்.

- செயல்பாட்டில் பங்களிப்பு
- கருத்துப் பரிமாற்றம்
- திறன்கள் அடைதல்
- செயல்/வெளியீடு
- அடையாளப்படுத்துதல்/தயாரித்தல்

சமூக, மனவெழுச்சி மண்டலங்களின் திறன்களை மதிப்பிடுதல் செயல்பாட்டு மதிப்பீட்டின் பாகமாக நடத்தப்பட வேண்டும்..

கீழே கொடுக்கப்பட்டுள்ள திறன்களை அந்தந்த குறிப்புகளை ஏற்றுக் கொள்ளும் நேரத்தில் மதிப்பீடு செய்து ஆசிரியர் கற்பித்தல் கையேட்டில் அடையாளப்படுத்த வேண்டும்

| *குறிப்புகள்* | *திறன்கள்* |
|---|---|
| செயல்பாடுகளில் பங்களிப்பு | சுயமாக அறிதல், தலைமைப் பண்பு, தனிநபர் திறன், பொறுப்புணர்வு |
| கருத்து | கற்றல் திறன்கள் |
| திறன் பெறுதல் | தீர்மானித்தல், பிரச்சினைக்குத் தீர்வுகாணும் திறன், படைப்பாற்றல் |
| செயல்பாடு/ வெளியீடு | கருத்துப் பரிமாற்றத்திறன் |
| பதிவு செய்தல்/ தயார்செய்தல் | விமர்சன சிந்தனை |

- ***குழந்தையின் கலைக்கல்வி நாட்குறிப்பு*** :குழந்தையின் கலைக்கல்வி நாட்குறிப்பு/ நோட்டுப் புத்தகம் போன்றவற்றை செயல்பாடுகளின் மதிப்பீட்டிற்குள்ள தெளிவாக

உபயோகப்படுத்தலாம். இதை அவ்வப்போது பரிசோதனை செய்யவும் அறிவுரை கூற வும் வேண்டும் இதைப் பற்றிய குறிப்புகளை ஆசிரியர் கையேட்டில் எழுத வேண்டும்.

- ***படைப்புத் தொகுப்பு மதிப்பீடு*** : கற்றலைப் பற்றி குழந்தைக்கும், பெற்றோருக் கும், ஆசிரியருக்கும் பின்னூட்டம் அளிக்கும் செயலையே போர்ட்போளியோ செய் கிறது. இது கற்றலை வேகமாக்கும். கற்றல் செயல்பாடுகளின் வழியாக கடந்து செல் லும் போது உருவாகும் எல்லா படைப்புகளையும் போர்ட்டோளியோவில் உட்படுத்தி மதிப்பீடு செய்யவேண்டும். பாடவாரியான கற்றல் தெளிவுகள் இதில் உட்படும்.

போர்ட்போளியோவின் உள்ளடக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கலைக்கல்வி நாட்குறிப்பு/ நோட்டுப் புத்தகம்
- பிற படைப்புகள்
- படங்கள்/ சேகரிப்புகள்
- பயிற்சித் தாள்கள்

மிகவும் சிறந்தது/ சிறந்தது/ சராசரி/ இனியும் தெலிவு பெற வேண்டும் 4/3/2/1 இவ்வாறு மதிப்பெண்கள் கொடுக்கலாம்.

**கற்பித்தல் கையேடு (TM)** :செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு கற்பித்தல் கையேட்டை(TM) பயன்படுத்தலாம். TM ன் பிரதிபலிப்பு பக்கத்தில் உள்ள குறிப்புகளை இதற்குப் பயன்ப டுத்தலாம்.

- ***அலகு மதிப்பீடு*** :அலகுடன் தொடர்புடைய வாய்மொழி மதிப்பீடு, செயல்பாட்டின் மதிப்பீடு, அலகின் பொதுவான மதிப்பீடு, வினாடி வினாப் போட்டிகள் போன்றவற் றின் வாயிலாக அலகு மதிப்பீடு செய்ய வேண்டும்..

## தொடர் மதிப்பீடு (CE) தரக்குறிப்பு

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீடு( கலைக் கல்வி நாட்குறிப்பு, கற்பித்தல் கையேடு, ஆசிரியரின் உற்றுநோக்கல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு) படைப் புப் தொகுப்பு மதிப்பீடு, அலகு மதிப்பீடு ஆகிய ஒவ்வொன்றின் தரப்புள்ளிகள் 10 ற்கு கண்டுபிடித்து பிறகு அவற்றின் தொகை காணவேண்டும். இத்தொகைக்கு சமமான தரம் கொடுக்கவும். இதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| *மதிப்பெண் (30 க்கு)* | *சதவீதம்* | *தரம்* |
|---|---|---|
| 23 - 30 | 75 - 100 | A |
| 18 - 22 | 60 - 74 | B |
| 14 - 17 | 45 - 59 | C |
| 10 - 13 | 33 -44 | D |
| 10 -க்குக் கீழ் | 33 -க்குக் கீழ் | E |

உதாரணமாக ஒரு குழந்தைக்கு கலைக்கல்வியில் செயல்பாடு, படைப்புத் தொகுப்பு, அலகு மதிப்பீடு போன்றவற்றில் புள்ளி 10 ற்கு 8,7,7 எனில் மொத்தப் புள்ளிகள் 8+7+7=22 ஆகும். அட்டவணைப்படி இதன் CE தரம் B ஆகும்

- ***செயல்பாட்டு மதிப்பீடும் அறிவு மதிப்பீடும் (பருவ மதிப்பீடு)***:

கலைக்கல்வியில் செயல்பாட்டு மதிப்பீட்டிற்கே மிக முக்கியத்துவம் உள்ளது. ஒவ் வொரு மண்டலத்தையும் தொடர்புபடுத்தி வகுப்பு வாரியாக செயல்பாட்டு வாய்ப்புக

ளுக்கும் கற்றல் அடைவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கண்டுபிடிக்க வேண்டும். பாடத்துடன் தொடர்புடைய, முக்கியமாக தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை அறிவுகள் இத்துடன் பரிசோதனை செய்ய வேண்டும்.

இவ்வாறான செயல்பாட்டு- அறிவு மதிப்பீட்டின் மாதிரிகள் SCERT தயாரித்து கொடுக்கும்.

## மதிப்பீட்டிற்கான படிவம்

தொடர் மதிப்பீடு (CE), பருவ மதிப்பீடு (TE), போன்றவற்றை பருவ மதிப்பீடாக பதிவு செய்வதற்கான படிவம்

பருவம் : 1/2/3

பாடம்: வகுப்பு: பிரிவு ::

| வ. எண் | மாணவரின் பெயர் | CE இனங்கள் | | | CE தரம் | TE தரம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | செயல் பாடு | படைப்பு தொகுப்பு | அலகு மதிப்பீடு | | | |
| | | | | | | | |

## தேர நிர்ணய முறை

ஆரம்பப் பள்ளிகளில் தொடர் மதிப்பீட்டிற்கும், பருவ மதிப்பீட்டிற்கும் தனித்தனியாக தரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்காக கீழேகொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பயன் படுத்தலாம்

| மதிப்பெண் விழுக்காடு | தரம் |
|---|---|
| 75 - 100 | A |
| 60 - 74 | B |
| 45 - 59 | C |
| 33 -44 | D |
| 33 -ற்குக் கீழ் | E |

## மதிப்பீடும் ஆண்டு ஒருங்கிணைப்பும்

பருவ மதிப்பீட்டிற்கான CE புள்ளிகள்/ தரங்களை பரிசோதிக்கும் போது மூன்று பருவத்திலும் குழந்தைக்கு கிடைத்த மிக உயர்ந்த புள்ளிகள் தரம் ஆகியவற்றை CE யின் ஆண்டு மதிப்பீட்டின் ஓவரால் கிரேடாக கணக்கிடலாம்.

### *TE கிரேடு :*

மூன்றாம் பருவத்தில் மாணவருக்கு கிடைத்த கிரேட் ஆகும் TE கிரேட்

CE கிரேட், TE கிரேட்டை இவ்வாறு பதிவு செய்வதுடன். சமூக, மனவெழுச்சி, மண்டலங்களிலும் சிறப்பானவற்றை அடையாளப்படுத்துவதும் ஆண்டு மதிப்பீட்டு படிவத்தில் அடையாளப்படுத்த வேண்டும்.

சமூக, மனவெழுச்சி மண்டலங்களில் மாணவர்களின் சிறப்பைப் பற்றி அடையாளப்படுத்தும் போது சிறந்தவற்றை மட்டும் அடையாளப்படுத்தினால் போதும், எதிர்மறையானவற்றை அடையாளப்படுத்த வேண்டியதில்லை.

| வரிசை எண் | மாணவரின் பெயர் | CE பிரிவுகள் | | | | CE தரம் | TE | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | செயல்பாடு (20) | படைப்புத் தொகுப்பு (20) | அலகு மதிப்பீடு (20) | மொத்தம் (60) | | புள்ளிகள் (100) | தரம் | |
| | | | | | | | | | |

# 6. கலைக்கல்வி – பின்துணை அமைப்புகள்

சிறந்த பின்துணை அமைப்புகள் இருந்தால் மட்டுமே கலைக்கல்வி சிறப்புடையதாகும்.

**பல்வேறு நிலைகள்**

*1. பள்ளியில்/ வகுப்பறையில்*

பள்ளியில் எஸ்.எம்.சி.யும் பி.டி.எ.யும் இன்று வலுவானதாகும். வகுப்பறையில் எம். பி. டி. எ. உள்ளது. இந்த அமைப்புகளுக்கு கலைக்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும். குழந்தையின் கற்றல் அடைவுகளை விவாதிக்கவும் வேண்டும். கலைக்கல்விக்குத் தேவையான வகுப்பறை வசதிகளும், உபகரணங்களையும், செயல்முறைக்கும், பார்வைக்கும் வைப்பதற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு இத்தகைய அமைப்புகளை முடிந்தளவுக்குப் பயன்படுத்தலாம். அந்ததந்த பகுதிகளிலுள்ள கலைஞர்களுடன் பழகுவதற்கும் அவர்களுடைய கலைத்திறனை இரசிப்பதற்கும் பள்ளியிலுள்ள அமைப்புகள் முயற்சிக்க வேண்டும்.

*2. பஞ்சாயத்து/ சி. ஆர். சி. நிலையில்*

நடைமுறையிலுள்ள வளமையங்களை மையமாகக் கொண்டு பொருட்களை சேகரிக்கவும் பங்கிடவும் வேண்டும். சி. ஆர். சி. களுடையவும், பஞ்சாயத்துகளுடையவும் கலைக்கல்வி கூடுதல் மேன்மையடைவற்கு உதவும் கட்டமைப்பு வசதிகளை பெருக்கவும் பொருட்கள்/ நபர்களுடையவும் சேவைகளை ஒழுங்குபடுத்தவும் வேண்டும்.

*3. உபமாவட்டம்/ பி. ஆர். சி. நிலையில்*

பி. ஆர். சி களில் பிற பாடங்களைப் போன்று கலைக்கல்விக்கும் உதவிகளும், பொருட்களை உருவாக்குவதற்குத் தேவையான பொருட்களும் தேவையாகும். பி. ஆர். சி அலவிலான கூட்டங்களும் பயிற்சிகளும் கலைக்கல்வி ஆசிரியர்களுக்கும் போதுமான இடைவேளைகளில் வழங்கவேண்டும்.

*4. மாவட்ட அளவில்*

மாவட்ட அளவில் கலைக்கல்வி ஆசிரியர்களின் ஒரு ரிசோழ்ஸ் பூல்/ ஒரு டி. ஆர். சி அமைப்பும் அவசியமாகும்.

# 7. கலைக்கல்வி - உள்ளடக்க விளக்கங்கள்

## 7.1



# ஓவியம்



# ஓவியம்

## முன்னுரை

ஓவியக்கலையின் வழியாக ஒரு பகுதி தனித்தன்மை வாய்ந்த முறையில் எடுத்துரைக்கப் படுகிறது.நமது காட்சியைத் தனித்தன்மை வாய்ந்த ஒரு இடத்திற்குக் கொண்டு செல்லவும் அதன் வழி மனதில் வேறுபட்ட காட்சிகள் உருவாக்குவதுமே ஓவியங்களைக் காண்கின்ற போது ஏற்படும் அனுபவம். ஓவியக்கலையின் அடிப்படை என்பது ஒளியின் தனித்தன்மை ஆகும். அது பார்வையாளர்களோடு நேரடியாகச் செயல்படுகிறது. ஒவியம் வரைதலும், ஓவியத்தைப் பார்த்தலும் என்பது மனதிற்கு இன்பத்தையும், உற்சாகத்தையும் தருகிறது. குழந்தைகளின் தனிநபர் மேம்பாட்டிற்கு ஓவியக்கலை கல்வி மிகவும் உதவுகிறது.

கோடுகளுடையவும், நிறங்களுடையவும் ஆச்சரியத்தை மிக வியப்போடு பார்க்கவும் அதனை அனுபவிக்கவும் செய்வதில் குழந்தைகள் உற்சாகமாக இருப்பர். விரல்களை இணைத்துப் பயன்படுத்தத் துவங்குவது முதல் அவர்கள் வரைகின்றனர், நிறம் உருவாகின்ற எந்த பொருளைப் பயன்படுத்தியும் தரையிலும், சுவரிலும் வரைகின்றனர், அறிவு வளர்ச்சியும் முதல்கட்டத்தில் மனதில் பதிகின்ற முதல் தகவல்களை வரைந்தும், நடித்தும், ஆடியும், பாடியும் வெளியிடுவதன் பாகமாக குழந்தைகள் இதுபோன்ற செயல்களில் ஏற்படுகின்றனர். இதற்கு தொடர்ச்சி கொடுக்கவும் தனிமனித மேம்பாட்டின் பாகமாக முறைப்படுத்தவும் செய்ய வேண்டியது கல்விச் செயல்பாட்டின் தர்மமாகும்.

கோடுகளும் நிறங்களுமே ஓவியக்கலையின் அடிப்படை நிலைகள். நிறங்கள் இயற்கையில் உள்ளதெனில் கோடுகள் ஓவியனின் படைப்பாகும். பிறவியிலேயே அல்லது உள்ளுணர்வு வழியாக கிடைப்பதாகும் இது. சிறு வயதுள்ள குழந்தைகள் சாதாரணமாக வரைந்த கோடுகளில் சிறிய குறிக்கீடு செய்து தடங்கள் ஏற்படுத்தாமல் இருப்பதே ஓவியக்கலை கற்றலின் முதல்படியாகும். ஆனால் நிறங்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அளிக்கவும் அதனை ரசிப்பதற்கான வாய்ப்பு அளிக்கவும் வேண்டும். கற்பனை வடிவம் உருவாக்கவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

வடிவங்களைக் குறித்துள்ள குழந்தைகளின் கற்பனை பெரியவர்களிலிருந்து மாறுபட்டு காணப்படும். வடிவத்தின் அளவுகளில் பெரியவர்களிலிருந்து வேறுபட்டு காண்கின்ற விதம் அவர்களின் கோடுகளில் காணப்படுகிறது. அதனை புரிந்துகொண்டு குழந்தைகளின் கோடுகளை பார்க்கவேண்டும். இவ்வாறு அவர்கள் சுயமாகக் கண்டைந்த வடிவத்தின் தனித்தன்மை குறையாமல் அதனை மேம்படுத்தியெடுக்க உதவுகின்ற விதத்தில் இருக்க வேண்டும் ஓவியக் கல்வி, ஆரம்ப நிலையிலுள்ள ஓவியக்கலைக் கல்வியிலிருந்து தொழில் நுட்பமுறையைப் பெரும்பாலும் மாற்றி அமைக்க முயல வேண்டும். சுற்றுமுள்ளவற்றை நன்றாக உற்றுநோக்கவதற்கும் அதே போன்று வரையவும் ஓவியங்களைக் கண்டு இரசிப்பதற்குமான வாய்ப்புகள் கொடுக்க வேண்டும்.

## கற்றல் அடைவுகள்

### முதல் வகுப்பு

- இயற்கையோடு தொடர்புடைய படம் வரைதல்.
- அடிப்படை உருவங்களைப் பயன்படுத்தித் தெரிந்த உருவங்களை வரைதல்.
- கொளாஷ் சித்திரங்கள் வரைதல்.
- முப்பரிமாணப் பொருட்கள் அமைத்தல்.
- விருப்பமான கருத்துகளுக்குச் சுயமாகவே படம் வரைந்து வண்ணம் தீட்டுதல்.

### இரண்டாம் வகுப்பு

- வெளிப்புறக் காட்சிகள்
- படங்களும் சிற்பங்களும் சேகரித்தல்
- அடிப்படை வடிவங்களைப் பயன்படுத்தித் தெரிந்த படங்கள் வரைதல்
- பல்வேறு ஊடகங்களைப் படம் வரைவதற்குப் பயன்படுத்துதல்
- கொளாஷ் சித்திரங்கள் உருவாக்குவதில் பல பொருட்களைப் பயன்படுத்துதல்
- முப்பரிமாண பொருட்கள் உருவாக்குதல்
- படங்களைக் கருத்துப் பரிமாற்றத்திற்கு உபயோகித்தல்
- காய்கறிகளையும் இலைகளையும் பயன்படுத்திப் பல வண்ணத்திலுள்ள பேட்டேண்கள் அமைத்தல்

### மூன்றாம் வகுப்பு

- இயற்கைக் காட்சிகளை உற்றுநோக்கிப் படம் வரைந்து வண்ணம் தீட்டுதல்
- முப்பரிமாண பொருட்கள்( சிற்பங்கள்) உருவாக்குதல்
- நிழல் ஓவியங்கள் உருவாக்குதல்
- அன்றாட நிகழ்ச்சிகள், பொதுப்பிரச்சினைகள் கருத்து மண்டலங்கள் போன்றவற்றை மைய மாகக் கொண்டு போஸ்ட்டர் தயாரித்தல்
- இலைகளை ஒடித்து சேர்த்துப் பறவைகள் மிருகங்களின் உருவங்கள் அமைத்தல்
- கதைகளையும், கவிதைகளையும் வாசித்துக் கருத்துக்கு ஏற்ற படம் வரைதல்
- காய்கறிகள், இலைகள், கிழங்குகள் பயன்படுத்தி டிசைன்கள் அமைத்தல்

### நான்காம் வகுப்பு

- இயற்கைக் காட்சிகளின் படம் வரைந்து வண்ணம் தீட்டுதல்
- படம், சிற்பம் போன்றவற்றை சேகரித்தல்
- கதை, கவிதைகளின் கதாப்பாத்திரங்களின் குணங்களையும் கருத்துக்கேற்ற படங்களையும் வரைதல்
- கொளாஷ் சித்திரங்கள் வரைதல்
- கருத்துக்கேற்ற போஸ்டர் தயாரித்தல்( அன்றாட நிகழ்ச்சிகள், பொதுப் பிரச்சினைகள்)
- வாழ்த்து அட்டைகள் தயாரித்தல்
- களிமண்ணைப் பயன்படுத்தி முப்பரிமாண உருவங்கள் தயாரித்தல்
- கேலிச் சித்திரங்கள் வரைதல்

# ஒன்றாம் வகுப்பு

## அலகு- 1 : இயற்கை அழகு

ஒன்றாம் வகுப்பிற்கு மாணவர்கள் வந்து சேரும் போது வீட்டிலும், ஊரிலும் உள்ள வண்ணவண்ண காட்சிகளைப் பார்த்தும், கேட்டும் அனுபவித்தும் கிடைத்த அறிவுமாகவே வந்து சேருகிறார்கள். இந்த அறிவுகளுக்கு தொடர்ச்சியும், வளர்ச்சியும் கிடைக்கும் முறையிலான செயல்பாடுகள் வகுப்பறையிலும் வெளியிலும் உருவாக வேண்டும். கற்றல் செயல்பாடுகளின் வாயிலாக இயற்கையுடன் கூடுதலாக ஒன்றிணையவும் பரிவு காட்டவும், இயற்கையை நேசிக்கவும் உள்ள மனநிலை குழந்தைகள் மனதில் உருவாக வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

இயற்கையோடு தொடர்புடைய படம் வரைதல்.

### கருத்து, அறிவு

இயற்கையை கூர்மையாக உற்றுநோக்குதல், இயற்கையிலுள்ள காட்சிகள், பார்த்த காட்சிகள் இவற்றை ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்துதல் விருப்பமான வண்ணம் தீட்டுதல்.

### கற்றல் அடைவுகள்

**ஆரம்பச் செயல்பாடுகள்**

- ஆசிரியர் குழந்தைகளுக்குத் தெரிந்த ஆமையும் முயலும் கதையைக் கூறுகிறார்.
- ஆமையும் முயலும் (போட்டிக்கு தயாராயிருப்பது) கரும்பலகையில் முன்னரே வரைய வேண்டும்.
- கதையைக் கூறிய பிறகு ஆசிரியர் குழந்தைகளிடம் சில வினாக்களைக் கேட்கலாம்.
    - ❖ ஆமையும் முயலும் கதையில் அவர்கள் பயணம் செய்த பாதையின் இரு பக்கங்களிலும் என்னென்ன பொருட்கள் இருந்தது?
    - ❖ அந்த பொருட்களின் நிறம் என்னவாக இருந்தது?
    - ❖ பார்த்த பொருட்களெல்லாம் ஒரே அளவிலும் ஒரே வடிவத்திலு இருந்ததா?

- வகுப்பில் விரிவான கலந்துரையாடல் நடத்தவும்.
- பதில் சொல்வதில் சந்தேகம் வராமல் இருப்பதற்காக இயற்கையை உற்றுநோக்கித் தீர்மானித்த ஆசிரியர் குழந்தைகளைக் குழுக்களாகப் பிரித்து வகுப்பறைக்கு வெளியே கொண்டு செல்லுதல்.
- கூர்மையான உற்றுநோக்கலுக்கு வாய்ப்பளித்தல்
- குழந்தைகள் இயற்கையிலுள்ள பொருட்களைப் பார்த்தும் கேட்டும்,தொட்டுணர்ந் தும் மணந்தும் உற்றுநோக்குகிறார்கள்.
- வகுப்பறைக்குதத் திரும்பிய பிறகு மீண்டும் கேள்விகளைக் கேட்டு புதியதாக கூறும் பதில்களையும் சேர்த்தல்.

## மதிப்பீடு

- உற்றுநோக்கல் திறன், கலந்துரையாடலில் பங்களிப்பு, வெளியிடும் முறை இவற்றை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடு.
    - ❖ உன்னிப்பாக உற்றுநோக்கியவர்கள் யாரெல்லாம்?
    - ❖ கலந்துரையாடலில் தொடர்ந்து பங்கு பெற்றவர்கள் யாரெல்லாம்?
    - ❖ இனியும் மேம்பட வேண்டியவர்கள் யாரெல்லாம்?

செயல்பாடு 1

“நீங்கள் தற்போது பார்த்த இயற்கைக் காட்சிகளிலிருந்து உங்களுக்குப் பிடித்தவற்றை வராயலாமா”? ஆசிரியர் கேள்வி கேட்கிறார். குழந்தைகள் சுதந்திரமாக வரைகி றார்கள் (பென்சில், வாக்ஸ் கிரையான்ஸ், ஸ்கெச் பேனா போன்ற பொருட்களைப் பயன்படுத்தலாம்)

*தொடர்ந்து*

- படக் கண்காட்சி- குழந்தைகள் வரைந்த ஓவியங்களை வகுப்பில் வெளியிடு தல்.
    - ❖ ஒவ்வொருவருக்கும் படங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பளித்தல். குழந் தைகள் படங்களைப் பார்க்கிறார்கள். படஅனுபவங்களை பங்கு வைக்கி றார்கள்
    - ❖ உங்களுக்குப் பிடித்த படங்கள் எவையெல்லாம்?
    - ❖ அந்தப் படங்களைப் பிடிக்க காரணம் என்ன?
- கலந்துரையாடுதல்.

செயல்பாடு 2

பிறர் வரைந்த படங்களைப் பார்த்த பின்னர் நீங்கள் வரைந்த படத்தைச் சிறந்த தாக்க வேண்டுமென்று யோசிக்கவில்லையா?

- படங்களை மாற்றி வரைகிறார்கள்
- புதிய பேப்பரில் முன்னர் வரைந்த ஓவியத்தைத் திரும்ப வரைதல்.
- மீண்டும் இயற்கையை உற்றுநோக்க வேண்டுமா? வேண்டுமெனில் அதற்கான

வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

சுயமதிப்பீடு:

- குழந்தை முதலில் வரைந்த படத்தையும் இரண்டாவது வரைந்த படத்தையும் ஒப்புமைப்படுத்துவதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

தொடர்ந்து கலந்துரையாடுதல்

  - ❖ சிறந்த முறையில் ஓவியம் வரைந்தவர்கள் யாரெல்லாம்?

- அவர்களுடைய திறமைக்குச் சிறப்பான பாராட்டு வழங்க வேண்டும். ஓவியம் வரைந்த அனைவரையும் பாராட்ட வேண்டும்.

ஆசிரியரின் மதிப்பீடு:

ஓவியத்தின் முழுமை, வண்ணம் தீட்டிய முறை போன்ற பண்புகளுக்கு ஏற்ப மதிப்பிடுதல்

- ஓவியத்திற்கு பார்டர் கொடுத்துப் படத்தை முழுமையாக்கியவர்கள் யாரெல்லாம்?
- அரைகுறையாக ஓவியம் வரைந்தவர்
- இனியும் மேம்பட வேண்டியவர்.

## தொடர் செயல்பாடு

- தொடர் செயல்பாட்டிற்காக நீங்கள் வரைந்த ஓவியத்திலும், வீட்டிலுள்ள பொருட்களிலும் சதுரம், முக்கோணம், வட்டம் முதலிய வடிவங்களில் உள்ள பொருட்களைப் பார்த்து வரக்கூறுதல்.
- குழந்தைகள் வரைந்த எல்லா ஓவியங்களும் சிறந்ததென்று வகுப்பறையில் கூறுவதால் மீண்டும் படங்கள் வரைய ஊக்குவிப்பதாகும்.
- ஓவியம் வரைவதிலும், வண்ணம் தீட்டுவதிலும் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளில் எவ்வளவு அடைய முடிந்தது?*

- தனக்குச் சுற்றிலுமுள்ள பொருட்களை உன்னிப்பாக உற்றுநோக்குவதன் மூலம் உற்றுநோக்கும் திறன் வளர்கிறது.
- இயற்கையோடு அன்பு காட்ட முடிகிறது.
- படம் வரையும் திறன் வளர்கிறது.
- குழந்தைகளின் கற்பனைத் திறன் வளர்கிறது.
- சொந்தம் எண்ணங்களை வரைய முடிகிறது.
- குழந்தைகளுக்கிடையில் நட்புறவு வளர்கிறது.
- பிறரின் திறமைகளை அங்கீகரித்தல், பாராட்டுதல்.

# அலகு 2 உருவங்கள் வரையலாம்

இயற்கையில் பல அளவிலும், வடிவத்திலும் உள்ள பொருட்கள் காணப்படுகின்றன. இவை மனிதனால் உருவாக்கப்பட்டதோ, இயற்கையானதாகவோ இருக்கலாம். இந்த உருவங்களை உற்றுப்பார்த்தால் அவற்றில் சில அடிப்படை உருவங்கள் கண்டுபிடிக்க முடியும். முக்கோணம். சதுரம், வட்டம். போன்றவையே அடிப்படை உருவங்கள். இவற்றைத் தனியாகவும், பொருத்தமான முறையிலும் இணைத்துத் தெரிந்த உருவங்கள் வரைய குழந்தைக்குத் தெரியும்.

## கற்றல் அடைவுகள்

அடிப்படை உருவங்களைப் பயன்படுத்தித் தெரிந்த உருவங்கள் வரைதல்.

## கருத்து அறிவு

நம்மைச் சுற்றியுள்ள பொருட்களை உற்றுப்பார்த்து அவற்றில் அடிப்படை உருவங்கள் என்னவென்று கண்டுபிடித்தல். இந்த அடிப்படை வடிவங்களான முக்கோணம். சதுரம், வட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி பல்வேறு மாதிரிகள் பேட்டேன்கள் உருவங்களைக் கற்பனைக்கு ஏற்றவாறு வரைதல்.

## கற்றல் செயல்பாடுகள்

### *ஆரம்பச் செயல்பாடுகள்*

- குழந்தைகளுக்கு உற்சாகம் தரக்கூடிய ஒரு செயல்பாட்டைத் தேர்ந்தெடுக்கலாம்
  எ.கா- வட்டத்தில் குழிதோண்டி நீளத்தில் பாத்திக்கட்டி அதில் சிவப்புக் கீரையைப் பாவ வேண்டும். இப்படி உருவங்கள் வடிவங்கள் போன்றவை கருத்தாக வரும்படியான வரிகள் தேர்ந்தெடுக்கலாம்


  *தாளத்திற்கேற்ற அசைவுள்ள செயல்பாடுகளில் குழந்தைகள் முழுமையாக ஈடுபடுகிறார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.*

- வட்டம், சதுரம், முக்கோணம் முதலிய வடிவங்களில் குழந்தை முதலில் பார்க்கும் உருவம் எது?
  எ.கா- அம்மாவின் கண்ணிலுள்ள கருவிழி, வளையல்

- வளர்ச்சிக்கேற்ப சதுரவடிவிலும், முக்கோண வடிவத்திலுமுள்ள உருவங்களைப் பார்க்கிறார்கள்.
  எ.கா-ஸ்டூல், டீப்பாய், மேசை, பாத்திரங்கள், பூவிதழ், பேப்பர்.

### *செயல்பாடு-1*

நமக்குச் சுற்றிலும் காணப்படும் பொருட்களில் ( கட்டிடங்களில், வகுப்பறைகளில்) சதுரவடிவிலும், முக்கோண வடிவிலுமுள்ள உருவங்கள் எங்கெல்லாம் காணப்படுகிறது



குழந்தைகள் உற்றுப்பார்த்து கருத்தைக் கூறட்டும்

எ.கா- கரும்பலகை- சதுரவடிவம்

சன்னல்- சதுர வடிவம்

கடிகாரம்- வட்ட வடிவம்

இவ்வாறு ஓரளவு எடுத்துக்காட்டுகள் சொல்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

ஆசிரியர் தொகுத்துக் கூறுதல்

### செயல்பாடு -2

- உற்றுப் பார்த்த உருவங்களின் படம் வரைதல்
- முடிந்தளவிற்குக் குழந்தைகள் சொந்தமாகப் படங்கள் வரையட்டும்

#### தொடர் மதிப்பீடு

- நன்றாகப் படம் வரைபவர்கள் யாரெல்லாம்?
- யாருக்கெல்லாம் உதவி தேவைப்படுகிறது?
- யாரெல்லாம் மெதுவாக வரைகிறார்கள்?

### செயல்பாடு -3

குழந்தைகள் வரைந்த படங்களைப் பார்வைக்கு வைத்தல். மிகவும் சிறந்தது எது? சிறந்ததெனக் கூறக் காரணம் என்ன? அவர்களை தனியாக பாராட்ட வேண்டும். அத்துடன் எல்லாக் குழந்தைகளையும் பாராட்ட வேண்டும்

#### தொகுப்பு

- அடிப்படை உருவங்கள் சதுரம், முக்கோணம், வட்டம் போன்றவையாகும். படம் வரைவதற்கு இந்த வடிவங்களோ இதுபோன்ற பிறவடிவங்களோ உத வும்.
- உபகரணங்களின் உதவியில்லாமல் சுதந்திரமாக வரையலாம்.


### செயல்பாடு-4

பல்வேறு அடிப்படை உருவங்களைப் பயன்படுத்தி தெரிந்த உருவங்களை அமைக்கலாம். இதற்கு முன்னர் ஒரு சிறிய கலந்துரையாடல் நடத்தலாம்.

- பல்வேறு வடிவங்களைச் சேர்ந்து வரைய முடியுமா?
- புதிய வடிவங்களைக் கண்டு பிடிக்க முடியுமா?

சில வடிவங்களை ஆசிரியர் அறிமுகப்படுத்துகிறார்

தொடர்ந்து குழந்தைகள் உருவங்களை வரைகிறார்கள்



குழந்தைகளின் மதிப்பீடு ( குழு)


ஒரு குழுவில் 5 பேர். ஒரு குழுவினர் வரைந்த படங்களை அடுத்த குழுவினர் பரிசோதிக்கிறார்கள் சிறந்த படங்கள் எவையெல்லாம்? நன்றாக வரைய வேண்டியவை எவையெல்லாம்?

குழுவின் அறிக்கை. தொடர்ந்து படங்களின் கண்காட்சி. குழந்தைகள் வரைந்த படங்கள் வகுப்பில் பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

## மதிப்பீடு

அடிப்படை வடிவங்கள் ( சதுரம், முக்கோணம், வட்டம்) உபயோகித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள உருவத்தை அமைக்கவும்.

எந்த அடிப்படை வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதென்று குறிப்பிட வேண்டும்.



## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- இயற்கையில் காணப்படும் பல்வேறு வடிவங்களைப் பற்றி வடிவியலுடன் தொடர்புபடுத்தி விவரிப்பதன் மூலம் கருத்துத் தெளிவு ஏற்படுகிறது.
- பல்வேறு மாதிரிகள் அமைப்பு உருவங்கள் உருவாக்க முயற்சிப்பதனால் இரசிப்புத் தன்மை வளர்கிறது.
- உருவங்களுக்கும் பிறவற்றிற்கும் வித்தியாசமான வண்ணங்கள் தீட்டி அலங்கரிப்பதன் மூலம் குழந்தைகளின் கற்றலில் உற்சாகம் ஏற்படுகிறது.
- ஓவியம் வரையும் திறன் அதிகரிக்கிறது.
- ஓவியங்களை மதிப்பீடு செய்வதற்கான திறன் வளர்கிறது.

# அலகு-3 படத்தை முழுமையாக்கலாம்

உருவங்களைப் பற்றிய கற்பனைத் திறன் சிறிய வயதில் குறைவாகவே இருக்கும். அதனால் முழுமையற்ற படத்தை முழுமையாக்கும் செயல்பாடுகளின் வாயிலாக கிடைத்த அனுபவங்களின் வாயிலாக மட்டுமே முழுமையான வடிவத்தைக் கற் பனை செய்யும் திறனைக் குழந்தைகளிடம் கொண்டு செல்ல முடியும். முழுமை யற்ற படங்களென்றாலும் முடிந்தளவிற்கு எளிய உருவங்களை ஆரம்ப கட்டத் தில் கொடுக்க வேண்டும்.

## கற்றல் அடைவுகள்

கற்பனையிலிருந்து புதிய வடிவங்களை ஒன்றிணைத்து முழுமையற்ற படங்களை முழுமையான படங்களாக்குதல்..

## கருத்து, அறிவு

இயற்கைச் சீரழிவின் மூலம் இயற்கையிலுள்ள பல பொருட்களுக்கு சேதம் ஏற்ப டுகிறது. இவற்றை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்கிறோம். அதுபோலவே படம் வரைவதிலும் முழுமையற்ற படங்களை முழு மையாக்கவும் விட்டுப்போன கோடுகளை ஒன்று சேர்த்துப் படத்தைச் சிறப்பான தாக்குவதற்கான செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

## கற்றல் செயல்பாடுகள்



### *ஆரம்ப செயல்பாடுகள்*

- நான்கு குழந்தைகள் வீட்டின் வடிவத்தில் நிற்கிறார்கள்.
- காடாக சிறிது குழந்தைகள் நிற்கிறார்கள்
- மேலும் சிலர் ஆறாக நிற்கிறார்கள்.
- மீதமுள்ள குழந்தைகளெல்லாம் ஒவ்வொரு கதாபாத்திரங்களாகிறார்கள் எ.கா-கோழி, சிங்கம், நாய், மரம், பசு, பாத்திரம், மலை, அணில், மீன், புலி, தவளை
- வீடாக நிற்கும் நான்கு குழந்தைகள் சேர்ந்து பாடுகிறார்கள்
- என்னுடன் சேர்பவர்கள்
- யாரெல்லாம் குழந்தைகளே (மீண்டும் மீண்டும்)

இதுபோல காடாகவும், ஆறாகவும் சேர்ந்து வரும் கதாபாத்திரங்களை பொருத் தமான இடங்களில் இடம் பிடிக்கும் போது சிலரேனும் தவறான இடங்களில் நிற்பார்கள். அவர்களை மற்றவர்கள் பொருத்தமான இடங்களுக்கு அனுப்பி முழுமையடையச் செய்யலாம்.( தேவையெனில் ஆசிரியர் உதவலாம்)

### *செயல்பாடு -1*

- மூன்று குழுக்களாகப் பிரித்து, மூன்று சார்ட் பேப்பர்களில் ஒவ்வொன்றிலும் முறையே ஒரு முறையே ஒரு பூ, ஒரு காய், ஒரு இலை போன்றவற்றை முழு மையில்லாமல் வரைந்து கொடுக்கலாம்.

- குழந்தைகள் பொருத்தமானவற்றை வரைத்துச் சேர்த்து படத்தை பூர்த்தியாக்க லாம்
- குழு விவாதம், சுயம் பரஸ்பரம் மதிப்பீடு செய்தல்
- தொடர் செயல்பாட்டிற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் மூன்று சார்ட் பேப்ப ரில் அதே போன்ற வேறொரு பயிற்சியையும் குழந்தைகள் செய்கிறார்கள்.
- பூர்த்தியாக்கிய முதல் படத்தையும் இப்போது வரைந்து பூர்த்தியாக்கிய படத் தையும் ஒன்றுக்கொன்று ஒப்புமைப்படுத்தி சிறப்பம்சத்தை குழந்தைகள் தெரிந்து கொள்கிறார்கள்.

## மதிப்பீடு

பூர்த்தியற்ற படம் கொடுக்கப்பட்டுள்ளது. படத்தைப் பூர்த்தி செய்யவும். (உதா-படம்)

<u>மதிப்பீட்டுக் குறிப்புகள்</u>

- ஒருங்கிணைக்கும் திறன்
- அளவு
- முழுமை
- சுத்தம்

### அடையலாமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- சரியான அளவில் படத்தைப் பூர்த்தியாக்கும் அறிவு கிடைக்கிறது.
- படத்தை முழுமையாக்கியதால் சந்தோசம் ஏற்படுகிறது.

## அலகு -4 :கொளாஷ் படங்கள்

இயற்கையிலுள்ள பல்வேறு நிறங்களை தெரிந்து கொள்ளவும் ஓவியக்கலையின் வேறொரு இனத்தை குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியே இங்கே மேற் கொள்ளப்படுகிறது..

## கற்றல் அடைவுகள்

- கொளாஷ் படங்களை உருவாக் குகிறார்கள்

## கருத்து அறிவு

- படங்கள் வரைவதற்குப் பயன் படுத்துவது பரம்பரை ஊடகங் களை மட்டுமல்ல
- செய்தித்தாள்களிலுள்ள வண் ணப்பேப்பர்களை கிழித்து ஒட்டி படங்கள் உருவாக்கலாம்
- சரியான உருவ அமைப்பை வரைந்து வண்ணப் பேப்பர்கள் ஒட்டி படங்கள் உருவாக்கலாம்.

ஆசிரியர் அறிவதற்கு

### கொளாஷ்

*பரம்பரை ஊடகங்கள் அன்றி கருத்துகளை வெளியிடுவதற்காக பேப்பர், துணி போன்ற பல்வேறு பொருட்களை ஒட்டிச் சேர்த்து படம் உருவாக்கும் முறையாகுமிது. படங் களையே வெட்டி ஒட்டியும் பலநிறத்தி லுள்ள பொருட்களை கிழித்தெடுத்து படம் போல் ஒட்டியும் கொளாஷ் உருவாக்கலாம். செய்தித்தாள், இதழ்களின் பக்கங்களை தேவைக்கேற்ப கிழித்தெடுத்து ஒட்டியும் சேர்க்கலாம். இவ்வாறு ஒட்டிச் சேர்க்கும் இடத்திலுள்ள காலி இடங்களில் தேவை யெனில் கோடுகள் வரைந்தும் வண்ணம் தீட்டியும் தயாரிக்கலாம்.*

*சரியான உருவ அமைப்பை சிறிய பேப்ப ரில் வரைந்து அதற்குள் பல பொருட்க ளையோ படங்களையோ பசை உபயோ கித்து ஒட்டி கொளாஷ் தயாரிக்கலாம். படங் கள், போஸ்ட்டர்கள், வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை கொளாஷ் வடிவத்தில் அமைக்கலாம்*

## கற்றல் செயல்பாடுகள்

***நிலை - 1***

பல்வேறு வண்ணப் பேப்பர்கள் உப யோகித்து உருவாக்கப்பட்ட ஒரு கொளாஷ் படம் குழந்தைகளுக்கு காண்பிக்கப்படுகிறது.( கையால் கிழித்தெடுத்த பேப்பர் துண்டுகளை உபயோகிக்க வேண்டும்)

- ♦ இந்தப் படம் எப்படிப்பட்ட நிறங்கள் பயன்படுத்தி அமைக்கப்பட்டது?
- குழந்தைகள் படத்தை உன்னிப்பாகக் கவனிக்கட்டும்.
- உற்றுப்பார்க்கிறார்கள். தொட்டுப் பார்க்கிறார்கள். கருத்தைக் கூறுகிறார்கள். கருத்தை எழுதுகிறார்கள்
- பலதரப்பட்ட வண்ணப்பேப்பர்கள் உபயோகித்து படத்தை உருவாக்கலாம்.
- இப்படிப்பட்ட கொளாஷ் படத்தை உங்களால் அமைக்க முடியுமா? எப்படி? என்னென்ன பொருட்கள் தேவை?
- பட்டியலிடுகிறார்கள் .
- பேப்பர், வண்ணப்பேப்பர், பசை,...

***நிலை - 2***

கொளாஷ் பட உருவாக்கத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் பேப்பர், பசை, போன்றவை வழங் கப்படுகிறது.

- கொளாஷ் பட உருவாக்கச் செயல்பாடு (மரம்,வீடு, பூ போன்றவை)
- குழந்தைகளின் படங்களை சேகரிக்க வேண்டும். பூர்த்தி செய்யாத படங்கள் இருந்தால் அடுத்த கட்டத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்



*நிலை - 3*

குழந்தைகளின் கொளாஷ் படங்கள் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. குழந்தைகள் சுயமாகவும் ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்யவேண்டும்

- கலந்துரையாடல்

  கொளாஷ்- சம்பிரதாயங்கள்- உபயோகிக்கக் கூடிய வேறு பலதரம் பொருட்கள். இயற்கையில் கிடைக்கும் எந்தப் பொருளைப் பயன்படுத்தியும் கொளாஷ் படங்கள் உருவாக்கலாம். கொளாஷ் உருவாக்கச் செயல்பாடுகள் குழந்தைகள் விரும்புவதாக இருக்கவேண்டும்.

## மதிப்பீடு

ஒரு கொளாஷ் படத்தை உருவாக்கவும்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வண்ணத்தைப் பற்றிய அறிவு, பொருத்தமான நிறங்களைத் தேர்ந்தெடுத்தல்.
- கிழித்தலும், சரியாக ஒட்டுதலும்.
- முழுமையாக்குதல்

## அடையலாமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- சுற்றிலும் காணப்படும் பொருட்களின் இயல்பான நிறத்திற்கேற்ற வண்ணங்களை தேர்ந்தெடுத்து ஒட்டி படத்தைப் பூர்த்தி செய்தல்.
- படத்திற்குப் பொருத்தமான நிறங்களைத் தேர்ந்தெடுத்தல்.

# இரண்டாம் வகுப்பு

## அலகு 1: முப்பரிமாண வடிவங்கள்

இருபரிமாணமுள்ள கொளாஷ் உருவாக்கும் முறையை முன் வகுப்புகளில் தெரிந்து கொண்டோம். மண் அப்பம் சுட்டு விளையாடியும் இலைகளைப் பயன்படுத்தியும் பிற பொருட்களைப் பயன்படுத்தியும் விளையாட்டு வண்டிகளும் பிற பொருட்க ளும் உருவாக்கிப் பழக்கியுள்ள குழந்தை மனங்களைப் படிப்படியாக சில உருவங் களை உருவாக்கவும் பிற ஊடகங்களை தொட்டுணர்ந்து கொண்டுள்ள கற்றல் செயல் பாடுகளை நோக்கி இங்கே குழந்தைகளை கொண்டுசெல்கிறோம்.

### கற்றல் அடைவுகள்

முப்பரிமாணப் பொருட்களை உருவாக்குதல்

### கருத்து அறிவு

இரு பரிமாண பரப்புகளில்தான் படம் வரைய முடிகிறது. சிற்பங்கள் முப்பரிமாண முடையதாகும். சிற்பங்களை வடிவமைப்பதற்கு பொருட்களின் எல்லாப் பக்கங்க ளிலிருந்துமுள்ள சரியான உற்றுநோக்கலும் அறிவும் தேவையாகும். உருவ அமைப் பிற்கு தேவைப்படும் பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

***நிலை - 1***

முதல் செயல்பாடாக பந்து பெட்டி, பாட்டில் போன்றவற்றின் இரு பரிமாண முப்ப பரிமாணங்களை காட்டவும். குழந்தைகள் படத்தைப் பார்த்து வித்தியாசத்தைக் கூறட் டும். இரு பரிமாண படங்களை வரையமுடியும். முப்பரிமாணத்தில் சிற்பங்களையே உருவாக்க முடியும் என்று அறிந்து கொள்கிறார்கள்.

***நிலை - 2***

- முப்பரிமாண வடிவமுள்ள படங்களையும் உருவங்களையும் குழந்தைகளுக்கு காட்ட வேண்டும்.
  எகா- பந்து, பெட்டி, பாட்டில் போன்றவை.
- ஒப்புமைப்படுத்துகிறார்கள், முப்பரிமாண பண்புகளைப் பிரித்தறிகிறார்கள்( இம் மாதிரியான பிற செயல்பாடுகளை ஆசிரியர் கண்டுபிடித்து குழந்தைகளுக்கு கொடுக்கலாம்.)

- இயற்கையிலும், வகுப்பறையிலும் முப்பரிமாணப் பொருட்களைக் கண்டுபிடிக்கக் கூறுதல். கண்டுபிடித்த முப்பரிமாணப் பொருட்களை மதிப்பிடுதல்.

*நிலை - 3*

- எந்தெந்தப் பொருட்களைப் பயன்படுத்தி முப்பரிமாணப் பொருட்களை உருவாக்கலாம்?
- இத்தகைய உருவங்களை அமைக்கப் பயன்படும் பொருட்களை அறிமுகப்படுத்துதல்

  உதா-மைதா, களிமண், பிளாஸ்டிக் மெழுகு

- சிற்பங்களைத் தொட்டுப்பார்ப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். தொட்டுணரும், பார்த்துணரும் ( எகா- களிமண், மைதா) பொருட்களை கொடுத்து விருப்பமான உருவங்களை உருவாக்கச் சொல்ல வேண்டும்.
- பார்வைக்கு வைத்தல். தனித்தனியாக அனுபவங்களைப் பங்கு வைத்தல்.

## மதிப்பீடு

ஒரு முப்பரிமாண வடிவம் பார்வைக்கு வைத்தல். ( எகா- பெட்டி) இதனுடைய முப்பரிமாண வடிவம் அமைக்கக் கூறுதல்

- சுயமாகவும் ,பரஸ்பரமும் மதிப்பிடுகிறார்கள்.
- தொடர்ந்து ஆசிரியரின் இறுதி மதிப்பீடு.

  மதிப்பீட்டுக் குறிப்புகள்

  - உற்றுநோக்கும் திறன்
  - உருவ ஒற்றுமை
  - பொருட்களைக் கையாளும் திறன்
  - மனப்பாங்கு

## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- குழந்தைகளின் உற்றுநோக்கும் திறன் வளர்கிறது.
- கையும் விரலும் பழக்கப்படுகிறது.
- சுற்றிலுமுள்ளப் பொருட்களை இரசிக்கும் திறன் ஏற்படுகிறது.

# அலகு-2 வெளிப்புறப் படம் வரைதல்

இயற்கையில் பல அளவுகளிலும் நிறத்திலும் வடிவத்திலும் பொருட்கள் உள்ளதென்றும் அதனுடைய தனித்தன்மை மாறாமல் உண்மையானப் பொருட்களை மாதிரியாக வைத்து படம் வரையும் திறனை குழந்தைகள் பெற வேண்டும். இதற்கு---- வாய்ப்பளிக்க வேண்டும்.

வகுப்பறைக்கு வெளியிலுள்ள பல்வேறு பொருட்களை (செடிகள், பூக்கள், காய்கள்,

மரங்கள், இயற்கையமைப்பு) பார்த்தவுடன் குழந்தைகளுக்கு வரைவதற்கான வாய்ப்பு கிடைத்தால் குழந்தையின் மூளை, கண், கை, வரையும் மேற்பரப்பு, கருவிகள் போனறவை ஒருங்கிணைக்கப்படும்.

## கற்றல் அடைவுகள்

வெளிப்புற ஓவியம்

## கருத்து அறிவு

படங்களின் தனித்தன்மை, இயல்பு போன்றவை அடிப்படையாகவே இயற்கையு டன் தொடர்பு கொண்டே நிலை நிற்கிறது. இயற்கையின் இயல்பான உருவ அமைப்பை நேரடியாகவே பார்த்தறிய வேண்டும். பிறர் வரைந்த படமோ, கேமரா வில் எடுத்த போட்டோவோ நேரடியாகப் பார்ப்பதற்கு ஈடாகாது. இயற்கையிலுள்ள பொருட்களின் உருவ வேறுபாடு, நிற வேறுபாடு அளவு முதலியவற்றைப் பற்றிய தெளிவான அறிவு குழந்தைக்கு கிடைக்கும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *நிலை - 1*

சுற்றுப்பறத்திலுள்ள பொருட்களைப் பற்றிய விவரம்.( பாட்டுகள், கதைகள், போன் றவற்றை உட்படுத்தலாம்) பள்ளியின் சுற்றுப்புறத்திலுள்ள நான்கோ, ஐந்தோ பொருட் களின் பெயர்களை கரும்பலகையில் எழுதலாம். இதில் ஏதாவது ஒன்றை குழந்தைகள் அவர்களுக்கு பிடித்த முறையில் வரையட்டும். கிரையான் உபயோகித்து வண்ணம் தீட்டலாம்( 15 நிமிடம்)

*சுயமாகவும்- ஒருவருக்கொருவரும் மதிப்பீடு செய்யட்டும். ஆசிரியரின் மதிப்பீடு இறுதியானது.*

### *நிலை - 2*

வெளிப்புற ஓவியம் பற்றி தெளிவான குறிப்புகள் வழங்குதல்.

- வரையும் பொருளை உன்னிப்பாக உற்றுநோக்குதல்( நிறம், வடிவம், அளவு)
- குறிப்பிட்ட அகலம் கையாளுதல்
- வரைவதற்கான இடம்
- தொடர்ந்து பள்ளியின் சுற்றுப்புறத்திலுள்ள மேற்கூறப்பட்ட பொருட்களை உற்று நோக்கி நேரடியாக பார்த்து வரைவதற்காக குழந்தைகளை வகுப்பிற்கு வெளியே அழைத்துச் செல்ல வேண்டும்.( வெளிப்புற ஓவியம் 20 நிமிடம்)
- குழந்தைகள் ஸ்கெட்ச் வரைந்த பின்னர் தொடர்ந்து கிரையான் உபயோகித்து வண்ணம் தீட்டவும் செய்கிறார்கள்.
- மீண்டும் வகுப்பிற்கு வருகிறார்கள்.
- குழந்தைகள் வரைந்த படத்தை அலசிஆராய்தல்.
- குறைகளையும், நிறைகளையும் குழந்தைகள் கூறட்டும்( வெளிப்புற ஓவியம் பற்றிய அனுபவங்களை பங்கு வைப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.)
- படங்களை வகுப்பறையில் உள்ள ஆர்ட் காலரியில் பார்வைக்கு வைக்க வேண்டும்.

- ஆசிரியரின் சிறந்த மதிப்பீடு– ஆசிரியரின் தொகுப்பு
    - ♦ படம் வரைவதற்காக நாம் இயற்கையையே கற்றல் ஊடகமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்
    - ♦ வட்டம், சதுரம், முக்கோணம் முதலிய அடிப்படை வடிவியல் உருவங்கள் இதற்கு உதவுகின்றன.
    - ♦ பொருட்களுக்கிடையிலான அளவு வேறுபாடு இடம் போன்றவற்றை உற்றுப் பார்த்த பிறகு வரைய வேண்டும்.

    தொடர்செயல்பாட்டிற்காக வீட்டைச் சுற்றி இயற்கையில் காணப்படும் பொருட்களை நேரடியாக உற்றுநோக்கி படம் வரைந்து வண்ணம் தீட்ட வரச் சொல்லலாம். வீட்டிற்கு வரும்போதும் போகும் போதும் இயற்கையை உற்றுப்பார்த்து தனித்தன்மைகளை மனதில்கொண்டு வரைந்து வரச் சொல்லவேண்டும்.

## மதிப்பீடு

இயற்கையை உற்றுப்பார்த்து ஒரு படம் வரைந்து வண்ணம் தீட்டக் கூறுதல்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ♦ படத்தின் முழுமை, வண்ணம் தீட்டிய முறை
- ♦ படத்திற்கும் இயற்கைப் பொருளுக்கும் உள்ள ஒற்றுமை
- ♦ உருவ அமைப்பு, விகிதம் போன்றவற்றின் பயன்பாடு
- ♦ முழுமையின்றி வரைந்தது
- ♦ இனியும் மேம்படவேண்டியது.

### அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- இயற்கை அழகை இரசிக்கும் திறன்.
- இயற்கையை வரைக்கும் திறன்
- இயற்கையிலுள்ள அடிப்படை வடிவியல் உருவங்களை பிரித்தறியும் திறன்

## அலகு-3 : படம்- சிற்பச் சேகரிப்பு

படங்களையும், சிற்பங்களையும் சேகரிப்பதென்பது, படத்தையும் சிற்பத்தையும் சேகரிப்பவர்களின் படைப்பாற்றல் வளர்ச்சியில் தவிர்க்க முடியாத ஒன்றாகும், ஓவியக் கலையின் வளர்ப்பதற்கு சேகரிப்பு பழக்கத்தை குழந்தைப் பருவத்திலேயே உறுதிப்படுத்த வேண்டும். நண்பர்கள் வரைந்ததும், ஓவியர்கள் வரைந்ததும், செய்தித்தாள், மாத வார இதழ்கள் போன்றவற்றில் வரும் படங்களையும், புகைப் படங்களையும், சிறிய சிற்பங்களையும் சேகரிப்பில் உட்படுத்த வேண்டும். எனது பட, சிற்ப சேகரிப்பு குழந்தையின் பள்ளிக்கல்வி காலகட்டத்தில் மிகப்பெரிய சாதனையாக இருக்கும். ஆரம்பப் பள்ளி கல்விக்குப் பிறகு நினைவுப்படுத்துவதற்கும், சுயமதிப்பீட்டிற்கும் இது உதவும்.

## கற்றல் அடைவுகள்

படங்களும் சிற்பங்களும் சேகரிக்கிறார்கள்

## கருத்து அறிவு

- ஓவியம்- சிற்பக் கலை சார்ந்த பல்வேறு படைப்புகளின் சேகரிப்பு பற்றி அறிவு பெறுகிறார்கள்
- படைப்பாற்றல் ஊடகங்களுக்கேற்ப தரம்பிரித்து சேகரிப்பது தொடர்கல்விக்கு உபயோகமாக இருக்கும்.

## கற்றல் செயல்பாடுகள்

***ஓவிய சிற்ப சேகரிப்பு.***

ஓவியங்களையும் சிற்பங்களையும் சேகரித்தல்

- கல்வியாண்டின் தொடக்கம் முதல் குழந்தை தனியாக செய்ய வேண்டிய செயல் பாடாகும். ஆரம்பத்திலேயே அறிவுரைகளை கூறவேண்டும்.
- ஓவியம், சிற்பம் என இரண்டு மண்டலங்கள் உள்ளன.
- ஓவியங்களைப் பெரியது, சிறியதென்ற வேறுபாடு இல்லாமல் சேகரிக்கலாம்.
- சிறிய சிற்பங்களைச் சேகரித்தால் போதுமானது.
- சேகரிப்புகளைப் பல்வேறு ஊடகங்களின் படைப்புகளாகத் தரம் பிரிக்கலாம்.
- இடைக்கால மதிப்பீடு, மேம்படுத்துதல்
- சேகரித்த படைப்புகளை வகுப்பிலும்/ பள்ளியிலும் பார்வைக்கு வைக்கலாம்
- சிறந்த முறையில் சேகரிப்பவர்களை பாராட்டலாம்.
- சேகரிப்பிற்கு தரநிர்ணயத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்து தனித்தனியாக கிரேட் அடையாளப்படுத்தலாம்.

## மதிப்பீடு

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ♦ சேகரிப்பு (வெவ்வேறு பொருட்களின் சேகரிப்பு)
- ♦ படத்தின் தெளிமை, கருத்துப் பரிமாற்றத் திறன்.
- ♦ சிற்பத்தின் அழகு, கலைத்திறன்

## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவிற்கு அடைய முடிந்தது?*

- ஓவியங்களையும், சிற்பங்களையும் சேகரிக்கும் திறன் பெறுதல்.
- ஓவியங்களையும், சிற்பங்களையும் இரசிக்கிறார்கள்.

# அலகு-4 தெரிந்த உருவங்கள்


இயற்கையில் காணப்படுவதும், மனிதன் உருவாக்கியதுமான ஏராளம் உருவங்கள் நம்மைச் சுற்றிலும் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து அடிப்படை வடிவங்களை பிரித்தறிய வேண்டியது ஓவியம் வரைதலின் ஆரம்ப கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய செயலாகும். அடிப்படை வடிவியல் உருவங்களை வெவ்வேறாகவும் இணைத்தும் சுற்றிலுமுள்ள தெரிந்த உருவங்களை குழந்தையிடம் எளிதாக கற்பிக்க முடியும்.

## கற்றல் செயல்பாடுகள்

அடிப்படை வடிவங்களை உபயோகித்துத் தெரிந்த உருவங்களை வரைதல்.

## கருத்து அறிவு

சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய அடிப்படை வடிவங்களைப் பிரித்தறிந்து கருவிகளின் உதவியில்லாமல் வரையக்கூடிய திறனைப் பெற வேண்டும். இயற்கையிலுள்ள பொருட்களின் ஒப்புமையை குழந்தை பிரித்துணர்கிறது. திரும்பத் [illegible]



## கற்றல் செயல்பாடுகள்

### *ஆரம்ப செயல்பாடுகள்*

- உருவங்கள் கருத்துகளாக வரும் எளிய பாடலைப் பாடித் தொடங்கலாம்.
- குழந்தைகளை வட்டம், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களில் நிறுத்தி ஆடிப்பாடக் கூறலாம்.

### *செயல்பாடு- 1*

- அடிப்படை உருவங்கள் அமைத்தல்.
  குழந்தைகளை குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவிற்கும் காயாத ஈர்க்கிளை கொடுக்க வேண்டும். இதைப் பயன்படுத்தி அடிப்படை உருவங்கள் உருவாக்கக் கூறுதல். உருவாக்கிய உருவங்களை இணைத்து பிற உருவங்கள் உருவாக்கலாம்.
- ஆசிரியரின் மதிப்பீடு.

*செயல்பாடு- 2*

- ஆசிரியர் சார்ட்டில் அடிப்படை உருவங்களை வரைந்து காட்டட்டும். குழந்தை உருவாக்கியதையும் ஆசிரியர் வரைந்ததையும் ஒப்புமைப்படுத்துகிறார்கள். உரு வங்கள் அமைத்ததிலுள்ள குறைகளைக் குழந்தை தெரிந்து கொள்கிறது.
- ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்
- அதைத் தொடர்ந்து குழந்தைகள் வரைகிறார்கள்
- வரைந்த படங்களை சுயமாகவும், பரஸ்பரமும் மதிப்பீடு செய்யட்டும்.

*செயல்பாடு - 3*

- உருவங்களின் ஒருங்கிணைப்பு
- உருவங்களை ஒருங்கிணைத்தல். அடிப்படை உருவங்களை ஒன்று சேர்த்து பல்வேறு உருவங்களைக் குழந்தைகள் வரையட்டும். பறவைகள், விலங்குகள், மரங்கள், வீடு, வாகனம் தொடங்கி குழந்தைகள் அதிகமான உருவங்கள் வரை வதற்கு ஆசிரியர் உதவ வேண்டும். மாதிரிகளை நேரடியாகப் பார்த்து வரை வதைத் தவிர்க்க வேண்டும்.

*செயல்பாடு- 4*

- வண்ணம் தீட்டுதல்
- வண்ணப் பென்சில்களை உபயோகித்து வரைந்த படங்களுக்கு நிறம் கொடுக் கலாம்.
- ஆசிரியர் குழந்தைகளின் சிறந்த படைப்புகளை மதிப்பிடுகிறார்.
- முழுமையில்லாமல்/ தெளிவில்லாமல் வரைந்தவர்கள் யாரெல்லாம்?
- இனியும் மேம்பட வேண்டியவர்கள்.
- குறைகளை நிவர்த்தி செய்தல்
- வகுப்பறை ஆர்ட் காலரியில் பார்வைக்கு வைத்தல்

## மதிப்பீடு

அடிப்படை வடிவியல் வடிவங்களை ஒன்றிணைத்து உருவங்கள் அமைத்தல்.

## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- பல்வேறு வடிவங்கள், பாட்டேன்கள் உருவாக்குகிறார்கள்.
- இரசித்தல் திறன் வளர்கிறது.
- வண்ணம் தீட்டி கவர்ச்சிகரமாக்குவதால் கற்றல் உற்சாகமாகிறது.
- ஓவியம் வரையும் திறன் வளர்கிறது.

# மூன்றாம் வகுப்பு

## அலகு-1 : வரையலாம் நிறம் கொடுக்கலாம்

இயற்கைப் பொருட்களின் தனித்தன்மையை இழக்காமல் அவற்றை வரைவதற்கான வாய்ப்பளிப்பதுடன் நிறங்கள் கொடுக்கவும் அவற்றைப் புரிந்துகொள்ளவும் குழந்தைகளால் இயல வேண்டும். இச் செயல்பாடு மனதை ஒருமுகப்படுத்துவதற்காகும்.

### கற்றல் அடைவுகள்

இயற்கைப் பொருட்களை உற்றுப்பார்த்து வரையவும் நிறம் கொடுக்கவும் செய்கிறார்கள்.

### கருத்து அறிவு

படங்களிலுள்ள காரணிகளின் தனித்தன்மையும் இயல்பும் அடிப்படையாகவே இயற்கையுடன் தொடர்புடையதாக இருப்பதால் அதன் பண்புகளை நேரடியாகப் பார்த்தே தெரிந்துகொள்ள வேண்டும். பல்வேறு ஊடகங்களைப் பற்றிய அறிவு குழந்தைகளுக்குக் கிடைக்கிறது.

### கற்றல் செயல்பாடுகள்

***நிலை - 1***

குழந்தைகளுக்கு மிகவும் அறிமுகமான இயற்கைப் பொருட்களைப் பற்றிய (எகா...) விளக்கமும் கலந்துரையாடலும். கலந்துரையாடிய பொருளை உற்றுநோக்குதல். கிடைத்த பொருட்களை (கிரையான், வாட்டர் கலர், பென்சில்) பயன்படுத்தி குழந்தைகள் வரைகிறார்கள். வகுப்பிலுள்ள ஆர்ட் காலரியில் பார்வைக்கு வைக்கிறார்கள்.

***நிலை- 2***

வகுப்பறைக்கு வெளியிலிருந்து சேகரிக்கப்படும் சிறிய பொருட்களை வகுப்பறையில் உற்று நோக்கச் செய்து கோட்டுப் படமாக வரைகிறார்கள். உண்மையான பொருளுடன் ஒப்புமைப்படுத்த குழந்தைகளிடம் கூறுதல். (15 நிமிடம்)

***நிலை - 3***

ஆசிரியரும் குழந்தைகளுடன் செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டும். குழந்தைகள் வரைந்த படங்களைப் பற்றி கலந்துரையாட வேண்டும்.

கலந்துரையாடல் குறிப்புகள்

- அனுபவங்கள்
- தொழில்நுட்பத் திறன்கள் (ஒவ்வொரு ஊடகம்)
- சந்தித்த இடையூறுகள்
- மூலப் படத்திற்கும் வரைந்த படத்திற்கும் உள்ள ஒற்றுமை

## மதிப்பீடு

சுற்றுப்புறத்திலுள்ள ஒரு பொருளை மேசைமேல் வைத்தல். பொருளின் கோட்டுப் படம் வரைதல். படத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடுதல்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- உற்றுநோக்கும் திறன்
- பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்
- வரையும்பொருட்கள்
- வரையும் முறை
- ஒற்றுமை, நிறத்தைப் பற்றிய அறிவு

## அடையமுடியுமென்ற கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடையமுடிகிறது?*

- விருப்பத்திற்கேற்ப தேர்ந்தெடுத்தல்
- கற்றல் வேகமாகிறது
- ஒவ்வொரு பொருளின் தன்மைக்கேற்ற நிறம் கொடுக்கும் திறன்
- பரஸ்பரம் மதிப்பிடுவதன் மூலம் மேன்மையடைதல்

## அலகு – 2: முப்பரிமாணப் பொருட்களை உருவாக்கலாம்

ஓவியமும், சிற்பமும் கருத்துகளை வெளியிடுவதற்கான சிறந்த ஊடகமாகும். ஓவியம் இரு பரிமாணத்திலும், சிற்பம் முப்பரிமாணத்திலும் அமைக்கப் படுவதாகும். ஓவியம் என்பது பொருட்களின்/ கருத்துகளின் ஒரு பக்க( காட்சி) உருவத்தைக் காட்சிப்படுத்தும் போது, சிற்பம் ஒரு பொருளின் நான்கு பக்கத் திலுமுள்ள காட்சிகளை ஒருங்கிணைக்கிறது. அதனால் தான் சிற்பம் வடிக்கும் போது பொருளின் எல்லாப் பக்கங்களின் அறிவும் தேவைப்படுகிறது.

## கற்றல் அடைவுகள்

முப்பரிமாணப் பொருட்கள் உருவாக்குதல்.

## கருத்து, அறிவு

- ஓவியம் இருபரிமாணமுள்ளதாகும்.
- சிற்பம் முப்பரிமாணமுள்ளதாகும்.
- சிற்பம் வடிப்பதற்கு பொருளின் நான்கு பக்கங்களையும் உற்றுப்பார்க்க வேண்டும்.
- சிற்பம் அமைப்பதற்கு களிமண், உலோகம், தடி போன்ற பரம்பரையான பொருட்களும், பாளாஸ்டர் ஆப் பாரிஸ், பல்ப், மெழுகு போன்ற நவீன பொருட் களும் உபயோகிக்கப்படுகின்றன.
- சிற்பம் அமைப்பதற்குப் பயன்படுத்தும் பொருட்களைப் பருவப்படுத்துதல் மிக முக்கியமான செயலாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

*நிலை - 1*

- ஓவியத்திற்கும் சிற்பத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் பிரித்தறிதல்.
- ஒரு பொருளையும் படத்தையும் காண்பித்தல்

  உதா- ஒரு ஆப்பிளை காண்பித்தல். ஆப்பிளின் படத்தையும் காண்பித்தல்
- பொருளையும் படத்தையும் அடிப்படையாகக் கொண்ட கலந்துரையாடல். ஆசிரியரின் தொகுப்பு.

*நிலை- 2*

சிற்பம் அமைப்பதற்குத் தேவையான கருத்தைக் கண்டுபிடித்தல்.

- பொருள் தயாராகிறது
- களிமண், மைதா மாவு போன்ற பொருட்களைத் தண்ணீர் சேர்த்து குழைத்தல்.
- எந்தச் சிற்பத்தை வடிவமைக்கலாம் என்று கலந்துரையாடுதல், தேர்ந்தெடுத்தல்.
- சிற்பம் அமைத்தல், பார்வைக்கு வைத்தல்
- பார்வைக்கு வைத்த பின்னர் சிற்பத்தில் ஏதாவது குறைகள் கண்டறிந்தால் அதை மாற்றி அமைப்பதற்கான வாய்ப்பைக் கொடுத்தல், முதலில் வடித்த சிற்பத்தையும் இரண்டாவது வடித்த சிற்பத்தையும் ஒப்புமைப்படுத்தி அதனுடைய வளர்ச்சியை அறிந்து கொள்கிறார்கள்.

## மதிப்பீடு

செயல்பாட்டைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- ♦ விஷயம் / கருத்தைத் தேர்ந்தெடுத்தல்
- ♦ பொருட்களைத் தயாரித்தல், ..........
- ♦ உருவாக்கும் திறன், முழுமை

**அடையக் கூடிய கற்றல் அடைவுகள்**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகள் எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- ஓவியம், சிற்பம் இவற்றின் வேறுபாட்டைப் பிரித்தறிகிறார்கள்/ உருவாக்கத் திறன் பெறுகிறார்கள்.

## அலகு – 3: நிழற்படங்கள்

படம் வரைவதற்கு அவற்றின் உருவம் கட்டமைப்பு முதலிய அடிப்படை அறிவு குழந்தைக்குக் கிடைக்க வேண்டும். பொதுவாக ஒவ்வொரு பொருளும் வித்தியாசமாக இருப்பது அவற்றின் உருவத்திலும் அமைப்பிலுமாகும். குழந்தைகளுக்கு இந்த அறிவு கிடைக்க வேண்டுமென்பதற்காகவே நிழற்படங்கள் வரைவதில் ஈடுபடுகிறார்கள்.

### கற்றல் அடைவுகள்

நிழற்படங்கள் வரைகிறார்கள்.

### கருத்து, அறிவு


- எல்லாப் பொருட்களும் உருவத்திலும் அமைப்பிலும் வேறுபட்டுள்ளன.
- நிழற்படங்கள் பொருளின் மேற்பரப்பிலுள்ள விவரங்களை தெளிவுபடுத்துவதில்லை
- பொருட்களின் உருவம் ஒரே நிறத்தில் காணப்படுகிறது.

### திறன்

- குழந்தைகள் நிழற்படத்தை வரைவதற்கு அவற்றின் உருவத்தை உன்னிப்பாக கவனித்துப் புரிந்து கொள்கிறார்கள்.
- நிழற்படங்கள் வரைவதற்கான திறன் பெறுகிறார்கள்.

### கற்றல் செயல்பாடுகள்

நிழற் படங்களில் சிலவற்றை அறிமுகப்படுத்துதல்.



- இத்தகைய படங்களின் சிறப்பென்ன?
- உள்ளடக்கக் கருத்தின் அடிப்படையில் ஆசிரியர் தொகுத்துக் கூறுகிறார்.
- நிழற்படங்களை எவ்வாறெல்லாம் வரையலாம்?
    - பொருளின் உருவம் வரைந்து நிறம் கொடுக்கலாம்.
    - பொருட்களின் உருவம் வரைந்து வெட்டி ஒட்டலாம்
    - வரைந்த படங்களைப் பார்வைக்கு வைத்தல். சுயமதிப்பீடு செய்தல்.

## மதிப்பீடு

பரஸ்பர மதிப்பீடு.

குழந்தைகள் வரைந்த நிழற்படங்களைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடுதல்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- உருவ ஒற்றுமை
- உருவத்தின் நுட்பம்

## அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- நிழற்படங்கள் வரைவதற்கான திறன் பெறுகிறார்கள்

# அலகு – 4: சுவரொட்டி தயாரித்தல்

அன்றாட நிகழ்வுகளையும் , பொதுப் பிரச்சினைகளையும் பொது நன்மைக்காகப் பிரதிபலிப்பது ஒரு கலாச்சார– சமூகச் செயல்பாடாகும். கலையின் மூலம் பிரதிப லிப்பதென்பது கலைச்செயல்பாட்டின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

அன்றாட நிகழ்ச்சிகள், பொதுப்பிரச்சினைகள் போன்றவற்றை மையமாகக் கொண்டு சுவரொட்டி தயாரித்தல்.

## கருத்து, அறிவு

- ஒரே நிறத்திலும், பல நிறங்களிலும் சுவரொட்டி தயாரிக்கலாம்.
- படங்கள் வரைந்தும்,கிழித்தும், ஒட்டியும் சுவரொட்டி தயாரிக்கலாம்..

## திறன்

- சுவரொட்டி தயாரிப்பதற்கான திறன் பெறுகிறார்கள்.

## கற்றல் செயல்பாடுகள்

- அன்றாட நிகழ்வுகளையும், சுவரொட்டி தயாரிப்பதற்கான வாய்ப்புள்ள பத்திரிக்கைச் செய்திகளையும் பற்றி கலந்துரையாடுகிறார்கள்.
- சமூக நன்மைக்காகக் கலந்துரையாடுகிறார்கள்.
- கருத்தைப் பிரதிபலிப்பதற்காக ஒரு சுவரொட்டி தயார் செய்யலாமா?
- என்னென்ன சுவரொட்டிகள் தயாரிக்கலாம்?







- வார்த்தைகள்/ வாக்கியங்கள் படங்கள் போன்றவை தேவைப்படுகின்றன.
- சுவரொட்டியில் சொந்தம் கருத்துகளை எழுதுவதற்காகக் கலந்துரையாடுகிறார்கள்.
- சுவரொட்டி தயாரிப்பு முறைகள்
- சுவரொட்டி தயாரிக்கிறார்கள்/ வண்ணம் தீட்டுகிறார்கள்
- கண்காட்சி, சுய மதிப்பீடு

## மதிப்பீடு

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிடலாம்.

<u>மதிப்பீட்டுக் குறிப்புகள்</u>

- கருத்துப் பரிமாற்றத் திறன்
- நிறங்களைப் பற்றிய அறிவு
- வரிசைப்படுத்துதல்
- ஒருங்கிணைப்பு
- தயாரிக்கும் முறை

## அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்த அளவிற்கு அடைய முடிந்தது?*

- சுவரொட்டி தயாரிப்பதற்கான திறன் பெறுகிறார்கள்
- அன்றாட நிகழ்வுகளைச் சுவரொட்டிகளில் பிரதிபலிக்கிறார்கள்

# அலகு 5 : உருவங்கள் வரைதல்

படம் வரைவதற்கு வெவ்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறோம். அதில் ஒரு முறையாகும் காய்ந்த இலைகளையோ, பச்சை இலைகளையோ பேப்பரில் ஓட்டிச் சேர்த்து உருவாக்கும் படங்கள். கிரையான்ஸ், கலர் பென்சில்களைப் பயன்படுத்தி படத்தைக் கூடுதல் கவர்ச்சியுள்ளதாக மாற்றலாம். இவ்வாறான பல்வேறு முறை களை தெரிந்து கொள்வதன் மூலம் அவற்றில் திறமையும் படம் வரைவதில் ஆர் வமும் ஏற்படுகிறது. மிகச் சிறிய முயற்சியால் முழுமையான அழகான ஓவியங் களை வரையலாம் என்பதே இப்படிப்பட்ட படங்களின் சிறப்பாகும்.

## கற்றல் அடைவுகள்

இலைகளை ஒடித்துச் சேர்த்து பறவை மிருகங்களின் உருவங்களை அமைத்தல்

## கருத்து, அறிவு

- காய்ந்த, பச்சை இலைகளைப் பயன்படுத்தி சர்வசாதாரணமாகப் படம் வரைதல்
- பறவை, மிருகங்களின் உருவங்களும் நிறங்களும் சில இலைகளின் உருவத்தையும் நிறத்தையும் போன்றிருக்கிறது.
- கிரையான், கலர் பென்சில்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி அழகானதும் முழுமையானதுமான படங்களை வரைகிறார்கள்.
- இலைகள், பறவைகள், விலங்கினங்கள் போன்றவற்றின் உருவ ஒற்றுமையை கண்டறியும் திறன் பெறுகிறார்கள்.
- இலைகளை திறமையாகக் கையாளுகிறார்கள்.

## கற்றல் செயல்பாடுகள்

- சில இலைகளை உற்றுப் பார்த்தல்.
- ஏதாவதொரு பறவை, விலங்கின் உருவத்தை இந்த இலையில பார்க்க முடிகிறதா?

- அவைகளின் கோட்டுப் படம் வரைந்த பிறகு இலைகளை அதற்குள் ஒட்டுதல்.
- வெளிக்கோடுகள், ---------கிரையான்ஸ், கலர் பென்சில்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி அடையாளப்படுத்துதல் பின்னனி வரையலாம்.
- வகுப்பிலுள்ள ஆர்ட் காலரியில் பார்வைக்கு வைக்கலாம்.
- சுயமாக மதிப்பிடுதல், பரஸ்பரம் மதிப்பிடுதல்

## மதிப்பிடுதல்

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி ஆசிரியர் மதிப்பீடு செய்யலாம்.

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- முழுமை, அழகு, உருவமைப்பு
- பொருத்தமான வடிவம், நிறம் போன்றவற்றைக் கண்டுபிடிக்கும் திறன்
- முழுமை

## அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- பல்வேறு வகையான இலைகளை பேப்பரில் ஒட்டிச் சேர்த்து படம் வரைகிறார்கள்.

# நான்காம் வகுப்பு

## அலகு – 1 : விளக்கப்படம் (Illustration)

கருத்துகளின் விளக்கப்படம் படைப்புகளின் வளர்ச்சிக்கு மிகவும் பொருத்தமான விளக்கமுறையாகும். கருத்துருவாக்கத்திற்கும் கற்பனைத்திறன் உருவாக்கத்திற்கும் இவ்வாறான செயல்பாடுகளின் பங்கு முக்கியமானதாகும். கதைகளையும் கவிதை களையும் வாசித்து அதிலுள்ள முக்கியமான சூழல்களையே விளக்கப்படமாக்க வேண்டும். கதைகளையும் கவிதைகளையும் இரசிப்பதற்கும் அதிலுள்ள காட்சிகளை கற்பனையாக வரைவதற்கும் இந்த செயல்பாடு உதவுகிறது.

### கற்றல் அடைவுகள்

கதை- கவிதைகளை வாசித்து கருத்துக்கும்- சூழ்நிலைக்கும் ஏற்ப விளக்கப்படம் வரைதல்.

### கருத்து, அறிவு

- விளக்கப்படம் வரைவதற்கு முன் அதைப் பற்றிய கற்பனை தோன்ற வேண்டும்
- கதை, கவிதை போன்றவற்றிலுள்ள முக்கியமான நிகழ்ச்சிகளை விளக்கப் பட மாக வரையலாம்.
- சூழ்நிலைக்கு பொருத்தமான கதாப்பாத்திர அமைப்பும் பின்னனியும் உபயோ கித்து விளக்கப்படம் வரையலாம்.

### கற்றல் செயல்பாடுகள்

- ஒரு சிறிய கதை/ கவிதையின் ஒரு பகுதியை குழந்தைகளிடம் கொடுத்து வாசிக்கக் கூறுதல்
- கதையிலுள்ள முக்கியமான நிகழ்ச்சி எது?
- கதாபாத்திரத்திலுள்ள இந்தக் காட்சி கூறும் செய்தி என்ன?
- கதாபாத்திரத்திற்கு அருகில் இருப்பது யாரெல்லாம்?
- அவர்கள் என்ன செய்கிறார்கள்?
- சுற்றுப்புறத்தில் யாரெல்லாம் இருக்கிறார்கள்? என்னென்ன உள்ளது?
- அந்தக் காட்சியை மனதில் நினைத்துப் பார்க்கவும்.
- நமக்கு அந்தக் காட்சியை வரைந்து பார்க்கலாம்.
- மாணவர்கள் குறிப்பேட்டில் வரைகிறார்கள்
- வெளியிடுதல். கடைசியாக ஆசிரியர் வரைந்ததைக் காட்ட வேண்டும்.

## மதிப்பீடு

ஒருவருக்கொருவர் படங்களைப் பார்க்கிறார்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை உபயோகித்து ஆசிரியர் மதிப்பிட வேண்டும்

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- வெளியிடும் முறை
- சூழ்நிலையைக் கண்டுபிடித்தல்
- கதாபாத்திரங்களை விளக்கும் திறன்
- வண்ணம் தீட்டுதல்
- சூழ்நிலைக்கேற்ப முழுமையான விளக்கப்படம் வரைதல்.

### அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- கதை,கவிதை அடிப்படையாகக் கொண்டு படம் வரைதல்.

# அலகு – 2 : வரையலாம் நிறம் கொடுக்கலாம்

இயற்கையிலுள்ள பொருட்களின் இயல்பு மாறாமல் அவற்றை வரைவதற்கான வாய்ப்பைக் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். அவற்றைப் புரிந்து கொள்ளவும், வரைவதற்கான வாய்ப்பளிப்பது குழந்தைகளின் பல்வேறு திறன்களை வளரச் செய்வதற்கு உதவியாக இருக்கும்

## கற்றல் அடைவுகள்

இயற்கைக் காட்சிகளை வரைந்து நிறம் கொடுத்தல்.

## கருத்து, அறிவு

பல்வேறு பொருட்களைப் பற்றிய அறிவு மாணவர்களுக்குக் கிடைக்க வேண்டும். படம் வரையும் காரணிகளின் இயல்பும்,தனித்தன்மையும் இயல்பாகவே இயற்கையுடன் தொடர்புடையதாகும். இயற்கையிலுள்ள பொருட்களுக்கு வெவ்வேறான உருவமும் , நிறங்களும் வடிவமும் உள்ளது. பொருட்களைப் பிரித்தறிவதற்கு நிறம், வடிவம் போன்றவை உதவுகிறது. சரிவான, தலைகீழான மனிதனால் உருவாக்கப்பட்ட பொருட்கள் இயற்கையில் காணப்படுகிறது என்ற அறிவு குழந்தைக்கு ஏற்பட வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

***நிலை - 1***

இயற்கையிலுள்ள பொருட்களைப் பற்றிய கலந்துரையாடலும், உற்றுநோக்கலும்

நடைபெறுகிறது.இயல்பாகவே காணப்படும் பொருட்களையும், எதிர்பாராத விதமாகக் காணப்படும் பொருட்களையும் பிரித்தறிதல். அசையாததும், அசைவதும், சிறியதும் பெரியதுமான பொருட்களைத் தரம் பிரித்தல், நிறங்களைப் பற்றிய கலந்துரையாடலும் அறிவும், பட சேகரிப்பு நல்லதென்ற எண்ணம் குழந்தைகளிடம் ஏற்பட வேண்டும். பல்வேறு நிறங்கள் உள்ளதென்ற அறிவு குழந்தைகளிடம் உருவாக வேண்டும்.

***நிலை - 2***

வெளியிலிருந்து சேகரிக்கின்ற, பயன்படுத்தக்கூடிய பொருட்களைச் சேகரித்தல். சேகரித்தப் பொருட்களை வகுப்பறைக்குக் கொண்டு வந்து ஆசிரியரின் உதவியுடன் உற்றுப்பார்த்தல். பகுப்பாய்வும், கலந்துரையாடலும் நடைபெறுகிறது. குழந்தைகள் படம் வரைகிறார்கள். படம் வரைவதற்கு எந்த ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.

வரைந்த படத்தைப் பற்றிய விரிவான கலந்துரையாடல் நடைபெறுகிறது.

- வகுப்பறைக் கண்காட்சி நடைபெறுகிறது.
- மதிப்பிடுதல் நடைபெறுகிறது.
- சீரமைக்கப்படுகிறது
- ஆல்பம் தயாரிக்கிறார்கள்

***நிலை - 3***

- ஆசிரியர்களும் மாணவர்களும் செயல்பாட்டில் ஈடுபடுகிறார்கள்.
- அனுபவங்களைப் பங்கு வைக்கிறார்கள்
- சிறந்தவற்றை மதிப்பிடுகிறார்கள்
- நேரடியாக விவாதிக்கிறார்கள்
- தீர்வுக்கான காரணங்களை உருவாக்குகிறார்கள்
- மூலப்பொருளுடன் வரைந்த படத்தை ஒப்புமைப்படுத்துகிறார்கள்.

***நிலை - 4***

வீட்டைச் சுற்றிக் காணப்படும் பொருட்களைப் பார்த்துப் படம் வரையக் கூறுதல். மதிப்பீடு செய்தல்

## மதிப்பீடு

ஒவ்வொருவரும் படங்களைப் பார்வையிடுதல். பரஸ்பர மதிப்பீடு. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யலாம்

மதிபிபீட்டுக் குறிப்புகள்

- வரைவதற்குப் பயன்படுத்திய பொருட்கள்
- வரைந்த முறை
- பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்தல்.
- உற்றுநோக்கல் திறன்
- உருவ ஒற்றுமை, நிறத்தைப் பற்றிய அறிவு
- சுற்றுப்புறத்துடன் உள்ள தொடர்பு

### அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- சுற்றுப்புறத்தை நேசித்தல்
- கற்றல் வேகமாக நடைபெறுகிறது
- நிறங்களைப் பற்றிய அறிவு பெறுகிறார்கள்.

## அலகு – 3 : முப்பரிமாண வடிவங்கள்

படத்திற்கு நீளமும், அகலமும் இருப்பது போல் சிற்பத்திற்கு கனம் என்ற மற்றொரு அளவும் உள்ளது. சிற்பம் அமைக்கும் போது எல்லாப் பக்கங்களிலுமுள்ள காட்சிகளையும் கற்றலுக்கு உட்படுத்த வேண்டும். சிற்பம் அமைக்கும் போது சிற்பியும் ஊடகமும் பொருளுக்கும் இடையிலுள்ள தொடர்பு மிகவும் உறுதியானதாகும். பொருட்களின் வடிவத்தைப் பற்றிய அறிவு ஏற்படுவதற்கு சிற்ப வடிவமைப்பு உதவுகிறது.

### கற்றல் அடைவுகள்

களிமண், மெழுகு போன்ற பொருட்களைப் பயன்படுத்தி முப்பரிமாணப் பொருட்களை வடிவமைத்தல்

### கருத்து, அறிவு

- சிற்பம் முப்பரிமாண வடிவமுள்ளதாகும்.
- சிற்பம் அமைப்பதற்குப் பொருளின் நான்கு பக்க அறிவு அல்லது உற்றுநோக்கல் தேவையாகும்.
- சிற்பம் அமைப்பதற்கு களிமண், தடி, உலோகம் போன்ற பரம்பரைப் பொருட்களும் ப்ளாஸ்டர் ஆப் பாரிஸ், பேப்பர் பல்ப், மெழுகு, பைபர் முதலிய நவீனப் பொருள்களையும் பயன்படுத்தலாம்.
- சிற்பம் உருவாக்குவதற்கான பொருளைப் பக்குவப்படுத்துதல் மிகவும் முக்கியமானதாகும்..

### கற்றல் செயல்பாடுகள்

- பொருட்களை வரிசைப்படுத்துகிறார்கள்
- செய்ய நினைக்கும் சிற்பத்தின் படம் வரைதல்
- சிற்பம் அமைப்பதற்கான பொருளைத் தயாரித்தல்
- களிமண், மைதா முதலிய பொருட்களை எண்ணெய் ஊற்றி குழைத்து பக்குவப்

படுத்த வேண்டும்.

- சிற்பம் உருவாக்குதல். சிற்பத்தை எடுத்து மாற்றுவதற்கு ஏற்பக் கட்டியான அட்டைக்கு மேலாகவோ புக்பைண்டிற்கு மேலாகவோ சிற்பம் அமைக்க வேண்டும்.
- சிற்பம் பார்வைக்கு வைக்கப்படுகிறது. சுயமாகவும்/ பரஸ்பரமும் மதிப்பீடு நடத்துதல்.
- பரஸ்பர மதிப்பீட்டிற்குப் பிறகு குறைகளைச் சரிசெய்து முழுமைப்படுத்தவோ அல்லது புதிய சிற்பத்தை உருவாக்கவோ வாய்ப்பளிக்க வேண்டும்.

## மதிப்பீடு

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல்.

- சிற்ப உருவாக்கத்தின் எல்லா நிலைகளையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.
- பொருளைப் பக்குவப்படுத்துதல்
- உருவாக்கும் திறன்
- மூலப் பொருளுடனான ஒற்றுமை

## அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளில் எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- முப்பரிமாணப் பொருட்களை அமைக்கும் திறன் பெறுகிறார்கள்

# அலகு – 4 : கொளாஷ் படங்கள்

படம் வரைவதற்கு உபயோகிக்கும் ஊடகங்களில் ஒன்றாகும் கொளாஷ். உபயோகமற்ற பொருட்களிலிருந்து சிறு பகுதியைக் கிழித்தெடுத்தோ, வெட்டியெடுத்தோ படத்திற்குப் பொருத்தமான நிறங்களுக்கேற்ப ஒட்டி படமாக்குவதே கொளாஷ். உபயோகமற்ற பொருட்களை ஒட்டி மட்டும் தயாரிக்கும் படத்திற்கு செலவு இல்லை.

## கற்றல் அடைவுகள்

கொளாஷ் படங்கள் தயாரித்தல்

## கருத்து அறிவு

- பரம்பரை வழிகள் மட்டுமல்ல படம் வரைவதற்குப் பயன்படுத்துவது.
- செய்தித்தாள்களிலுள்ள வண்ணப்பக்கங்களை கிழித்து ஒட்டி படங்கள் தயாரிக்கலாம்.
- படத்தின் உருவத்தை வரைந்து அதன் மேல் பொருத்தமான வண்ணக்காகி

தங்களைக் கிழித்தெடுத்து ஒட்டி படத்தை முழுமையாக்கலாம்

## திறன்கள்

- படம் வரையும் திறன்
- பொருத்தமான நிறத்திலும், அளவிலும் பேப்பர் துணிகளை வெட்டியெடுக்கும் திறன்.
- கற்பனைத் திறன் உருவாக்குவதற்கான திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- உற்றுப்பார்ப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் ஒன்றிரண்டு கொளாஷ் படங்களைக் கொடுக்க வேண்டும். படம் அமைக்கும் முறையை அறிமுகப்ப டுத்துதல்.
- கருத்திற்கேற்ப படத்தின் கோட்டுப்படம் வரைதல்.
- பொருத்தமான நிறத்திலுள்ள வண்ணக்காகிதத்தை கோட்டுப்படத்திற்கு ஏற்ப வெட்டி ஒட்டுதல்.
- காகிதம் முழுவதும் இந்தச் செயல் தொடர்கிறது.
- கொளாஷ் கண்காட்சி

## மதிப்பீடு

- சுயமதிப்பீடு
- பரஸ்பரம் மதிப்பீடு செய்தல்
- மதிப்பீட்டுக் குறிப்புகள்
- முழுமை
- பொருத்தமான நிறம்
- சுத்தம்
- கோட்டுப்படத்தின் அமைப்புக்கேற்ப கிழித்தெடுக்கும் திறன்

## அடையக்கூடிய கற்றல் திறன்கள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் திறன்களை எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- உபயோகமற்ற பொருட்களைப் பயன்படுத்தி அழகிய படங்கள் வரைய குழந் தைகளால் முடியும்

# அலகு 5 : சுவரொட்டி தயாரித்தல்

கருத்துப் பரிமாற்றத்திற்கும், பிரதிபலிப்பதற்கும் கலையைப் பயன்படுத்துவதே சுவரொட்டி தயாரித்தல். சமூக பிரச்சினைகளுடன் பிரதிபலிக்கவும், ஒரு கருத்தை வெளியிடுவதற்கும் சுவரொட்டியைப் பயன்படுத்தலாம். வெளியிடும் கருத்துக்க ளுக்கேற்ப வாக்கியங்களுக்கும் படத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தே சுவ ரொட்டி தயாரிக்கப்படுகிறது. பொருத்தமான படங்களை வரைந்து வெட்டியொட்டி சுவரொட்டியைக் கவர்ச்சிகரமாக்கலாம்.

## கற்றல் அடைவுகள்

கருத்துக்கேற்ப சுவரொட்டி தயாரித்தல்.

## கருத்து அறிவு

- கருத்துப் பரிமாற்றத்திற்கும் பிரதிபலிப்பிற்குமுள்ள வழிமுறையே சுவரொட்டி
- சுவரொட்டியை ஒரு நிறத்திலோ, பல நிறத்திலோ தயாரிக்கலாம்.
- படங்களை வரைந்து சேர்த்தும், வெட்டி ஒட்டியும் சுவரொட்டியைக் கவர்ச்சி கரமாக்கலாம்.

## திறன்கள்

- கருத்துகளைப் படமாக வரையும் திறன்
- படங்களை வரைந்தும் வெட்டி ஒட்டியும் சுவரொட்டியைக் கவர்ச்சிகரமாக்கும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- அன்றாட நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய பத்திரிக்கைச் செய்திகளைப் பகுப் பாய்வு செய்து கலந்துரையாடலுக்கு உட்படுத்துதல்..
- கருத்துகளை வெளியிடுவதற்காகவும் பிரதிபலிப்பதற்காகவும் முத்திரை வாக்கியங்கள், தலைப்புகளைத் தயாராக்குதல்
- முத்திரை வாக்கியத்தையும் தலைப்பையும் கவர்ச்சிகரமாக்குவதற்காகப் படங்களைக் கண்டுபிடித்தும் வரைந்தும் சுவரொட்டி தயாரிக்கிறார்கள்.
- பொருத்தமான வண்ணம் தீட்டி கவர்ச்சிகரமாக்குதல்.
- தயாரித்த சுவரொட்டியைப் பார்வைக்கு வைத்தல்
- மதிப்பிடுதல் –சுயமதிப்பீடு
- பரஸ்பர மதிப்பீட்டிற்கு வாய்ப்பளித்தல்.

## மதிப்பீடு

- கருத்துப் பரிமாற்றத் திறன்

- பொருத்தமான முத்திரை வாக்கியங்கள் உருவாக்குதல்
- பொருத்தமான படம்
- வண்ணங்களைப் பற்றிய அறிவு, ஒருங்கிணைப்பு
- கவர்ச்சிகரமாக்குதல்

**அடையக்கூடிய கற்றல் அடைவுகள்**

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- குழந்தைக்கு கருத்திற்கேற்ற சுவரொட்டியை தயாரிக்க முடிகிறது.

## ஓவியம் வரைவதில் ஆர்வம் அதிகமுள்ள குழந்தைகளுக்கு மட்டுமான கூடுதல் செயல்பாடுகள்

## அலகு – 6: வாழ்த்து அட்டை தயாரித்தல்

இன்றைய காலகட்டதில் வாழ்த்து அட்டைகளை நாம் ஏராளமாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் சுயமாகத் தயாரிப்பதை விட கடைகளையே அதிகமாக நாடுகிறோம். அதற்கு பதிலாக உயிரோட்டமுள்ள வாழ்த்து அட்டைகளை நாமே சொந்தமாகத் தயாரிப்பதற்கான பயிற்சியை நமது குழந்தைகள் பெற வேண்டும். தனக்கே உரித்தான பாணியையும் வார்த்தைகளையும் பயன்படுத்தி மற்றவர்களால் தயாரிக்க முடியாத தனித்தன்மை வாய்ந்த வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக் கொள்ள இப்பயிற்சியினால் முடியும். வாணிப நிறுவனங்களின் இலாப பசிக்கு ஆட்படாமல் சுயமான கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் உருவெடுக்கும் ஒவ்வொரு வாழ்த்து அட்டைகளே இவ்வுலகில் சிறப்பாக அமையும் என்ற உணர்வு உண்டாக வேண்டும். இச்செயல்பாடு இதை ஒரு கலாச்சாரமாக மாற்றும் விளம்பரமாக இருக்க வேண்டும்..

### கற்றல் அடைவுகள்

வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்கிறார்கள்.

### கருத்து, அறிவு

- வாழ்த்து அட்டைகளைச் சுயமாக தயாரித்தல்
- தேவையான படங்களை ஒட்டவோ, வரையவோ செய்யலாம்.
- கொளாஷ் வாய்ப்புகளைப் பயன்படுத்தலாம்

## திறன்கள்

- வாழ்த்து அட்டைகளைச் சுயமாகத் தயாரிக்கும் திறன்.
- வாழ்த்துச் செய்திகளைக் கண்டுபிடித்து எழுதும் திறன்
- படங்களையும் நிறங்களையும் சேர்த்து வாழ்த்து அட்டைகளைக் கவர்ச்சிகர மாக மாற்றும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- பல்வேறு வாழ்த்து அட்டைகளின் அமைப்பையும் அழகையும் தெரிந்து கொள் ளுதல்.
- வாழ்த்து அட்டைகளை மேலும் கவர்ச்சிகரமாக்க முடியுமா?
- வாழ்த்துச் செய்திகளை எழுதுதல்.
- குறிப்பிட்ட அளவுகளில் அட்டைக் காகிதத்தை வெட்டி எடுத்து வாழ்த்துகளும் படங்களும் அலங்காரங்களும் அமைத்தல்.
- பொருத்தமான நிறம் கொடுத்தல்
- வகுப்பு ஆர்ட் காலரியில் வாழ்த்து அட்டை கண்காட்சி நடத்துதல்

## மதிப்பீடு

- குழந்தைகள் சுயமாக மதிப்பீடு செய்கிறார்கள்
- குறிப்புகள்
- வாழ்த்து அட்டை தயாரித்தல்
- பொருத்தமான வார்த்தைகள், படங்கள், அலங்கார வேலைகள்
- கவர்ச்சி, சுத்தம்.

## அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடையமுடிந்தது?*

- குழந்தைகளால் சொந்தம் நடையில் உயிரோட்டமுள்ள வாழ்த்து அட்டைகளைத் தயாரிக்க முடியும்.

# அலகு-7 : கார்ட்டூன்

சமூகத்தில் மிகவும் புகழ்பெற்றதும் வலிமையுள்ளதுமான பிரதிபலிப்பு ஊடகமே கார்ட்டூன். விமர்சிக்கும் கருத்துகளை நகைச்சுவை உணர்வுடன் சுருக்கமான கோட்டுப் படங்களின் வாயிலாக வாசகர்களிடம் கார்ட்டூண்கள் கொண்டு செல்கின்றன.

கார்ட்டூன் கருத்துகளைச் சிறப்படையச் செய்வது விமர்சனக் கருத்துகளின் ——---எளிமையும் எழுதும் முறையுமாகும். விமர்சனங்களை நகைச்சுவையால் பொதிந்து சுவை படக் கூறும் செயலையே கார்ட்டூன்கள் செய்கின்றன. செய்தித்தாள்களில் அதிக முக் கியத்துவத்துடனும் எலக்ட்ரானிஸ் ஊடகங்களில் சுருங்கிய அளவிலும் கார்ட்டூன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

## கற்றல் அடைவுகள்

கார்ட்டூன் வரைதல்

## கருத்து அறிவு

- எளிமையான பிரதிபலிப்பு ஊடகமே கார்ட்டூன்
- விமர்சனமும், நகைச்சுவையும், கலையும் சேர்ந்ததாகும் கார்ட்டூன்.
- கதாப்பாத்திரங்களை நகைச்சுவையும் ஆச்சரியமும் கலந்து வரைந்ததாகும்.
- குறைந்தளவிலான கோடுகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

## திறன்கள்

- குறைந்தளவிலான கோடுகளை மட்டும் பயன்படுத்தி கதாபாத்திரங்களை வரையும் திறன்.
- எதிலும் நகைச்சுவை உணர்வை கண்டறியும் திறன்.

## கற்றல் செயல்பாடுகள்

- குழந்தைகளுக்குக் கார்ட்டூன் படங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பளித்தல்
- கார்ட்டூன்களின் சிறப்பியல்புகள் என்ன? கலந்துரையாடல்
- மேற்கூறப்பட்ட கருத்துகளை உட்படுத்தியுள்ள கலந்துரையாடல். தொகுப்பு.
- கார்ட்டூன் வரைவதற்கான கருத்துகளைத் தேர்ந்தெடுத்தல்.
- கதாபாத்திரத்தைக் கண்டுபிடித்தல் வரைதல்.
- வரைந்த கார்ட்டூன்களின் கண்காட்சி. தொகுத்துக்கூறுதல்

## மதிப்பீடு

மதிப்பீட்டுக் குறிப்புகள்

- விமர்சனம்
- நகைச்சுவை உணர்வு
- எழுதும் முறை

### அடையக்கூடிய கற்றல் அடைவுகள்

*கீழே கொடுக்கப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை எந்தளவிற்கு அடைய முடிந்தது?*

- கார்ட்டூன் வரைவதற்கான திறன் பெறுகிறார்கள்.

# 7.2



# இசை



# இசை

*முன்னுரை*

அனைத்துக்கலைகளுமே மனதை இனிமைப்படுத்துவதாகும். அந்த மகிழ்ச்சி உலகத்திற்கே விருப்பமானதாக மாறுவதே கலாச்சாரம். இயற்கையையும், மனிதனையும் வேறுபடுத்தி பார்க் காமல் நமக்கு காண்பிப்பது இவ்வாறாகும். அனைத்து உயிரினங்களும் ஒரே போன்று இரசிக் கலாம் என்பதால் இசை என்பது வேறு கலைகளிலிருந்து வேறுபட்டு நிற்கிறது, மனிதர்களின் மனதினை தூய்மையாக்குவதற்கும் மேன்மை நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் முடிகின்ற கலையே இசை. பொதுவான உலக வாழ்கையோடு மனிதனை ஒன்றாகக் காண்பதற்கான பரந்த கண்ணோட்டமும் இசை பராம்பரியத்தின் வழி உருவாகிறது, அதனால் தான் இசையை கற் றல் என்பது தனிநபர் மேன்மைக்கும் சமூக ஒற்றுமைக்கும் அடிப்படையானதாகும்.

சுற்றுப்புறத்தைக்குறித்து தெரிந்து கொள்வதற்கு முன்னரே இயற்கையின் இசை ஒரு குழந்தை யின் உடல்ரீதியிலும், மன ரீதியிலுமான வளர்ச்சிக்கு காரணமாகிறது என்று அறிவியல் பூர்வ மான கற்றல்கள் நிருபிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூட கல்வி காலகட்டத்தில் குழந்தைகளில் ஏற்படும் மன பிரச்சினைகளை இல்லாமலாக்கி மனதை தெளிவுடையதாகவும், அறிவு உடை யதாகவும் மாற்றுவதற்கு இசைக்கல்வியால் முடியும் என்று ஆராய்ச்சிகள் முலம் தெளிவுப டுத்தப்பட்டுள்ளது. இசையை இரசிக்கும் குழந்தை தான் செய்யும் எந்த ஒரு செயலிலும் உட் கொண்டுள்ள தாளத்தை கண்டறிவதன் வழி வாழ்கையையின் உண்மை நிலையைப் புரிந்து கொள்ள முடிகிறது, இந்த ரசிப்புத்தன்மையை மேம்படுத்த சரியான கற்றல் முறை தேவைப்ப டுகிறது. இது அவரவரில் ஒளிந்திருக்கும் திறமையை சுயமாக அறிந்துகொள்வதற்கும் மேம்ப டுத்துவதற்கும் உதவுகிறது, அது குழந்தைகளில் அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையை உருவாக்கவும் அனைத்து பாடங்களையும் ஆர்வத்தோடு விளக்கும் விதம் உற்சாகமுடைய ராகவும் செய்கிறது

மகத்தான இசைப் பாரம்பரியம் நமக்கிருந்தது, இசையை அதனுடைய மிக உன்னதமான இடத் திற்கு உயர்த்திக் காட்டிய பலநபர்கள் நமது நாட்டிலுண்டு, சாதாரண மனிதனின் மனதில் உயிர் தாளமாக இசை இருந்திருந்த ஒரு பாரம்பரியம் நமக்குண்டு, இசையை வாழ்க்கையின் வழி பாடமாக மாற்றிய எத்தனையோ இசைஞானிகளை பெற்றெடுத்த நாடு நம்நாடு. இங்கு தொடர்ச் சியாக நிலை கொண்டிருந்த இசை பாரம்பரியம் நம்மை எப்போதும் ஊக்குவித்துக்கொண்டி ருந்தது. உலக இசையின் அனைத்து நல்ல பகுதிகளையும் உட்கொண்டு மேம்பட்டதே நமது இசை என்பதால் அனைத்துலக வாழ்கையோடு கூடிய அழகுகளை ஏற்றுக்கொண்டதாகும்.

# கற்றல் அடைவுகள்

## ஒன்றாம் வகுப்பு

- இயற்கையிலுள்ள பல்வேறு ஒலிகளை கேட்டு அதுபோலச் செய்கிறார்கள்.
- சப்தங்களை ஒலி உறைவிடங்களின் அடிப்படையில் பிரிக்க முடியும்.
- சாதாரண உரையாடலுக்கும் பாடலுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பிரித்தறிய முடிகிறது.
- குறிப்பிட்ட இடைவேளைகளில் திரும்பத் திரும்ப வரும் அடிகளை கண்டுபிடிக்கவும் வெளியிடவும் செய்தல்
- தெரிந்த பாடல்களை வேகம் கூட்டியும் குறைத்தும பாடுகிறார்கள்.
- தெரிந்த பாடல்களைச் சரளமாக பாடுகிறார்கள்.

## இரண்டாம் வகுப்பு

- இயற்கையிலுள்ள நுட்பமான ஒலி பிரித்தறியவும் சரியாக அதைப்போலவே குரலெழுப்பவும் செய்கிறார்கள்..
- தெரிந்த ஒலிகளை வெவ்வேறான வரையறைகள் உபயோகித்து தரம் பிரிக்கிறார்கள்.
- கதைப் பாடல்களை சூழ்நிலைக்கேற்றவாறு பொருத்தமான ஒலியில் உயர்த்தியும் தாழ்த்தியும், இயல்பாகவும், கதாப்பாத்திரங்களுக்கு ஏற்றவாறும் ஒலி ஏற்றத்தாழ்வுடன் பாடுகிறார்கள்.
- விடுகதைகளையும், பழமொழிகளையும் தாளத்துடன் பாடுகிறார்கள், சொல்கிறார்கள்.

## மூன்றாம் வகுப்பு

- சூழ்நிலைக்கும், கருத்துக்கும் பொருத்தமான இயற்கையிலுள்ள ஒலியை தேர்ந்தெடுத்து வெளியிடமுடிகிறது.
- தெரிந்த பாடல்கள், வட்டாரப் பாடல்கள், வாய்சிந்துகள், குழந்தைப் பாடல்கள் போன்றவற்றை தாளத்திற்கேற்ப அசைவுடன் வேகமாகவும் மெதுவாகவும் பாடுகிறார்கள்.
- ஒரே மாதிரியான பாட்டுகள், கவிதைகளை கேட்டு சேர்ந்து பாடவும் தாளம் போடவும் செய்கிறார்கள்.
- பாடல்களை ஏற்ற இறக்கத்தோடு பாடும் போது ஏற்படும் இரசிப்புத் தன்மையைப் புரிந்து கொள்கிறார்கள்

## நான்காம் வகுப்பு

- பாடலை இசையுடன் கேட்டு அதன் பின்னனியை புரிந்து கொள்கிறார்கள்
- இயற்கையிலுள்ள ஒலிகளுக்கு பொருத்தமான இசைக்கருவிகளின் ஒலிகளைக் கண்டுபிடித்து வாய்மொழியாக விளக்கவும் அதைப்போலவும் செய்கிறார்கள்
- சலனத்தின் வேகத்திற்கு ஏற்ப எளிய இசைக்கருவிகளில் இசைக்கும் போது சலனமும் தாளமும் எந்தளவிற்கு பொருந்துகிறதென்று பிரித்தறிதல்
- ஒரே சந்தர்ப்பத்தில் பிரதிபலிக்கின்ற வெவ்வேறு இராகத்திலும், தாளத்திலுமுள்ள இசையைக் கேட்டு இராகம் தாளம் இவற்றின் வித்தியாசத்தைப் பிரித்தறிகிறார்கள்.
- கேரளக் கலைகளில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளை தரம் பிரிக்கிறார்கள்.
- நேர வித்தியாசமுள்ளவற்றைக் கணடறிந்து பாடுகிறார்கள்
- வேகத்தை அதிகரித்தும் குறைத்தும் தெரிந்த பாடல்களை எளிய இசைக்கருவிகளில் இசைத்துப் பாடுகிறார்கள்.

# ஒன்றாம் வகுப்பு

## அலகு – 1 : பார்த்ததும் கேட்டதும்

நாள்தோறும் சுற்றிலுமுள்ள எத்தனை எத்தனையோ ஒலிகளைக் கேட்கிறோம். கிளிகளின் சத்தம், ஆறின் சத்தம், கடலின். . . . . காற்றின் சத்தம். இயற்கை சத்தங்களை மட்டுமின்றி நாம் மோட்டார் வாகனங்களின் சப்தம், புகை வண்டியின் சப்தம் தொழிற்சாலை சைரன் முழங்கும் சப்தம். . . போன்ற செயற்கைச் சப்தங்களும் நம்மைச் சுற்றி உள்ளது. சில சப்தங்களைக் கேட்டு நாம் இன்பம் கொள்கிறோம். சில சப்தங்கள் வெறுப்பைத் தருகிறது. இன்பம் தரும் சப்தமே சங்கீதத்தின் முதல் பாடமாகும். இந்த இனிய சப்தம் பயங்கர சப்தத்திற்கும், உரத்த ஓசைக்கும் இடையிலிருந்தும் கூட இனிய சப்தத்தை (நாதத்தை) வேறுபடுத்திக் காட்டுகிறது.இந்த அறிவைக் குழந்தைகளிடம் கொண்டு செல்வதே இந்த அலகின் நோக்கமாகும்.

### கற்றல் அடைவுகள்

இயற்கையிலுள்ள பல்வேறு ஒலிகளைக் கேட்கவும் அதைப்போன்று ஒலி எழுப்பவும் செய்கிறார்கள்.

### கருத்து, அறிவு

- இயற்கையில் பல்வேறு ஒலிகள் உள்ளன.
- இயற்கையின் தனித்தன்மையை நிலைநிறுத்துவதில் ஒலிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- சப்தங்களை போலச் சொல்ல முடியும்.

### செயல்பாடு

- சுற்றிலுமுள்ள ஒலிகளை கேட்கவும், பிரித்தறியவும் வாய்ப்புள்ள பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.
- பதிவு செய்த ஒலியைக் கேட்டு, பொருள், சந்தர்ப்பம் போன்றவற்றை பிரித்தறிகிறார்கள்.

### மதிப்பீடு

- ஒலிகளைக் கேட்ட பின் அவை பற்றிய கேள்விகளுக்கு பதில் கூறுகிறார்கள்
- ஒலிகளைப் போலச் சொல்வதைப் பரஸ்பரம் மதிப்பிடுகிறார்கள்.

## உள்ளடக்கம்

- இயற்கையில் பலவிதமான ஒலிகள் உள்ளன.
- தாவரங்களின், உயிரினங்களின், இயந்திரங்களின், மோட்டார் வாகனங்களின்...
- இயற்கையின் தனித்தன்மையை நிலைநிறுத்துவதில் ஒலிகள் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன.
- இயற்கை சப்தங்களை உற்றுநோக்கவும், பிரித்தறியவும், அதைப் போலச் சொல் வதற்கும் குழந்தைகளைத் திறமையுள்ளவர்களாக மாற்றுவதற்கான கற்றல் செயல் பாடுகளே இவ்வலகில் திட்டமிடப்பட்டுள்ளன.

## கற்றல் செயல்பாடுகள்

இயற்கையிலுள்ள உயிரினங்களும், தாவரங்களும் மையக் கருத்தாக வரும் பாடல் களை குழந்தைகளுக்கு அறிமுகம் செய்தல். ஆசிரியர் பாடிக்காட்டலாம். இசைத் தட்டுகளை கேட்கச் செய்யலாம்.

பாடல்களுக்கு உதாரணம்

1. காக்கைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
காட்டிலெங்கும் பொன்னோணம்
சுந்தரி காக்கைக்குச் செல்லம்செல்லம்
பொன்னிளம் வெயிலில் கல்யாணம்

2. காகமே காகமே கூடெங்கே
கூட்டினுள்ளே குஞ்சுண்டோ?
குஞ்சினிரை கொடுக்காவிடில்
குஞ்சு கிடந்து கரைந்திடுமே

2. கூகூ கூகூ ரயிலுவண்டி
கூவிப் பாயும் ரயிலுவண்டி
நிலக்கரி தின்னும் ரயிலுவண்டி
நீரையுண்ணும் ரயிலுவண்டி

4. காட்டுக் குயிலின் கூடினுள்
காகம் முன்னொரு முட்டையிட
கூடறியாது காடறியாது
குயிலுமறியாதே

5. வண்டி வண்டி உன்னைப் போலே
வயிறிலெனக்கும் தீயே
ஓடி நடந்தால் இரண்டுபேர்க்கும்
கையில் வருவது காசே

6. கீயாம் கீயாம் குருவி நானோர்
கீயாம் கீயாம் குருவி
காலொடிந்த குருவி நானோர்
கீயாம் கீயாம் குருவி....

7. ஜக்கு ஜிக்கு ஜக்குஜிக்கு ஜக்குஜிக்கு
ஜகஜிகு ஜகஜிகு ஜகஜிகு ஜகஜிகு
தெற்கிலிருந்து வடக்கே சீக்கிரம் சீக்கிரம்
வண்டீ வண்டீ ரயிலுவண்டீ– ஆகா ரயிலுவண்டீ
பயணம் செய்ய ஆசையாய் சினேகிதர் சேர
காத்து காத்து காத்து நின்றோம் ஸ்டேஷனில் நாமே

8. தாய்க்கோழி முட்டையிட்டு கொத்தி விரிந்தன
ஒன்று ரண்டு மூன்று நாலு அஞ்சு குஞ்சுகள்

- தேர்ந்தெடுத்த பாடல் வரிகளை ஆசிரியர் குழந்தைகளிடம் பாடிக்காட்டுகிறார். சிறு சிறு பகுதிகளாக ஆசிரியர் பாடுவதைக் கேட்டு குழந்தைகள் பாடட்டும்.

- ஆசிரியர் பாடுகிறார். அதைக்கேட்டுக் குழந்தைகள் பாடுகிறார்கள்.
- இராகமாக பாடும் குழந்தைகளைக் கண்டுபிடித்து அவர்களின் தலைமையில் குழந்தைகளை பாட வைத்தல்

***ஆசிரியரின் கேள்விகள்***

- நாம் பாடிய பாடலில் உங்களுக்குத் தெரிந்த உயிரினங்கள் எவையெல்லாம்?
- மோட்டார் வாகனம் மற்றும் இயந்திரங்களின் பெயர்களைக் கூறவும்?
- கேட்டுப் பழகிய வேறு சப்தங்கள் எவையெல்லாம்? உங்களுக்குப் பிடிக்க காரணம்? பிடிக்கவில்லையெனில் காரணம் என்ன?
- கேட்ட போது மனதிற்கு இன்பம் அளித்ததையும் இன்பம் அளிக்காததையும் பிரித்துக் கூற முடியுமா?
- உங்களால் எதையெல்லாம் கேட்டதைப் போல் செய்ய முடியும்? செய்து காட்டலாமா?

## மதிப்பீடு

- பாட்டு பாடும்போதும், சொல்லும் போதும் குழந்தைகளை மதிப்பீடு செய்யலாம்
- இராகத்தில் சேர்ந்து பாடும் திறன்
- வெளிப்படுத்துவதற்கான விருப்பம்
- தலைமைப் பண்பு
- ஆசிரியர் கேட்ட கேள்விகளின் அடிப்படையில் குழந்தைகளை மதிப்பிடலாம்.

## உற்றுநோக்கல்

- தெளிவாகவும், சரியாகவும் பதில் சொல்லுதல்.
- சரியான தெளிவான குரல் ஏற்றத்தாழ்வு.

## மேற்பார்வை

- வயலார், பி. பாஸ்கரன் ஓ. என். வி. போன்றோரது சினிமாப் பாடல்கள் தொகுப்பு(இயற்கையுடன் ஒன்றியவை) குழந்தைப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் குழந்தைப் பாடல்களின் தொகுப்பு( மழலைப் பாட்டுகள், குழந்தைப் பாடல்கள்)
- ஒலிகள் வேறுபட்டதென்றும், வேறுபட்ட ஒலிகளின் சங்கமமே இயற்கை யென்று பிரித்தறிவதற்கு குழந்தைகளை திறமையுள்ளவர்களாக்க வேண்டும். ஒலிகளை கேட்டு போல கூறுவதற்கான திறமையுள்ளவர்களாக்க வேண்டும்.
- வரிகளை தவறாது சொல்லவும் பாடவும் செய்யும் போது ஏற்படும் வித்தியாச மான அனுபவங்கள். ஒலியில் வரும் ஏற்றத் தாழ்வுகளைக் குழந்தைகளிடம் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

# அலகு – 2 : காற்றாக...., மழையாக....

ஒலிகோலகாலங்களுக்கிடையில் இனிமையான ஒலி உறைவிடங்கள் எதுவென்று தேடல் ஆனந்தமளிப்பதாகும். காற்றிற்கும், மழைக்கும், நீரோட்டத்திற்கும் ஒரே தன்மையல்ல உள்ளது. மெல்ல வருடி நம்மை துயிலெழுப்பும் இளங்காற்று சில சமயங்களில் பயங்கர சப்தத்துடன் கொடுங்காற்றாக மாறி நம்மை பயப்படுத்துகிறது. இளங்காற்றின் மெல்லிய ஓசையல்ல கொடுங்காற்றுக்கு. அமைதியான நீரோடையின் சப்தமல்ல அலையடித்து உயரும் கடலின் சப்தம்...

## கற்றல் அடைவுகள்

ஒலிகளுடையவும் ஒலி உறைவிடங்களுடையவும் அடிப்படையில் வேறுபாடுகளையும் தனித்தன்மைகளையும் பிரித்தறிகிறார்கள்.

## கருத்து, அறிவு

- உன்னிப்பாகக் கவனித்தால் ஒலி உறைவிடங்கள் எதுவென்று கண்டுபிடிக்க முடியும்.
- தன்னைச் சுற்றியுள்ள ஒலி உறைவிடங்களைப் பற்றிய அறிவு. காற்று, மழை, பறவை, மிருகங்கள், வாகனங்கள்.

## செயல்பாடு

- குழந்தைப் பாடல்கள், பதிவு செய்த ஒலிகளின் எதார்த்தமான உறைவிடங்களைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள்.
- கவனித்த ஒலிகளை தரம் பிரிக்கிறார்கள்.

## மதிப்பீடு

- கண்டுபிடித்த ஒலி வேறுபாடுகளை மதிப்பீடு செய்கிறார்கள்

## உள்ளடக்கம்

இயற்கையிலுள்ள பல்வேறு ஒலிகளை உன்னிப்பாகக் கேட்டு அவற்றை வேறுபடுத்தி வெளியிடத் தெரிய வேண்டும். நாம் கேட்கும் சில ஒலிகளை இரசிக்க முடியாது. மிகவும் உன்னிப்பாக கேட்டால் மட்டுமே சில நுண்ணிய ஒலிகள் இரசிக்கக் கூடியதாகவும் அளவற்ற ஆனந்தம் தருவதாகவும் இருக்கும். அவற்றின் உறைவிடங்களைக் கண்டறியவும், தனித்தன்மைகளைப் பிரித்தறியவும் சங்கீதம் இயற்கையானதென்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

1 ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... ஸ்... காற்று வீச
டப்... டப்... டப்... டப்... டப்... டப்... டப்... இடி இடிக்க
சற... சற...சற.. சற... சற... சற... சற... மழை பெய்ய
கள... கள... கள... கள.... கள... கள... கள... நதி பாய
இலையில் மழை பெய்ய... திண்ணையிலும் மழை பெய்ய...
இதயமதில் மழை பெய்ததெ....

2 காற்று சொன்னது ஃபூ... ஃபூ... ஃ பூ...
போகிறேன் நான் மேலே
காற்றறைந்தது கூ.... கூ... கூ...
போகிறேன் நான் கீழே
என்னடா காற்றே கலிதுள்ளினா
மரமுரை செய்தது கூ... கூ... கூ...
உன்னை வீழ்த்துவேன் கொடுங்காற்றாய்
உன்னுடலொடியும் உன்னிலை பொழியும்
உன்னிலை பறக்கும் நானுண்டாயின்

3 குரோம்... குரோம்... குரோம்... குரோம்.... தவளை
மியாவ்... மியாவ்.... மியாவ்... பூனை
கூ... கூ.... கூ.... கூ.... கூ..... குயிலம்மா
கலபில கலபில கலபில கலபில

- ஆசிரியர் பாடுவதைக் கேட்டு குழந்தைகள் திரும்பப் பாடுகி றார்கள்
- தனியாகவும் குழுவாகவும் சேர்ந்து பாடுவதற்கு ஆசிரியர் உதவுகிறார்
- குழந்தைகளின் விருப்பத்தைக் கண்டறிந்து பாடுவதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.
- இப் பாடல்களிலிருந்து சப்த வேறுபாடுகளையும் ------ பிரித்தறிந்து வெளியிடும் திறன் பெறுகிறார்கள்.

### *செயல்பாடு -1*

- மேலே கொடுக்கப்பட்டுள்ள பாடல்களிலிருந்து ஏதாவது ஒரு பாடலை தேர்ந் தெடுக்கவும்.
- ஆசிரியரும் குழந்தைகளும் சேர்ந்து பாடுகிறார்கள்.
- இந்தப் பாடல்களில் கூறப்பட்டுள்ள உயிரினங்கள்/ சப்த உறைவிடங்கள் போன்ற வற்றின் சப்தவிசேஷங்கள் என்னவென்று ஆசிரியரின் உதவியுடன் வெளி யிடுதல்.

*குறிப்புகள்*

- மிருதுவானது
- இன்பமானது/ இல்லாதது
- நீளம்கூடியது/ சிறியது
- தொடர் மதிப்பீடு
- கட்டம் கட்டமாக

### *செயல்பாடு -2*

பழக்கமான சுற்றுப்புறங்களில் இருந்து கேட்ட. அனுபவித்த. சப்த வேறுபா டுகளைத் தேர்ந்தெடுத்துத் தனித்தன்மைகளைக் கண்டுபிடித்தல்.

*உதாரணம்-1*

☐ காற்று

- மின்விசிறி சுற்றும் போது உண்டாகும் சப்தம்
- புத்தகங்களைத் திருப்பும் போது ஏற்படும் சப்தம்
- மரங்களுக்கிடையில்/மூங்கில் காடுகளில் காற்று வீசும் உண்டாகும் சப்தம்.
- விசிறி வீசும் போது உண்டாகும் சப்தம்.
-
-

*உதாரணம்- 2*

☐ தண்ணீர்

- தூரத்தில் மழை பெய்யும் சப்தம்
- சாரல் மழை பெய்யும் போது கேட்கும் சப்தம்
- தண்ணீர் கொதிக்கும் போது கேட்கும் சப்தம்.
- குழாயிலிருந்து தண்ணீர் விழும் சப்தம்
- ஒழுகும் தண்ணீரின் சப்தம்

### மதிப்பிடுதல்

*குழந்தைகள் பாடும்போது மதிப்பிடுதல்*

- பாடுவதற்கான விருப்பம்
- தலைமைப் பண்பையும், திறமையும் மதிப்பிடுதல்

*கேள்விகளிலிருந்து*

- நன்றாகப் பாடுபவர்
- மிக நன்றாகப் பாடுபவர்

## அலகு 3 : பாடலாம்... கூறலாம்..

கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழி இன்றியமையாததாகும். இயற்கையிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் அவர்களுடைய இயல்பான சாதாரண உரையாடலில் அதிக ஈடுபாடு ஏற்படும் போது அன்றாட வாழ்க்கை கலையம்சம் நிறைந்ததாகும். பல்வேறு காரியங்களை எளிதில் கூறவும் ஏற்றுக்கொள்ளவும் இசை தொடர்பான தலையீடுகள் தேவையாகும். இயல் பான உரையாடல்களில் இராகமும் தாளமும் சேரும் போது அன்றாட வாழ்க்கை சங்கீத மாகிறது.

### கற்றல் அடைவுகள்

உரையாடலையும் பாடலையும் பிரித்தறிகிறார்கள். குறிப்பிட்ட இடைவேளைகளில்

திரும்பத் திரும்ப வரும் தாளத்திற்கேற்ப சரியாகப் பாடுகிறார்கள்.

## கருத்து அறிவு

உரையாடலில் இருந்து பாடலின் சப்த ஒழுங்கமைப்பு வேறுபட்டதாகும். சரியான நேரங்களில் திரும்பத் திரும்ப வரும் அடிகளுக்கேற்ப வரிகளைச் சிந்துகளை வரிசைப்படுத்துதல். அடிகளின் வேறுபாட்டைப் பிரித்தறிதல்.

## செயல்பாடு

- தெரிந்த கதைப் பாடல்கள்/ கதைகளைத் தேர்ந்தெடுத்தல்
- குழந்தைகளின் வெளியீடு
- இதே பாடல்கள், கதைகளை பொருத்தமான ஒலி ஒழுங்கமைப்புடன் வெளியிடுதல்
- குழந்தைகள் திரும்பக் கூறுதல் ,பாடுதல்
- குறிப்பிட்ட கால இடைவெளியில் கைதட்டுதல்/ கால் அசைவுகளின் துணையுடன் கதைகள், பாடல்களை வெளியிடுதல்.

## மதிப்பீடு

- வெளியீட்டு பாவனை
- வெளியீட்டுத் திறன்
- அசைவுகளுக்கேற்ப வரிகளை சேர்த்துப் பாடுதல்

## உள்ளடக்கம்

சாதாரணமான நிகழ்ச்சிகளில் பொருத்தமான ஒலி வித்தியாசங்கள் சேரும் போது அவை பாடலாகிறது. பாடுதல் என்பது கருத்தை உட்கொள்வதற்கும் பகிர்ந்தளிப்பதற்கான சிறந்த ஊடகமாகும். உரையாடலுக்கும், பாடுவதற்கும் பாவனை அவசியமாகும். ராகமும், தாளமும் இணையும் போது பாடுதல் முழுமையாகிறது. உரையாடலுக்கு சரியான கால ஒழுங்கமைப்பும், ஒலி ஒழுங்கமைப்பும் கடைபிடிக்க வேண்டிய தேவையில்லையென்றாலும், பாடுதலில் இவை சரியாக பின்பற்றப்பட வேண்டும். சாதாரணமாக உரையாடலில் ஒலி வித்தியாசங்களை புரிந்து கொள்ளவும் வேண்டுமென்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

குழந்தைகள் முன் வகுப்புகளில் படித்த சிறுவர் இதழ்களில் வெளியிட்ட குழந்தைகளுக்குத் தெரிந்த கதைப்பாடல்களை பாடுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். தனித்தனியாகவோ ஒன்றிரண்டு குழந்தைகள் சேர்ந்தோ பாடலாம்.

(பாடும் போது சிறந்தவற்றை ஆசிரியர் கற்பித்தல் கையேட்டில் பதிவு செய்ய வேண்டும்)

நல்ல கதைப் பாடலைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பைக் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். குழந்தைகள் அவர்களுடைய தரத்திற்கேற்ப மதிப்பீடு செய்து கருத்துகளை வெளியிடும் போது ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு குழந்தைகளிடமிருந்து அதிகமான கருத்துகளை சேகரிக்க முடியும்.

*மதிப்பீடு*

- பிஜூவும், நிஷாவும், சந்தியாவும் என்னென்ன கதைப்பாடல்களை பாடினார் கள்? உங்களுக்கு பிடித்தது எது?
- பிஜூவின் கதைப் பாடலை விரும்பக் காரணம் என்ன?
- சந்தியாவின் கதைப்பாடலிலிருந்த குறை என்ன?
- குழந்தைகள் செல்லும் பதில்கள், கலந்துரையாடல் மூலம் அவர்கள் கூறும் கருத்துகள் போன்றவற்றை ஆசிரியர் தெளிவுபடுத்தி எளிமையாக மீண்டும் கூறவேண்டும்.
- ஒரு புதிய கதைப்பாடல் அல்லது சிந்து பாடிய கதைப் பாடலை நாம் அனை வரும் ஒன்றாக பாடுவோம்?

## *செயல்பாடு -2*

- ஆசிரியர் கதைப்பாடலின் சிறு பகுதியை பொருத்தமான ஒலி ஒழுங்கமைப் போடு பாடுதல்..
- குழந்தைகளைத் திரும்ப பாடக் கூறுதல்
- இதே கதைப் பாடலை முன்னர் பாடிய குழந்தையின் தலைமையில் பாடுதல்.
- புதிய கதைப்பாடல்களை அதிகமாக சேகரிக்க வேண்டும்.
- சிறுவர் இதழ்கள், பதிப்பகங்களை அறிமுகப்படுத்தலாம்.

## *செயல்பாடு -3*

- சரியான இடைவேளைகள் கடைபிடித்து 1/2/3/4 என்று கூறுதல். இரண்டு மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறிய பிறகு சேர்ந்து பாடுமாறு குழந்தைகளிடம் சொல்லவேண்டும். நான்கோ ஐந்தோ முறை திரும்பத் திரும்ப கூறிய பின்னர் குழந்தைகள் மட்டும் பாடுகிறார்கள். சரியான இடைவேளைகள் மனதில் பதிந்த பினனர் குழந்தைகளிடம் கைதட்டக்கூற வேண்டும். ஆசிரியர் மட்டும் 1/2/3/4 என்ற காலஇடைவெளிகளில் கூறுகிறார், 4 ற்கு மட்டும் கைதட்டக் கூற வேண்டும்.

- நான்கோ, எட்டோ முறை திரும்பத் திரும்பக் கூறிய பிறகு ஆசிரியர் 1/2/3/0– மட்டும் சொல்லவும் 4 என்று சொல்லாமல் கைதட்ட வேண்டும். இந்த செயல் பாடு 2 ற்கும் 4 லும் ஆகிறது. பின்னர் 1–ற்கும் 2–ற்கும் 3–ற்கும் 4–ற்கும் கைதட்ட வேண்டும்.

- இந்த வேகத்தைக் கவனத்தில் கொண்டு அறிமுகமான ஒன்றிரண்டு பாடல்களை ஆசிரியர் தேர்ந்தெடுத்துத் தாளத்திற்கேற்பப் பாடச் சொல்கிறார். பின்னர் கைதட்டிப் பாடச் சொல்லுதல்.

- பின்னர் குழந்தைகளுக்குத் தெரியும் பாடல்களை கைதட்டிப் பாடுவதற்கு வாய்ப்பளித்தல்

## மதிப்பீடு

*செயல்பாடு- 1*

- சுதந்திரமாகப் பாடுவதற்கான வாய்ப்பு கொடுத்த போது கூட்டமின்றி தனியாக பாடுபவர்களை ஆசிரியர் புரிந்துகொள்கிறார். சிறந்த மதிப்பிடலின் வாயிலாக பிற குணங்களையும் மேம்படுத்தலாம்.
- பரஸ்பர மதிப்பீட்டின் வாயிலாக குழந்தைகள் கூறும் கருத்துகளைப் புரிந்து கொண்டு அவர்களின் இரசனைப் பண்பைப் பற்றி ஆசிரியர் கூடுதலாக அறிந்து கொள்ளலாம்.

*செயல்பாடு- 2*

- ஆசிரியரின் உதவியுடன் சிறப்பாக பாடுபவர்களைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும்.
- பங்கெடுப்பதற்கான விருப்பத்தையும்/ மனப்பாங்கையும் ஊக்குவிக்க வேண்டும்

*செயல்பாடு- 3*

- சரியான இடைவேளைகளை கவனத்தில் கொண்டு எண்ணுபவர்களும் தாளம் பிடிப்பவர்களும் தாளஅறிவில் முன்னிலை வகிப்பார்கள்.
- இவர்கள் பாட்டுக்கு ஏற்பவும், சரியாகவும் கைதட்டுவார்கள்.

*குறிப்புகள்*

- கூச்சமின்றி பாடும் திறன்
- வெளியிடும் திறன்.
- இரசனை
- மனப்பாங்கு
- தாள ஒழுங்கமைப்பு
- தாளத்துடன் பாடுதல்
- தாள அறிவு

## அலகு – 4 : பாடலாம்... பாடி ரசிக்கலாம்

எந்தப்பாடலும் புகழ்பெறுவது அந்தப் பாடலைத் திரும்பத் திரும்ப இரசிப்பதாலா கும். முறையான ஆவர்தனம்/ பயிற்சி என்றால் சாதகம் ஆகும். தெரிந்த பாடல் களை பயிற்சி செய்வதன் மூலம் சிறப்பாக பாடும் திறனும் தன்னம்பிக்கையும் குழந் தைகளுக்கு கிடைக்கும்.

### கற்றல் அடைவுகள்

தெரிந்த பாடல்களைச் சுதந்திரமாக பாடுதல். பாடல்களை வேகமாகவும், மெது வாகவும் பாடுதல்.

### கருத்து, அறிவு

- தெரிந்த பாடல்களைச் சுதந்திரமாகப் பாடுதல்
- ஒரே பாட்டை வேகமாகவும், மெதுவாகவும் பாட முடியும்

### செயல்பாடு

- பாடலைப் பாடுகிறார்கள்.
- பாடலின் உண்மையான இராகத்தைக் கேட்கச் செய்தல்
- அதைப் போலவே சிறப்பாகப் பாட முயற்சி செய்தல்.
- பாடுவதற்கான வாய்ப்பளித்தல்.
- பாடல்களையும் அதிலுள்ள சிந்துகளையும் வேகமாகவும், மெதுவாகவும் குரலை உயர்த்தியும், தாழ்த்தியும் பாடும் முறையைக் கவனித்தல்.
- புரிந்துகொண்டு அதைப் போல் பாடுதல்.
- பாடும் போது ஏற்படும் சப்த ஏற்றத் தாழ்வுகளைப் பற்றிக் கலந்துரையாடுதல்

### மதிப்பீடு

- சுதந்திரமாகப் பாடுவதை மதிப்பீடு செய்தல்
- வேகத்தைக் கூட்டியும், குறைத்தும் பாடும் திறன்
- பாட்டிற்கும் தாளத்திற்கும் உள்ள ஒற்றுமை.

### உள்ளடக்கம்

எல்லாப் பாடல்களுக்கும் பொதுவான ஒரு வேகம் உள்ளது. பயிற்சிக் காலத்தில் ஸ்லோ டெம்போ தொடர்ந்து அந்தப் பாடலில் கூறப்பட்டது போல் வேகத்தில் பாட வேண்டும். இவ்வாறான பயிற்சியைப் பெற்று வரும் குழந்தைகளைச் சுதந்திரமாகப் பாடும் திறமையுள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

### கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- குழந்தைகளுக்குத் தெரிந்த, விருப்பமான பாடலைப் பாடுவதற்கான வாய்ப்பளிக்க வேண்டும். ( பாடுதல்– பரஸ்பர மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்)
- பாடிய பின்னர் குழந்தைகள் பாடிய பாடல்களின் சரியான இராகத்தைக் கேட்பதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்
- (ஆசிரியர் பாடிக் காட்டலாம். சி.டி யின் வாயிலாக கேட்க வைக்கலாம்)
- குழந்தைகள் சரியான பாடலைக் கேட்ட பின் அவர்கள் பாடியதை மேம்

படுத்த மீண்டும் பயிற்சியில் ஈடுபடலாம். (ஆசிரியரின் மேற்பார்வையில்.)

- சங்கீதம் கேட்பதற்கான ஏராளம் வாயப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- பயிற்சிக்குப் பிறகும், உண்மையான பாடலைக் கேட்ட பிறகும் மீண்டும் பாடு வதற்கான வாய்ப்பளிகக வேண்டும். இரண்டு முறையும் பாடும் போது ஏற்ப டும் வித்தியாசத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.
- குழந்தைகளிடம் எளிய கலந்துரையாடல் ( இரண்டு முறை பாடிய பிறகு).
- சங்கீதத்தை கேட்பதனால் அவனிடம் சங்கீதத் திறனும்-----வளரும்.

*செயல்பாடு -1*

- குழந்தைகளுக்குத் தெரிந்ததும், எளியதுமான பாடல்களைக் குழந்தைகளுடன் கலந்துரையாடி ஆசிரியர் தேர்ந்தெடுக்க வேண்டும்.

*உதாரணங்கள்-*

1 தன்னனம் தன்னனம் தாளத்திலாடி
மந்தாரைக் கொம்பிலோடூஞ்சாலிலாடி
ஒன்றாயின ரண்டு செல்லப் பைங்கிளிகள்
ஒன்றாம் குன்றின் செல்லங்கள்
காட்டின் மழலைகள்

2 அய்யன் கொம்பில்- தெய்யந் தாரோதெய்
அம்ம வரம்பில்- தெய்யந்தாரோ தெய்
ஆகாயக் கூட்டம்- தெய்யந்தாரோ தெய்
அய்யன் கொம்பிலம்ம வரம்பில் ஆகாயக் கூட்டம்
தெய்யந்தாரோ. தெய்யந்தாரோ, தெய்யந்தாரோ தெய்
..........................................................................................

3. அணில்கண்ண வா குமாரா
சிநேகிதம் கூடிட வா
.......................................................

- இத்தகைய பாடல்களைக் குழுவாக மெதுவாகப் பாடவைத்தல்.
- பல்வேறு குழுக்களுக்கு வாய்ப்பளித்தல்.

## மதிப்பீடு

*குறிப்புகள்*

- பாடுதல் திறன்
- வேகமாகவும், மெதுவாகவும் பாடும் போதுள்ள தாள அமைப்பு
- பாடும்போதுள்ள அங்க அசைவுகள்

# இரண்டாம் வகுப்பு

## அலகு – 1: இயற்கையின் சத்தம்

இயற்கை சத்தங்களின் ஒருங்கிணைப்புகள் அழகானதும் ரம்மியமானதும் இசைப் படைப்புகளுமாக உணரமுடிகிறது. குறிப்புகளோ ஒழுங்கோ இல்லாமல் உயிரினங் களும் இயற்கையும் நமக்கு ஒழுங்கு செய்து தருகின்ற இசைப்படைப்புகளுக்கு மெதுவாக வளரச் செய்கிறது. ஒலி இணைப்புகளுக்கிடையே நேரம் குறைந்தோ கூடியோ கேட்கின்ற அனைத்து ஒலிகளும் கேட்பதனுடையவும் இரசிப்பதினுடை யவும் திறனை கூட்டுகிறது. இத்தகைய ஒலிகளை நுட்பத்துடன் உற்றுநோக்குவதற் கும் அவற்றின் அளவற்ற வாய்ப்புகளை புரிந்து கொள்வதற்கும் தேவையான செயல் பாடுகளை கொடுப்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

### கற்றல் அடைவுகள்

- இயற்கை ஒலிகளை கூர்மையாகப் பிரித்தறிகிறார்கள்.
- அதே போல சரியாகப் பாடுகிறார்கள்

### கருத்து அறிவு

- ------ஒலிகளை உன்னிப்பாக கவனிக்கிறார்கள்
- பல நேரங்கள், பலவிதத்திலுள்ள ஒலிகள்
- இன்பமான ஒலிகள் அல்லாதவை
- இன்பமான சப்தங்கள் ஒன்று சேருதல், இசைப் படைப்பாற்றலின் அடிப்படை

### செயல்பாடு

- பலவிதமான ஒலிகளை உற்றுகவனிக்கிறார்கள். அதைப்போல செய்கிறார்கள்.
- பல நேரங்களில் கேட்கும் சப்தங்களை உற்றுகவனித்தல். வெளியிடுதல்
- வேறுபாடுகள், தனித்தன்மைகளைப் பிரித்தறிவதற்கான குழுச் செயல்பாடுகள்

### மதிப்பீடு

பல்வேறு கட்டங்களில் சூழ்நிலைக் கேற்ப

- வெளியீடுகள்
- பிரித்தறியும் திறன்,
- படைப்பாற்றல் திறன்

## உள்ளடக்கம்

வேறுபட்ட ஒலிகளை உன்னிப்பாக கவனிக்கவும். அவற்றை வரிசைப்படி ஒன்றிணைத்தலும், அவை இயற்கையில் ஏற்படுத்துகின்ற இசை வாய்ப்புகளைப் புரிந்து கொள்ளவும் செய்தல் என்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் ஒரு கவிதையை சார்ட்டில் எழுதி வெளியிடுகிறார்.

> இரவுண்டு பகலுண்டு
> காலையுண்டு மாலையுண்டு
> வெயிலுண்டு மழையுண்டு
> மலருண்டு மணமுண்டு
> குளிருண்டு கனவுண்டு
> குயிலின் பாண்டுண்டு மனமலரில்...

- ஆசிரியர் வரிகளை வாசித்துக் காட்டுகிறார்.
- குழந்தைகள் கேட்டுச் சொல்கிறார்கள்.
- ஆசிரியர் தாளத்துடன் எளிய ராகம் சேர்த்துப் பாடுகிறார்.
- குழந்தைகள் சேர்ந்து பாடுகிறார்கள்.
- குழந்தைகள் இரண்டு குழுக்களாகப் பிரிகிறார்கள்.
- குழுக்களுக்கும் பெயர் சூட்டலாம்( குழுவாகப் பாடும் போது சேர்ந்து பாடுகிறார்களா என மதிப்பிடுதல்)

- கவிதை வரிகளை இரண்டு குழுக்கள் மாறிமாறி சொல்கிறார்கள். பாடல் வரிகளை ஆசிரியர் குழந்தைகளுக்குப் பாடிக் காட்டுகிறார். சிறு சிறு பகுதிகளாகக் குழந்தைகள் ஏற்றுப் பாடுகிறார்கள்.

***சொல்லுகின்ற வரிசை***

| | | |
|---|---|---|
| குழு- ஈனம் | : | இரவுண்டு பகலுண்டு விடியலுண்டு மாலையுண்டு |
| குழு- ராகம் | : | வெயிலுண்டு, மழையுண்டு மலருண்டு மணமுண்டு |
| குழு- ஈனம் | : | மலருண்டு மணமுண்டு மதுவுண்டு மணமுண்டு |
| குழு- தாளம் | : | குளிருண்டு கனவுண்டு |
| ஈனம் + தாளம் | : | குயிலின் பாட்டுண்டு மனதாரில் |

- குழுக்கள் வரிகளை மாற்றி மாற்றி சரியாக பாடுகிறார்களா, என்ற தாளஅறிவை மதிப்பீடு செய்யவேண்டும்.
- கவிதையில் குறிப்பிட்டுள்ளபடி காலத்தின் அடிப்படையில் குழந்தைகளை மீண்டும் குழுக்களாகப் பிரித்தல்.
- குழுக்களின் பெயர், இரவு, பகல், அதிகாலை, மாலை.
- ஒவ்வொரு குழுவிற்கும் அவரவர்களின் பெயருடன் தொடர்புடைய செயல்

பாடுகள்

*குழு 1- இரவு*

இரவு நேரங்களில் சாதாரணமாகக் கேட்கும் இயற்கை சப்தங்களை வெளியிடுதல்.

(உயிரினங்களின், காற்றின், மழையின்.... போன்ற)

*குழு 2- பகல்*

பகல் நேரங்களில் கேட்கும் சப்தங்களை வெளியிடுதல்

*குழு 3- அதிகாலை*

அதிகாலை நேரத்தில் கேட்கும் சப்தங்களை வெளியிடுதல்.

*குழு 4- மாலை*

மாலை நேரத்தில் கேட்கும் சப்தங்களை வெளியிடுதல்

- ஆசிரியரின் தலையீடு, ஒவ்வொரு குழுவும் வெளியிடும் சப்தங்களைப் பரிசோதித்து வரிசைப்படி வெளியிடுவதற்கான உதவி செய்தல்.
- ஆசிரியர் ஒவ்வொரு குழுவிடமும் வெளியிடக் கூறுதல்
- குழுக்கள் வெளியிடுதல்.
- ஒவ்வொரு குழுவினரும் பிற குழுவினர் வெளியிடுவதை இரசித்துக் கருத்து கூறுவதை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

*பிற குழுவினர் கூறும் கருத்துகளை இரசித்து மேலும் சிறந்த கருத்துகளைக் குழந்தைகள் வெளியிடுவதற்காக ஆசிரியர் சில கேள்விகளைக் கேட்கலாம்*

- ♦ எந்தெந்த சப்தங்களைக் கேட்க முடிந்தது?
- ♦ எதையெல்லாம் இரசிக்க முடிந்தது?
- ♦ எல்லா நேரங்களிலும் இந்த சப்தங்களைக் கேட்க முடிகிறதா?
- ♦ ஒவ்வொரு சப்தத்திலும் நேர மாற்றத்திற்கேற்ப வேறுபாடு காணப்பட்டதா?
- ♦ வெளியிட்ட ( ஒவ்வொரு குழுவும்) சப்தங்களில் தனித்து நிற்கும் சப்தம் உள்ளதா? சிறப்பு என்ன?

## மதிப்பீடு

- சரியாகப் பாடுவதற்கும், கூறுவதற்கும் உள்ள வேறுபாடு
- குழு மனப்பான்மை, தலைமைப் பண்பு
- உற்றுநோக்கும் திறன், வெளியிடும் திறன்
- படைப்பாற்றல் திறன்

## தொடர்செயல்பாடுகள்

- ஒரு நாளின் பல்வேறு நேரங்கள்/ சூழ்நிலைகளை விளக்கும் ஆடியோ, வீடியோ, சி.டி யை கேட்கச் செய்தல்.
- தெரிந்த சினிமா பாடல்கள்/ கார்ட்டூன் சிடியிலுள்ள சூழ்நிலைக்கேற்ற இசைப் படைப்புகள்

## மேற்பார்வை

- காட்டிலெ பாட்டு ( மனோரமா வி. சி. டி)
- சிண்டுக் குருக்கன் ( விசிடி)
- பூப்பி ( மனோரமா விஷன்)
- மஞ்சாடி ( மனோரமா விஷன்)
- பச்சிலக்காடு ( டிஜிட்டல் மீடியா எர்ணாகுளம்)
- மியூசிக் டுடே
- நேச்சர்
- டெ சேர்ட்
- விண்ட், பயர், இரயில்
- மன்சூன் அனுராகவும்( மனோரமா மியுசிக்ஸ்

# அலகு – 2: வேறுபடுத்தலாம் பிரிக்கலாம்

## முன்னுரை

நாம் கேட்கும் சப்தங்களில் இராகம் சேரும் போது அந்த சப்தம் இனிமையான அனுபவமாக மாறுகிறது இந்த அனுபவம் உயிரினங்களில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஒலி வேறுபாடுகள் நிறைந்த இந்த பிரபஞ்சத்தில் அவைகளின் சிறப்பை வரையறைகளுக்கு ஏற்பப் பிரித்து எது, எதற்குப் பொருத்தமானதென்று கண்டுபிடிக்கும் போது புதிய படைப்புகள் உருவாகும். இயற்கையிலுள்ள உயிரினங்களும் பிற காரணிகளும் சப்தங்களாகவும், இசைக்கருவிகளாகவும் மாறுவதன் அடிப்படை தத்துவங்களே இந்த அலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## கற்றல் அடைவுள்

பழக்கமான ஒலிகளை வேறுபட்ட வரையறைகளைப் பயன்படுத்தி பிரித்தறிதல்.

## கருத்து, அறிவு

- நிரந்தரமாக கேட்டல் திறனைப் பெறுகிறார்கள்.
- இன்பமானதும் அல்லாததுமான ஒலிகள்
- உயிரினங்கள், இயற்கை, மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகள், விளையாட்டு இசைக்கருவிகள் இவற்றின் ஒலி வேறுபாடுகளைப் பற்றிய அறிவு..

## செயல்பாடு

- குழந்தைப் பாடல்களிலிருந்தும், பதிவு செய்யப்பட்ட ஒலிகளிலிருந்தும் யதார்த்த ஒலி
- இன்பமானவை, அல்லாதவை எனத் தரம் பிரித்தல்
- விளையாட்டு இசைக் கருவிகளை உருவாக்க முயற்சி செய்தல்

## மதிப்பீடு

- கேட்டல் திறன்
- குழந்தைகளின் செயல்பாடுகளை மதிப்பிடுதல்
- இசைக் கருவி தயாரிக்கும் திறனை மதிப்பிடுதல்
- தாள அறிவைப் பயன்படுத்துதல்

## உள்ளடக்கம்

இயற்கையிலுள்ள பல பொருட்களின் தனித்தன்மையையும் வேறுபட்ட ஒலிகளையும் வரையறைகளின் அடிப்படையில் தரம் பிரிப்பதற்கும், இயற்கையில் காணப்படும் பொருட்களைப் பயன்படுத்தி எளிய இசைக் கருவிகளைத் தயாரிக்கவும் வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- முங்கில்கள் உரசும் சப்தம், சிரட்டைகளைத் தட்டி தாளம் பிடிக்கும் சப்தம். கற்கள் ஒன்றுடன் ஒன்று மோதும் சப்தம், மரக்கட்டைகளைப் பயன்படுத்தி தாளம் பிடிக்கும் சப்தம், பாறையில் சிரட்டையை உரசும் சப்தம், தகர சீட்டில் அடிக்கும் சப்தம், சொரசொரப்பான தரையில் செருப்பிட்டு நடக்கும் சப்தம், அலுமினியப் பேப்பர் வைத்து ஊதும் சப்தம்,சிரட்டையில் பிளாஸ்டிக்கை இழுத்துக் கட்டி தட்டும் சப்தம், சங்கொலி சப்தம், டம்ளரில் தண்ணீர் நிறைத்தும் நிறைக்காமலும் தட்டும் சப்தம் போன்றவற்றைப் பதிவு செய்து குழந்தைகளை அமைதியாக கண் மூடி அமரச் செய்து கேட்பிக்க வேண்டும்.
- ஒலிகளை ஒன்றோ, இரண்டோ தடவை கேட்கச் செய்த பிறகு ஆசிரியர் கலந்துரையாடல் ஆரம்பிக்கலாம்.
    - இதுபோன்ற சப்தங்களை நாம் தாராளமாக கேட்டுள்ளோம். எந்தெந்த சப்தங்கள் என்று ஞாபகப்படுத்திக் கூறலாமா?
    - கேட்ட சப்தங்களின் உறைவிடம் எது?
    - என்னென்ன பொருட்களில் தட்டியும் முட்டியும் ஒலிகள் தோன்றியது?
    - கண்டுபிடிக்க முடியாத ஒலிகள் இருந்ததா?

- ♦ இதற்கு முன்பு இதுபோல் கேட்ட ஒலிகள் எவையெல்லாம்?
- ♦ இனிமையாக தோன்றிய ஒலிகளை நினைவுபடுத்திக் கூறலாமா?

- குழந்தைகளின் கருத்துகளுக்கு ஊக்கம் கொடுத்து அவற்றை ஆசிரியர் கரும் பலகையில் எழுதுகிறார்.
- விவாதங்களில் சரியான முறையில் பங்கெடுத்தவர்களையும். ஒலிகளையும் அவற் றின் உறைவிடங்களையும் பிரித்தறிந்தர்களையும் ஆசிரியர் கவனிக்க வேண் டும்.
- குழந்தைகள் கருத்துகளைக் கூறும் போது அவற்றில் இன்பமானதையும், இன்ப மற்றதையும் ஆசிரியர் அட்டவணைப்படுத்த வேண்டும்.

***செயல்பாடு -2***

- சின்னுவிடம் ஒரு பாட்டைப் பாடச் சொல்லலாம் .
- குழந்தைகளிடம் கொடுக்கப்பட்டுள்ள பொருள்களைப் பயன்படுத்தி பாட்டிற் கேற்ப தாளம் போட வைக்கலாமல்லவா?
  - ♦ சிரட்டைகள்
  - ♦ மூங்கில் கம்புகள்
  - ♦ மரத்துண்டுகள்
  - ♦ சோடாக் குப்பியின் மூடிகள் ( ஒன்றிற்கதிகமானவற்றை கம்பியில் கோர்த்து)
  - ♦ காட்போர்ட் பெட்டிகள்
  - ♦ சிறிய ஸ்டீல் பிளேட், ஸ்பூன் முதலியவை
- சின்னுவின் பாட்டிற்கு ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் ஒவ்வொரு பொருளைப் பயன்படுத்தித் தாளம் போடக் கூறவேண்டும்.
- பாட்டின் இறுதியில் எல்லா உபகரணங்களையும் ஒன்றாக உபயோகிக்கக் கூற வேண்டும். ( ஆசிரியர் சரியாக தாளமிடும் குழந்தைகளைக் கண்டுபிடிக்க வேடும்)

***செயல்பாடு -3***

- நமக்குக் கிடைத்த இத்தகைய பொருட்களைப் பயன்படுத்தி எளிய இசைக் கரு விகளைத் தயாரிக்கலாமா?
- தயாரிப்புக் கலையில் திறமையான குழந்தை மற்றும் ஆசிரியர் தலைமையில் தயாரிப்புச் செயல்களைத் தொடங்க வேண்டும்
  - ♦ சோடா மூடிகளைச் சரியாகத் தட்டியெடுத்து கம்பியில் கோர்த்தல்.
  - ♦ பெரிய சிரட்டையைப் பளபளப்பாக்கி அதன் வாய்ப்பகுதியில் ப்ளாஸ்டிக் சீட்டை இழுத்துக் கட்டுதல்
  - ♦ இரண்டு சிரட்டைகளை நேருக்கு நேர் ஒட்டி ( உள்ளே சிறிய சிறிய கற்களைப் போட்ட பின்) ஒரு கம்பில் இணைத்தல்.

## மதிப்பீடு

- உற்று நோக்கும் திறன் ●ஒலிகளைப் பிரித்தறியும் திறன்
- இசைக் கருவிகளை உபயோகிக்கும் திறன்● இசைக்கருவிகள் தயாரிப்பும், திறனும்

# அலகு 3 உரையாடல் பாடல்கள்

எழுத்துகளைக் கூட்டி வார்த்தைகளை உச்சரிக்கத் தொடங்கும் போதே அவர்களின் கற்பனைக்கேற்ப கதைகளையும் சிறிய பாடல்களையும் கூறவும். பாடவும் செய்கிறார்கள். பூவோடும், பூங்காற்றோடும், பூனையுடனும், காகத்திடமும், அணிலிடமும் கொஞ்சிப் பேசுவது கதைப் பாடலாகவும் ,உரையாடல் பாடலாகவும் மாறுகிறது. பாடும் போதும், நடிக்கும் போதும், தாளமிடும் போதும் படம் வரையும் வேளைகளிலெல்லாம் அவனுடைய கற்பனைக்கேற்றவாறு செயல்படுகிறான். அவ்வாறு ஒளிமயமான ஒரு புதிய பிரபஞ்சம் உதயமாகிறது. வாழ்கைச் சூழலில் வாய்மொழியாகக் கிடைத்த ஏராளமான பாடல்களை ஞாபகப்படுத்திப் பாடுகிறான். வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவனிடம் உள்ள திறமைகளை மெருகேற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறான வாய்ப்புகள் அவனை ஒரு பாடகனாகவோ இரசிகனாகவோ மாற்றுமென்பதில் சந்தேகமில்லை. ஒவ்வொரு பாட்டின் வேறுபட்ட கருத்துகளைச் சரியாக புரிந்து ஒலி ஒழுங்கமைப்போடும் சிறப்பாகவும் வெளியிட வேண்டுமென்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

உரையாடல் பாடல்களைச் சூழ்நிலைக்கேற்றவாறு குரலை உயர்த்தியும், தாழ்த்தியும் சாதாரணமாகவும். வேகம் கூட்டியும், குறைத்தும் கதாப் பாத்திரங்களுக்கேற்ப ஒலி ஒழுங்கமைப்புடன் பாடுதல்.

## கருத்து, அறிவு

- உரையாடல் பாடலின் வரியிலுள்ள கருத்து
- கருத்திற்கேற்ற ராகம்
- கருத்துக்கும்/ சூழ்நிலைக்கும் ஏற்ப குரலின் உயர்வும், தாழ்வும்
- சப்த ஒழுங்கமைப்பு,

## செயல்பாடு

- உரையாடல் பாடல்கள் கேட்டல்
- கவிதையிலுள்ள உரையாடல் பகுதிகளின் கருத்தை விளக்குதல்.
- ஆசிரியர் கருத்திற்கேற்ற இராகத்தைக் கண்டுபிடித்து வெளியிடுதல்
- சப்த ஒழுங்கமைப்புடனும், கட்டுப்பாட்டுடனும் பாடுதல்.

## மதிப்பீடு

- இரசனை

- பாடலைப் பாடுவதிலுள்ள ஒலி ஒழுங்கமைப்பு
- பாவம், இராகம், தாளம்

## உள்ளடக்கம்

குழந்தைகள் பாடுவதற்கேற்ற உரையாடல் பாடல்களைத் தேர்ந்தெடுத்து கருத்தை மனதில் கொண்டு இராகத்துடனும்,கருத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப சப்த ஒழுங்கமைப்புடனும் பாவத்துடனும் பாடிவதற்கான வாய்ப்பை ஏற்ப டுத்த வேண்டும் என்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு-1*

*எடுத்துக்காட்டுகள்-*

- வானிலொரு மரக்கிளையில்
  மறந்து போனதென் கைகுட்டை
  அங்கேறியெடுத்து தரலாமா
  அணில்கண்ணா குமாரா
  ஏழுநிறமுண்டு கரையுண்டு சரிகையுண்டு
  மலைகள் தொடாது...
  படிகளில்லை பாதையில்லை புரியவில்லை
  நானேற ஏலாது...
- பைங்கிளியே பைங்கிளியே
  விளையாட வரலாமா நீ
  இல்லில்லை சில்லைகளால்
  கூடுகட்டப் போறேன்
  சிறுநாயே சிறுநாயே
  விளையாட வருவாயா நீ
  இல்லில்லை எஜமான்
  இல் காத்திடப் போறேன்
- இக்கொடியிலிருந்தழகாய் பூக்கள்
  போகின்றன பறந்தே...
  தவறு கண்ணே சொல்லு...
  நல் பட்டாம்பூச்சிகளாமிதெல்லாம்.
- எறும்பும் யானையும்
  குணுங்கி குணுங்கிப் போவதெங்கே?
  கூனன் குளங்கரை உப்புக்காய் போகிறார்கள்
  யானை வந்தாலென்ன செய்வோம்?
  ஆலமரக்கீழே ஒளிந்திடலாம்.
  குதிரை வந்தாலென்ன செய்வோம்?
  தூணில் பிடித்தொரு குத்து கொடுத்திடலாம்.

*செயல்பாடு -2*

- பாடலை சார்ட்டில் எழுதி தொங்க விட்டு வாசிப்பதற்கான வாய்ப்பைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.
- பின்னர் உரையாடல் பாடலில் உள்ள கருத்துகளை ஆசிரியர் குழந்தைகளுக்கு விளக்கிக் கூறவேண்டும் .
- கருத்தைப் புரிந்து கொண்டு வாசித்தல்.
- குழந்தைகள் குழுவாக ஏற்று பாடுகிறார்கள்.
- பின்னர் எளிய ராகம் கண்டுபிடித்து கருத்திற்குப் பொருத்தமான முறையில் பாடுகிறார்கள்.
- குழந்தைகள் குழுவாக ஏற்று பாடுகிறார்கள்.
- குழந்தைகளை இரண்டு குழுக்களாகப் பிரித்து கேள்வி பதில் வடிவத்தில் பாடச் சொல்லுதல்.
- பின்னர் குழுவாகப் பிரிந்து பாடக் கூறுதல்
- சப்த ஒழுங்கமைப்பு, கதாபாத்திரங்களுக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப நல்லமுறையில் வெளியிடும் குழந்தைகளை ஆசிரியர் கண்டுபிடிக்க வேண்டும். நன்றாகப் பாடும் குழந்தைகளைப் பல்வேறு குழுக்களில் பிரித்துச் சேர்க்கலாம்.

## மதிப்பீடு

- ஒவ்வொரு செயல்பாட்டின் போதும் சிறந்த முறையில் ஆசிரியர் மதிப்பீடு நடத்த வேண்டும்.
- பாடல்பகுதிகளை சரியாக ஏற்றுப் பாடும் திறன்
- குழுவாகச் சேர்ந்து பாடும் திறன்
- தெளிவான ஒலி ஒழுங்கமைப்பு.
- பாவம், இராகம், தாளம்
    - வெளியிடும் திறன்
    - இரசனை
    - மனப்பாங்கு
    - தாளஒழுங்கமைப்பு
    - தாளத்திற்கேற்பப் பாடுதல்
    - தாளஅறிவு

## அலகு – 4 : பழமொழிகளைப் பாடலாம்

இயறகையுடன் தொடர்புடைய ஏராளம் காரியங்களிலும், நாம் தினமும் உபயோகிக்கும் பொருட்களிலும் வாழ்க்கையின் நிரந்தரமான முத்திரைகள் பதிந்துள்ளன. பிஞ்சு மனங்களை இரசிக்க வைக்கவும், மகிழ வைக்கவும் செ.ய்பவைகளே பழமொழிகளும் விடுகதைகளும். அறிவு வளர்ச்சியும் உற்றுநோக்கும் திறனும் வளரும் விதமாகத்தான் அதன் சொல் அமைப்புகள் அமைந்துள்ளன. சிறிய வாக்கியங்களில் அதிகமான கருத்துப் பிரபஞ்சம் அமைந்துள்ளது. வாய்மொழியாகக் கிடைத்த ஏராளம் விடுகதைகளையும், பழமொழிகளையும் தாளத்துடன் கைத்தட்டிப்

பாடி வாழ்க்கைச் சூழல்களில் எளிய முறையில் வெளியிடுவதற்கேற்ற திறனை அடையச் செய்வதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

விடுகதைகளையும், பழமொழிகளையும் தாளத்தோடு சொல்கிறார்கள், பாடுகிறார்கள்

## கருத்து அறிவு

- ------------------------------------------------.

## செயல்பாடு

- விடுகதைகள் பழமொழிகள் போன்றவற்றைத் தாளத்துடன் வெளியிடுகிறார்கள்.
- தனியாகவும் குழுவாகவும் பயிற்சி பெறுகிறார்கள்.
- கைதட்டிச் சொல்லவும், பாடவும் பயிற்சி அளித்தல்.

## மதிப்பீடு

- குழந்தைகள் வெளியீட்டை மதிப்பிடுதல்.

## உள்ளடக்கம்

குழந்தைகளுக்குத் தாளத்தோடு பாடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த எளியமுறையில் தனியாகவும் குழுவாகவும் வெளியிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதே இப்பாடப்பகுதியின் நோக்கமாகும்.

## கற்றல்செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- குழந்தைகளுக்குத் தெரிந்த விடுகதைகளையும் பழமொழிகளையும் கூறுவதற்காக ஆசிரியர் வாயப்பளிக்க வேண்டும்.
- குழந்தைகள் கூறும் விடுகதைகளையும், பழமொழிகளையும் ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார்.
  - ஓடும் குதிரை சாடும் குதிரை நீரைக்கண்டால் நிற்கும் குதிரை
  - நெட்டில்லா வட்டயிலை
  - காளை கிடக்கும் கயிறு ஓடும்
  - அரிசி எறிந்தால் ஆயிரம் காகம்

### *செயல்பாடு -2*

- கரும்பலகையில் எழுதியதைத் தனியாகவும் குழுவாகவும் ஆசிரியர் உதவியுடன் பாடப்பயிற்சி அளித்தல்.

*"ஆடிய காலும் பாடிய நாவும் அடங்குவதில்லை."*

*"பதினெட்டு வாத்தியமும் செண்டைக்கு கீழே."*

*செயல்பாடு-3*

- குஞ்ஞுண்ணி ஆசிரியரும் குழந்தைகளும்
- சி. டி. கண்காட்சி
- சி. டி. யிலுள்ள விடுகதைகளையும், பழமொழிகளையும் வெளியிடுதல்
- வெளியிடுதலை மதிப்பிடுதல்

## மதிப்பீடு

- வெளியிடும் திறன்
- வார்த்தைகளைச் சேர்த்துத் தாளத்துடன் வெளியிடுதல்.

# மூன்றாம் வகுப்பு

## அலகு – 1: இயற்கையின் ஒலி

உயிரினங்களுக்கு இயற்கை தரும் பாதுகாப்புப் பலவாகும். பாதுகாப்பாக, உணவாக, இராகமாக, தாலாட்டாக அன்றாட வாழ்க்கையில் தன்னுடைய எல்லா நிமிடங்களிலும் இயற்கையோடு சேர்ந்திருக்கிறான். எல்லா ஒலி அழகிற்கும் அடிப்படை இயற்கையாகும். காலங்களுக்கும், நேரங்களுக்கும், பருவ காலங்களுக்கும் நம்முடைய ஒவ்வொரு வேறுபட்ட செயல்பாடுகளுக்கெல்லாம் பின்னணியாக சக்தியின் உறைவிடமாக இயற்கை அதனுடைய இனிய ஒலிகளால் நிறம் கொடுக்கிறது. கற்பனை வளம் நிறைந்த நம்முடைய குழந்தைகளுக்கு சங்கீதத்தின் முதல் பாடத்தைக் கற்றுத் தருவது இயற்கையாகும். குயிலின், மயிலின், பூனையின், காகத்தின் இனிய ஒலியில் அவர்கள் இனிமையான சங்கீதத்தைப் பிரித்தறிகிறார்கள். பின்னர் இவற்றையெல்லாம் குழந்தைகளின் சபைகளிலும், விளையாடும நேரங்களிலும் கேட்ட சப்தங்களை அதே போல் வெளியிடுகிறார்கள். அவர்களின் உற்றுநோக்கல் திறனுக்கேற்ப அவன் இயற்கையிலிருந்து கேட்ட சப்தங்களையெல்லாம் சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தும்போது அவனுடைய குழந்தைத் தனமான சங்கீதரசனையைத் திறனை நமக்கு முன்னர் வெளியிடுகிறான். சங்கீதத்தை காலத்திற்கேற்ப சூழ்நிலைக்கேற்ப இணைத்து அவனுடைய திறமையை நம்முன் வெளிப்படுத்துகிறான்.

### கற்றல் அடைவுகள்

சூழ்நிலைக்கும், கருத்திற்கும் பொருத்தமான இயற்கைச் ஒலிகளை தேர்ந்தெடுத்து வெளியிடும் திறன்.

### கருத்து, அறிவு

- கருத்திற்கும், சூழ்நிலைக்கும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து இயற்கை சத்தங்களை பயன்படுத்தலாம்.
- பொருத்தமான இயற்கை ஒலிகளைத் தேர்ந்தெடுத்து தேவைக்கேற்பப் பயன்படுத்தும் திறன்.

### செயல்பாடு

- தனித்தன்மையுள்ள இயற்கை ஒலிகளை அட்டவணைப்படுத்துதல்( இடியின் சத்தம், கடலின் ஆர்ப்பரிப்பு, ஊளையிடுதல்)

- அட்டவணையிலுள்ள சூழ்நிலைகள் கூறும் பொருள்- — கலந்துரையாடல்
- பொருத்தமான சூழ்நிலைகளில் இயற்கை ஒலிகளைப் பயன்படுத்துதல்

## மதிப்பீடு

- அட்டவணையை மதிப்பிடுதல்
- உண்மைத்தன்மை
- வெளியிடுதலின் தனித்தன்மை
- இரசனை

## உள்ளடக்கம்

வேறுபட்ட ஒலிகளைக் கவனமாக உற்றுப்பார்த்து அவற்றை வரிசையாக இணைத்தல், அவை இயற்கையில் உருவாக்கும் சங்கீதத்தைப் பிரித்தறியவும், வாய்ப்புகளைப் புரிந்து கொள்ளவும் செய்வதே இவலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு 1*

- இடி மின்னல், காற்று இவை சேர்ந்து மழை பெய்யும் காட்சியுள்ள சி. டி யைக் குழந்தைகளுக்குக் காட்டுதல். சத்தமின்றி படத்தை மட்டும் காட்ட வேண்டும்.
- படத்தைப் பார்த்த குழந்தைகளின் அனுபவத்தைக் கூறச் சொல்லுதல்.( ஆசிரியர் முன்னரே கேள்விகளை தயார் செய்து வைக்க வேண்டும்)

*கேள்விகள்*

- ♦ இந்தக் காட்சியிலிருந்து உங்களுக்குக் கிடைத்த அனுபவம் என்ன?
- ♦ இந்தக் காட்சியை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடிந்ததா?
- ♦ இந்தக் காட்சியை முழுமையாக ஏற்றுக் கொள்ளவும் இரசிக்கவும் என்னென்ன சத்த அமைப்பை சேர்க்க முடியும்?

- குழந்தைகள் கூறும் கருத்துகளை ஆசிரியர் குறித்து வைக்கிறார்.
- குழந்தைகளின் கருத்துகள் ஆசிரியரின் வழிகாட்டுதல் மூலம் சரியாகவும், தெளிவாகவும் மாறுகின்றன.

### *செயல்பாடு 2*

- குழந்தைகளை இடி மின்னல், மழை, காற்று என நான்கு குழுக்களாப் பிரித்து முன்பு காண்பித்த சி. டி யைக் காட்டுதல். நான்கு குழுவிற்கும் பயிற்சிக்கான வாய்ப்பளித்தல். காட்சியைப் பார்க்கும் போது பொருத்தமான ஒலிகளைச் சேர்த்து வெளியிடுமாறு நான்கு குழுக்களிடமும் கூற வேண்டும். ஒவ்வொரு குழுவினரும் கூறுவதை பிற குழுவினர் மதிப்பீடு செய்ய வேண்டும். எல்லா குழுவினரும் வெளியிட்ட பின்னர் ஒவ்வொரு குழுவின் மதிப்பீட்டையும் கூறுவதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.

- குழந்தைகளின் செயல்பாட்டையும், மதிப்பீட்டையும் ஆசிரியர் துல்லியமாக மதிப்பிட்டு குறித்து வைக்க வேண்டும். பின்னர் தேவைப்படும் போது சப்த இணைப்பு நடத்தியதிலுள்ள நிறை குறைகளை ஆசிரியர் குழந்தைகளிடம் தெளிவுபடுத்திக் கூற வேண்டும். குறைகளை சரி செய்து மீண்டும் வெளியிடுவதற்கான வாய்ப்பைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

*தொகுப்பு*

சூழ்நிலைக்கேற்றவாறு சத்த ஒழுங்கமைப்பு நடத்த வேண்டும். ஒலி, சூழ்நிலையும் முழுமையாக இருந்தால் மட்டுமே காட்சியும் கேள்வியும் சிறப்பாக இருக்கும். ஒலியில்லாத காட்சியும், கேள்வியும் முழுமையடைவதில்லை.

### *தொடர் செயல்பாடு*

- முன்னர் காட்டிய சி. டி யை சத்தத்துடன் குழந்தைகளுக்கு காட்ட வேண்டும். ரசனைக்கான வாய்ப்பு கொடுக்க வேண்டும்.
- தனித்தன்மையுள்ள இயற்கைச் ஒலிகளை அட்டவணைப்படுத்தக் கூறவேண்டும். எ.கா– காலை, மாலை, கடற்கரை, நகரக் காட்சிகள்
- தேர்தெடுத்த சூழலைப் பற்றியும் அவற்றின் பின்னணியைப் பற்றியும் விவாதம் –வெளியீடு ( குழுவாக)

### *தொகுப்பு*

- ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ,கருத்துக்கும் பொருத்தமான ஒலிகள் இயற்கையிலேயே காணப்படுகிறது. பொருத்தமான சத்தங்கள் இல்லாத ஒரு காட்சியையும் முழுமையாக இரசிக்க முடியாது. சூழ்நிலையை, கருத்தை சத்த ஒழுங்கமைவு நடத்தும் போது அவற்றிற்கிடையிலுள்ள பொருத்தமே அந்த செயல்பாட்டிற்கு கூடுதல் சிறப்பு சேர்க்கிறது. இந்த இரசிப்புத் தன்மையும் உற்றுநோக்கலும் இருந்தால் எந்த சூழ்நிலையையும் புனரமைக்கவும் சிறப்பிக்கவும் முடியும்.

## மதிப்பீடு

- வெளியிடும் திறன்
- ஒலி ஒழுங்கமைப்பின் தனித்தன்மை
- அட்டவணையை மதிப்பிடுதல்
- இரசனை

# அலகு 2 ஆடலாம் பாடலாம்

படிக்கத் தொடங்குவதற்கு முன்பே பாடத் தொடங்குபவர்களே நாமனைவரும். இளம் உதட்டிலி தாய்பாலுடன் இனிய தாலாட்டுப் பாட்டை அம்மா தரும் போது அவன் ரசிகனாவும், அம்மா பாடகியாகவும் மாறுகிறாள். நடப்பதும், வீழ்வதும், சிரிப்பதும், விளையாடுவதும், கொஞ்சுவதும் உண்பதும் உறங்குவதுமெல்லாம் ராகத்துடன் தான். ஒவ்வொரு பாட்டைக் கேட்கும் போதும் அவனுடைய மொழியில் அசைவின் மூலம் தாளம் போடுகிறான். அம்மாவிடமிருந்து தொடங்கும் இசை ஆர்வம் அவன் வளர வளர சுற்றுப்புறத்திலுள்ள அமைத்து ஜீவஜாலங்களிலும் படருகிறது. வேறுபாடுகள் நிறைந்த இத்தகைய செயல்களும், காட்சிகளும் அவனிடம் இரசிப்புத் தன்மையை அதிகரிக்கச் செய்கிறது. தாள பிரபஞ்சத்தைப் பற்றி கூடுதல் தெரிந்து கொள்கிறான். வளரும் போது தன்னுடைய வீட்டிலும், ஊரிலும் பாடிய ராகங்களையும், பாட்டையும் தெரிந்து கொள்கிறான். கதைப் பாடல்களும், பழமொழிகளும், குழந்தைப் பாடல்களும் அவன் திறமைக்கு ஊக்கமளிக்கின்றன. அத்துடன் சங்கீதத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் தொடங்குகிறான். பாட்டை முழுமையடையச் செய்யும் முக்கிய காரணி தாளமென்றும், தாளத்தோடு கையும் உடலும் இணையும் போது அவை ஏற்படுத்தும் இன்பத்தை சொந்தமாக்கி எல்லையற்ற ஆனந்தத்தை அடைகிறான். அந்தந்த பகுதிகளில் நடைமுறையிலிருக்கும் தனித்தன்மை வாய்ந்த பாடல்களின் வாயிலாக நாட்டின் இசைக் கலாச்சாரத்தையும், தனித்தன்மையையும் பிரித்தறிகிறான். இசையும், தாளமும், அதன் சட்டதிட்டங்களெல்லாம் இயற்கையுடன் இணைந்ததென்றும் இவை ஒன்றோடொன்று பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளதென்றும் இவைகள் ஒன்று சேரும் போதுதான் கூடுதல் இன்பம் கிடைக்குமென்ற பிரித்தறிவை நம்முடைய குழந்தைகள் மனதில் கொண்டு செல்லவேண்டுமென்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

- தெரிந்த பாடல்கள், வட்டாரப் பாடல்கள், வாய்மொழிச் தாரைகள், குழந்தைப் பாடல்கள் போன்றவற்றைத் தாளத்திற்கேற்றவாறும் உடலசைவுடனும் வேகமாவும், மெதுவாகவும் பாடுகிறார்கள்.,
- ஒரே மாதிரியான பாடல்கள், கவிதைகளை கேட்டு சேர்ந்து பாடவும், தாளம் போடவும் செய்கிறார்கள்.

## கருத்து, அறிவு

- பாட்டின் வேகத்திற்கேற்ப தாளத்தை வரிசைப்படுத்த வேண்டும். வேகமாகவும் மெதுவாகவும் பாடும் வேறுபட்ட பாடுதல் முறைகள் உள்ளன.
- சங்கீத உருவங்களின் தனித்தன்மையை நிலைநிறுத்தும் ஒரு காரணியாகும் தாள வேகம்.
- தாள ஒற்றுமையைக் கண்டறியும் திறன்.
- ஒரே தாளத்திலுள்ள பாடல்களும் கவிதைகளும் உள்ளன.

## செயல்பாடு

- பல்வேறு இராகத்திலும் வேகத்திலும் உள்ள பாட்டுகளை கவனிக்கிறார்கள். அலசி ஆராய்கிறார்கள்.
- பாடல்களின் தாளத்திற்கேற்ப உடல் அசைவை ஒழுங்குபடுத்துகிறார்கள்.
- தனியாகவும், குழுவாகவும் பாடல்களை வேகமாகவும் ,மெதுவாகவும் உடல் அசைவுகளுடனும் பாடுகிறார்கள்.
- கவிதைகள், பாடல்களின் தாளத்தை ஒப்புமைப்படுத்துகிறார்கள். ஒரே தாளத்திலுள்ளவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள்.
- பாடலுக்குக்கேற்பத் தாளம் போடுகிறார்கள்.

## மதிப்பீடு

- பாடுவதை மதிப்பிடுதல்
- தாள வேறுபாடு வேகம் பிரித்தறிதல்
- கேள்விகளைக் கேட்டு மதிப்பிடுதல்
- செயல்பாடுகளை மதிப்பிடுதல்

## உள்ளடக்கம்

வெவ்வேறு பாடல்களைத் தாளத்திற்கேற்ப பாடி பயிற்சி பெறவும் ஒவ்வொரு பாடலின் தனித்தன்மையை நிலைநிறுத்துவதற்கும் தாளவேகத்திற்கும் முக்கிய பங்குள்ளதென்று பிரித்தறிவதற்கும் இவ்வலகிலுள்ள கற்றல் செயல்பாடுகள் மூலம் குழந்தை திறன் பெற வேண்டும். வெவ்வேறு பாவங்கள் உள்ள பாடல்களுக்கு தாள ஒற்றுமை உண்டென்றும், சமதாளத்திலுள்ள பாடல்களைக் குழந்தை கண்டு பிடிக்க வேண்டுமென்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- குழந்தைகளுக்குத் தெரிந்த ஒரு பாடலை தேர்ந்தெடுத்தல். ஆசிரியர் அதை கரும்பலகையில் எழுதுதல்

*உதாரணம்:-*

1. ஒன்றாம் மலைமேலேறிடலாமா...
   அங்கிருந்து தலைகீழாய் சாடிடலாமா....
2. குட்டநாடன் புஞ்சயிலே... (வஞ்சிப்பாட்டு)

சார்ட்டில் எழுதிய பாடலை அனைவரும் சேர்ந்து பாடச்சொல்லுதல். பின்னர் தாளத்துடன் கைதட்டி வேகம் குறைத்துப் பாடச் சொல்லுதல். இதே வேகத்தில் எளிய இராகத்தில் ஆசிரியர் பாட குழந்தைகள் கேட்டுப் பாடட்டும் ( தாளத்துடன் பாட வேண்டும்)

வேகமாகவும், மெதுவாகவும் இதே வரிகளைப் பலமுறை பாடச் சொல்ல

வேண்டும். வேகத்திற்கேற்ப தாளமும் மாறுகிறது.

*ஆசிரியரின் கேள்வி:-*

- அனைவரும் நன்றாகப் பாடுவதற்கும் இரசிப்பதற்கும் எந்த வேகத்தில் பாட வேண்டுமென்று கண்டுபிடிக்கலாமா?

- தாளத்திற்கேற்பப் பாட முடிந்த வேகத்தைக் குழந்தைகள் பிரித்தறிகிறார்கள். இந்த செயல்பாட்டின் மூலம் கண்டுபிடிக்கிறார்கள். இவ்வாறு பாடஇயன்ற பாடல்களை கண்டுபிடிக்க கூறுதல்.
- குழந்தைகள் கண்டுபிடித்த பாடலை ஆசிரியர் கரும்பலகையில் எழுதுகிறார். அவற்றில் சில பாடல்களை வேகமாகவும் மெதுவாகவும் ஆசிரியர் பாடிக் காட்டு கிறார். ஆசிரியர் மீண்டும் பாடும் போது குழந்தைகளையும் சேர்ந்து பாடக் கூற லாம். தாளத்திற்கேற்ப அசைவுடன் ( கைவிரலை அசைத்து, காலால் தாளம் போட்டு மெதுவாக கழுத்தை அசைத்து)

*(தற்போது பாடிய பாட்டிற்குப் பொருத்தமான வேகத்தைக் கண்டுபிடிக்க குழந் தைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.)*

## செயல்பாடு -2

- குழந்தைகளுக்குத் தெரிந்த பலவிதமான பாடல்களை ஆசிரியரின் உதவியுடன் தேர்ந்தெடுக்கிறார்கள்(பல்வேறு தாளத்திலுள்ள பாடலை தேர்ந்தெடுக்க வேண்டும்)

*உதாரணம்*

- சினிமா பாடல்கள்
- தேசபக்திப் பாடல்கள்
- நாட்டுப்புறப் பாடல்கள்
- மெல்லிசைப் பாடல்கள்
- தேசிய கீதம்
- பாடப் பகுதியிலுள்ள எளிய வரிகள்

- பயிற்சி செய்வதற்கும், பாடுவதற்கும் குழந்தைகளை ஐந்து குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.
- ஐந்து குழுக்களுக்கும் வெவ்வேறு தாளமும் இராகமும் உள்ள பாடலைத் தேர்ந் தெடுத்துக் கொடுப்பதில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்
- தாளத்துடன் பாடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் பயிற்சி செய்யும் போதும் பாடும் போதும் ஆசிரியர் தேவை யான உதவிகளைச் செய்ய வேண்டும்.
- குழுக்களாகப் பாடுவதற்கு வாயப்பளிக்க வேண்டும்.
- பிற குழுக்கள் மதிப்பிட வேண்டும்.

- ஆசிரியரின் மதிப்பீடு( குழந்தைகள் பாடியதையும், மதிப்பீடு செய்ததையும்)

### *செயல்பாடு -3*

- ஒவ்வொரு குழுவின் தாளம், அசைவு, வித்தியாசம் இவற்றைத் தெரிந்து கொள்வதற்காக ஆசிரியர் தாளத்திற்கேற்ப எண்களைச் சொல்லி குழந்தைகளை திரும்பிக் கூறச் சொல்லுதல்.

*உதாரணம்:-*

| | |
|---|---|
| 1. பச்சப் பனந்தத்தே... | /1,2,3/1,2,3,4/1,2,3/1,2,3,4/ |
| 2. கிழக்கு பூக்கும்<br>அல்லது<br>காயலரிகத்து... | /1,2,3/1,2,3,4/1,2,3/1,2,3,4/... |
| 3. காற்றே காற்றே... | /1,2,3,4/1,2,3,4/1,2,3,4/... |
| 4. சௌபர்ணிகாமிர்த...<br>அல்லது<br>நோக்கெடா நம்முடெ(துள்ளல் பாட்டு) | /1,2,1,2,3/1,2,1,2,3/...<br><br>/1,2,1,2,3/1,2,1,2,3/... |
| 5. எல்லாரும் சொல்லுண்ணு | /1,2,3/1,2,3/1,2,3/1,2,3/... |

- இவ்வாறான குழுப்பாடல்களுக்கு பொருத்தமான வாய்தாரிகளை சேகரிக்கு மாறு குழந்தைகளிடம் கூறவேண்டும்.
- எளிமையாக பாடுகிறார்கள்.

### *செயல்பாடு -4*

- பாவத்திலும் ராகத்திலும் வித்தியாசமான ஆனால் தாளத்தில் ஒற்றுமையுள்ள பாடல்களை ஆசிரியர் தேர்ந்தெடுத்து குழந்தைகளைக் கேட்க வைத்தல்.

*உதாரணம்*

1. அம்பலப்புழை உண்ணிக்கண்ணனோடு நீ...
2. ஹரிவராஸனம்

1. ஒரு வட்டம் கூடியென்...
2. பலவட்டம் பூக்காலம்...

- ஒரே போலுள்ள பாடல்களை ஆசிரியரும் குழந்தைகளும் சேர்ந்து பாடலாம்.

  *ஆசிரியர் கேட்கும் கேள்விகள்*

  - ஒரே மாதிரியான பாடல்கள் உள்ளதா?
  - எதிலெல்லாம் ஒன்று போல் உள்ளது.( குறிப்பு ராகத்தில், தாளத்தில்)
  - ஒரே தாளத்திலுள்ள பாடல்களுக்கு, பாவத்தில்/ இராகத்தில் வேறுபாடு உள்ளதா?

- குழந்தைகளின் கருத்துகளை வாய்மொழியாகக் கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். குழந்தைகளின் கருத்துகளை ஆசிரியர் கூடுதல் தெளிவு படுத்திக் கூற வேண்டும்

  *ஒற்றுமையுள்ள இத்தகைய பாடல்கள், பாடப் பகுதியிலுள்ள கவிதைகள், நாட்டுப்புறப் பாடல்களை கண்டுபிடிக்க வேண்டும்?*

ஆசிரியரின் உதவியுடன் கண்டுபிடித்து குழந்தைகள் வெளியிடுகிறார்கள்

## மதிப்பீடு

- தாளவேறுபாடு பிரித்தறிதல்
- சரியான வேகம் பிரித்தறிதல்
- கேள்விகளின் பிரதிபலிப்பு
- வெளியிடும் திறன்
- சமமான தாளங்களைக் கண்டுபிடிக்கும் திறன்

*தொகுப்பு*

பாடல்கள் வேறுபாடுகள் நிறைந்ததாகும் . இராக வேறுபாடும் தாள வேறுபாடு முள்ள பாடல்களைப் நன்றாக பாடுவதற்கு முறையான பயிற்சி பெற வேண்டும். சரியான தாள அசைவோடு பாடும் போதுதான் இரசிப்புத் தன்மை அதிகரிக் கிறது. ஒவ்வொரு பாடலையும் நன்றாகப் பாட வேண்டுமெனில் சரியான வேகத் தைக் கடைபிடிக்க வேண்டும். தெரிந்த பல பாடல்களிலிருந்து தாள ஒற்றுமையை கண்டுபிடிக்க முடியும்.

## அலகு3 : பாடலை இரசிக்கலாம்

காண்பதும் கேட்பதும் கண்களுக்கு மிகவும் ஆனந்தம் அளிப்பதும் சுவை யாவதும் அதன் அழகியல் மெருகு கூடும்போதாகும். இயற்கையிலிருந்கு உரு வான அனைத்து ஒலிகளும் அழகாக அமையவேண்டும் என்றில்லை. ஆனால் அத்தகைய அபஸ்வரங்கள் உண்டாக்கும் ஒலிகளைத் தக்கவகையில் மேம்ப டுத்தி எடுத்தால் ஈர்ப்பு மிக்க இசைமயமாக்கலாம். ஆலாபனைகளின் மெருகினை மதிப்பிட இயலாமல் போவது காதுகளின் மிகு இன்பம் மிக்க ஒலி அமைப்பின் அடிப்படையினாலாகும். இசைபடைப்புகளின் முரண்களுக்கு ஏற்ப ஒலிப் பரி மாற்றம் நிகழ்தல் வேண்டும். சூழலுக்கும் கருத்துக்கும் ஏற்ப ஒலியை எவ்வாறு அமைக்கலாம், ஆலாபனையில் இத்தகைய ஒலி ஒழுங்குமுறைகள் எத்தகைய மேன்மைகள் தருகின்றன என்பனவற்றை அறிவதுடன் பொருந்தும் வகையில் ஒலி ஒழுங்கமைத்தல் எவ்வாறு என இந்த அலகு வாயிலாக விளக்கப்படுகிறது.

## கற்றல் அடைவுகள்

பாடல்களை சப்த ஒழுங்கமைப்புடன் பாடும் போது ஏற்படும் வேறுபாடுகளைப் புரிந்து கொள்கிறார்கள்.

## கருத்து, அறிவு

- ஒலி வரிசைகளுடன் பாடும் போது இரசனை பெருகும்.
- பாடலின் இலக்கியத்தையும் புரிந்து கொண்டு ஆலாபனை செய்யும் திறன்.
- பாவனைகளுக்கு மெருகு கூடவேண்டுமெனில் ஒலி வரிசை மிக அவசியம்

## செயல்பாடு

- ஒலி வரிசைகளுடன் பாடுவதையும் அல்லாமல் பாடுவதையும் ஒப்பிடுதல்.
- இலக்கியக் கருத்தினை உட்கொண்டு பாடல்கள் பாடுதல்.

## மதிப்பீடு

- ஆலாபனை மதிப்பீடு செய்யப்படுகிறது.

## உள்ளடக்கம்

ஒலிவரிசைகளின் படி பாடல்களை பாடும் போது அது மிகுந்த இன்பம் அளிக்கிறது. இலக்கியத்தைப் புரிந்துகொண்டு ஒலி வரிசைகளுடன் மிகவும் லயத்துடன் அமைப்பதை இந்த அலகில் கற்றல் செயல்பாடுகள் வாயிலாக அறிதல் வேண்டும். லயம்மிக்க ஆலாபனைக்குக் குழந்தைகள் திறன் பெற வேண்டும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு-1*

- ஒரு பாடல் அதன் எதார்த்தமான ராகத்தில் ஒலிக்கட்டுப்பாடு இன்றி பாடப்படுகிறது. இதே பாடல் முழு ஆலாபனையில் தாளலயத்துடன் பாடப்படுகிறது. குழந்தைகள் கேட்கின்றனர்.
- குறிப்புகள் கொடுத்து இரு ஆலாபனைகளையும் ஒப்பிடுமாறு கூறுதல்,

  *உதாகரணங்கள்-*
  - சிறந்த ஆலாபனை எது?
  - சிறப்புத் தன்மை என்ன?
  - அபஸ்வர ஆலாபனை தோன்றியதா? காரணம் என்ன?
- இருவகை ஆலாபனைகளிலும் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது?
- குழந்தைகளின் கருத்துகள் ( தனிநபராக) ஆசிரியர் கரும்பலகையிலோ அட்டவணையிலோ பதிவு செய்யலாம்.

- குழந்தைகள் கண்டுபிடித்த கருத்துகளை ஆசிரியர் மேலும் தெளிவுபடுத்தி வகுப்பில் வெளியிடவேண்டும்.

*குறிப்புகள்*

- ஆலாபனைக்கு மெருகு கூட இலக்கியத்தின் சூழலின் முழுப்பொருளை உட்கொள்ள வேண்டும்.
- பொருள் தெரிந்தால் ஆலாபனை வாயிலாக சரியான பரிமாற்றம் நிகழ்த் துவதற்குப் பொருத்தமான ஒலிக்கட்டுப்பாடு அவசியமாகும்.( ஒலியின் கனம் கூட்டி குறைத்து, விலக்கி, சிறிதாக்கி, லயித்து...)
- பாடலுக்கு அளித்துள்ள இராகத்தின் சிறப்புத்தன்மை/ முக்கியத்துவத்தை அறிந்துகொண்டுள்ள ஒலி ஒழுங்கமைவு அவசியமாகும்.
- இத்தகைய ஒலி பாடலின் உயிராகும்.

***செயல்பாடு-2***

- பாடப்பகுதியின் பல்வேறு கருத்துகள் சுட்டும் கவிதைகளைத் தேர்வுசெய்தல்.
- குழந்தைகளை இராகம், பாவம் (உணர்வு)லயம் சுருதி எனும் நான்கு குழுக்க ளாக்கி ஒவ்வொரு கவிதை வீதம் குழுவுக்கு அளிக்க வேண்டும். பொருள் தெளிவு வர ஆசிரியர் கவனித்தல் வேண்டும். அதன் பின்னர் பாவம்( உணர் வு) உட்கொண்டு ஒலியைக் கட்டுப்படுத்தி வாசிக்கச் செய்தல் வேண்டும்.
- ஆசிரியர் செயல்பட்டு சரிபடுத்துதல்
- பின்னர் குழந்தையால் முடிந்த எளிய இசையினைச் சேர்க்கச் சொல்லுதல், தனிநபர் சொல்வதைக் குழுக்களில் மாற்றலாம். பாவம் நிலைநிறுத்துதல்.
- பின்னர் திறன்மிக்க கவிதை ஆலாபனை செய்பவர்களோ, கவிஞர்களோ ஆலாபனை செய்யும் கவிதைகளைக் கேட்கச் செய்தல்.

## மதிப்பீடு

- கருத்தாடல்களில் உள்ள நிஜம்.
- பாவம் உட்கொண்ட வாசிப்பு
- ஆலாபனைத் திறன்

*தொகுத்தல்*

பாடல்களையும் கவிதைகளையும் கருத்தினை உட்கொண்டு வாசிக்க வேண்டும். சொல்லவேண்டும். ஒலிக்கட்டுப்பாடு வாயிலாக வெளியிட இயல வேண்டும். பாவம் உட்கொண்ட ஆலாபனை முறை உயிரோட்டமுள்ளதும். இரசனை மிக்கதும் ஆகும்.

தாள லயத்துடன் பாட பயிற்றுவிக்க வேண்டும்.

# நான்காம் வகுப்பு

## அலகு – 1 : இசைக் கருவிகள்

நமது நாட்டின் சங்கீத பரம்பரை மிக வேற்றுமைகள் நிறைந்ததாகும். பாரதீய இசை என்பது இசைக் கருவிகளின் சிறப்புகளினால் மிக முன்னிலையில் உள்ளது. ஒவ்வொரு இசைக்கருவியும் ஒலியின் தனித்தன்மையால் உருவாக்கும் பாவனை என்பது வர்ணிக்க முடியாததாகும். பாடும் போது வாத்திய கருவிகளை மாற்றி நிறுத்தி பாடுவது இயலாத ஒன்றாகும். கம்பிக் கருவிகளும் துணைக்கருவிகளும் ஏராளமுள்ள நமது இசை என்பது பிற நாடுகளின் சங்கீத துறையுடன் ஒப்பிடும் போது மிக முன்னிலையில் இருப்பதைக் காணலாம். ஊடகங்கள் வாயிலாக நாம் கேட்கும் பாடலின் இரசனை ஒரு போதும் வாய்மொழிச் சிந்துவை விட இரசனைக் குறைந்ததாக இருக்காது. இரண்டு முறைகளுக்கும் அதற்கான தனித்தன்மைகள் உண்டு. வரிகள் இல்லாமல் ஒலிகளால் மட்டும் உருவாக்கப்படும் இப்படிப்பட்ட இசை நிகழ்ச்சிகள் முழுமையாக இரசிகர்களை திருப்தி அடைய செய்பவையாகும். வாத்ய கருவிகளையும் ,அவற்றின் சப்த வேறுபாடுகளையும் அவை உருவான விதம் குறித்தும் பாடும் போது பின்னனி இசையின் முக்கியத்துவம் பற்றி அறிவதே இவ்வலகின் நோக்கம்.

### கற்றல் அடைவுகள்

- பின்னணி இசையுடனான பாடல்களைக் கேட்கிறார்கள்.
- பின்னணி இசைக் கருவிகளைப் பிரித்தறிகிறார்கள்.
- இயற்கையிலுள்ள ஒலிகளுக்குப் பொருத்தமான இசைக் கருவியின் ஒலியைக் கண்டுபிடித்து விளக்குகிறார்கள் போலச் செய்கிறார்கள்.

### கருத்து, அறிவு

- ஆலாபனத்திற்கு மேன்மையையும் முழுமையையும் தருவது இசைக்கருவிகளாகும்
- வித்தியாசமான வாசிப்புகளை வெளிப்படுத்தும் இசைக் கருவிகள் உள்ளன.
- இயற்கை சத்தத்திற்கும் இசைக்கருவிகளின் சத்தத்திற்கும் ஒற்றுமையுண்டு.
- இவற்றை பிரித்தறிய முடியும்
- ஒலி ஒற்றுமையை கண்டறியும் திறன்.

## செயல்பாடு

- இசைக்கருவிகளைப் பாடலுக்கேற்ப இயல்பாக வாசிப்பதைக் கவனிக்கிறார்கள்.
- வெவ்வேறு இசைக்கருவிகளிலிருந்து எழும் நாத வித்தியாசத்தை பகுப்பாய்வு செய்கிறார்கள்.
- இயற்கை ஒலிகளையும் இசைக்கருவிகளின் ஒலிகளையும் கேட்கிறார்கள்( சி.டி)
- இவற்றின் ஒற்றுமையை விவாதிக்கிறார்கள். ஒற்றுமையைக் கண்டுபிடித்து அட்டவணை தயாரிக்கிறார்கள். விளக்குகிறார்கள்.
- இயற்கையான ஒலிகளைப் போல ஒலி எழுப்புகிறார்கள்.

## மதிப்பீடு

- இசைக்கருவிகள் இசைப்பதைப் பிரித்தறிகிறார்கள்.
- ஒலி ஒற்றுமையைப் பிரித்தறியும் திறன்.
- மதிப்பீடு
- வெளியிடும் திறன்

## உள்ளடக்கம்

பாடும் போது இசைக்கருவிகள் தரும் மேன்மைகளைப் பிரித்தறிந்து அவற்றின் அமைப்பு, உபயோகிக்கும் முறை. தனித்தன்மைக் கேற்ப வகைப்படுத்துதல் தோற்றத்தைப் பற்றி பொதுவான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்பதே இந்தப் பாடப்பகுதியின் நோக்கமாகும். இயற்கையும் இசையும் எந்தளவிற்கு ஒன்றிணைந்துள்ளது என்பதையும் இயற்கையே இசைக்கருவிகளுடையவும் அதிலிருந்து தோன்றும் நாதத்தின் அடிப்படை என்ற உண்மையை கற்றுக் கொடுக்க வேண்டுமென்பதே இந்த அலகின் நோக்கமாகும். வித்தியாசமான இசைக்கருவிகளையும் அதிலிருந்து எழும் ஒலி வித்தியாசத்தையும் பிரித்தறிவதற்கான செயல்பாடுகள் இந்த அலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு 1*

- ஆசிரியர் சேகரித்த வைத்துள்ள பாடல்களிலிலிருந்து சிலவற்றைக் குழந்தைகளை கேட்க வைக்கிறார்.

*எ.கா.: ;சினிமா பாடல்கள், கார்ட்டூன் பாடல்கள்*

- ❖ குஞ்னுகுஞ்னு பட்சி ( தகரச்செண்ட)
- ❖ குக்குரு குக்கு ( வெள்ளி நட்சத்திரம்)

❖ அண்ணாரக் கண்ணா ( செல்லுலாய்ட்)

❖ கண்ணாம்தும்பீ ( காக்கோத்திக் காவிலே அப்புப்பன் தாடிகள்)

பின்னணி இசையுடன் கேட்ட பாடலைப் பின்னணி இசை இல்லாமல் ஆசிரியர் பாடுகிறார்.

- இரண்டு பாடலையும் ஒப்புமைப்படுத்துகிறார்கள்

*குறிப்புகள்*

- ஆலாபனத்தில் மிகவும் பிடித்தது எது?
- பிடித்த பாடலின் கருத்தைப் புரிந்து கொள்ள முடிந்ததா?
- இசைக் கருவிகளின் இசையுடனான பாட்டின் தனித்தன்மை என்ன?
- பின்னணி இசை சேர்ந்த பாடலை விரும்புவதற்கு காரணம் என்ன?

- *ஆசிரியரின் எளிய விளக்கம்.*

பாடலின் கருத்திற்கு தெளிவு ஏற்படுவதும் முழுமையான இராகமும், தாளமும், பாவமும் சேர்ந்து இரசிக்க வைப்பது இசைக்கருவிகள் சேர்ந்து ஒலிக்கும் இசையின் மூலமாகும். இசையை கவர்ச்சிகரமாக்குவதில் பின்னணி முக்கிய பங்கு வகிக்கிறது.

- முதலில் கேட்ட பாடலில் உபயோகிக்கப்பட்ட இசைக்கருவிகள் எவையெல்லாம்?

கண்டறிந்த இசைக்கருவிகளின் பெயர்களைக் கரும்பலகையில் எழுதலாமா?

- கரும்பலகையில் எழுதிய இசைக்கருவிகள், பிற இசைக் கருவிகளின் படங்களையும், இசையையும் கேட்க வைத்தல். சி.டி உபயோகித்து கேட்க வைத்தல்.
- வித்தியாசமான மூன்று இசைக்கருவிகளின் பெயர்களை அறிமுகப்படுத்துதல்.

*இசைக்கருவிகள்*

❖ வயலின் ❖ கீபோர்ட் ❖ கித்தார் ❖ தபேலா ❖ டிரம்ஸ் ❖ செண்டை

- இசைக்கருவிகளின் இசையையும் அமைப்பையும் விசிடி யின் உதவியுடன் அறிமுகம் செய்தல். ( ஒவ்வொரு இசைக்கருவியின் ஒலி வேறுபாடுகளை துல்லியமாக கேட்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் ஏற்ற முறையில் வரிசைப் படுத்த வேண்டும் )இதில் குழந்தை புரிந்து கொண்ட ஒலியை எழுப்பக் கூறு



தல். கேட்கச் செய்த இசைக்கருவிகள் பற்றிய எளிய விளக்கம்.

*<u>தந்தி இசைக் கருவிகள்</u>*

- வயலின் :- தந்தி வாத்தியமாகுமிது. மேற்கத்திய இசைக்கருவி. இந்தியா வில் கர்னாடக இசைக்கு பக்கவாத்தியமாக பயன்படுத்தப்படுகிறது.தந்திகளில் போ (வில்) உபயோகித்து மீட்டும் போது ஒலி உண்டாகிறது.
- கீபோர்ட் :-(ஓர்கான்) எலக்ட்ரானிக்ஸ் இசைக்கருவி. கீ யில் அழுத்தினால் ஒலி எழுப்பும். பல்வேறு இசைக் கருவிகளின் ஒலி எழுப்பலாம்.
- கித்தார் :- தந்தி வாத்தியம், மேற்கத்திய இசைக் கருவி. எல்லாப் பாடல்களி லும் இந்த இசைக் கருவியைப் பயன்படுத்துகிறார்கள். ஸ்ட்ரைக்கர் உபயோ கித்துத் தட்டி ஒலி எழுப்பலாம்.

*<u>தாள வாத்தியங்கள்</u>*

- தோல் வாத்தியங்கள் :- தபேலா- தோல் வாத்தியம் இரண்டு வாத்தியங்கள் (டக்கா + குற்றி (கர்ண)= தபல). தோலை இழுத்துக் கட்டி கைகளால் தட்டி எழுப்புகிறார்கள்.

  செண்டை- மரக் குற்றியில் தோலை இழுத்துக் கட்டி உருவாக்குகிறார்கள். செண்டைக் கம்பினால் வாசிக்கிறார்கள்
- ரிதம் பாட் ரிதம் கம்போசர் :- எலக்ட்ரானிக்ஸ் இசைக் கருவி, அனைத்து இசைக் கருவிகளின் தாளவாத்திய ஒலி

*செயல்பாடு 2*

- காற்று, குயில் இவைகளின் ஒலியை எழுப்பும் புல்லாங்குழல் ( ப்ளூட்) ஒலியை கேட்க வைத்தல். ஒற்றுமையை பிரித்தறிகிறார்கள்.
- இவ்வாறு இயற்கை ஒலிகளுடன் இணைந்துள்ள இசைக்கருவிகளைக் கண்டுபிடிக் கக் கூறுதல்.
- தெரிந்த இசைக்கருவிகள் சிலவற்றை இசைக்க முயற்சித்தல்.
- இயற்கையின் அற்புதங்கள், உயிரினங்கள் இவற்றின் ஒலிகளை மறு சீரமைப்பு செய்த பாடல்களை கேட்கச் செய்தல்.

  (மழை, காற்று, கிளிகள், ஆறு, கடலின் சத்தம்)

  *<u>பாடல்கள் உதாரணம்:-</u>*

  - சுப்ரபாதம்... நீலகிரியுடெ
  - கிலுகிலும் கிளிமரத்தோணி...
  - ராக்கிளிதன்....
  - அம்மமழகாரினு ...
  - ஆண்குயிலெ...

## மதிப்பீடு

- வாசிப்பு முறை, இசைக்கருவிகளைப் பிரித்தறிதல்
- ஒப்புமை, வேறுபாடு அடையாளம் அறிதல்

- ஆலாபனத்தின் தனித்தன்மையை பிரித்தறிதல்.
- போலச் செய்தல்.

*தொகுப்பு*

- ♦ இயற்கையும் சங்கீதமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும். இசையை இரசிப்பதற்கும் முழுமையான இசைக்கும் சங்கீத இசைக்கருவிகளின் பின்னனி இசை அவசியமானதாகும். பல்வேறுபட்ட இசைக்கருவிகளின் கலாச் சார பாரம்பரியம் உள்ளவர்களே இந்தியர்கள்.
- ♦ எளிய இசைக் கருவிகள் முதல் வாசிப்பதில் சிக்கலான இசைக்கருவிகள் உட்பட ஏராளம் இசைக்கருவிகள் நம்முடைய பாடல்களை சிறப்புடைய தாக்குகிறது. ஒவ்வொரு இசைக்கருவியின் அடிப்படை இயற்கையாகும்.

## அலகு – 2 : தாளவாத்தியங்கள்

பிரபஞ்சத்தின் எல்லா செயல்களிலும் தாளம் நிறைந்து நிற்கிறது. தாளத்துடனான பிரபஞ்சமே எல்லா கலைகளுக்கும் அடிப்படையாகும். இசையின் கால ஒழுங்க மைப்பே தாளம். ஒவ்வொரு பாடல் வடிவங்களுக்கும் பாடும் முறைக்கும் சிறப்பும் இரசனையும் கூட்டுவது தாளமாகும். ஏராளமான தாள வேறுபாடுகளை நம்முடைய சங்கீத முறையில் பயன்படுத்தலாம். பழமொழிகளிலும் குழந்தைப் பாடல்களிலும், கதை கூறுவதிலும் தாளத்தை இயல்பாகவே வெளியிடுகிறான். அவனுடைய மன தில் புதைந்திருக்கும் தாளஅறிவை எளிய இசைக்கருவிகளில் புகுத்தவும். அதைப் பாடலின் சிறப்புக்கும் பயன்படுத்துவது தாளவாத்தியங்கள்.

## கற்றல் அடைவுகள்

- உடலசைவின் வேகத்திற்கேற்ப எளிய தாளவாத்தியங்களில் தாளம் பிடிக்கும் போது அசைவிற்கும் தாளத்திற்கும் இடையிலுள்ள பொருத்தத்தைப் பிரித்தறி கிறார்கள்.
- வேகம் கூட்டியும் குளறைத்தும் எளிய இசைக்கருவிகளில் தாளம் பிடித்தும் தெரிந்த பாடல்களைப் பாட முடிகிறது

## கருத்து, அறிவு

- தாள வாத்தியங்களை இசைக்கும் போது தாளமும் அசைவும் பொருத்தமாக இருக்க வேண்டும்.
- வேகத்தை ஒழுங்கமைக்கத் தாளவாத்தியங்கள் உதவும்.
- தாளத்துடனான அசைவிற்கு தாளவாத்தியங்களின் பின்னணியை உபயோகப்ப டுத்தலாம்.
- வேகம் கூடுந்தோறும் தாளமும் அதிகரிக்கும்.
- இசைக்கருவிகள் உபயோகிக்கும் போது பாட்டின் இரசனை அதிகரிக்கும்.
- இசைக்குழுவின் கூட்டான முயற்சியே அதன் சிறப்பம்சமாகும்.
- எளிய இசைக் கருவிகளின் உதவியுடன் பாடும் திறன்.
- பாடுவதற்கேற்ப இசைக்கருவிகளை உபயோகித்தல்.

## செயல்பாடு

- குறிப்பிட்ட வேகத்தில் கைகளால் தாளம் பிடிக்கக் கூறுதல்.
- தனியாகவும், குழுவாகவும் கையால் தாளமிட்டு தாளவேகத்தை ஒழுங்கமைத்தல்.
- வேறுபட்ட வேகத்திலுள்ள பாடல்களை ஒப்புமைப்படுத்துதல்.
- இசைக்கருவிகளுடன் சேர்ந்து பாடுதல்.
- இசைக்கருவிகள் உபயோகித்தும் இல்லாமலும் பாடும் போது ஏற்படும் இரசிப் புத்தன்மையை விவாதம் செய்தல்.
- சில பாடல்களை ஏற்ற இறக்கத்துடன் பாடுதல்.
- குழுவாகப் பாடுவதைப் பகுப்பாய்வு செய்து சரியாக முயற்சி செய்தால் சிறப்பா கப் பாடலாம் என்று கண்டுபிடித்தல்.
- அசைவுடனான தாளத்தை எளிய வாத்தியங்களில் வாசித்தல்.

## மதிப்பீடு

- அசைவுகளில் தாள ஒழுங்கமைவு
- இசைக்கருவிகளின் உபயோகம்
- அசைவுகளில் நேர ஒழுங்கமைவு.
- வேகத்தைப் பிரித்தறிதல்
- சுயமாக மதிப்பிடுதல், தனியாக மதிப்பிடுதல்.
- தாளவேறுபாட்டைப் பிரித்தறிதல்.

- இசைக்கருவிகளின் உபயோகம், சொல்லுதல், எண்ணுதல் போன்றவற்றிற்கிடையிலுள்ள பொருத்தம்.

## உள்ளடக்கம்

தெரிந்த பாடல்களை எளிய இசைக்கருவிகளின் மூலம் எவ்வாறு உபயோகிக்கலாம், தாள வித்தியாசத்திற்கும், வேக வித்தியாசத்திற்கும், வாசிப்பு முறையில் உண்டாகும் மாற்றங்களும்---தாளத்துடன் பாடும் போது உருவாகும் தனித்தன்மைகளைஎடுத்துரைப்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு-1*

- குறிப்பிட்ட வேகத்தில் எண்களை எண்ணிச் சொல்ல கைகள் தட்டி தாளம் பிடித்தல், எண்ணுவதன் வேகத்தைக் குறைத்தும் கூட்டியும் சொல்லும் போது அதற்கேற்ப அசைவையும் ஒழுங்கமைத்தல்.
- /1-----2------3-----4/ என சரியான இடைவேளைகளில் திரும்பக் கூறுதல் இதற்கேற்ப கைதட்டுதல், வேகம் கூட்டியும், குறைத்தும், சொல்லியும், அடித்தும் பயிற்சி செய்தல்
- திரும்ப திரும்பப் பயிற்சி செய்தல்.
- எண்ணிக்கைக்கும், கைதட்டுவதற்கும் சரியான பொருத்தம்
- சென்ற வகுப்புகளில் தயாரித்த எளிய இசைக்கருவிகளை உபயோகித்தல்.
    - சோடாக் குப்பியின் மூடிகளை கம்பியில் கோர்த்து மரத்தில் அடித்து வைத்த கருவி.
    - பலூனில் கடுகு நிறைத்தது.
    - சிரட்டைகள்
    - சப்ளா கட்டை
    - மூங்கில் கம்புகள்( மெல்லியது) சிரட்டையில் பலூன்/ பிளாஸ்டிக் இழுத்துக் கட்டியது
    - ஜாலரா, கஞ்சிரா, கப்பாஸ்

  எண்ணத்திற்கேற்ப இசைக் கருவிகளில் தாளம் தட்டக் கூறுதல்.
- எண்ணுவதற்கேற்ப வாசிக்க தொடங்க வேண்டும் எண்ணுவதை நிறுத்தும் போது வாசிப்பை நிறுத்த வேண்டும். சிறிய இடைவேளைக்குப் பிறகு எண்ணுவதற்கேற்ப வாசிக்கவும் மீண்டும் நிறுத்தவும் மீண்டும் சேர்ந்து வாசிக்கவும் வேண்டும்.

### *செயல்பாடு -2*

- குழந்தைகளை குழுக்களாக்குதல்.
- ஒரு குழு பாடுதல்.
- மற்ற குழுக்கள் இசைக் கருவிகளை உபயோகித்தல்.

- குழந்தைகள் பயிற்சி பெற்ற தாளத்திற்கேற்ற பாடல்களை ஆசிரியரும் குழந்தைகளும் தாளத்திற்கேற்ப சேர்ந்து பாடுதல்
- பொருத்தமான பிற பாடல்களைக் கண்டுபிடித்தல்
- தாள வேறுபாடுள்ள பாடல்களைக் கண்டுபிடித்து இசைக்கருவிகளுடன் சேர்ந்து பாடுவதற்கு பயிற்சி அளித்தல்

  *உதாரணம்*
  - பள்ளிவாள் பத்ரவட்டகம்
  - பள்ளிக்கலப்பன்றெ மோனே.
  - காட்டிலெ மானின் தோலுகொண்டுண்டாக்கி...
  - கொடியவேனல் காலம்
  - ஆராணயிலெ போணது...
  - பூபறிக்கான் போராணோ
  - அரிப்போதிரிப்போ/ அக்குத்திக்கத்தான..
  - நாரங்கப்பாலு....

- மேலே கூறப்பட்டுள்ள பாடல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிரண்டு பாடல்களை வேகம் கூட்டியும் குறைத்தும் எதார்த்த வேகத்திலும் பாட வைத்து அவற்றிற்கிடையிலுள்ள வித்தியாசங்களைப் புரிந்து கொள்ளுதல்.

## மதிப்பீடு

- அசைவுகளின் நேரந்தவறாமை
- இசைக் கருவிகளின் உபயோகம், பாடுதல், எண்ணுதல் போன்றவற்றின் பொருத்தம்
- வேகத்தைப் பிரித்தறிதல்
- தாள வித்தியாசம் பிரித்தறிதல்

*தொகுப்பு*

இசையில் நேர ஒழுங்கமைப்பே தாளம். தாள வித்தியாசமும் நேர வித்தியாசமும், கதி வித்தியாசமும் நிறைந்த இசைக் கச்சேரிகளை இரசிக்கவும் மதிப்பிடவும் வேண்டுமெனில் முதலில் அவற்றின் நேர வித்தியாசத்தைப் பற்றி அதிகமாக தெரிந்து கொள்ளவேண்டும். வகுப்பறைக்கு உள்ளேயும், வெளியேயும் நிறைந்திருக்கும் குழந்தைகள் அவர்களுடைய சங்கீத தனித்தன்மைகளை தூண்டுதலாக வெளிப்படுத்துவதற்கு இதுபோன்ற செயல்பாடுகளை நடைமுறைப் படுத்த வேண்டும்.

## அலகு – 3 : இராகமும் தாளமும்

சங்கீதம் உணர்வுகளின் மொழியாகும். மனித மனதில் உருவாகும் சிறிய சிந்தனைகளைக் கூட இசை என்ற காரணியால் ளெிப்படுத்த முடியும். நம்முடைய சிந்தனைகள் கருத்துகளை இசையால் சிறந்த முறையில் எதிரொலிக்கும் போது சங்கீதத்தின் கலாச்சார வாய்ப்புகள் நமக்கு முன்பு வெளிப்படுகின்றன. ஏராளமான வாக்கியங்களை அதிக நேரம் செலவிட்டு வெளிப்படுத்தக் கூடிய பல கருத்துகளை அர்த்த

முள்ள இசையால் விரைவாக இலட்சியத்தை நோக்கி கொண்டு செல்லமுடியும். சங்கீதம் வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல. பதிலாக எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தவும் ஏற்றுக் கொள்ளவும், பிறருக்கு கொடுக்கவும் கூடிய சிறந்த ஒரு கருவியாகும் இசை. நம்மைச்சுற்றிலும் காணப்படும் கலை வடிவங்களில் இசை முதலிடத்தைப் பெற்றுள்ளது. கற்றல் செயல்பாடுகளில் கலை உட்படும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றி எல்லா காலகட்டங்களிலும் இச் சமூகம் அறிந்திருக்கிறது..

ஒவ்வொரு உணர்ச்சிகளை இசையின் வாயிலாகப் பரிமாற்றம் செய்யும் போதும், ஏற்றுக்கொள்ளும் போதும் இயற்கையிலுண்டாகும் மாற்றம் சிறந்த பொக்கிஷமாகும்.ஒரே சூழ்நிலையையோ ஒரே உணர்ச்சியையோ வெளிப்படுத்துவதற்கான தாராளம் வாய்ப்புகளுள்ள சங்கீதத்தில் பல்வேறுபட்ட ராகங்களும் தாளங்களும் உண்டு. இராகங்களே அடிப்படை. இந்த சூழ்நிலையைப் பற்றி ஆரம்பக் கட்ட அடிப்படை உண்மைகள் சிலவற்றைக் கற்றுத்தர வேண்டுமென்பதே இந்த அலகின் நோக்கமாகும்..

ஒவ்வொரு உணர்ச்சிகளையும் சங்கீதத்தின் வாயிலாக பரிமாற்றம் செய்யும் போதும் ஏற்றுக்கொள்ளும் போதும் இந்த இயற்கையில் ஏற்படும் மாற்றம் அளப்பரியதாகும். ஒரே சூழ்நிலையையோ ஒரே உணர்ச்சியையோ ஒரே கருத்தையையோ வெளிப்படுப்படுத்துவதற்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ள சங்கீதத்தில் வேறுபாடுகள் நிறைந்த இராகங்களும் தாளங்களும் உண்டு. இராகங்களே ஈனத்தின் அடிப்படை. இந்த சூழ்நிலையைப் பற்றி முக்கியமான அடிப்படை கருத்துகளை வழங்குவதென்பதே இந்த அலகின் நோக்கமாகும்.

## கற்றல் அடைவுகள்

ஒரே சூழ்நிலையை வெளிப்படுத்தும் வேறுபட்ட இராகங்களிலும், தாளங்களிலுமுள்ள இசையைக் கேட்டு, இராகம், தாளம் போன்றவற்றின் வாய்ப்புகளை பிரித்தறிதல்

## கருத்து, அறிவு

- ஒரு சூழ்நிலையை வெளிப்படுத்துவதற்கு பல்வேறான இராகங்களையும், தாளங்களையும் பயன்படுத்தலாம்.
- இராக, தாள வாயப்புகளைப் பிரித்தறிதல்.

## செயல்பாடு

- ஒரு சூழ்நிலையை வெளிப்படுத்தும் வெவ்வேறான இராகத்திலுள்ள பாடல்களைக் கேட்கவும் பாடவும் செய்தல்.
- இராக வேறுபாட்டைப் பிரித்தறிதல்.

## மதிப்பீடு

- இராகம், பாவம் இவற்றுடன் தொடர்புடைய எளிய வினாக்கள்

## உள்ளடக்கம்

இராகங்களும், தாளங்களும் கருத்து பரிமாற்றத்திற்கு எந்தளவிற்குப் பொருத்தமானது, அவற்றின் வாய்ப்புகள் என்னவெல்லாம் என்று பிரித்தறிகிறார்கள். சூழ்நிலைக்கும் கருத்துக்கும் ஏற்ப நாம் கேட்டுப் பழகிய இராகங்களையும். தாளங்களையும் பயன்படுத்தி கருத்துகளை-----செயல்படுத்துவதெப்படி

யென்று இந்த அலகில் பார்க்கலாம். ஒவ்வொரு ராகத்தின், தாளத்தின் சிறப்புத் தன்மைகளை இதன்மூலம் பிரித்தறியலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- பாலேட்டன் என்ற திரைப்படத்தின் " இன்னலெ என்ற நெஞ்சிலெ..." என்ற பாடலை குழந்தைகள் கேட்கின்றனர்.
- இதன் அடிப்படையில் கீழ்காணும் வினாக்கள் எழுப்பப்படுகிறது.
    - பாடலை கேட்டபோது தோன்றிய அனுபவம்?
    - இந்த ராகத்தின் பாவம் என்ன?
    - எந்த அளவில் வரிகளும் இராகமும் பொருந்துகின்றன?
    - இது எந்த சூழலைப் பிரதிபலிக்கின்றது?

  இதே சூழலைப் பிரதிபலிக்கும் இரண்டு மூன்று பாடல்களைத் தேர்வு செய்கின்றனர்.
    - "ராக்கிளிதன் வழிமாயும்...."
    - "சூர்யனாய் தழுகியுறக்கமுணர்த்தும்..."
    - "ராமகதாகானாலயம்..."
- இந்தப் பாடல்களை கேட்கச் செய்தல்
- குழந்தைகளை மூன்று குழுக்களாகப் பிரித்தல்
- மூன்று பாடல்களின் சிறப்புத் தன்மைகள், விவாதம்.

  *குறிப்புகள்-*
    - வெளிப்படுத்திய உணர்ச்சி- பாவம்
    - இரசனை
    - வரிகளுக்கும் இராகத்திற்கும் உள்ள பொருத்தம்
    - சூழ்நிலையை கூடுதல் சிறப்புடையதாக்க பாடல் எந்தளவிற்கு உதவியாக இருந்தது?
- பிற குழுவினருக்கு கிடைத்த பாடலின் இராகத்திற்கு என்னவெல்லாம்?
- மூன்று குழுக்கள் கண்டுபிடித்த உண்மைகள்- வெளியிடுதல்
- வேறுபட்ட இராகத்திலுள்ள பாடலாக இருந்தாலும் வெளிப்படும் சூழலும் உணர்ச்சியும் ஒன்றாகும். ஒரே பாவம், உணர்ச்சி, சூழ்நிலை இவற்றை வெளிப்படுத்துவதற்கு வித்தியாசமான இராகங்களையும், தாளங்களையும் பயன்படுத்தலாம்.

### *செயல்பாடு -2*

- கவலை, சந்தோசம், பாசம், பிரிவு, பக்தி போன்ற பல்வேறு உணர்ச்சிகளுள்ள பாடல்களைக் கண்டுபிடிக்கக் கூறுதல்.

*உதாரணம்-*

- சோகம் - மௌனமே...
- மகிழ்ச்சி - தாங்கணக்கம் தில்லம் தில்லம்
- பாசம் - தாமரகண்ணனுறங்ஙேணம்
- பிரிவு - யாத்ரயாயி...கண்ணீரில்
- பக்தி - கார்முகில் வர்ணன்றெ...

- குழந்தைகள் கண்டுபிடித்த பாடல்களின் தொகுப்பை வெளியிடுதல்
- குழந்தைகளையே சில பாடல்களைப் பாடச்சொல்லுதல்
- .-------வெளிப்படுத்தலுக்கு இராகத்தின் வாய்ப்பை புரிந்துகொள்ளுதல்.

## மதிப்பீடு

- கலந்துரையாடல்.
- இராகங்களின் சரியான பாவம் பிரித்தறிதல்
- அட்டவணை செய்யப்பட்ட பாடல்கள்
- பாடுதல், வெளியிடுதல்

*தொகுப்பு*

இராகங்கள் கருத்தைப் பகிர்ந்தளிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் வழிகோலுகிறது. ஒவ்வொரு இராகத்திற்கும் அதற்கேற்ற பாவமும், சிறப்புத் தன்மைகளும் உள்ளன. பிற கலைவடிவங்களுக்கு இசையின்––— தவிர்க்கமுடியாததற்கு காரணம் இதுவேயாகும். ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொரு பாவத்தை வெளிப்படுத்தும் வேறுபாடுகள் நிறைந்த இராகங்களையும், தாளங்களையும் பயன்படுத்துவதுண்டு. இராகத்தின் சிறப்புத் தன்மையையும். தனித்தன்மையையும் மனதில் கொண்டு இராகத்தைப் பயன்படுத்தும் போது மட்டுமே உண்மையான பாவம் உருவாகிறது.

## அலகு 4 ராகம், தாளம், பாவம்

மொழியின் சிறப்பான வடிவமே கவிதைகள். இலக்கியத்தின் அழகு உட்கொண்டு ரசிகர்களின் இதயங்களில் இடம்பிடிக்கும் கவிதைகள் காலங்காலமாக சமூகத்தில் உருவாகும் சலனங்கள் சிறிதல்ல. கவிதைகள் சங்கீதத்தோடு சேரும் போது கவிதையின் பல்வேறு தளங்களை காணமுடியும். எந்தவொரு கருத்தும் கவிதைக்கு ஏற்றதாக இருக்கும் போது சமூகத்தில் வெகுவாக சென்று சேர இவ்வகை கவிதைகளுக்கு இயலுகிறது. கவிதைக்கு சங்கீதம் அளிக்கும் செயல் கூடுதல் சிறப்பாக படைக்க வேண்டியுள்ளது.

## கற்றல் அடைவுகள்

பாடப்பகுதியிலுள்ள பல்வேறு கவிதைகளைப் பொருத்தமான இராகம், பாவம், தாளம் போன்றவைகளுடன் குழுவாக வெளியிடுதல்.

## கருத்து அறிவு

- பாவனையுடன் பாடுவதற்கு தகுந்த இராகம் நல்குதல்
- பாடுவதற்கு சப்த ஒழுங்கமைப்பு தருவதன் மூலம் கருத்து வெளியீடு சிறந்த முறையில் அமைகிறது

## செயல்பாடு

- கவிதையின் கருத்து மண்டலத்தை விளக்குதல்
- கவிதையின் இலக்கியம், கருத்து போன்றவற்றைப் பற்றி கலந்துரையாடுதல், இராகத்தில் பாடுதல்.
- வித்தியாசமான பாவனைகளுடன் பாடுதல்
- பாவனை மற்றும் இலக்கியப் பொருத்தம் பற்றி கலந்துரையாடுதல்

## மதிப்பீடு

- மெட்டமைத்தல்.
- பாடுவதை அடிப்படையாகக் கொண்டு தனிநபர் மதிப்பீடு/ சுயமதிப்பீடு.
- கவிதைக்கு மெட்டமைத்தல்( குழு/ தனிநபர்)

## உள்ளடக்கம்

கவிதைகளின் கருத்திற்கேற்ப மெட்டமைத்தல், பாவனையும், தாளமும் சேர்த்து பாடப்பகுதியிலுள்ள கவிதைகளை எவ்வாறு வெளியிடலாம், கவிதைக்கு மெட்டமைக்கும் போது கவனிக்க வேண்டிய முக்கிய காரியங்கள் எவையெல்லாம் என்பதாகும் இந்த அலகின் உள்ளடக்கம்.

## கற்றல்செயல்பாடுகள்

### *செயல்பாடு -1*

- குழந்தைகளுக்குத் தெரிந்த கவிதைகள், பிரபல பாடகர் பாடிய பாடல்களின் சிடி அல்லது ஆசிரியர் பாடுவதை கேட்கச் செய்தல்.

  *உதாரணம்*

  - கோதுமை மணிகள்
  - குஞ்ஞேட்டத்தி

- கவிதையைக் கேட்ட பிறகு கவிதையை இரசித்தல்

- கவிதை வாசிப்பு விருப்பமாக இருந்ததா?
- இராகமும் தாளமும் எந்தளவிற்கு பொருந்தியிருந்தது?
- இராகத்துடன் கவிதையைச் சொல்லும் போது சாதாரணமாக சொல்வதிலிருந்து என்ன வேறுபாடு தோன்றியது?
- குழந்தைகள் வாய்மொழியாகக் கூறும் கருத்துகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
- கவிதைகளைக் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஏற்ற முறையில் மெட்டமைக்கும் போது கூடுதல் இன்பமும் கேட்பதற்கு இனிமையும் கூடும்.

*செயல்பாடு -2*

- பொருத்தமான மெட்டைக் கண்டுபிடிப்பதற்காக பாடப்பகுதியிலுள்ள நான்கு கவிதைகளை ஆசிரியர் கண்டுபிடிக்க வேண்டும்.
- குழந்தைகளை நான்கு குழுக்களாக்கிய பின் நான்கு குழுக்களுக்கும் கவிதை களை கொடுக்க வேண்டும்.
- கவிதைகளை தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டியவை
  - கருத்து வித்தியாசம்
  - தாளத்திற்கேற்ப சொல்லும் முறையிலுள்ளவை.
- ஒவ்வொரு குழுவிலும் ஒருவர் வீதம் கவிதை வரிகளை சத்தமாக வாசிக்கக் கூற வேண்டும். வாசித்த பின் குழுவில் கவிதையின் கருத்தைப் பற்றி கலந்துரையாட வேண்டும். ( ஆசிரியர் ஈடுபாடும், உதவியும் தேவை)
- குழந்தைக்கு ஏற்ற மெட்டை கண்டுபிடித்தல் - பயிற்சி அளித்தல்.
- குழந்தைகளை குழுக்களாக்கி கவிதை வாசிக்கச் சொல்லுதல்.
- ஒவ்வொரு குழுவினர் வெளியிடும் போது பிற குழுக்கள் மதிப்பிடவும், இரசிக்க வும் வேண்டும்.

  *குறிப்புகள்*
  - உச்சரிப்புத் தூய்மை
  - பாவனை
  - ஒருமித்து பாடுதல்
  - மெட்டமைப்பதில் தனித்தன்மை ( பொருத்தம்)
- குழந்தைகளின் மதிப்பீட்டிற்கும், இரசனைக்கும் ஏற்ப கவிதைக்கு மெட்டமைத்த தைப் பற்றி ஆசிரியர் கூடுதலாக விளக்கிக் கூற வேண்டும்.
  - வரிகளுக்கும், கருத்துக்கும் ஏற்ப மெட்டை தேர்ந்தெடுக்க வேண்டும்.
  - பொருள் மாறுபடாமல் சொல்ல வேண்டும்.
  - வரிகளின் உச்சரிப்பு, ஒருங்கிணைத்தல் எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.
  - இசையின் தாக்கம் மெட்டமைக்கும் போது கூடுதலாக இருக்கக் கூடாது.
- குழந்தைகள் வெளியிட்ட கவிதைகளைப் பதிவு செய்து வைக்க வேண்டும். ( ஐடி வாயப்புகளைப் பயன்படுத்த வேண்டும்).
- நான்கு கவிதைகளையும் ஆசிரியர் கூற வேண்டும்.

## மதிப்பீடு

- 
- கருத்தை கிரகித்தல்
- மெட்டமைத்தல்
- வெளியிடுதல்
- இரசனை மற்றும் மதிப்பீட்டின் ஒருங்கிணைப்பு

*தொகுப்பு*

மொழியின் தனித்தன்மைகள் உட்படும் கவிதைகளுக்கு மெட்டமைக்கும் போது ஏராளமான காரியஹாகளை கவனத்தில் கொள்ளவேண்டும் மொழியின் தனிதி தன்மைகளுக்கும் கருத்திற்கும் பிரச்சினை ஏற்படாமல் பொருத்தமாகவும் கேட் பதற்கு இன்பமுடையதாகவும் இருக்கும்படி மெட்டமைக்க வேண்டும். எல்லா கவிதைகளையும் தாளத்துடன் வாசிக்க முடியாது எனினும் தாளத்துடன் வாசிக் கக் கூடிய கவிதைகளின் உச்சரிப்பில் எழுத்துப்பிழை ஏற்படக்கூடாது. இலக்கி யத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் மெட்டே கவிதைக்கு சிறந்ததாகும்.

# அலகு 4: தேசபக்திப் பாடல்கள்

நம்முடைய நாட்டின் பெருமையை பறைசாற்றுவதில் தேசிய கானமும், தேச பக்தி பாடல்களும் நம் இசை உலகில் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளன. பாரத மண்ணில் போராடி உயிர் தியாகம் செய்த ஏராளம் புண்ணிய ஆத்மாக்களின் நினைவுகளை நம்மிடம் பறைசாற்றுவதில் இந்தப் பாடல்கள் வகித்த பங்கு சிறியதல்ல. உலகநாடுக ளின் தனிகவனத்தைப் பெற்ற நம்முடைய தேசியகானம் அதன் தனித்தன்மையுடன் எக்காலமும் நிறைத்து நிற்கும்.

பாரத சங்கீதத்தின் தனித்தன்மைகளையும் வேறுபாடுகளையும் இந்தப் பாடல் நமக்கு உணர்த்துகிறது. ஆத்ம சமர்ப்பனத்துடனும், சங்கீத அறிவுடனும் பாடவேண் டிய தேசிய கானத்தையும் தேசபக்திப்பாடல்களையும் அவற்றின் சங்கீதப் பின்ன ணியையும், பாடும் முறைகளையும், சில வரையறைகளுக்குட்பட்டு பாடும் முறைக ளையும் இவ்வலகில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## கற்றல் அடைவுகள்

தேசிய கானம், தேசபக்திப் பாடல்கள் போன்றவற்றின் கருத்தை உணர்ந்து சுருதியுட னும் தாளத்துடனும் பாடுதல்

## கருத்து, திறன்

- அந்தந்த நாட்டின் தனித்தன்மையையும் இசைக் கலாச்சாரத்தையும் உள்ளடக் கிய தேசிய கானங்கள் எல்லா நாடுகளுக்கும் உள்ளன.

- தேசபக்திப் பாடல்களைக் குழுவாகப் பாடுவதால் குழு உணர்வும் தேசிய உணர்வும் உண்டாகிறது.
- ആശയഗ്രഹണം ആലാപനത്തിന് മാറ്റുകൂട്ടുന്നു.
- வரையறுக்கப்பட்ட கால அளவிற்குள் தேசியகானத்தைப் பாட வேண்டும்

## செயல்பாடு

- பல்வேறு தேசபக்திப்பாடல்களைப் பாடுதல்
- பாடலின் பொருளைக் கண்டுபிடித்தல்.
- குழுவாகப் பாடும் போது தனித்து நிற்கும் சப்தம் யாருடையதென்று கண்டுபிடித்தல்
- சுருதியைப் பயன்படுத்திப் பாடுதல்

## மதிப்பீடு

- சுய மதிப்பீடு/ பரஸ்பர மதிப்பீடு
- பங்களிப்பை மதிப்பிடுதல்
- நேர்முகத்தைப் பற்றிய பிரதிபலிப்பு
- எளிய வினாக்கள்

## உள்ளடக்கம்

தேசியகானத்தின் வரலாற்று முக்கியத்துவத்தையும் சங்கீத முக்கியத்துவத்தையும் மிகத்தெளிவாக தெரிந்துகொள்ளுதல், சரியாகவும் ---------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
------------------------------------------------------------------------
-----------------------------------------------------------------

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

- ஆர்கெஸ்ட்ரா பின்னணி இசையுடன் பாரதத்தின் தேசிய கானமான ஜனகணமன ஆடியோ சிடி யைக் கேட்கச் செய்தல். பாடலின் தனித்தன்மையை புரிந்து கொள்ள ஆடியோ சிடியுடன் சேர்ந்து அனைவரும் பாடுதல். பாடிய பின் தனித்தனியாக எழுதக் கூறுதல். எழுதியதை ஒருவருக்கொருவர் கைமாறுதல். ஆசிரியர் முன் னரே எழுதிவைத்த சார்ட்டை வெளியிடுதல். சார்ட்டைப் பார்த்து குழந்தைகள் தவறைத் திருத்தட்டும்
- தேசிய கானத்தின் முக்கியத்துவத்தைப் பங்கிடுகிறார்கள்.
- நாட்டின் அதிகார பூர்வமான பாடல்
- நாட்டின் தனித்தன்மையையும் சிறப்புகளையும் உள்ளடக்கியப் பாடல்.

- பாடல் ஆசிரியர்- இரவீந்திரநாத தாகூர்
- இசை- இராம் சிங் தாக்கூர்
- வங்காளமொழியில் எழுதப்பட்டுள்ளது.

*அனைத்து நாடுகளிலும் இசைமுறையில் நடைமுறையில் உள்ள இராகமே இதன் ரிதமாகத் திட்டப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மக்கள் ரசனை சார்ந்தது. ஈர்ப்புத் தன்மை உடையது.*

- தேசியகானத்தின் பொருளை விளக்குதல். தேசிய கானத்தைத் தாளத்துடனும் உச்சரிப்பு பிழையின்றியும் பாடுதல்.
- ஒவ்வொரு வரியையும் சொல்லச் சொல்ல திரும்பப் பாடுதல்.
- சரியான தாளத்துடன் பாடச்சொல்லுதல்
- வரையறுக்கப்பட்ட நேரமான 52 செகண்டிற்குள் பாடுவதற்கு பயிற்சி பெறுதல்.
- 52 செக்கண்டிற்குள் பாடுவதற்கான வேகக் கட்டுப்பாட்டு பயிற்சி ( ஆடியோ சிடி இணைப்பு).
- பல குழுக்களாகப் பிரிந்து பயிற்சி செய்தல்- பாடுதல்
- பாடுவதை, குழுக்களும் ஆசிரியரும் மதிப்பிட வேண்டும்..
- ஆசிரியர் சரியான நேரத்திற்குள்ளாகவும் தேச பக்தியுடனும் பாடிக்காட்டுதல். முன்னர் நன்றாகப் பாடிய குழுவிற்குப் பாடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.

## தேசியப் பாடலின் கருத்து

*அனைத்து மக்களின் உள்ளங்களின் தலைவனும் நாயகனுமானவனை பாரதத்திற்கு அதிர்ஷ்டத்தை அமைத்துக்கொடுத்தவனை நீங்கள் ஜெயித்தாலும், பஞ்சாப், சிந்து, குஜராத், மகாராஷ்டிரம், திராவிட, ஓரீசா, வங்காளம் எனும் கொடுமுடிகளும், யமுனை, கங்கை எனும் நதிகளும் கடலில் அலையடித்து உயரும் அலைகளும் தங்களின் சுபநாமம் கேட்டு விழித்தெழுந்தன. உங்களின் சுபங்களுக்காகப் பிரார்த்திக்கின்றன. உங்களின் சுப பாடல்களைப் பாடுகின்றன. அனைத்து மக்களுக்கும் மங்களம் அளிக்கின்றன. பாரதத்தின் புண்ணிய படைப்பாளியே நீங்கள் வெற்றிபெற்றலாலும்! வெற்றி பெற்றலாலும்! வெற்றி பெற்றாலும்!*

*உங்களின் குரல் என்றும் எங்கேயும் பரவுகின்றது. உங்களின் மேன்மைமிகும் சொற்கள் கேட்டு இந்துக்களும், பௌத்தரும், சீக்கியரும், சமணசமயத்தவரும், பார்சிகளும், இசுலாமியரும், கிறித்தவர்களும் உள்நாட்டினரும் , மேலைநாட்டினரும் தங்களின் சிம்மாசனத்தின் அருகில் வந்து சேர்கின்றனர். அன்புமாலைகள் உருவாக்கப்படுகின்றன புண்ணிய படைப்பாளியே நீங்கள் வெற்றி பெற்றாலும்! வெற்றி பெற்றாலும்! வெற்றி பெற்றாலும்!*

*பாதையோ உடைந்தும் உயர்ந்தும் சமமில்லாது கிடக்கின்றது. யுகயுகமாக யாத்திரிகர் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். ஹே! நித்திய சாரதி, உங்களின் தேர் சக்கரங்களின் ஒலியினால் வழிகள் இரவும பகலும் முழக்கம் கொண்டுள்ளன. அவலப்புரட்சியின் நடுவில் வேதனைகளிலும், சோகங்களிலும் இருந்து முத்தி பெற உங்களின் சங்கொலி முழங்கிக் கொண்டே இருக்கிறது. மக்கள் கூட்டங்களின் வழிகாட்டியான பாரதத்தின் புண்ணிய படைப்பாளியே நீங்கள் வெற்றிபெற்றாலும்! வெற்றி பெற்றாலும்! வெற்றிபெற்றாலும்!*

*கூரிருள் நிறைந்த நடுஇரவில் கொடிய துன்பங்கள் அனுபவிக்கின்ற தேசத்தில் உங்களின் சலனமற்ற கண்களின் சளுசலமற்ற ஐஸ்வர்யம் உயிரோட்டத்துடன் நிலைத்து நின்றிருந்தது. தீய கனவுகள் காணும் போதும், துன்பம் அனுபவிக்கும் போதும் அன்புபூண்ட தாயான நீங்கள் மடிமேல் அமரச் செய்து காத்துக் கொண்டாய். மக்கள் கூட்டத்தைத் துன்பத்திலிருந்து காக்கின்ற பாரதத்தின் புண்ணிய படையாளியே நீங்கள் வெற்றி பெற்றாலும்! வெற்றி பெற்றாலும் ! வெற்றி பெற்றாலும்!*

*செயல்பாடு- 2 ( தேசிய கீதங்களை அறிமுகப்படுத்துதல்)*

- சாரே ஜஹாம் சே அச்சா (உருது மொழியில் முகம்மது இக்கபால்.)
- வந்தே மாதரம்- பக்கிம் சந்திர சாட்டர்ஜி- சமஸ்கிருதம்)

- பாடலை சார்ட்டில் எழுதி வெளியிட வேண்டும். அதைக் குழந்தைகளிடம் நோட்டுப் புத்தகத்தில் எழுதக் கூறவேண்டும். கருத்தை விளக்கிக் கூறுதல் வேண்டும்
- ஒவ்வொரு வரியையும் சொல்லச் சொல்ல மாணவர்கள் திரும்பப் பாடுதல்( ஆசிரியர் இராகம் மட்டும் போடுதல் வேண்டும் )
- இராகத்தைப் புரிந்து கொண்டு குழந்தைகள் இராகத்துடன் வரிகளையும் சேர்த்துப் பாடுகிறார்கள்.-------
- குழுவாகப் பாடுதல்
- அந்த வட்டாரத்தில் புழக்கத்திலுள்ள தேசபக்திப் பாடல்களை சேகரித்தல். குழுவாகப் பாடுதல்.
- நாட்டின் முக்கிய நாட்களில் குழுக்களாகச் சேர்ந்து தேசபக்திப் பாடல்களை பாடுவதற்குத் தயாராக வேண்டும்.

## மதிப்பீடு

- தேசப்பற்றுடன் பாடுதல்.
- தாள அறிவு
- குழு உணர்வு
- பாடுவதை ஒருங்கிணைத்தல்
- வெளிப்பாட்டின் தூய்மை

# 7.3



# நடனம்



# நடனம்

## முன்னுரை

இவ்வுலகம் அசைந்து கொண்டே இருக்கிறது. உடல் அசைவுகளில் ஒளிந்திருக்கும் தாளத்தை அழகுபடுத்தி வெளிப்படுத்துவதே நடனம். உடலின் சக்தியை கட்டுப்பாடுடன், முறைப்படுத்தி வெளியிட நடனம் உதவுகிறது. சமூக ரீதியிலான ஒருங்கிணைப்பு உடலின் திறன், அழகைக்குறித்துள்ள அறிவு என்பவையை மேம்படுத்த நடனம் மிகப்பெரிய பங்களிக்கிறது.

எல்லாக் கலைகளுக்கும் இருப்பது போன்று நடனத்திற்கும் முக்கியமான இரண்டு பகுதிகளுண்டு. வடிவம், பாவனை என்பவையாகும் அது. இதில் சாதாரண மக்கள் பாவனை என்பதையே விரும்புகின்றனர். ஒரு நடனத்தோடு கூடிய கதையே, சூழலே, கருத்தோ என் ஏதெனினும் அது பாவனை எனப்படும். பாவனையை வெளியிடும் உடலே அதன் வடிவும்.

எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் கலை எனில் அவனுடைய மனது பாவனையையும், உடல் வடிவமும் என்று பொருள். சாதாரண இரசிகர்கள் வடிவத்துடன் வெளிவரும் பாவனையை இரசிக்கின்றனர். பண்டிதர்கள் பாவனை வெளிவரும் முறையை வடிவத்தின் வழி இரசிக்கின்றனர். பாவனையின் வடிவ வேறுபாடுகளே பல நடன வடிவங்கள்.

நமது மாணவர்களும் முதலில் பாவனையை இரசிக்கின்றனர். அதனால் தான் அவர்கள் முதலில் பாவனையை தெரிந்துகொள்ளட்டும் கதை வடிவத்தில் ஒரு நடனம் ( ஒரு தனிப்பட்ட கலை வடிவம் என்ற முறையில் அல்லாமல் சாதாரண வேடத்தில் செய்வது நன்று) வெளியிட வாய்ப்பு அளிக்கவும்.

இவ்வாறு கண்டறிந்த, இரசித்த, பாவனையை சுயமாக செய்து அனுபவிப்பதாக வேண்டும். அடுத்த நிலை அதன் வழி உருவாகும் அசைவு முறைகளே 'நடனம்' என்ற பெரிய பின்னணியிலுள்ளது என்று மாணவர்கள் அறிய வேண்டும். திறனோடு கூடி, தாளத்தோடு 'உடல்' என்ற உடகத்தின் வழி இசையோடு கூடி அசைவது எவ்வாறு என்று மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் பயிற்சி அமையவேண்டும். பூ மூக்கின் அருகில் வருகின்ற உத்தி. நுகர்வதற்கு அவனுக்கு தெரியும். தெரிந்து கொள்ளும்வரை இதைத் தேர்ந்தெடுக்கலாம். உடலின் வாய்ப்புகளைப் பாடப்புத்தகத்தின் வழி அல்லது சிக்கலான கோட்பாடுகளின் வழி அவர்கள் அறிய வேண்டும். முழு சுதந்திரத்துடன் ஆடுவதற்கான சூழல் ஏற்படுவதே இங்கு தேவை. முழு சுதந்திரமாக என்றாலும் சூரியனும், சந்திரனும், காற்றும் அசைவதில் உள்ள உள்ளார்ந்த கட்டுப்பாடு போன்று. பின்னணி இசையும், தாளமும் அவர்களைக் கட்டுப்படுத்துகிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

# கற்றல் அடைவுகள்

## முதல் வகுப்பு

- வட்டார விளையாட்டுகளை விளையாட முடிகிறது.
- தொழிலுடன் தொடர்புடைய விளையாட்டுகளை விளையாடுதல்.
- நடனத்தின் வாயிலாக உடலமைப்பைப் பெறுகிறார்கள்.
- பல்வேறு சூழ்நிலைக்கேற்ப தனியாகவும், குழுவாகவும் உடலை தாளத்துடன் அசைக்கிறார்கள்.
- இயற்கையிலுள்ள உயிரினங்களைப் போல நடனமாடுகிறார்கள்.
- உடல் அசைவின் மூலம் எளிய கருத்துகளைப் பரிமாற முடிகிறது.
- வாய்மொழிச் சிந்திற்கேற்ப சுவடுவைக்கிறார்கள்.

## இரண்டாம் வகுப்பு

- வட்டாரத்திலுள்ள பழக்கமான விளையாட்டை நடனவடிவத்தில் உற்றுப் பார்க்கிறார்கள், பயிற்சி பெறுகிறார்கள்.
- தாளத்தின் வேகத்திற்கேற்ப சுவடுகள் வைக்க முயற்சி செய்கிறார்கள்.
- உடல் அசைவின் மூலம் உயிரினங்களைப் போல தாளத்துடன் செய்து காட்டுகிறார்கள்.
- தொழில்களுக்கேற்ற வாய் சிந்துகளையும் அதற்கேற்ற நடனமுறைகளையும் உற்றுப் பார்க்கி றார்கள்.
- உடல் அசைவு பற்றிய காரியங்களைக் கவனிக்கிறார்கள்

## மூன்றாம் வகுப்பு

- வட்டாரத்திலுள்ள பழக்கமான விளையாட்டுகள் நடனங்களை உற்றுப் பார்த்து தனித் தன்மை களை புரிந்து கொள்கிறார்கள்.
- 3,4, 5 அடிகள் ( எழுத்து) உள்ள தாள வரிசைக் கேற்பப் பயிற்சி பெறுகிறார்கள்.
- இசைக் கேற்ப அசைவு தாளம் போன்றவற்றின் வேகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான திறனைப் பெறுகிறார்கள்.
- கதாப் பாத்திரத்தை உயிரோட்டத்துடன் வெளியிடுவதற்கு உடலையும் ஒலியையும் சரியான முறையில் உபயோகிக்கிறார்கள்.
- எளிய பாடல்களுக்கு-------- தருகிறார்கள்.
- இயற்கையிலுள்ள பல்வேறு ஒலிகள் அசைவுகள் போன்றவற்றை உற்றுநோக்கி அதைப் போல செய்யவும், அவற்றைக் குழுவில் எடுத்துரைக்கவும், குழுவாகவும், தனியாகவும் வெளியிடச் செய்கிறார்கள்

## நான்காம் வகுப்பு

- கேரளத்தின் பல்வேறு பகுதிகளில் நடைமுறையிலுள்ள வட்டார விளையாட்டுகள், நடனமு றைகள் போன்றவற்றைக் கண்டுபிடிக்கிறார்கள்.
- 7, 9 அடிகள் ( எழுத்துகள் ) உள்ள தாளமுறையில் பயிற்சி பெறுகிறார்கள்.
- ஒவ்வொரு நடனமுறைக்கும் தனித் தனியான வேட அமைப்புகள் உண்டென்ற அறிவு பெறுகி றார்கள்.
- வேகம் கூட்டியும், குறைத்தும் எளிய இசைக் கருவிகளில் தாளத்துடன் தெரிந்த பாடல்களைப் பாடமுடிகிறது.
- മെയ്‌വഴക്കം നേടുന്നു
- இயற்கையிலுள்ள சில பறவைகளின் அசைவுகளை நடன முறையில் வெளியிடுகிறார்கள்.
- கண், கழுத்து போன்றவற்றை எளிதாக அசைக்க முடிகிறது.

# முதல் வகுப்பு

## அலகு 1 ஆடலாம் பாடலாம் விளையாடலாம்

நாட்டுப் புறப் பாடல்கள், நாட்டுப்புற விளையாட்டுகளின் நாடாகும் கேரளம். இந்த நாட்டுப்புறக் கலைகளையும், நாட்டுப்புறப் பாடல்களையும் அறிமுகப்படுத்துவதே இந்த அலகின் நோக்கமாகும். நாட்டுப்புறக் கலைகளும், நாட்டுப்புற விளையாட்டுகளும் தாளம் சார்ந்ததாகும். அவைக்கேற்ற சலனங்களும் புகழ் பெற்றதாகும். நடனத்தின் சாயல்கள் எல்லா நபர்களிடமும் காணப்படுகின்றன. இந்தத் துறையில் அடியெடுத்து வைக்கும் குழந்தைகளிடம் அடங்கியிருக்கும் திறமைகளை வளர்க்கும் செயல் மட்டும் இங்கு செயல்படுத்தப்படுகிறது. அவர்கள் ஆடட்டும், பாடட்டும் விளையாடட்டும்.

(அந்தந்த வட்டாரத்திலுள்ள விளையாட்டுகளைப் பற்றிய விவரங்கள் சேகரித்தும் விளையாட்டுகளைப் பயன்படுத்தியும் கற்றல் செயல்பாடுகளைச் சிறப்புடையதாக் கலாம் )

குழந்தைகளின் இயல்பான விளையாட்டு முறையை உற்றுநோக்கி அவனுடைய தாளத்திற்கேற்ற அசைவுகளின் வேறுபாட்டைப் புரிந்து கொண்டு அதை வளரச் செய்து நாட்டுப் புறப் பாடல்களுக்கு ஏற்ப எளிய நடனங்கள் ஆடுவதற்கான கற்றல் செயல்பாடுகளை ஒழுங்கமைக்க வேண்டும். விளையாடும் திறன் இயல்பாகவே குழந்தைகளிடம் அமைந்துள்ளது. அதனால் விளையாட்டுகளில் ஈடுபடும் போதுள்ள அசைவுகளை வளரச் செய்ய வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- அந்தந்த பகுதிகளிலுள்ள விளையாட்டுகளை விளையாட முடிகிறது.
- அந்தந்த பகுதிகளிலுள்ள பழக்கமான விளையாட்டுகளை நடன வடிவத்தில் உற்று நோக்குதல்.

### கருத்து திறன்

- பலதரப்பட்ட நாட்டுப்புற விளையாட்டுகள் உள்ளன.
- ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற அசைவுகள் உள்ளன.
- சுயமாக விளையாடுகிறார்கள்.
- விளையாடுவதிலுள்ள திறன்

### செயல்பாடு

- அந்தந்த பகுதியிலுள்ள விளையாட்டுகளை உற்றுப் பார்த்தல்.

- அனுபவத்தை வெளியிடுதல்.
- போலச் செய்தல்
- விளையாட்டுகளில் ஈடுபடுதல்.

## உள்ளடக்கம்

நம் நாடு பலதரப்பட்ட நாட்டுப்புற விளையாட்டுகள் நிறைந்ததாகும். அந்தந்தப் பகுதிகளிலும் வழக்கத்திலுமுள்ள பாட்டுகளும், அசைவுகளும் நடைமுறையில் உள்ளது. இந்த விளையாட்டுகளை விளையாடவும் பயிற்சி பெறவும் செய்வதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் அந்தக் கலாச்சாரத்தின் கன்னிகளாகிறோம். அது மட்டுமன்றி அந்தப் பகுதிகளின் பழக்க வழக்கங்களையும், நாட்டுப்புற அறிவுக ளையும் பற்றிய அறிவைப் பெறுவதற்கும் உதவுகிறது. இவ்வாறான நடனங்களி லுள்ள அசைவுகளின் வேறுபாடு நடனங்களைப் புகழ்பெறச் செய்கிறது. குழுக்க ளாக இணைந்து இதுபோன்ற விளையாட்டுகளை விளையாடும் போது அசைவு கள் ஒன்றுபோல் வரவேண்டுமென்ற தேவையை உணருகிறார்கள். இது மட்டுமன்றி அவரவர்களுடைய பகுதியின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்கிறார்கள்.

## கற்றல் செயல்பாடுகள்

- பூ கொய்ய வரலாமா? வரலாமா?<br>விடியலில்?<br>யார் உங்களுக்கு அவசியம்<br>விடியலில்<br>.................. ரை எங்களுக்கவசியம் அவசியம்<br>விடியலில்?<br>யார் கூட்டிப் போவார் கூட்டிப் போவார்<br>விடியலில்?
- குழந்தைகள் இரு குழுக்களாகப் பிரிகிறார்கள். அதற்குப் பிறகு ஒருவருக்கொ ருவர் கைகோர்த்துக் கொண்டு ஒரு குழுவினர் முன்னால் நடக்கிறார்கள்.(ஒரு அடி வைத்து) முதல் வரியைப் பாடுதல், பிற குழு பின்னால் நடக்கிறது. பின்னர் அடுத்த வரியைப் பாடி பின்னால் போன குழு முன்னால் வருகிறது. ஏதைவது ஒரு குழந்தையின் பெயரைக் கூறிக் கொண்டு முன்னால் வருதல். பெயர் கூறிய இரண்டு குழுக்களும் கைபிடித்து இழுக்கிறார்கள். எந்தப் பக்கம் குழந்தை சென் றுள்ளதோ அந்தப் பக்கக் குழுவினர் குழந்தையை அவர்கள் குழுவில் சேர்க்கி றார்கள். இவ்வாறு விளையாட்டு தொடர்கிறது.
- காகம் பறந்து வந்தது<br>பாறை மேலிருந்தது<br>காகம் பறந்து போனது<br>பாறை பாக்கியானது
- இந்தக் கவிதையை தாளத்துடன் கூறவும். குழந்தைகள் காகம் பறப்பதை நடன மாக வெளியிடட்டும். வித்தியாசமான நடனத்தை ஏற்றுக் கொள்ளலாம். தொடர்ந்து “ காகா” என்று பாடுவதற்கு பதில் ‘கழுகு‘, ‘மயில்‘ என்று மாற்றிப்

பாடட்டும். அப்போது பறப்பதன் வேகத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும்.

### மதிப்பிடுதல்

குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் குழந்தைகளை மதிப்பீடு செய்தல்.

*குறிப்புகள்*

- தாள அறிவு
- அசைவுகளில் தாளத்தின் சிறப்பு
- குழுச் செயல்பாடுகளில் பங்கேற்பதிலுள்ள ஆர்வம்.

### மேற்பார்வை

- பால விஜ்ஞானகோசம்... தொகுதி 1

## அலகு 2: சுவடுவைத்து சுவடுவைத்து தொழில் செய்வோம்

### முன்னுரை

பல நாட்டுப்புற விளையாட்டுகளும் தொழிலுடன் தொடர்புடையதாகும். வேலை செய்யும் போது களைப்பு ஏற்படாமல் மகிழ்ச்சியாக வேலை செய்வதற்கு அந்த சமூகத்திற்கு உதவியாக இருந்துள்ளது. இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள வரிகளும், சிந்துகளும்.

ஒவ்வொரு வேலைக்கும் அதற்கேற்ற தாளம் உள்ளது. வேலை செய்யும் போது களைப்பு ஏற்படாமல் இருப்பதற்காக வேலை செய்பவர்கள் அர்த்தமற்ற சில ஒலி களை வெளியிடுவார்கள். ( உதா: ஐலசா போன்ற சப்தங்கள்) தாளத்துடனான இந்த ஒலிகளை சிந்துவிற்கேற்ப உடல் அசைவுகளாகவும், மொழியின் வளர்ச்சிக்கேற்ப இவற்றின் வரிகளும் இலக்கியமும் தோன்றுகிறது. தொழிலுக்கேற்ற நாட்டுப்புறப் பாடல்களும் சிந்துகளும் இவ்வாறே தோன்றியது. ( வரிகள் அந்தந்த பகுதியின் பண்பைக் கொண்டிருக்கும். இந்தக் கருத்தை ஆசிரியர் புரிந்து கொண்டு அந்தந்த பகுதிகளிலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்தி வகுப்பறைச் செயல்பாடுகளை திட்டமிட வேண்டும்.

### கற்றல் செயல்பாடுகள்

- தொழிலுடன் தொடர்புடைய விளையாட்டுகளை வெளியிடுதல்.

### கருத்து, திறன்

- தொழிலுடன் தொடர்புடைய விளையாட்டுகளைக் கண்டுபிடிக்கலாம், விளையாடலாம்.

- தொழிலின் தன்மைக்கேற்ப வேறுபட்ட வேகத்தில் வெளியிடுகிறார்கள்.

## செயல்பாடு

- நடன வடிவத்திலுள்ள விளையாட்டுகளைக் கண்டுபிடித்து தாளத்துடன் பாடி விளையாடுகிறார்கள்.
- விளையாட்டுகள், அவற்றுடன் தொடர்புடைய தொழில்கள் போன்றவற்றின் முழு பட சார்ட்டைக் காட்டுகிறார்கள்.

## கற்றல் செயல்பாடுகள்

- ஆசிரியர் ஒரு பாட்டு பாடுகிறார். இந்தப் பாட்டிலுள்ள செயல்களைச் செய்து காட்டுமாறு கூறுதல். குழந்தைகள் ஒவ்வொரு குழுவாகப் பிரிந்து செய்து காட்டக் கூறுதல்.

*உதாரணம்*

தத்தி தத்தி வந்ததொரு தத்தே
கொத்தியெடுத்தது விதையெல்லாம்
பம்மிப்பம்மி வந்ததொரு பூனை
ஐயோ தத்தை பறந்துவிடு
கொத்திய கதிரும் சுண்டிலெடுத்து
பற பற பற பற பறந்துவிடு

- ஒவ்வொரு குழுவும் செய்து காட்டுவதிலுள்ள வேறுபாட்டைத் தனியாகக் குறிக்கக் கூறுதல்
- வேலைப் பழுவைக் குறைப்பதற்காகத் தொழிலாளிகள் ஏற்படுத்தும் , சில ஒலிகள் பின்னர் சிந்துகளாக மாறுகின்றன.

*உதாரணம்*

ஏலய்யா...ஏலசா...
ஏலய்யா... ஏலசா...

*குறும்புக்காரன் கட்டெறும்பு அரிசிமணி எடுத்துக்கொண்டு போனபோது பாடியது என்ன? ( வினாவுக்கு உரிய விடை.)*

ஐலசா ஏலசா....
ஐலசா... ஏலசா...
அரிசிமணி தூக்கிடலாம் ஐலசா...
சிறுமணி தூக்கிடலாம் ஐலசா...
ஏலேலய்யா பாடியே தூக்கிடலாம்
ஏலய்யா ஏலசா
எங்நீம் எங்நம்...
ஒருமையாயுயர்திடின் தூக்கிடலாம்..
.................
பஞ்சக் காலம் வந்ததே..
................
ஒருமையாயுயர்த்திடின் மலையுமுயரும்
சிநேகிதரே லாலா...

.......................

### மதிப்பீடு

குறிப்புகளின் அடிப்படையில் ஆசிரியர் மதிப்பிடுகிறார். நேரடியான மதிப்பீடு

<u>குறிப்புகள்</u>

- தொழிலுடன் தொடர்புடைய அசைவுகள்
- தாளம்
- குழு அறிவு
- தொழிலைப் பற்றிய அறிவு

## அலகு 3 மெய் தயார்படுத்துதல்

நடனமாடுபவர்கள் உடலே நாட்டியத்தின் சிறப்பம்சம். அந்த உடலின் வடிவமும் பொலிமையும் நாட்டியத்தின் அழகை மெருகூட்டும் காரணிகளாகும். உடலின் வடிவத்தையும், பொலிமையையும் நிலைநிறுத்துவதற்கு பொருத்தமான உடற்பயிற் சிகளை செய்ய வேண்டும். நடனமாடுவதற்கு மட்டுமன்றி, ஆரோக்கியமான ஒரு உடலை வார்த்தெடுக்க வேண்டுமென்பதை இதன் மூலம் செயல்படுத்த வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- நாட்டியத்தின் மூலம் உடல்வாகு பெறுகிறார்கள்.

### கருத்து, திறன்

- உடலை சிரமமின்றி அசைவதற்கான திறன் பெறுகிறார்கள்.

### செயல்பாடு

- கட்டளைக்கு ஏற்ப உடலை அசைக்கிறார்கள்.
- குழு விளையாட்டில் ஈடுபடுகிறார்கள்.

### கற்றல் செயல்பாடுகள்

- தரையில் நிமிர்ந்து நின்று இரண்டு கைகளையும் விரல்களையும் உயர்த்தி முன்னே நீட்டவும். இதைப் போல் மேலும் கீழு சரியாக அசைக்கவும்.
- கையை முன்னால் நீட்டவும், இரு பக்கங்களிலும் கையை நீட்டவும், உள்ளங் கையை மேலே திருப்பவும், கையை தலைக்கு மேலே சேர்த்து வைக்கவும் மீண்டும் திரும்பச் செய்யவும்.
- விரலிலுள்ள எல்லா இணைப்புகளும் மடங்குமாறு கைகளை நீட்டி, மூடவும் திறக் கவும் செய்யவும் இதைப் பலமுறை திரும்பச் செய்யவும்.

- கைகளை நீட்டி சுண்டுவிரல் முதல் பெருவிரல் வரை வரிசையாக மடங்குமாறு கையை மடக்கிப் பிடிக்கவும். இடக்கையிலுள்ள விரல்களை இடப்பக்கமும் வலது கையிலுள்ள விரல்களை வலப்பக்கமும் மடக்கி இரண்டு கைகளையும் சுருட்டி மேலே தூக்கி வைக்கவும். இவ்வாறு திரும்பச் செய்யவும். கைகளை நீட்டி சுண்டுவிரல் முதல் பெருவிரல் வரை வரிடையாக மடக்கும் முறையில் கையைச் சுருட்டிப் பிடிக்கவும். இடது கைவிரல்களை இடப்பக்கமும் வலதுகை விரலை வலப்பக்கமும் சுருட்டி இரண்டு கைகளையும் முஷ்டிக்கு மேலே வைக்கவும். மீண்டும் மீண்டும் செய்யவும்.

### மதிப்பீடு

மெய் வழக்கம் உற்றுப் பார்க்கப்படுகிறது.

## அலகு-4 காகம் பூனை விளையாட்டு.

பறவைகளும் விலங்கினங்களுமல்லவா குழந்தைகளின் பிரியமான நண்பர்கள். அவைகளைப் போல நடிப்பதும் அவர்களுடன் விளையாடுவதும் குழந்தைகளுக்குப் பிடித்தமான பொழுதுபோக்காகும். அதனால் தான் ஒவ்வொரு விலங்கையும் பறவையையும் போலச் செய்வதற்கான வாய்ப்புகளை அளிப்பது அவர்களுடைய திறமையை வளர்க்கும்.

மனிதர்களில் அதாவது குழந்தைகளுக்கு இயல்பாகவே அமைந்திருக்கும் போலச் செய்தல் பழக்கம் விரைவாக நாட்டியத்திற்கு வழிகோலுகிறது.

### கற்றல் அடைவுகள்

- இயற்கையிலுள்ள உயிரினங்களைப் போல நடனமாடுகிறார்கள்.

### கருத்து, திறன்

- உற்றுநோக்கும் திறன்
- உயிரினங்களுக்கு அதனுடையதான அசைவு முறைகள் உள்ளன.

### செயல்பாடு

- உயிரினங்களின் அசைவுகளைக் கவனமாக உற்றுப் பார்த்தல், போலச் செய்கிறார்கள், பரஸ்பரம் மதிப்பிட்டு மேம்படுத்துகிறார்கள்.

### உள்ளடக்கம்

அறிமுகமான காட்சிகள் பறவை, விலங்கினங்கள் என்பவற்றைப் போன்று 'போலச் செய்தல்' வழியாக உண்டாகும் மறுவெளியீடு குழந்தைகள் மிக விரும்பும் பொழுதுபோக்காகும். இந்த வெளியீட்டுணர்வினைப் பயன்படுத்தி அவர்களின் உற்றுநோக்குத் திறன் வளர்ச்சி பெறுவதுடன் உயிரினங்களுக்கே உரிய அசைவு

முறைகளையும் ஒலிகளையும் வெளியிடுதல். அழகாகவும் சிறப்பாகவும் அமைவதற்கு நடனக்கூறுகளான தாளலயம் மிக்க அசைவுகள் நடிப்பு என்பன உட்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு உயிரினத்துக்குரிய அதனதன் அசைவு முறைகளும் சிறப்புத் தன்மைகளும் உள்ளன என்று அவர்கள் புரிந்து கொள்கின்றனர். இதன் வாயிலாக உற்றுநோக்கும் திறமையும் போலச் செய்தல் திறனும் ஊக்குவிக்கப்படுகின்றன. தன் படைப்புத் திறனைச் செயல்திறனுடன் வெளியிட இயல்கிறது என்பது குழந்தைகளுக்கு ஆனந்தம் அளிக்கும் அனுபவம் ஆகும். இது அவர்களின் வெளியீட்டுணர்வையும் தன்னம்பிக்கையையும் படைப்புத் திறனையும் வளப்படுத்துகிறது.

### கற்றல் செயல்பாடுகள்

- சில குழந்தைகள் காட்டு விலங்குகளாகவும் சிலர் வேட்டைக்காரர்களாகவும் தாளத்துடன் அசைகிறார்கள். விளையாடும் இடத்தை காடாக கற்பனை செய்து புலி, யானை, மயில், பன்றி போன்ற மிருகங்களாக பிற குழந்தைகள் விளையாடலாம்

### மதிப்பீடு

- அசைவை போலச் செய்வதை ஆசிரியர் மதிப்பிடுகிறார்.
- ------தாளத்துடனான அசைவுகளையும் ஆசிரியர் மதிப்பிடுகிறார்.

## யூணிற்– 5: வாக்குகள்க்கப்புறம்

ஆதிமனிதன் தன்னுடைய கருத்துகளை பரிமாறிக் கொள்வதற்காக சைகை மொழிகளையே பயன்படுத்தினான். பின்னர் பரிணாமத்தின் அல்லது வளர்ச்சியின் ஒவ்வொரு காலகட்டதிலும் அவனுடை மொழியும் முன்னேற்றமடைந்தது. சைகை மொழிகளுக்கு நிலையான சட்டங்களும் தெளிவும் பிறந்தது. அவ்வாறாக பேச்சு மொழியைப் போல சக்திவாய்ந்த பரிமாற்ற முறையாக சைகைமொழி மாறியது. பேச்சுமொழி அது உபயோகிக்கும் சமூகத்தில் மட்டும் பரிமாற்ற மொழியாக பயன்படும் போது சைகை மொழியிலான கருத்துப் பரிமாற்றத்திற்கு எல்லையில்லாமல் போகிறது. சைகை மொழியைப் பயன்படுத்தி குழந்தைகளை சுவையான விளையாட்டின் மூலம் வகுப்பறைச் செயல்பாட்டை நமக்கு உயிரோட்டமுள்ளதாக மாற்ற முடியும். குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமான இப்படிப்பட்ட செயல்பாடுகளை அவர்களுக்கு தெரிந்த விளையாட்டுகளின் மூலம் தொடங்கலாம்.

### கற்றல் அடைவுகள்

- உடல் அசைவுகளின் மூலம் எளிய கருத்துகளை பரிமாற்றம் செய்ய முடிகிறது.

### கருத்து, திறன்

- கருத்துகளை உடல் அசைவின் மூலம் வெளிப்படுத்தலாம்.

## செயல்பாடு

- பழக்கமான உருவங்கள், கருத்துகளை கைவிரல், தலை முதலிய பாகங்களால் வெளிப்படுத்துதல்
- கூடுதல் செயல்பாடுகளை உற்றுப் பார்த்தல் ( சி.டி)
- கருத்துகளை வெளியிடுதல்.

## உள்ளடக்கம்

இயற்கையிலுள்ள உருவங்களையும், சப்தங்களையும் போல செய்வதற்கான திறனை பிறவியிலேயே மனிதன் பெற்றிருக்கிறான். இது அவனுடைய வளர்ச்சி கட்டங்களில் முக்கிய பங்கு வகித்துள்ளது. அவன் பார்த்த பூவை தன்னுடைய நண்பனுக்கு வாய்மொழியாக வரைந்து காட்டுவதற்கு பதிலாக கைவிரல்களின் அசைவின் மூலம் காட்டித் தரும் போது பூவை நேரடியாகப் பார்த்த அனுபவம் ஏற்படும். இது போல வண்ணத்துப் பூச்சியையும், வண்டையும், பூவையும் போலக் காட்டுவதற்கு அவனது கைவிரல்களுக்கு முடிகிறது. விரல்களுடன் கண்ணும் முகமும் சேரும் போது அதற்கு உயிரோட்டம் ஏற்படுவதை அவன் உணர்கிறான். சில எளிய வாக்கியங்களைக் கூட கருத்துப் பரிமாற்றத்திற்காக சைகை மொழியின் வாயிலாக வெளிப்படுத்த அவனுக்கு முடியும். இவ்வாறான செயல்பாடுகள் நாட்டிய வளர்ச்சிகிகான மைல் கல்லாக மாறுகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

- உண்ணிக் குட்டன் அதிகாலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து விட்டு பள்ளிக்கூடத்திற்குப் போகக் கிளம்பினான். உன்னி இன்று ஏன் இவ்வளவு நேரமே போகிறாய்? அம்மா கேட்டாள். இன்று பள்ளியில் சில காரியங்கள் உள்ளது. ஆசிரியை சில பொருட்களின் பட்டியலை தந்திருக்கிறார். அவைகளை ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். நான் உதவட்டுமா என்று அம்மா கேட்டாள். வேண்டாமென்று உன்னிக்குட்டன் பதில் கூறினான். கைநிறைய பூக்களும், புத்தகப் பையும் சாப்பாடு பாத்திரமும் வேறு சில பொருட்களுமாக பள்ளியை அடைந்தான். ஒவ்வொருவரும் வகுப்பிற்கு கொண்டு வந்த பொருட்களை ஒவ்வொரு மூலையில் வைக்குமாறு ஆசிரியர் கூறினார். அனைவரும் ஆசிரியர் கூறியதைப் போலச் செய்கிறார்கள். வகுப்பு ஆரம்பமானது. இந்தப் பொருட்களெல்லாம் உங்களுக்கு தெரிந்தது தான். நான் சைகை காட்டும் போது நீங்கள் அந்தப் பொருளை இங்கே கொண்டு வந்து வைக்க வேண்டும். ஆசிரியர் ஒவ்வொரு சைகை காட்ட குழந்தைகள் அந்தந்தப் பொருட்களை மேசைமேல் வைக்கிறார்கள். (குழந்தைகள் கொண்டு வந்த பொருட்களைக் காட்டிலும் கூடுதலான பொருட்களை ஆசிரியர் கொண்டு வரவேண்டும். தெரிந்தவை மட்டும்) ஆசிரியர் கூறும் சைகைகளுக்கேற்ப அந்தந்த பொருட்களை சரியாக கண்டுபிடிக்க வேண்டும்.

*செயல்பாடு- 2*

- குழந்தைகள் ஒவ்வொருவரும் அவரவர் கொண்டு வந்த பொருட்களை

மீண்டும் ஒன்று சேர்க்க வேண்டும். ஆசிரியை அவற்றையெல்லாம் கலந்து நான்கு குழுக்களாப் பிரித்துத் தருகிறார். ஒவ்வொரு குழுவிற்கும் கிடைத்த பொருட்கள் சம எண்ணிக்கையில் இருந்தாலும் பொருட்கள் வித்தியாசமான தாக இருக்கும். முதல் குழு தன்னிடமுள்ள ஒரு பொருளை சைகையில் வெளிப் படுத்துகிறான். இந்தப் பொருள் அடுத்த குழுவின் கைவசமிருந்தால் அந்தப் பொருளை வெளியிலெடுத்து முதல் குழுவிடமிருந்து அதை வாங்கலாம். இல் லையெனில் ஏதாவது ஒரு பொருளை முதல் குழுவிற்கு கொடுக்க வேண் டும். இரண்டாம் குழுவிலுள்ள குழந்தை சைகை காட்டி விளையாட்டைத் தொடரலாம். குறிப்பிட்ட சுற்று முடியும் போது விளையாட்டை நிறுத்தி ஒவ் வொரு குழுவின் கையிலுள்ள பொருட்களின் எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டும். கூடுதல் பொருட்கள் வைத்திருக்கும் குழுவை வெற்றி பெற்றதாக அறிவிக்கலாம்.

## மதிப்பீடு

- ஒவ்வொரு விளையாட்டு விளையாடும் போதும் ஆசிரியைக் குறித்து வைக்க வேண்டும்.
- கருத்தை அடைவதற்கேற்ற நல்ல வினாக்கள் கேட்பவர்களை மதிப்பிடுதலில் உட்படுத்த வேண்டும்.

*குறிப்புகள்*

- கருத்துத் தெளிவுடன் சைகை காட்டுதல்.
- சைகை காட்டுவதற்காக உடலிலுள்ள பல உறுப்புகளைப் பயன்படுத்துவதை மதிப்பிடுதலில் உட்படுத்த வேண்டும்.

# அலகு-6 தித்தித் தா திதை தை

மொழியின் தோற்றத்தை தேடிச் செல்லும் எந்தவொரு நபரும் சென்றடைவது அந் தந்த பகுதியின் நாட்டுப்புறக் கலை வடிவங்களிலாகும். நாட்டுப்புறக் கலை வடி வங்களில் முக்கிய பங்கு வகிப்பது அந்தந்த பகுதியிலுள்ள நாட்டுப்புறப் பாடல்க ளும் நடனங்களுமாகும். இவைகளை வண்ணமயமாக்குவது வாய்மொழிச் சிந்துக ளாகும். சில வாய்மொழிச் சிந்துகள் சில வேளைகளில் சில நடனங்களுக்கும், பாடல் களுக்கு மட்டுமே உரியதாக உள்ளது. நாட்டுப்புற வாய்மொழிச் சிந்துகளுக்கேற்ப சுவடு வைப்பதே நாட்டியத்திற்கான தொடக்கமென கருதப்படுகிறது.

## கற்றல் அடைவுகள்

- வாய்மொழிச் சிந்துகளுக்கு ஏற்ப சுவடுவைக்கிறார்கள்.

## கருத்து, திறன்

- வாய்மொழிச் சிந்துகளுக்கு சரியான வேகம் உள்ளது.
- வேகத்திற்கேற்ப சுவடு வைக்கலாம்.
- தாளத்திற்கேற்ப சுவடு வைப்பது ஒரு திறமையாகும்.

## செயல்பாடு

- வாய்மொழிச் சிந்துகளை வெளியிடுதல், ஏற்றுபாடுதல்.
- வாய்மொழிச் சிந்துகளுக்கு ஏற்ப கைதட்டுதல்.

## உள்ளடக்கம்

ஒவ்வொரு வாய்மொழிச் சிந்துகளுக்கும் அது உபயோகிக்கப்பட்டிருக்கும் பாடல்களின் இராகத்துடனும் தாளத்துடனும் தொடர்புடையதாக இருக்கிறது. இந்த தாளத்தின் வேறுபாடு குழந்தைகளின் மனதை மகிழ்ச்சியுறச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. வாய்மொழிச் சிந்துகளை ஒழுங்கான வேகத்தில் பாடும் போது உண்டாகும் அழகுணவிற்கும் அதற்கேற்றவாறு நடனமாடும் போது ஏற்படும் அழகுணர்வும் இரசனையுடையதாகும். வேகத்தின் ஏற்ற இறக்கங்களும் தாளத்தின் வேறுபாடுகளும் வாய்மொழிச் சிந்துகளை சிறப்புடையதாக்குகிறது. நம்முடைய நாடோடி நடனங்கள் பலவற்றிலும் அந்தந்தப் பகுதிகளில் வழக்கத்திலிருக்கும் தொழிலுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. பெரிய மரங்களைத் தள்ளி மாற்றும் தொழிலாளிக்கு அவர்களுடை தொழிலை ஒருங்கிணைக்க ஏலே லோ ஐலசா என்று பாடும் போது அது போன்ற நடனத்திலும் பாடலிலும் அதனுடைய சக்தி நமக்கு வெளிப்படுகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

- ஓ தித்தித்தாரா தித்தித்தை...
  ..................................................
- கோலாட்டம் (தித்த்தாகிட தித்தை திம்ருதை தில்லாதில்லாலத்தெ
- பூர நடனம்( தை தில்ல/ தைதில்ல/ தைதில்லா/த்தை தை என்ற வஞ்சிப் பாட்டின் வாய்மொழியோடிணைந்து நாம் நடனம் செய்யும் போது ( வள்ளம் களி) படகு விளையாட்டின் நிஜக் காட்சி அனுபவத்தை நாம் உணர்கிறோம் அல்லவா?
- ஆசிரியர் எளிய வாய்மொழிப் பாடல்கள் சொல்ல அதையொட்டி குழந்தைகள் கைகொட்டி சிறு பாத அசைவுகள் வைப்பதுடன் பாடவும் முயல்கின்றனர். இச்செயல்பாடினை பல்வேறு வாய்மொழிகளின் வாயிலாக ஆசிரியர் மீண்டும் மீண்டும் செயல்படுத்தலாம்.
- அச்சன் கொம்பில் ( தெய்யந்தாரோ தை)
  அம்ம வரம்பில்(..............)
  ஆகாய கூட்டம் (................)
  அய்யன் கொம்பிலம்ம மலரம்பிலா காயகூட்டம்
  (தெய்யந்தாரோ தெய்யந்தாரோ தெய்யந்தாரோ தை)
  அந்தக் கொம்பில் (தெய்யந்தாரோ தை)
  இந்தக் கொம்பில் (தெய்யந்தாரோ தை)
  அந்நியோன்யக் கூட்டம் (தெய்யந்தாரோ தை)
  அந்தக் கொம்பிலந்த வரம்பிலன்யோன்யக் கூட்டம் (தெய்யந்தாரோ தெய்யந்தாரோ தெய்யந்தாரோ தை )

கைதட்டி கால்களை அசைக்கவும், தாளத்திற்கேற்ப காலை அசைக்கவும்

## மதிப்பீடு

- வேலையின் தாளத்திற் கேற்ப வாய்மொழிச் சிந்து பொருத்தப்படுகிறதா என்று மதிப்பிடுதல்.
- வாய்த்தாரிகளின் தாளத்திற்கும் அசைவிற்கும் இடையிலுள்ள பொருத்தம்
- வாய்த்தாரிகளை கூறுவதில் பொருத்தம்.
- இரசனை
- தொழிலின் மேலுள்ள ஆர்வம்.

# இரண்டாம் வகுப்பு

## அலகு – 1 : விளையாட்டும் நடனமும்

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அதற்கே உரித்தான நாட்டுப்புற விளையாட்டுகள் உள்ளன. இந்த விளையாட்டுகளின் தனித்தன்மையை வளர்க்கும் பல நாட்டுப் புற விளையாட்டுகளும் தாள வரையறைகளுக்கும். சுவடுகளுக்கும் உடல் அசை வுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவையாகும். பொழுதுபோக்கும், உடற்பயிற் சியும் அறிவும் இந்த விளையாட்டுகளின் தனித்தன்மையாகும். பரம்பரையாகக் கிடைத்த இந்தக் கலாச்சாரத் தனித்தன்மையை உற்றுப்பார்க்கவும் பயிற்சி பெறவும் செய்வதே இந்தப் பாடப்பகுதியின் நோக்கமாகும்.

### கற்றல் அடைவுகள்

- பழக்கமான வட்டார விளையாட்டுகளை நடன வடிவத்தில் உற்றுநோக்குதல்.

### கருத்து, திறன்

- சுவடு வைப்பதிலுள்ள வேறுபாட்டைப் பற்றிய அறிவு
- சலனங்களின் ஒற்றுமை
- ஆசிரியர்களின் நிபந்தனைக்கேற்ப விளையாட்டுகளில் ஈடுபடுதல்.

### செயல்பாடு

- வட்டார வேறுபாடுகள், வழக்கத்திலிருக்கும் நடன வடிவங்களை பார்த்தல்( சி. டி. யின் உதவியைப் பயன்படுத்தலாம்)
- தனியாகவும் குழுவாகவும் வெளியிடுதல்.
- வேறுபாட்டைப் பற்றி கலந்துரையாடுதல்.

### உள்ளடக்கம்

விளையாட்டுகளில் ஈடுபடும் விருப்பம் குழந்தைகளிடம் பிறவியிலேயே காணப்ப டுகிறது. நாட்டுப்புற விளையாட்டுகளில் சுவடுகளின் தாளமும் ஒன்றிணைந்துள்ளது. இந்த விளையாட்டுகளை விளையாடுவதன் மூலம் குழந்தைகள் நம்முடைய நாட் டின் கலாச்சாரத்தின் பாகமாகிறார்கள். விளையாட்டிலுள்ள தாள அசைவுகளைப் புரிந்து கொண்டு குழந்தை இந்தக் குழு செயல்பாட்டில் ஈடுபடுகிறது. இந்த நடனப் பயிற்சிக்கு---------

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு–1*

- அசையாதே மதிலே
  நெருங்காதே மதிலே
  அசையாதே மதிலே
  சாயாதே மதிலே
  நானுண்டிங்கென
  நினைத்திடு மதிலே

- குழந்தைகள் பெஞ்சில் இருக்கின்றனர். அங்கேயும் இங்கேயுமாக ஆடுகின்றனர். ஓரத்தில் இருக்கும் குழந்தை விழவே அக்குழந்தை அடுத்த ஓரத்தில் சென்று அமர்கிறது. மீண்டும் இதே விளையாட்டு தொடர்கிறது. ஒவ்வொருவராய் வீழ்கின்றனர்.

*செயல்பாடு–2*

- தும்பித் துள்ளல், மாணிக்கச் செம்பழுக்காய்

## மதிப்பீடு

குழந்தை அறியாமல் ஆசிரியர் குறிப்புகளை வைத்து மதிப்பிடுகிறார்.

*குறிப்புகள்*

- தாள உணர்வு
- அசைவுகளில் தாளத்தின் மேன்மை
- குழு செயல்பாடுகளில் பங்காளியாகும் ஆர்வம்.

## பார்வை நூல்

- பால விஞ்ஞான கோசம்– தொகுதி 1

# அலகு – 2: தொழிலும் நடனமும்

கலை வளர்ந்தது மைதானத்தில் இருந்தாகும். வார்த்தை விவசாயத்துடன் தொடர்புள்ளது. விவசாயம் மற்றும் பிற தொழில்களை செய்யும் போதுள்ள உடல் அசைவுகளை ஒய்வு நேரங்களில் முயற்சி செய்த போது நடனத்தின் முதல் வடிவம் தோன்றியது. நம்முடைய கிராமத்து விவசாய முறைகளுடனும் பிற தொழில்துறைகளிலும் உள்ள அனுபவம் நடனக் கலைக்கு உதவியாக இருக்கும். தாளத்துடனான வாய்மொழிச் சிந்துகளும் சேர்ந்த பாடலாகும் போதோ? அசைவை காட்சியமைப்பாக மாற்ற முடியும். வாய்மொழிச் சிந்துகளின் மூலம் நடன உலகத்திற்கு செல்வதற்கான முயற்சியே இந்தப் பாடப்பகுதியாகும்.

## கற்றல் அடைவுகள்

- தொழில்களுக்கேற்ற வாய்மொழிச் சிந்துகளும் அதற்கேற்ற நடனமுறைகளையும்

பிரித்தறிதல்.

## கருத்து, திறன்

- நம்முடைய நாட்டுப்புற நடனமுறைக்கு தொழிலுடன் தொடர்புள்ளது.
- தொழிலுக்கும் வாய்மொழிச் சிந்துவிற்கும் தொடர்பு உள்ளது.

## செயல்பாடு

- அறுவடைத் திருவிழா, தொழிலாளர் நடனம். பனியர்களின் அறுவடைத் திரு விழா போன்ற நடனமுறைகளை சி.டி. யில் பார்க்கிறார்கள்.
- நடனமுறை, வாய்மொழிச் சிந்துகள் போன்றவற்றின் சிறப்பியல்புகளை புரிந்து கொள்கிறார்கள். வள்ளங்களிலும், மரமிழுத்தல், நாற்று நடுதல், அறுவடைத் திரு விழா, மீன்பிடித்தல்.

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு -1*

பத்தாயத்திலிறங்கி கொஞ்சம்
நெல்லெடுப்பாய் மகளே
என்னால் ஏலாதம்மா
எலியென்னைக் கடித்து தின்றிடுமம்மா
உறக்கள நெல்லெடுத்துக் கொஞ்சம்
பொடித்துத் தா மகளே
என்னால் ஏலாதம்மா
பயலுக களியாக்கிப் பார்பாரே யம்மா
அடுக்களயில் அரிசியை வெந்தே
வடித்திடடி பொன்மகளே
என்னாலே ஏலாதம்மா
அடுப்பென்னை இமையாமல் பார்த்திடுமம்மா
இலைவெட்டி விளம்பி வைத்தேன்
உண்ண வா மகளே
என்ன ருசியம்மா
இனியும் கொஞ்சம் விளம்புவாய் பொன்னம்மா

- குழந்தைகள், ஒரு குழந்தை ஒரு பக்கத்திலும் மீதி குழந்தைகள் எதிர் பக்கத்தி லும் நிற்கின்றனர். ஒரு குழந்தை அம்மாவாகவும் ஏனையோர் மக்களாகவும் பாடி நடிக்கின்றனர். அம்மா ஒவ்வொரு பணியினையும் தாளத்தோடு ஒத்து சைகையில் செய்கிறார். அதற்கேற்ப எதிர்பக்கத்தில் உள்ள குழந்தைகள் பாட லுக்கேற்ப சைகை காட்டுகின்றனர்.

*செயல்பாடு -2*

நானொரு மீன் கண்டேன் குறவா
நானொரு மீன் கண்டேன்

ஏது குளம் குறத்தி
ஏது குளமடி
இதோ இந்தக் குளத்தில் குரவா
வலையிங்கெடடி குறத்தி
வலையிங்கெடடி
என்னால் முடியாதையோ குறவ
என்னால முடியாதையோ
வலையிங்கெடுக்கிறான் குறவன்
வலையிங்கெடுக்கிறான் குறவன்

- குழந்தைகள் இரு குழுக்களாக பிரிந்து ஒரு குழு குறவனாகவும், மற்றொரு குழு குறத்தியாகவும் நடிக்கின்றனர்.

*செயல்பாடு -3*

தந்தின தந்தின தந்தானோ தன
தந்தின தந்தின தந்தானோ
தந்தின தந்தின தந்தானோ தன
தந்தின தந்தின தந்தானோ

- வலதுகாலை வலப்பக்கத்தில் நீட்டி வைத்து இடதுகாலை வலதுகாலின் அருகில் வைக்கவும். இடதுகாலை இடப்பக்கத்தில் வைத்து வலதுகாலை சேர்த்து வைக்கவும். இதனைத் தொடர்ந்து செய்யவும்.

அம்மா விதைத்ததும் செங்கீரை
அம்மா நனைத்ததும் செங்கீரை
அம்மா விளைத்ததும் செங்கீரை
அம்மா நறுக்கியதும் செங்கீரை
அம்மா வைத்ததும் செங்கீரை
அம்மா தின்றதும் செங்கீரை

- வாய்மொழியாக இணைந்து அம்மா விதைத்ததும் செங்கீரை என்று சைகையில் காண்பிக்கவும். இவ்வாறு ஒவ்வொரு பாடல் வரியின் பொருளுக்கேற்ப உடலசைவுகள் செய்யவும்.

## மதிப்பீடு

குறிப்புகள் வைத்துக் கொண்டு ஆசிரியர் மதிப்பீடு செய்கிறார். நேரடி மதிப்பீடு.

*குறிப்புகள்*

- தொழிலுடன் இணைந்த அசைவுகள்

- தாளலயம்
- குழு உணர்வு
- தொழில்சார் அறிவு

## தொடர்செயல்பாடு

அறுவடையுடன் தொடர்புடைய பாடல்களைத் திரட்டி தாள லயத்துடன் ஆடவும்.

## பார்வை நூல்கள்

- பல்வேறு வட்டார அறிவுகள், விளையாட்டுகள்
- நாடோடி பாடல்கள்- விஷ்ணு நம்பூதிரி ( பாஷா இன்ஸ்ட்டிடியூட்)
- கேரள சாகித்ய சரித்திரம்- உள்ளுர்
- சுத்த மலையாள ஸாக- ஜி. சங்கரப் பிள்ளை
- சி. டி கள்

# அலகு – 3: நாட்டியமாடலாம்

உயற்பயிற்சிகளும், வீரதீரக் கலைகளும் நடனத்தின் மூல வடிவங்களாகும். களரியால் புகழ் பெற்றிருந்த கேரளத்தின் வீரக் கலை வடிவப் பாரம்பரியத்தின் பல நல்ல காரணிகளும் கதகளி போன்ற சாஸ்திர கலைகளின் ஒழுங்கமைப்பிற்கு உதவியாக இருந்திருக்கிறது. உடல் அசைவுகளை புரிந்து கொள்வதற்கும், பயிற்சி பெறுவதற்குமான வழிமுறையே இந்தப் பாடப்பகுதியாகும்.

## கற்றல் அடைவுகள்

- நடனத்தின் மூலம் உடல் திறன் பெறுகிறார்கள்.

## கருத்து. திறன்

- உடலை சிரமமின்றி அசைக்கும் திறன்.

## செயல்பாடு

- கட்டளைக்கேற்ப உடலை அசைக்கிறார்கள்.
- குழுவாக உடற்பயிற்சி செய்கிறார்கள்.

## கற்றல் செயல்பாடுகள்

- கை விரல்களை மடக்கி பக்கங்களில் நீட்டி கையை மட்டும் ( கடிகார திசையிலும் எதிர் திசையிலும்) அசைத்தல்.
- முஷ்டியை சுருட்டி இரண்டு பக்கங்களிலும் நீட்டுதல், கைகளால் வெற்றிடத்

தில் வட்ட வடிவில் அசைக்கவும் ( கை மடங்காமலிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்)

- கைகளை நீட்டி விரித்து இரண்டு பக்கங்களிலும் நீட்டி வைக்கவும். அதன் பிறகு கைமுட்டியை மடக்கி விரல் நுனியால் தோளில் தொடவும். இதைத் தொடர்ந்து செய்ய வேண்டும்.
- கைகளை மடக்கி தோளில் வைக்கவும். தோள்பட்டையை மட்டும் வட்டமாக சுற்றவும்.
- ————————
- கால்பாதங்களை மேலும் கீழும் அசைக்கவும்.
- வலது காலை முன்னால் நீட்டி முட்டை மடக்காமல் கால் பாதத்தை வட்ட வடி வில் சுற்றவும். அது கடிகார திசையிலும் எதிர் திசையிலும் செய்யலாம்.
- ஏதாவதொரு பாட்டைப் பாடி ( குழந்தைகளுக்குத் தெரிந்த) வேகம் கூடி வரு மாறு பாட்டுக்கேற்ப உடற்பயிற்சி செய்தல்.

## மதிப்பீடு

சரியாக உடற்பயிற்சி செய்கிறார்களா என்பதை ஆசிரியர் அந்தந்த நேரத்தில் மதிப்பீடு செய்யவும் அதனுடைய அனக்டோட்டல் அறிக்கையை தயார் செய்து பாதுகாக்கவும் வேண்டும்.

## Resource

- உடற்பயிற்சி ஆசிரியரின் உதவி
- அந்தந்த பகுதிகளிலுள்ள யோகா, களரி ஆசிரியர்களின் உதவி

ஏதேனும் பாடல் பாடி ( குழந்தைகளுக்கு அறிமுகமானது) வேகம் பெருகி வரும் முறையில் பாடலுக்கு ஏற்ப உடற்பயிற்சி செய்யப்படுகிறது. இதன் மூலம் உடற் பயிற்சி எளிதாக்கப்படுகிறது.

# அலகு – 4 : போலச் செய்தல்

சுற்றுப்புறத்தை உற்றுப்பார்த்து அப்படியே வரையவும் செய்வதன் மூலமே நடனம் போன்ற கலைகள் வளர்கிறது. குழந்தை பருவம் முதல் வீட்டுமுற்றத்தில் உள்ள பறவை களையும் விலங்குகளையும் கவனிக்கிறார்கள். அவைகளைப் போல செய்து காட்டவும் விரும்புகிறார்கள். நடனக் கல்வியில் புதிய வாயப்புகளை தேடுவதற்கான முயற்சியே இப்பாடப் பகுதியாகும். காடு, குளம், வயல் போன்ற வேறுபட்ட தாவர மண்டலங்களை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான நடிப்பு முறைகளில் பயிற்சி பெறுவதே இதன் நோக்கமாகும்.

**கற்றல் அடைவுகள்**

- உடல் அசைவுகளின் மூலம் உயிரினங்களின் அசைவுகளை தாளத்துடன் நடித்துக் காட்டுதல்.

**கருத்து, திறன்**

- கூர்மையாக உற்றுப் பார்க்கும் திறன்
- போலச் செய்யும் திறன்

**செயல்பாடு**

- உயிரினங்களை உற்றுப் பார்த்தல், நடித்துக் காட்டுதல்
- நடிப்பதற்கு வாய்ப்புள்ள கூடுதல் விவரங்களை அட்டவணைப்படுத்துதல்.

**கற்றல் செயல்பாடுகள்**

- விலங்குகளை வேட்டையாடும் காட்சியை நடித்துக் காட்டுதல்.

  உதா- புலி, சிங்கம் முதலியவை மான்களை வேட்டையாடும் காட்சி
- நாயும், பூனையும் சண்டையிடும் காட்சி ( எந்த உயிரினங்களும் ஆகலாம்)
- குழந்தைகள் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் விலங்குகளோ, மனிதர்களோ செய்யும் செயல்களைப் பார்த்து நடித்தல்.

**மதிப்பீடு**

நடிப்பை ஆசிரியர் மதிப்பிடுதல்.

## அலகு – 5: சைகை முறைகள்

உடல் அசைவுகள் நடனத்தின் ஒரு முக்கிய காரணியாகும். சாஸ்திரிய நடன கலைகளிலுள்ள முத்திரைகள் தோன்றியது ஆதி கால மனிதனின் கருத்துப் பரிமாற்றத்திற்காக பயன்படுத்திய சைகையிலிருந்தாகும். வாய்மொழி வழியாக பரவும் கருத்துகளும் உணர்ச்சிகளும் பிற உடள் அசைவுகளின் மூலம் சைகை மொழியில் வெளிப்படுத்தும் பயிற்சியே நடனக் கல்வியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதற்கான முயற்சியே இந்த அலகில் கொடுக்கப்பட்டுள்ளது.

**கற்றல் அடைவுகள்**

- கருத்துப் பரிமாற்றத்திற்காக எளிய சைகை முறைகளைப் பயன்படுத்துதல்.

**கருத்து, திறன்**

- மனதிலுள்ளதை மற்றவர்களிடம் எடுத்துரைப்பதற்கு உரையாடலைப் போலவே சைகைகளையும் பயன்படுத்தலாம்.

**செயல்பாடு**

- ஒன்றோ, இரண்டோ வார்த்தைகளில் முடிக்கக் கூடிய கருத்துகளை, தலை, கை, கண், முகம் போன்றவற்றின் உதவியால் வெளிப்படுத்துதல்.
- முகத்தில் தோன்றும் சில பாவங்கள் வார்த்தைகளை விட கருத்து பரிமாற்றத் திற்கு பயனுள்ளதாக இருக்கும். குழந்தைகளும், ஆசிரியரும் சேர்ந்து செய் யும் செயல்பாடாகவும் செய்யலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

- குழுவிலுள்ள ஒரு குழந்தையின் கையிலுள்ள துண்டுப் பேப்பரில் எழுதியிருக் கும் காரியத்தை ( பொருளின் பெயர்) குழந்தை சைகை மொழியின் வாயிலாக தன்னுடைய குழு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளுமாறு சைகையில் காட்டுதல் குழந்தைகளும் சைகையிலேயே அதற்கு பதில் கூறவேண்டும். புரியாதவர்கள் குறிப்புகளின் மூலம் கேள்விகள் கேட்கலாம். குழந்தைகள் சைகை மூலமே பதில் கூறுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திற்குள் குழுவினர் பதிலைக் கண்டுபிடித்து விட்டால் அவர்களுக்கு குறிப்பிட்ட மதிப்பெண் கிடைக்கும். பதில் கூற முடியா விட்டாள். இதைக் கவனித்திருந்த அடுத்த குழு பதில் கூறினால் அக்குழுவிற்கு பகுதி மதிப்பெண் கிடைக்கும். இவ்வாறாக விளையாட்டைத் தொடரலாம்

## தொடர் செயல்பாடுகள்

- சைகையின் மூலம் வெளிப்படுத்தும் பல செயல்பாடுகளைக் கண்டுபிடிக்கலாம்.

## மதிப்பீடு

- ஒவ்வொரு விளையாட்டு நடக்கும் போதும் ஆசிரியர் மதிப்பீடு நடத்த வேண்டும்.
- கருத்தை அடைவதற்கேற்ற நல்ல கேள்விகள் கேட்பவர்களையும் மதிப்பீட்டில் உட்படுத்த வேண்டும்.

  *குறிப்புகள்*

  - சைகைகளின் கருத்துத் தெளிவு
  - முழுமை ( உடலிலுள்ள பல்வேறு உறுப்புகளை ஒன்று சேர்ந்து செய்யும் செயல்பாடுகளை கணக்கிட வேண்டும்)

# மூன்றாம் வகுப்பு

## அலகு-1 : வட்டார நடனம்

உடலே நடனத்தின் தகவல் கருவி. உடலசைவுகள் அதன் மொழியும் 'அங்கம், பிரத்தயங்கம், உபாங்கம் எனும் அனைத்துக் கூறுகளும் உடலசைவில் உட்படு கின்றன. மகிழ்ச்சியின் போது நடனம் ஆடுகிறீர்கள் எனில் நடனம் வாயிலாக வும் மகிழ்ச்சியினை நுகரலாம். சுருக்கத்தில் நடனம் என்ற ஆன்ம வெளிப்பாடு ஆனந்தத்திற்கும் இரசனைக்கும் காரணியாக அமைகிறது.

உணர்ச்சிகளின் ஆதிக்கத்தில் நாம் உடற்பகுதிகளை அசைக்கிறோம் அல்லவா. அதாவது அங்க உபாங்கங்களில் மனம் லயிக்கும் போது உண்டாகும் வெளித் தோற்றங்களே நடனம் சார் அசைவுகள். இவ்வாறு உணர்வு வெளிப்பாட்டிற்கு உரிய உயிரோட்ட அசைவுகளைக் காட்சிப்படுத்தும் சூழல்களே நடன வகுப்புக ளில் கற்றல் அனுபவமாக உருப்பெறுகின்றன.

இப்பருவம் குழந்தைகளின் விளையாட்டுப் பருவம் ஆகும். குழந்தைகளிடம் உள்ளீடாக உள்ள மேலே குறிப்பிட்ட உயிரோட்ட அசைவுகளை ஊக்குவிப்ப தற்காக விளையாட்டுகளைப் பயன்படுத்தலாம். இத்தகைய உயிரோட்ட அசைவு கள் குழந்தைக்கு ஆனந்தமயம் மிக்க கற்றல் அனுபவமாக உருப்பெறுகின்றன.

சதை, நாடிகள், நரம்புகள் ஆகியவற்றுடன் உள்ளத்திற்கும் பயிற்சி அளிக்கின்ற நடனக் கற்றல் உடல்நலம் தருவதுடன் ஆனந்தமும் அளிக்கிறது. சுதந்திரமான அசைவுகளிலிருந்து கட்டுப்பாடுள்ள அசைவுகளை நோக்கி குழந்தைகளை அழைத்துச் செல்லும் முறையில் அமைந்ததும் வெளித் தகவல் தொடர்பு நிகழ்த் தும் நடன வடிவங்களிலிருந்து உள்ளுணர்வு தொடர்பை நோக்கிச் செல்லும் முறையிலும் நடனம் கற்றல் நிகழ வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- அந்தந்தப் பகுதிகளிலுள்ள தெரிந்த விளையாட்டுகளையும், நடன வடிவங்களை யும் உற்று நோக்கி அதனுடைய சிறப்புத் தன்மைகளைப் புரிந்து கொள்ளுதல்.

### கருத்து, திறன்

- சுவடுகளிலும் அசைவுகளிலுமுள்ள வேறுபாடு
- ஒவ்வொரு நடனமும் அவரவர்களுடைய வாழ்க்கையுடன் தொடர்புடையதாகும்.

### செயல்பாடு

- பல்வேறு பிரதேசங்களிலுள்ள நடன வடிவங்களைப் பார்க்கவும் அதைப் பற்றி விவாதிக்கவும் செய்தல்.

### உள்ளடக்கம்

நம்முடைய பிரதேசத்திலுள்ள பல விளையாட்டுகளும் அந்தந்த பிரதேசத்தின் பழக்க வழக்கங்களுடன் தொடர்புடையதாகும். இவ்வகையான நடனங்களை நாம் பார்த்தாலும் அதைப் பற்றி கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வதில்லை. இதிலுள்ள பாடல்களும் அந்தந்த வட்டாரத்திற்கேற்ப வேறுபட்டதாக இருக்கும். இதில் பயிற்சி பெறுவது சற்று கடினமாக இருந்தாலும் இதை உற்றுப் பார்க்கவும் தனித்தன்மைகளைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். இதற்கான ஒரு முயற்சியாக இந்தப் பாடப்பகுதியை பார்க்கலாம்.

### கற்றல் செயல்பாடுகள்

- அந்தந்த பிரதேசத்திலுள்ள விளையாட்டுகளை நேரடியாகப் பார்ப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விளையாட்டுகளை உற்று கவனித்து இவற்றின் தனித்தன்மையை கண்டுபிடிக்கக் கூறவேண்டும். சி. டி. யைக் காண்பித்து இந்த செயல்பாட்டைக் கண்டுபிடிக்கலாம்.

## அலகு-2 : மாத்திரைகள் எழுத்துக்கள்

தாளத்தின் மிகச்சிறிய கூறே மாத்திரை. மாத்திரைகள் சேர்ந்து எழுத்துக்கள் உருவாகின்றன. எழுத்துக்களின் எண்ணிக்கைக்கேற்ப ஐந்து சாதிகளாக வகைப் படுத்தப்பட்டுள்ளது. இவற்றைப் பஞ்சசாதிகள் என்று நாட்டியவியலாளர்கள் சுட்டுகின்றனர்.

இவையே -

சதுஸ்ரம்- (4 எழுத்துக்கள்) த க தி மி

திஸ்ரம்-(3 எழுத்துக்கள்) த கி ட

கண்டம்-(5 எழுத்துக்கள்) தகிட தகதிமி

மிஸ்ரம் -(7 எழுத்துக்கள்) தகிட தகதிமி

சங்கீர்ணம்-(7 எழுத்துக்கள்) தகதிமி தக தகிட

காலம், செயல், அளவு ஆகியன சேர்ந்ததே தாளம். அதாவது நேரத்தின் அளவைச் சுட்டும் செயலே தாளம். கைகள் தட்டுதல், வீசுதல், விரல்கள் எண்ணுதல் என்பன இதில் உட்படுகின்றன.

குழந்தைகளிடம் இரண்டறக் கலந்திருக்கும் ஒன்றே தாளம். நடனத்திலிருந்து பிரிக்கமுடியாத காரணியே தாளம். தாள உணர்வுக்கும் தாள வரிசைகளுக்கும் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கும் செயல்பாடினையே நாம் ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்குத் தெரிந்த தாளத்தை அடிகளின் வரிசையில் பகுத்

தலே செய்ய வேண்டும். இதன் முதல் கட்டமாக 4 அடி ( சதுரஸ்ரம்) 3 அடி ( திஸ்ரம்) 5 அடி ( கண்டம்) எனத் தாளங்களைப் புரிந்து கொள்ளுதலே போது மானது. நாட்டிய சாஸ்திரத்தின் அடிப்படைத் தாளங்களின் சொற்சேர்கைக ளுக்கு (தகதிமிதகிட தக தகிட) ஏற்ப பாத அசைவு நிகழ்த்துவதற்குப் பயிற்சி அளித்தல் என்பதே இச்செயல்பாட்டின் இலக்காகும்.

## கற்றல் அடைவு

- 4,3,5 எழுத்துக்கள் ( மாத்திரைகள்) உள்ள தாள வரிசைகளில் பயிற்சி பெற்றல்.
- 7,9 எழுத்துக்கள் ( மாத்திரைகள்) உள்ள தாள வரிசைகளில் பயிற்சி அளித்தல்

## கருத்து, அறிவு

- சதுரஸ்ரம் , திஸ்ரம், கண்டம் எனும் நடைகளில்
- பாதம் பதிக்கும் ( நடனஅசைவு) திறன்

## செயல்

- 1,2,3,4 என எண்ண முடிகின்ற தாளம்- சதுரங்கம் த- க- தி- மி
- 'பலாப்பழத் துண்டு வெட்டித் தின்றான்' எனத் தொடர்ச்சியாக் கூறிக்கொண்டு தாளம் உறுதிப்படுத்திய பின்
- 1,2,3 என எண்ண முடிந்த தாளம்- திஸ்ரம்- த-க்கி-ட்ட
- 'தத்தைப் பெண்ணின் சுண்டில் செஞ்சாயம்' எனக்கூறிக்கொண்டு கைகள் கொட்டி தாளத்தை உறுதிப்படுத்தியபின் பாதம் பதித்தல் ( நடனக்கால அசை வு) உறுதிப்படுத்துதல்
- 1,2,3,4,5 என எண்ணமுடிந்த தாளம்-கண்டம்- த- க்க- த-க்கி- ட்ட
- 'புலிக் குகையொரு முயலினுயிரெத்தனைகாலம்' எனச் சொல்லுவதுடன் கைதட்டி தாளத்தை உறுதிப்படுத்துதல்
- பாத அசைவுகள் செய்தல்.
- இவற்றை உறுதிப்படுத்துவதற்கு உரிய செயல்பாடுகளை உருவாக்கலாம்.

## கற்றல் செயல்பாடுகள்

- தகிட்ட ( 3 அடிகள் 3 எழுத்துக்கள்) சதுரஸ்ரம்
- கால் அரைவட்டத்தில் வைக்கவும், வலதுகால் பாதம் முன்னால் வரும் விதத் தில் வைக்கவும் 'த' வலதுகால் பதிக்கவும் 'கி' இடதுகால்விரல் ஊன்றி பதிக்க வும் "ட்ட' இடதுகால் சாதாரண நிலையில் குதிகால் வைக்கவும்
- தகதிமி( 4 அடிகள்/ 4 எழுத்துக்கள்) சதுரஸ்ரம்
- அரை வட்டத்தில் நிற்கவும் பாதம் முன்னால் வரும் விதத்தில் வலதுகால் வைக்கவும் த வலதுகால் உயர்த்தி பதிக்கப்படுகிறது. க வலதுகாலின் குதிகால் மட்டும் உயர்த்தி தரையில் அழுத்தமாகப் பதிக்கவும் தி இடதுகால் ஊன்றி பதிக்கவும் மி இடதுகாலின் குதிகால் சாதாரண நிலையில் தரையில் பதிக்கப்ப டுகிறது. இது தொடர்ந்து செய்யப்படுகிறது.
- தகதக்கிட்ட ( 5 எழுத்துக்கள்) தகதக்கிட்ட
- அரைவட்டத்தில் நிற்கவும் வலதுகால்பாதம் முன்னால் அடையாளப்படுத்தி

தக ஒரு தடவை பதிக்கவும் தக்கிட்ட திரிஸத்தினது போன்று செய்யவும். இதனைத் தொடர்ச்சியாகச் செய்யவும்.

- குழந்தைகள் குழுக்களாகப் பிரிந்து சொற்சேர்க்கைகள் சொல்வதும் பிற குழுவினர் பாத அசைவுகள் பதிக்கின்றனர்.

## மதிப்பீடு

- குழந்தைகள் சுயமாகவும் ஒருவரோடொருவராகவும் மதிப்பீடு செய்கின்றனர்.
- ஆசிரியர் குறிப்புகள் வைத்துக் கொண்டு மதிப்பீடு செய்கிறார்.

*குறிப்புகள்*

- தாள உணர்வு
- வெளிப்படுத்துதலில் கூர்மை
- நடைகள் உறுதியாகிவிட்டனவா என அறிந்து கொள்ள வினாக்கள்.

# அலகு 3 இசை தாளம்

## கற்றல் அடைவு

- இசைக்கு ஏற்ப அசைவு தாளம் என்பவற்றின் விரைவினை வரிசைப்படுத்தும் திறன் பெறுதல்

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- குழந்தைகளை 4 குழுக்களாகப் பிரிக்கின்றனர்..
  முதல் குழு-
  த்தம்பட பட பட த்தம்பட பட பட
  டிண்டக்க டிண்டக்க டிண்டண்டம்
  (மத்தளம் கொட்டும் முறை)
  இரண்டாவது குழு
  த்திம் த்திம் த்தக த்தக த்திம் த்திம் த்தக த்தக
  த்தீயக த்தீயக ஜீயஞ்சம்
  (இலைத்தாளம் கொட்டுவது போல்)
  மூன்றாவது குழு
  பெப்பர பரபர பெப்பர பரபர
  பெப்பர பெப்பர பெப்பெப்பே
  (குழல் ஊதுவது போல்)
  நான்காவது குழு
  த்தம்பட த்தம்பட த்திம் த்தக த்தக த்திம் த்தக
  பெப்பர பெப்பர பெப்பெப்பே
  ஒவ்வொரு குழுவினரும் செய்ததன் பின் விரைவு தாளத்தில் செய்கின்றனர்.

*செயல்பாடு-2*

- குட்டநாடன் புஞ்சையிலே
  குட்டிப் பெண்ணே குயிலாளே
  கொட்டுவேணம் குழல்வேணம்
  குரவை வேணம்
  ஓ தித்தித்தாரா தித்தித்தை
  தித்தை தக தெய் தெய் தோம்
  இப்பாடலின் வேகத்தைக் கூட்டவும்

ப் தாளம் சேர் அசைவுகளில் இயங்குகின்றனர்

உதா- இரயில் வண்டியின் அசைவும் ஒலியும் அதனை வேகம் கூட்டிச் செய் கின்றனர். படகு துழாவும் சைகை
அதுவும் வேகம் கூட்டிச் செய்கின்றனர்.

## மதிப்பீடு

- சுயமதிப்பீடு
- தாளத்துக்கு ஏற்ப அசைகின்றனரா என்ற ஆசிரியரின் மதிப்பீடு

# அலகு 4 காட்சிமயமாதல்

## கற்றல் அடைவு

- எளிய பாடல்களைக் காட்சிப்படுத்துகின்றனர்.

## கருத்து, அறிவு

- காட்சிமயமாதலுக்கு நுட்பமான பார்வை அவசியமாகும்.
- பொருந்துகின்ற காட்சி கலந்துரையாடல் வாயிலாகத் தேர்வு செய்ய இயலும்.

## செயல்

- பெற்றுக்கொண்ட அனுபவங்களிலிருந்து மனிதர்கள் மற்றும் விலங்குகளின் விசித்திரசைகைகள் பற்றி நினைவுகூர்தல்.
- சூழலுக்கு ஏற்ப கதாபாத்திரங்களுக்குப் பொருந்தும் விசித்திர சைகைகளைக் கலந்துரையாடல் வாயிலாக உறுதி செய்தல்
- உடலும் ஒலியும் உபயோகித்து கதாபாத்திரம் படைத்தல்

## மதிப்பீடு

- ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.
- சுயமதிப்பீடு நிகழ்த்துகின்றனர்.

## உள்ளடக்கம்

- குழுச் செயல்பாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து அனைவரையும் பங்கு பெறச் செய்து முத்திரைகளுடன் எளிய பாடல்கள் காட்சிப்படுத்தப்படும் போது கருத் துகள் ஆழமாகப் பதியுமாறு துணைபுரிகிறது.
- இத்தகைய செயல்பாடுகளைக் கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தலாம்.

## கற்றல் செயல்பாடு

***செயல்பாடு -1***

குன்றத்து நாட்டு குட்டிப் பெண்ணே நின்
குட்டிக் கழுத்திலிருப்பதென்ன
தட்டாரம் குன்றின் தட்டார் தீர்த்தொரு
பத்தரை தங்கத்தின் பொன்மாலை
குன்றத்து நாட்டின் குட்டிப் பெண்ணே நின்
மூக்கில் மின்னுவதென்ன
மூத்து நரைத்த பாட்டியின்
முத்துப்பதித்தொரு மூக்குத்தி
குன்றத்து நாட்டு குட்டிப்பெண்ணே நின்
காலில் சிக்கிய கால்சிலம்பு
குன்றத்து நாட்டு குட்டிப்பெண்ணே நின்
உள்ளார்வ மாதென்ன
கட்டச்சிறக்காரன் குட்டியத்தான் வந்தெனக்குக்
கட்டும் பொன் தாலிமாலை

- இது வினா- விடை முறையில் நடித்துக் காட்டப்படுகிறது. குழுச்செயல்பாடுக ளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அனைவரையும் கலந்துகொள்ளச் செய்து எளிய பாடல்கள் காட்சிப்படும் போது கருத்துகள் மனதில் ஆழமாகப் பதியு மாறு உதவுகிறது.
- இத்தகைய செயல்பாடுகளை கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தலாம்

***செயல்பாடு -2***

பாத்து பதுங்கி பம்மி நடக்கும்
குன்றிக்குழி சோம்பேறி
ஆமயண்ணன் மோட்டார்காரன்
முயலும் நட்பினர்
ஒரு நாளிரண்டுபேரும்
பந்தயம் வைத்தனர்
மலைமுகடு காணானொரு
போட்டியும் வைத்தனர்
ஓட்டப் போட்டியும் வைத்தனர்.

இழையும் கரையாமையும்
பாயுமொரு பொன்முயலும்
போட்டியிலார் முதலில்
பரிசு பெறுவர்?

- வரிகளைச் சேர்த்தினைத்து நடிக்கவும்
- எளிய பாடல்கள் காட்சிப்படுத்தப்படுகிறது.

முட்டு வரை கதராடையுடுத்தொரு
முதுகம்பும் ஊன்றி
மார்பில் துண்டும் புதைத்து வருகிறொரு
மெலிந்த தாத்தா
சொந்தக்காரராருண்டு
தாத்தாவுக்கிங்கே
இந்தியரெல்லாம் பாப்புவின்
இணக்கமான உறவினர்
கப்பலேறிவந்த அந்நிய
குத்தகை பூதத்தை
உப்பு காய்ச்சி நடுக்கினாரல்லோ
நமது தாத்தா
சம்புரானில் வந்து தொடங்கிய
சத்தியாகிரகமிப்போது
எங்கேயும் போராட்ட ஆயுதமாய்
எங்கள்க்குப் பெருமை
அறுபத்தேழு நிறைந்தொரு நாடின்
சுதந்திரம் கண்டு
அருளில் சிரித்து நிற்கிறார் சுவரில்
காந்தி தாத்தா

- இந்தக் கதைப்பாடலை நடித்துக் காட்டுங்கள்

## மதிப்பீடு

- ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.
- சுயமதிப்பீடு செய்கின்றனர்.

# அலகு 5 போலச் செய்யலாம்

## கற்றல் அடைவு

இயற்கையின் பல்வேறு ஒலிகள், அசைவுகள் என்பவற்றை உற்றுநோக்கி போலச் செய்தல், அவற்றைக் குழுவில் பங்குவைத்தல், தனியாகவும் குழுவாகவும் வெளிப்படுத்துதல்

## கருத்துகள்

- இயற்கையில் பல்வகை ஒலிகளும் அசைவுகளும் உள்ளன.
- சுய அனுபவத்தைக் குழுவில் பங்கு வைப்பதன் வாயிலாக குழுவில் காட்சிப் படுத்துதல்களுக்குத் துணைபுரிவதுடன் தன் அனுபவங்களைச் சோதித்தறித லும் ஊக்குவித்தலும் நிகழ்கின்றன.

## செயல்

- இயற்கையின் பல்வேறு ஒலிகளும் அசைவுகளும் உற்றுநோக்கப்படுகின்றன.
- குழுவில் கலந்துரையாடல் நிகழ்த்தப்படுகிறது. ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.
- அனுபவங்களும் கலந்துரையாடல் பயன்களும் ஒருமித்த வெளியீட்டில் பயன் படுத்தப்படுகின்றன.
- பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

## செயல்பாடுகள்

- காகம், பட்டாம்பூச்சி போன்ற அன்றாடம் காணமுடிகின்ற உயிரினங்களின் அசைவுகளை அவை போன்று செய்யப்படுகின்றன. ஒவ்வொரு குழந்தையின் செய்தலின் குறைகளுக்குத் தீர்வு கண்டு அடுத்தக் குழந்தை காட்சிப்படுத்துகிறது.

## மதிப்பீடு

- ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.
- சுயமதிப்பீடு செய்கின்றனர்.

# நான்காம் வகுப்பு

## அலகு-1 : வட்டார நடன வடிவங்கள்

இயல்பான உடலசைவுகளைத் தாளலயத்துடன் பயிற்சிசெய்து நடனத்தின் அடிப் படையினை உட்கொண்ட குழந்தைகள் கேரளத்தில் பரவலாக உள்ள பல்வகை நடனவடிவங்களைக் குறித்தும் அறிந்து கொள்ளவேண்டும். வெவ்வேறு நடன வடிவங்களை புரிந்து கொண்ட குழந்தை அனைத்து நடன வடிவங்களும் அடிப் படையிலேயே நம் கலாச்சாரத்துடன் கொண்டுள்ள தொடர்பினைத் தெரிந்திருக்க வேண்டும். ஒரு நடன வடிவத்தைக் குறித்து அறிந்து கொள்ளும் போது அங் குள்ள மக்களின் கலாச்சாரம், வாழ்க்கைமுறை தொழில் என்பன குறித்தெல்லாம் ஓரளவு வரையிலான கருத்தாக்கம் நமக்குக் கிடைக்கிறது.

நடன வடிவங்கள் எந்த தேசத்தைச் சார்ந்ததாயினும் அவற்றின் தாளங்களுக்கு ஒப்புமை ஏராளம் காணலாம். இந்த ஒப்புமையினை இசையிலும் நாம் தரிசிக்கலாம். ஆனால் வேடம் புனைதல்களில் வேறுபாடுகள் அனேகம் உள்ளன. இந்த வேறுபாடு நம் கலாச்சாரத்தின் மிகப்பெரிய தனித்தன்மை என அறிதல் வேண்டும். உடலசைவு கள் உணர்ச்சி பாவனைகளைப் பரிமாற்றம் செய்கின்றன. வாழ்க்கையின் தாளத்தை உணர்த்து கொள்ள நடனம் குழந்தைகளுக்கு உதவுகிறது. ஒன்றிய மனதுடன் நலம் மிக்க உடலுமாய் கற்றல்பாடத்தை அணுகவும் அவர்களால் இயலுகிறது. கலாச்சாரத்து டன் இணைந்து நடனத்தையும் அதன் கூறுகளையும் குறித்து அறிந்து கொள்ள இந்த அலகு துணைபுரியும்.

### கற்றல் அடைவு

- கேரளாவில் பல்வேறு பகுதிகளில் பரவலாக உள்ள வட்டார நடன வடிவங் களை அறிதல்.

### கருத்து, அறிவு

- அசைவுகளில் முரண்
- நடனவடிவங்களில் பெரும்பாலானவை மக்களின் வாழ்க்கை முறையுடன் தொடர்பு உள்ளவை

### உள்ளடக்கம்

வட்டார விளையாட்டுகளில் அந்தந்த வட்டாரத்தில் வெவ்வேறு பிரிவினரின் இடையே உள்ள நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும்

கலந்துள்ளன. தேசங்களுக்கு இடையில் மாறிவரும் சீலங்களும் பதிவுகளும் இந் நடனங்களில் பிரதிபலிக்கின்றன. பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் பிணைந்து கிடக்கும இவை நமது கலாச்சாரத்தின் தாய்வேர்களே. இவற்றின் வேகம் தாளம், பதிவுகளின் முரண், ஆடை அணிகலன்கள் என்பன வட்டார அளவில் வேறுபட்டிருக்கும். நாட்டியவியல் சார் நடனங்களைப் போன்றே இவையும் நுண் ணிதின் உணர்ந்தோங்கி ஆனந்தம் தானம் செய்கின்றன. சத்துவம் இழக்காமல் தலைமுறையினரின் கைகளில் கொடுக்க இவை கற்றல் அவசியமாகும்.

## கற்றல் செயல்பாடுகள்

- கேரளாவின் வெவ்வேறு வட்டாரங்களின் நடனவடிவங்கள் உற்றுநோக்குதல்( சிடி யின் துணையுடனும் நேரடியாகவும்)
- ஒவ்வொரு நடனமும் எந்தெந்த பிரிவினருடன் உறவு கொண்டுள்ளன என் றும் அவர்களின் ஆடைஅணிகலன்களும், உணவுப் பழக்கம், தொழில் என் பவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளனவா என்றும் அறிதல்.
- தங்களின் வட்டாரத்தில் உள்ள நடனஅமைவு குறித்துள்ள குறிப்புகள் தயா ராக்குதல்,ஓவியங்கள் திரட்டுதல், வகுப்பில் கலந்துரையாடல் நிகழ்த்துதல்.
- குறுந்தகட்டில் அறுவடை நடனம் காட்டுதல்( வட்டாரத்தில் நடைமுறையில் உள்ள கோல் விளையாட்டு, குத்தியோட்டம் முதலானவை)
  - ஆடை அணியும் முறை
  - பெண்ணும் ஆணும் பணி செய்கின்றனர்.
  - அந்த வட்டாரத்தின் இயற்கை அமைப்பு

நடனத்தை அடிப்படையாக்கி இத்தகைய செயல்கள் கலந்துரையாடல்கள் நிகழ்த் தப்படுகின்றன.

## மதிப்பீடு

- இவற்றுடன் தொடர்புள்ள அறிவுகளைச் சிறு வினாக்கள் எழுப்பி தரநிர்ணயம் நிகழ்த்தலாம்.

# அலகு 2 பாதச்சுவடுகள் வைத்தல்

தக்கிட்ட( 3 எழுத்துக்கள்) தகதிமி( 4 எழுத்துகள்) தகதக்கிட்ட ( 5 எழுத்துகள்) இந் தச் சேர்க்கைகளை கற்றுவிட்டோம்.

இதன் தொடர்ச்சியாக 7, 9 அடிகள் ( எழுத்துகள்) உள்ள தாளவரிசை பற்றி பயிற்சி பெற வேண்டும்.

இந்த கால்சுவடுகள் கற்பதன் முன்னர் நாட்டியவியல் சார் நடனத்தின் மூன்று நிலை கள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

1. சமம்- கால்கள் சேர்த்து வைத்து நேராக நிற்றல்
2. அரைவட்டம்- குதிகால் ஒன்றோடொன்று தொடாது பாதங்களை இரு பக்கங்க

ளிலுமாக திரும்பி பாதி அமர்தல்

3. முழுவட்டம்- பாதத்தின் விரல்கள் தரையில் ஊன்றி குதிகால் முழுமையாக அமர்தல்.

எனும் நிலைகளில் கால்களை பதிக்க வேண்டும்.

## கற்றல் அடைவு

- 7, 9 அடிகள் ( எழுத்துக்கள்) உள்ள தாளவரிசை பற்றிய பயிற்சி செய்யப்படுகிறது.

## கருத்து, அறிவு

- மிஸ்ரம், சங்கீர்ணம் எனும் லயங்கள் சார்ந்த நடைகள் பற்றிப் பயிற்சி செய்யப் படுகிறது.

## கற்றல் செயல்பாடுகள்

- ( மிஸ்ரம்) தக்கிட்ட தகதிமி( 7 எழுத்துக்கள்)
- அரைவட்டத்தில் அமரவும். அதன்பின் வலதுகால் முன்பக்கத்தில் வருமாறு வைக்கவும். த வலதுகால் பதிக்கவும். கி இடதுகால் விரல் ஊன்றி பதிக்கவும். ட்ட குதிகால் சாதாரண நிலையில் வருமாறு பதிக்கவும். தகிதிமி த வலதுகால் பாதம் முன்னால் மட்டும் வைத்தி வலதுகால் பதிக்கவும் க வலது காலில் குதி கால் மட்டும் தரையில் படுகிறது. தி இடதுகால் விரல் ஊன்றி பதிக்கப்படுகிற து. மி இடது குதிகால் சாதாரண நிலையில் பதிக்கப்படுகிறது. இந்த வரிசை தாளத்தில் காலசைவுகளின் பயிற்சி பெறப்படுகிறது.
- சங்கீர்ணம்( தகதிமி தகதக்கிட்ட) (9எழுத்துகள்)
- இதும் அரைவட்டத்தில் அமர்ந்து செய்ய வேண்டும். வலதுபாதம் முன்பக்கம் வருமாறு பாதங்கள் வைக்கவும் தகதிமி த வலதுகால் பதிக்கப்படுகிறது. க வலதுகாலின் குதிகால் மட்டும் தரையில் படுகிறது. தி இடதுகால் விரல் ஊன்றி பதிக்கப்படுகிறது. தகதக்கிட்ட வலதுகால் முன்னால் வைத்து தக பதிக்கவும் த வலதுகாலாலேயே பதிக்கவும் கி இடது கால் ஊன்றி பதித்து ட்ட அதே காலால் சாதாரண நிலையில் பதிக்கவும்

## மதிப்பீடு

<u>குறிப்புகள்</u>

- தாள உணர்வு
- வெளியீட்டின் கூர்மை
- நடைகள் உறுதிப்படுத்துதற்கு உரிய வினாக்கள்.

## உதவும் ஆதாரம்

- காலசைவுகளின் குறுந்தகடுகள், சொற்சேர்க்கைகள்

# அலகு 3 ஆடை அணிகலன்கள்

ஆடை அணிகலன்கள் எந்த ஒரு நடன வடிவத்தின் அழகையும் கூட்டும் காரணிகளாகும். கவர்வதற்கும் தொழில்களுக்கு ஏற்பவும் உள்ள ஆடை அணிகலன்கள் மிகப் பொருத்மானவைகளே

## கற்றல் அடைவுகள்

- ஒவ்வொரு நடன வடிவத்துக்கும் தனித்துவம் மிக்க ஆடை அணிகலன்கள் உள்ளன என்ற அறிவினைப் பெறுதல்.

## கருத்து, அறிவு

- நடனம் ஆடுகின்ற வட்டாரத்தின் மக்களின் வேடங்களுடன் இவை தொடர்பு கொண்டுள்ளன.
- தொழிலுடன் தொடர்புடையது.
- கலாச்சாரத்துடன் தொடர்புடையது.
- ஆடை அணிகலன்கள் தகவல் பரிமாற்றத்திற்கு உதவுகின்றது.

## உள்ளடக்கம்

நாட்டிய வல்லுனர்கள் நான்கு வகை நடிப்பு முறைகளை முக்கியமாக ஓர் அரங்க காட்சிக்குச் சொல்கின்றன. ஆங்கிகம், வாசிகம், ஆகார்யம், சாத்விகம் என்பன அவை. இவற்றில் அனைத்து நடனமுறைகளையும் மிக தனித்துவத்துடன் பயன் படுத்துவதே ஆகார்ய நடிப்பு அதாவது ஆடை அணிகலன்கள் வாயிலாக உள்ள நடிப்புமுறை

வேடங்கள் ஒவ்வொரு கலைவடிவத்தையும் வேறுபடுத்துகின்றன. அன்றாட வாழ்க்கையில் வேடங்கள் வெவ்வேறு பண்பாடுகளையும் நம்பிக்கை- பழக்கவழக்கங்களையும் குறிப்பிடுகின்றன. அழகாக ஆடை அணிதல் பிறரின் கவனத்தை ஈர்க்கும் நல்ல வழிமுறையாகும், ஒவ்வொரு சூழலுக்கும் தனித்தனியான வேடம் புனைதல் சாதாரணமாகும்.

நடன வடிவங்களுக்கு மானிடப் பன்பாட்டுடன் நெருங்கிய உறவு உண்டு. சாதி, சமயம், குலம் என ஏராளமாக சிறப்புகளை வேடங்கள் சுட்டுகின்றன. அதனாலேயே பரம்பரை நடனங்கள் வேடங்களில் வளம் பெற்றுள்ளன. இயல்பாகவே வேடங்களே முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டன, பின்னர் தனிச்சிறப்புடன் தயாரித்த ஆடைகள் ஒவ்வொரு நடன வடிவத்தையும் கவனத்தில் கொண்டுவந்தன. வெவ்வேறு வட்டாரங்களின் நடன வடிவங்கள் வாய்ப்புகள் அளித்தால் குழந்தைகளை வேடம் புனைதல்களின் முரண்பாடுகளைச் சுயமாகப் புரிந்து கொள்வர்.

## கற்றல் செயல்பாடுகள்

- பல்வேறு நடன வடிவங்கள் ஐ டி உதவியுடன் காண வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

- ஆதிவாசி நடனம்
- அறுவடை நடனம்
- குறத்தி நடனம்
- திருவாதிரை நடனம்
- ஒப்பனை
- மார்க்கம் களி
- கோல்களி
- பரிசமுட்டு நடனம்
- பூர நடனம்
- பிற மாநிலங்களின் நடன வடிவங்கள்

- ஒவ்வொரு நடன வடிவங்களும் கண்டு எளிய குறிப்புகள் தயாரித்தல்.
- இவை குழுவில் கலந்துரையாடி ஒருங்கிணைத்தல்.
- இங்கே விவரித்தலின் முழுமையைக் குறித்துள்ள வினாக்களும் எழுதிய குறிப்பின் தரநிர்ணயமும் ஆகலாம்.

## அலகு 4 மெய்வழக்கம்

நடனம் ஆட உடலைத் தயார்நிலைப்படுத்துதல் அவசியமாகும். இல்லாவிடில் நடனத்திற்கு அங்கத்தூய்மை அமையாது. உடலை தயார்நிலைப்படுத்துவதற்கு நடனக்காரர்கள் எடுக்கும் பயிற்சியே மெய்சாதகம் செய்தல். இது போன்று கால்கள், கைகள், கழுத்து, கண்கள் என அனைத்து உடல்பகுதிகளுக்கும் இப்பயிற்சி தவிர்க்க இயலாது. உடல்நலம் உண்டாயின் மனநலமும் உண்டாகும். உள்ளமும் உடலும் முழுநலம் பெற்றால் மட்டுமே நல்ல ஒரு நடனக் கலைஞர் ஆக இயலும்.

### கற்றல் அடைவுகள்

- மெய்வழக்கம் பெறுதல்

### கருத்து அறிவு

- உடல்நலத்திற்கு மெய்வழக்கம் பெறுதல் வேண்டும்.
- நடன அசைவுகளுக்கு மெய்வழக்கம் அவசியம்

### செயல்

- பயிற்சி 3 வேளைகளிலும் ஏறு வரிசையில் இறங்கு வரிசையிலும் பயிற்சி பெறுதல்

### கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- முதல்வேளையில் த க தி மி

- நிறைவடையும் போது சமத்திலிருந்து மெதுவாக அரைவட்டத்தில் சென்று முழுவட்டத்தில் அமர வேண்டும்.
- முழு வட்டத்திலிருந்து மெதுவாக எழுந்து அரைவட்டத்தில் சென்று அரை வட்டதிலிருந்து சமம் சென்று சேர வேண்டும்.

*செயல்பாடு-2*

- இது சொல்பயன்படுத்தி செய்கின்ற மற்றொரு பயிற்சியாகும் -
- அரைவட்டத்தில் அமரவும் குதிகால் உயர்த்தி கால் விரல்கள் தரையில் ஊன்ற வேண்டும். குதிகால் உயர்த்தியதிலிருந்து மெதுவாக அரைவட்டத்தில் வரவேண் டும். முதல் இரண்டாம், மூன்றாம் வேளைகளில் செய்தல் வேண்டும்

## மதிப்பீடு

மெய்வழக்கம் உற்றுநோக்கி மதிப்பீடு செய்யப்படுகிறது.

# அலகு- 5 போலச்செய்தல்

போலச் செய்தல் மனிதரின் இயல்பான குணங்களில் ஒன்றாகும். அது ஒரு கலையும் ஆகும். பறவைகள் ,விலங்குகள் இயற்கை என்பனவற்றைப் போலச் செய்தல் தொடங்கிய் மனிதரிடம் உள்ள நடனக் கலைஞனும், இசைஞானியும், சிற்பியும் ஓவியனும் எழுச்சி பெறத் தொடங்குகின்றனர். சிறு குழந்தைகளுக்கு மிகவும் ஆர்வம் உள்ள ஒன்றே இந்தப் போலச் செய்தல். மிக நுட்பமான உற்றுநோக்கல் வாயிலாக கண்டவற்றையும் கேட்டவற்றையும் மறுகாட்சிப்படுத்துதலுக்கு குழந்தைகளால் இயலும். இத்திறனை ஊக்குவிக்கவும் செயல்வடிவில் வெளியிடவும் இயல்கின்ற தன்னம்பிக்கை குழந்தைகளில் உருப்பெறச் செய்ய வேண்டும்.

## கற்றல் அடைவுகள்

- போலச் செய்தல் திறன் பெறுதல்

## கற்றல் செயல்பாடுகள்

*செயல்பாடு-1*

- இயற்கையின் உயிரினங்களை ( உதா- பட்டாம்பூச்சி,காகம், கருடன், கோழி) எனும் தெரிந்த உயிரினங்களின் அசைவுகளைக் குழந்தைகள் பார்த்திருப்பார்கள். இவை போன்று செய்யுமாறு கூறவும். யானை, பிற விலங்குகள் ஆகியவற்றின் அசைவுகளையும் சிடி வாயிலாகக் காட்டவும். அதன் பின்னர் ஒவ்வொரு குழந்தைக்கும் விருப்பம் உள்ளவை போன்று செய்யுமாறு வாய்ப்பு அளிக்கவும்

காடு என ஆசிரியர் கூறும் போதே காட்டில் உள்ள விலங்குகள் ஒன்றாக வருவதுடன் ஒருமித்து காட்சிப்படுத்தவும் வேண்டும்.

*செயல்பாடு-2*

- மயில் நடனம் செய்யும் குறுந்தகடினைக் காட்டவும். அதன்பின்னர் குழந்தை களிடம் அதன் அசைவுகளின் சிறப்புத்தன்மைகள் போலச் செய்யுமாறு கூற வும், குழுவாக மயில்நடனம் போலச் செய்து காட்டவும். மேலும் பல செயல் பாடுகள் செய்யலாம்.

## மதிப்பீடு

- ஒருவருக்கொருவர் மதிப்பீடு செய்கின்றனர்.
- வெளியீட்டின் கூர்மை பற்றி ஆசிரியர் மதிப்பீடு செய்கிறார்.
- வெளியீட்டின் கூர்மை பற்றி ஆசிரியர் மதிப்பீடு செய்கிறார்.

## உதவும் ஆதாரங்கள்

- நாஷனல் ஜியோகிராபிக் சானல்
- விலங்குகளுடனும் பறவைகளுடனும் தொடர்புள்ள குறுந்தகடுகள்
- மயிலின் நடனம் குறுந்தகடு

# அலகு 6 அசைவு

அங்கச் சிதறல்கள் ( அங்கம் வாயிலாக வெளிப்படும் அசைவுகள்) நடிப்பின் மிகமுக்கியமான கூறுகளாகும். இவற்றில் முக்கியமான ஒன்று பார்வை ( கண் கள்) முகபாவனை முழுமை பெறவேண்டுமெனில் கண்களின் அசைவுகள் நுட்பமாக அமைதல் வேண்டும். சுயமதிப்பு, நிராசை, சோகம் எனும் பாவ னைகளைக் கண்கள் வாயிலாக எளிதாக வெளியிட இயலும். அங்க அசை வுகளின் அழகு, பார்வை பரிமாற்றத்தில் மேம்படுத்த இயலும். கண்களின் அசைவு கருத்துப் பரிமாற்றத்திற்கு உரிய சிறந்த ஒரு வழிமுறையாகும்.

## கற்றல் அடைவுகள்

- கண்கள், கழுத்து, தலை ஆகியன எளிதாக இயக்க இயலும்.

## கருத்து, அறிவு

- நடிப்புக் கருவியான கண்களுக்கு ஒப்பாக கழுத்தினுடையவும், தலையினு டையவும் அசைவுகளுக்கு முக்கிய பங்கு உண்டு.

## செயல்

- கண்களின் பயிற்சி, கழுத்து, தலை என்பனவற்றின் பயிற்சி செய்யப்படுகிறது.

## உள்ளடக்கம்

முக்கிய நடிப்புக் கருவிகளில் ஒன்றே கண்கள். நடனத்தில் கன்கள், கழுத்து, தலை ஆகியவற்றின் அசைவுகள் முக்கியமானவையாகும். தகவல் பரிமாற்றக் கரு வியான கண்களின் செயல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அதன் முன்னோ டியாக கண்கள் கழுத்து, தலை ஆகியவற்றிற்கு உள்ள பயிற்சி நன்றே. கண் ணின் அசைவுகள் எட்டு வகையிலும் கழுத்தின் அசைவுகள் நான்கு வகையி லும், தலையின் அசைவுகள் 9 வகையிலும் உள்ளன.

## கற்றல் செயல்பாடுகள்

- ***கண்ணின் அசைவுகள் ( பார்வை வேறுபாடுகள்)***

*“சமமாலோகிதம் ஸாசி*
*பிராலோகித நிமீலிதே*
*உல்லோகிதானு விர்த்தே ச*
*ததா சைலாவலோகிதம்”*

*சமம்*

(கண்களைத் திறந்து வைத்து அசையாமல் நிறுத்தவும்) நாட்டிய ஆரம்பம்,த ராசு, அந்நியனின் மனப்போக்கு என்னவென்று ஊகிக்கவும், வியப்பு, தேவ வடிவங்கள் எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது.

*ஆலோகிதம்*

கண்களைத் திறந்து வைத்து கருமணிகளை வட்டமாகச் சுழற்றுவது ஆலோ கிதப் பார்வை( குயவன் சக்கரம் சுழற்றுதல், எல்லாப் பொருட்களையும் உற்று நோக்குதல், வேண்டுதல் எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது.

*ஸாசி*

கருமணியை ஒரு பக்கமாக நீக்கி வால்கண்ணின் அருகே நிறுத்தவும்( இங்கி தம், பிறர் அறியாமல் குறிப்பு கொடுத்தல், மீசை தடவுதல், அம்பு எய்ய இலக்கு பார்த்தல், தத்தை, நினைவுகூரல்)

*பிராலோகிதம்*

( இரு ஓரங்களிலும் கண்கள் விடுதல்)

இரு பக்கங்களிலும் உள்ள பொருட்களைச் சுட்டுதல், கூட்டிச் சேர்த்தல், மிகு பாசம், அசைவு, புத்தி குறைபாடு

*நிமீலிதம்*

பாதி அடைந்த கண்கள் நிலமோடிய கண்கள்

*உல்லோகிதம்*

கருமணியை மேலே நோக்கி உயர்த்தி நிறுத்துதல்.

கொடி மரத்தின் உச்சி, கோபுர உச்சி, தேவ மண்டலம், முன்ஜன்மம், உயர்ந்த இடத்தில் உள்ள பொருட்கள் நிலவு (சந்திரன்)

*அன்யவிர்த்தம்*

மேலேயும் கீழேயும் விரைவாக அசைத்தல்

(அன்புள்ளவர்களை அழைத்தல், கடுங்கோபம்)

*அவலோகிதம்*

கருமணிகளை கீழ்நோக்கி நிறுத்துதல்

(நிழல் பார்த்தல், சிந்தித்தல், கலந்துரையாடுதல் கற்றல் தொடர்ச்சியால் வரும் சோர்வு, சுயங்களைப் பார்த்தல் படகு எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது)

- ***கழுத்தின் அசைவுகள்( கீரீவா வேறுபாடுகள்)***

*"சுந்தரீ ச திரஞ்சீனா*
*ததைவ பரிவர்த்திதா*
*பிரகம்பிதா ச பாவஸசைஞர்*
*ஜேஞய கிரீல சதுர்விதர"*

*சுந்தரி*

கழுத்தினை இடம் வலமாக ஆட்டுதல்)

இதனை அட்டிம என்றும் கூறலாம்

(அன்பின் துவக்கம், வேள்வி, குறிப்புப் பொருள், முழுமை என்ற பொருள், மகிழ்ச்சியுடன் சம்மதம் எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது)

*திரஞ்சீன*

இருபக்கங்களிலும் நீக்கி உயர்த்தி பாம்பு இழைவது போல் செய்தல்.

(வாள் வித்தை,பாம்பின் அசைவு எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது)

*பரிவர்த்திதம்*

கழுத்தினை இடவலமாகவும் பின் வலமாகவும் சந்திர வடிவில் அசைத்தல்

(சிருங்கார நடனம், இணையின் இரு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிடுதல் எனும் நடிப்புகளில் பயன்படுத்தப்படுகிறது)

*பிரகம்பிதம்*

(புறாக்களைப் போன்று கழுத்தினை முன்பின்னாக அசைத்தல், நான் நீ எனச் சொல்லுதல் கணக்கு கூட்டுதல் போன்றன)

- ***தலையின் அசைவுகள் ( சிரோ வேறுபாடுகள்)***

*சமம்*

தலையை அசைக்காது நேராகப் பிடித்தல் ( நாட்டிய ஆரம்பம், பிரார்த்தனைக்கு அமர்தல், காதல் கலகம் அசையாது நிற்றல்)

*உத்வாகிதம்*

மேலே உயர்த்திப் பிடித்த தலை ( கொடிமரம், சந்திரன், ஆகாயம், மலை, ஆகாயச் சலனம், உயரத்திலிருக்கும் பொருட்கள்)

*அதோமுகம்*

முகம் கீழ்நோக்கி திரும்பிப் பிடித்த தலை ( நாணம், சோகம், வணக்கம், மயக்கம், கீழே உள்ள பொருட்களைச் சுட்டுதல்)

*ஆலோலிதம்*

தலையை வட்டத்தில் சுழற்றுதல் ( உறக்கம் வருதல், பேய் பிடித்தல், நினைவு இழத்தல், குடி போதை, சுற்றி நடத்தல, சிரிப்பிக்க முயலும் விகட பாவனை)

*திருதம்*

முகத்தை இடப்பக்கமாகவும் வலப்பக்கமாகவும் திருப்புதல். ( இல்லை எனக் கூறல், சோகம், இடம் வலம் பார்த்தல், வியப்பு, மறுதலித்தல் , குளிர், காய்ச்சல், அச்சம், குடிப்பழக்கத்தின் பின் விளைவு, போர், முயற்சி, தன் அங்கங்களைப் பார்த்தல், பக்கத்தில் உள்ள நபரை அழைத்தல்)

*கம்பிதம்*

தலையை மேலாகவும், கீழாகவும் அசைத்தல் ( வினா எழுப்புதல், கோபத்தினால் நிறுத்தச் சொல்லுதல், எண்ணுதல், அருகாமையில் உள்ள நபரை அழைத்தல் தேவதைகளை வருத்துதல், அச்சுறுத்துதல்)

*பராவிர்த்தம்*

இடப்பக்கமோ, வலப்பக்கமோ திரும்பி முதுகின் மேலாக பின்னால் பார்த்தல்( கோபம், நாணம், வெறுப்பினால் முகம் திருப்புதல், ஆதரவின்மைகாட்டல், தன் கூந்தல் பார்த்தல்)

*உக்சிப்தம்*

பக்கம் நோக்கி முகம் திருப்பி சற்று மேலே உயர்த்துதல்( பிறர் அறியாமல் போ எனக் கூறல், சம்மதம் காட்டுதல், பின்பலம் ஆதல்)

*பரிவாகிகம்*

முகம் திருப்பாமல் இடமாகவும வலமாகவும் சாய்ந்து சாமரம் போன்று தலை ஆட்டுதல் ( மோகம், விரகம், தோத்திரம் சொல்லல், மகிழ்ச்சி, வாழ்த்துதல், நினைவு)

7.4



# நாடகம்



# நாடகம்

## முன்னுரை

இசை, நாடகம், நடிப்பு, படம், சிற்பம், இலக்கியம், துவங்கி அனைத்துக் கலைவடிவங்களும் நாடகக்கலையில் ஒன்றிணைந்துள்ளது. கல்விச்செயல்பாட்டில் நாடகக்கலையை பயன்படுத்துவது முக்கியமானதாக மாறியது. அதனால் தான் அழகை இரசிப்பதற்குள்ள சூழ்நிலையும் நாடகத்தை இரசிப்பதற்கான பயிற்சியும் உட்கொள்கின்ற நாடக பாட ஏற்பாடு தேவையானதாகும்.

நாடக மேடைகள் முக்கியமாக மூன்று விதத்தில் ஆகும். வகுப்புச் செயல்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆசிரியர் வகுப்பில் ஒரு நடிகனாகவும் வகுப்பு ஒரு அலங்காரமாகவும் சாராரணமாக மாறுகிறது என்பதே முதல் நிலை. நாடக மேடையின் சில பகுதிகளைக் கற்றல் செயல்பாட்டின் ஒவ்வொரு நிலையிலும் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டுமேன்பதே இரண்டாவது நிலை. நாடக வடிவத்திலுள்ள பாடப்பகுதிகளுக்குகாகக் கற்றல் செயல்முறைகள் வடிவமைக்கும் போது வெளியீட்டுனுடையவும் அரங்க மொழியுடையவும் இடத்தைப் பயன்படுத்த வேண்டி வருவதே மூன்றாம் நிலை.

வாசிக்கும் போது மனதில் சில காட்சிகள் உருவாகிறது. இந்த காட்சியின் வெளிப்படுத்தலே நாடகமும் பிற கலைகளும். எழுத்தை காட்சியாக்கும் போது, ஆழத்திலுள்ள பகுப்பாய்வும் பட உருவாக்கமும் நடக்கிறது. மொழியின் வேறுபாடும், கருத்துமான வேறுபாடுகளைப் புரிந்துகொண்டு சொந்த பாரம்பரியத்தைக் குறித்துள்ள அறிவு உருவாக இது உதவுகிறது. நாடக வெளிப்படுத்தல்களிலும் இத்தோடு தொடர்புடைய கலை வடிவங்களோடுள்ள தொடர்பிலும் சிறப்பு மாணவர்களுக்கு ஒரே போன்று பங்குபெற முடிவதனால் அவர்களுக்கு அதிகமான தன்னம்பிக்கை உருவாகிறது.

மாணவர்களின் நாடகம் பெரியவர்களிடமிருந்து சிறிது வேறுபட்டதாகும். உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் குழந்தைகளுக்குப் பல தனித்தன்மைகளுண்டு. அவர்களுடைய உணர்ச்சியிலும், பேச்சியிலும் வேறுபாடுண்டு. அதனால்தான் மாணவர்களின் நாடகத்தில் அந்தத் தனித்தன்மையை பார்க்கமுடிகிறதுஉரையாடலை விட சைகைக்கு முக்கியத்துவம். நாடகச் சூழ்நிலைகளுடையவும், உரையாடல்களுடையவும் சுதந்திரம் என்பவையே அது. இதனைப் புரிந்துகொண்டு குழந்தைகளுக்கு நாடகம் கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்

## கற்றல் அடைவுகள் நாடகம்

**முதல் வகுப்பு**

- உடல் அசைவுகளைப் பயன்படுத்தி வடிவம், அளவு, திசை, நிலை போன்றவற்றைக் குறிப்பிடுதல்.
- தனியாகவும் குழுவாகவும் தாளத்திற்கேற்ப நடத்தல், ஓடுதல், குதித்தல் போன்ற அசைவுகளை செய்கிறார்கள்.
- பல்வேறு சூழ்நிலைகள், இடங்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பொருத்தமான ஒலியுடன் பிரித்தறிதல்.
- உயிரினங்களுடையவும், மனிதர்களுடையவும் பயணமுறை, ஒலி, அசைவுகளின் தனித்தன்மை போன்றவற்றைப் போல் செய்து காட்டுகிறார்கள்.
- கதைப் பாடல்களை சைகை மூலம் தனியாகவும் குழுவாகவும் வெளியிடுகிறார்கள்.
- கதைக்கேற்ப கதாப் பாத்திரத்தை நடித்துக் காட்டுகிறார்கள்.
- பொரருத்தமான உடல் அசைவுகள் உரையாடல் போன்றவற்றுடன் கதையைப் பாவனையுடன் வெளியிடுகிறார்கள்.

**இரண்டாம் வகுப்பு**

- உயரினங்களின் வாழ்க்கையில் சிறிய நிகழ்ச்சிகளை தனியாகவும், குழுவாகவும் நடித்துக் காட்டுகிறார்கள்.
- பல்வேறு தொழில்கள் செயல்கள் போன்றவற்றை நடிக்கவும் மதிப்பிடவும் செய்கிறார்கள்..
- கதைப் பாடல்களுக்கு பொருத்தமான சைகைகளையும் பாவனையையும் காட்டி இயல்பாக நடிக்கிறார்கள்.
- எளிய பாடல்களுக்கு---------செய்கிறார்கள்.
- சூழ்நிலைக்கேற்ப விரல் பாவைகளுக்கு உரையாடல்கள் எழுதி வெளியிடுகிறார்கள்..

**மூன்றாம் வகுப்பு**

- மனிதர்களுடையவும், உயரினங்களுடையவும் குறிப்பிட்ட நேரத்திலுள்ள பழக்க வழக்கங்களை நடித்துக் காட்டுகிறார்கள்.
- சங்கீதத்திற்கு பொருத்தமான அசைவு தாளம் போன்றவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதில் திறமை பெறுகிறார்கள்.
- கதாப்பாத்திரத்தை இயல்பாக வெளியிடுவதற்காக உடலையும் ஒலியையும் பொருத்தமாக வெளியிடுகிறார்கள்.
- எளிய பாடல்களுக்கு---------செய்கிறார்கள்.
- இயற்கையிலுள்ள பல்வேறு ஒலிகள் அசைவுகள் போன்றவற்றை உற்றுப் பார்த்து நடிக்கவும் அதைப் பற்றிக் குழுவில் பங்கு வைக்கவும், தனியாக, குழுவாக நடிக்கவும் செய்கிறார்கள்.
- பழக்கமான நபர்களையும், சுற்றியுள்ள உயிரினங்களையும் மூக நடிப்பின் மூலமும் பொருட்கள், முகமூடி, வேடம் போன்றவற்றை உபயோகித்து ஒலி, அசைவு, சைகை உடலசைவு போன்றவற்றைப் பயன்படுத்தியும் வெளியிடுகிறார்கள்..
- ஒரு நிகழ்ச்சிக்கு முன்னரும் பின்னரும் சூழ்நிலையைக் கண்டுபிடித்து அவை மூன்றையும்--------பொருத்தமான உரையாடல்கள் தயாரித்து வெளியிடுகிறார்கள்.
- சூழ்நிலை, கதாபாத்திரங்கள் போன்றவைக்குப் பொருத்தமான சப்த ஒழுங்கமைப்பு செய்தும் பாடல்கள் பாடியும் பாவை நாடகம் நடிக்கிறார்கள்.

**நான்காம் வகுப்பு**

- நபர்களின் தனி அசைவுகளை வெளியிடுதல்.
- தாளத்துடனான பல்வேறு அசைவுகளிலிருந்து கிடைத்த அனுபவங்களை நாடகமாக உருவாக்குதல்.
- சப்தம், அசைவு, நடிப்பு போன்றவற்றை ஒழுங்கமைக்கவும் பின்னணி இசைக்கேற்ப தாளம் அமைக்கவும் செய்தல்.
- சுற்றுப்புறங்களிலிருந்து கிடைக்கும் பொருட்கள், நிறம், வேசம் போன்றவற்றைப் பயன்படுத்தி ஒரு கருத்தை குழுவாக வெளியிடுதல்.
- எளிய நாடகங்கள் நடிக்கவும், சிறிய பிரச்சினைகளை சூழ்நிலைக்கேற்பக் குழுவாக வெளியிடுதல்.
- தொடர்ச்சியான ஒரு சூழ்நிலையை இசைக் கருவிகளின் பின்னணி இசையுடன் ரேடியோ நாடகமாக வெளியிடுதல்
- பாடப்பகுதிகளை கதாப் பாத்திரத்தின் தன்மை மேடையமைப்பு உரையாடல், நேரம், இடம் போன்றவற்றிற்கு ஏற்ப வெளியிடுதல்.

# முதல் வகுப்பு

## அலகு – 1 : போலச் செய்தல்

நாடகம் நடித்து விளையாடும் விளையாட்டுகளில் குழந்தைகளும், குழந்தைகளும் ஆசிரியரும் சேர்ந்து விளையாடும் மனநிலை உருவாக வேண்டும். இயல்பான சூழ்நிலையிலிருந்து வேறுபட்டதல்ல வகுப்பறைச் சூழல் என்பதைப் புரியவைப்ப தற்கான வாய்ப்பைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு இவ் வாறான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உகந்ததாகுமிது. ஒவ்வொரு குழந்தையும் நிபந்தனைகளுக்கு ஏற்ப விளையாட்டுகளில் ஈடுபடும் போது பிற குழந்தைகளு டன் சேர்ந்து செயல்பட வேண்டியுள்ளது. இது அவர்களின் சுய அசைவை கட்டுப் படுத்தவும் குழுவினரின் அசைவுக்கேற்ப தாளத்துடனும் பொறுப்புடனும் அசைவ தற்கான பயிற்சியாகவும் மாறுகிறது.

வலைசட்டத்திலுள்ள எல்லா கற்றல் அடைவுகளையும் முழுமையாக்கும் முறை யில் வருடம் முழுவதும் தொடர்ந்து செல்லும் பல்வேறு நிலையிலுள்ள ஒரு செயல் பாட்டை ஒன்றாம் வகுப்பில் அறிமுகம் செய்ய வேண்டும். முதல் 3 செயல்பாடு கள் குழந்தைகளைக் குழந்தைகளின் இயல்பான உலகிற்கு கொண்டு செல்லும் எளிய விளையாட்டுகளாகும். பாடப் புத்தகத்திலுள்ள பிற செயல்பாடுளுடன் பொருத்த மான அனைத்தையும் தொடர்புபடுத்தி அறிவுபூர்வமாக செயல்பாடுகளைத் திட்ட மிடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- உடல் அசைவுகளைப் பயன்படுத்தி வடிவம், அளவு, திசை, நிலை போன்ற வற்றை குறிப்பிடுதல்.
- தனியாகவும், குழுவாகவும் தாளத்திற்கேற்ப நடத்தல் ஓடுதல், குதித்தல் போன்ற அசைவுகளை செய்கிறார்கள்.
- பல்வேறு சூழ்நிலைகள், இடங்கள் நிகழ்ச்சிகள் போன்றவற்றை பொருத்தமான ஒலியுடன் பிரித்தறிதல்.
- பழக்கமான உயரினங்களின் சப்தத்தைப் போலச் செய்தல்.
- உயரினங்களுடையவும், மனிதர்களுடையவும் பயணமுறை, சப்தம் அசைவுகளின் தனித்தன்மை போன்றவற்றைப் போல் செய்து காட்டுகிறார்கள்.
- மனிதர்களின் பல்வேறு உடல் அமைப்புகள் போலச் செய்கிறார்கள்.
- கதைப் பாடல்களை செய்கை மூலம் தனியாகவும் குழுவாகவும் வெளியிடு கிறார்கள்.
- கதைக் கேற்ப கதாப்பாத்திரத்தை நடித்துக் காட்டுகிறார்கள்.
- அன்றாட வாழ்க்கைக் காட்சிகளை வரிசைப்படுத்தி வெளியிடுகிறார்கள்.
- பொருத்தமான உடல் அசைவுகள், உரையாடல்கள் போன்றவற்றுடன் கதையைப் பாவனையுடன் வெளியிடுகிறார்கள்.

## கருத்து, திறன்

- இயற்கையிலுள்ள பொருட்களுக்கு வேறுபட்ட அளவும், வடிவமும் உள்ளது. செய்கைகளின் மூலம் அளவு, வடிவம், திசை, நிலை போன்றவற்றை எடுத்துக் கூற முடியும்.
- குழுச் செயல்பாட்டைத் தாளத்துடன் செய்யும் போது அதனுடைய அழகுணர் வைப் பிரித்தறிதல்.

  குழுவின் தாளம் குழு உறுப்பினர்களின் கூட்டுப் பொறுப்பாகும்.

  (தாளத்திற்கேற்ப கட்டுப்பாட்டுடன் அசைவதற்கான திறன் பெறுகிறார்கள்)
- வெவ்வேறு இடங்களிலும் சூழ்நிலைகளிலும் கேட்க முடியும் ஒலிகளை பிரித்த றிகிறார்கள்.
- மனிதர்கள், மனிதர் அல்லாதவைகளின் பல்வேறு சப்தங்கள் நிறைந்ததாகும் இயற்கை.

  இத்தகைய தனித்தன்மை வாய்ந்த ஒலிகளை ஒரு குறிப்பிட்ட அளவு வரை மனிதனுக்கு போலச் செய்ய முடியும்.
- ஒவ்வொரு உயிரினத்திற்கும் அதற்குரிய சலன முறைகள் உள்ளன.

  மனிதர்களுக்கு இவற்றை ஒரு அளவு வரை போலச் செய்ய முடியும்.
- உடல் அசைவு, பரிமாற்ற முறை பொருத்தமான உடல் அசைவுகள் கருத்துப் பரிமாற்றத்திற்கு உகந்ததாகும்.
- கலைஞன் எடுத்துரைக்கும் தனித்தன்மைகளை உட்கொள்ளும் திறன்.
- வெளிப்படையான தனித்தன்மைகளையே வெளியிடுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

  (ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் மிக விரைவில் அசைவுகளை வெளியிடும் திறன்)
- மொழியைப் பயன்படுத்தும் திறன்- உரையாடல் பொருளுடையதாவதற்கு அசைவுகளும், பாவங்களும் தேவையாகும்..

## செயல்பாடு -1 : பௌ...பௌ...மியாவ்...மியாவ்...

- ஆசிரியர் வகுப்பிற்குள் நுழையும் போது மாணவர்கள் மெதுவாக எழுந்து நிற் பார்கள். உட்காரச் சொல்லும் போது அனைவரும் ஒன்றாக உட்காரவும் செய் வார்கள். குழந்தைகளை ஒன்றாக எழுந்து நிற்கவும் உட்காரவும் செய்வதற்கு பொதுவாக Stand, sit முதலிய கட்டளைகளை கூறுவோம். இதில் ஒரு சிறிய மாற்றம் செய்தால் அது ஒரு விளையாட்டாக மாறும். உதாரணமாக Stand என் பதற்கு பௌ பௌ என்றும் sit என்பதற்கு மியாவ் என்று கூறலாம். திரும்ப திரும்ப பௌ பௌ மியாவ், மியாவ் என்று கூறிக் கொண்டிருக்கும் போதே வரிசை மாற்றிக் கூறலாம். உட்காரும் போது மீண்டும் உட்காரவும், நிற்கும் போது மீண்டும் நிற்கவுமாக மீண்டும் மீண்டும் இவ்வாறு கட்டளை இடவேண்டும்.

- வேகத்தில் கட்டளையிடும் போது குழந்தைகளுக்கு மத்தியில் உண்டாகும் கருத்து வேறுபாடு ஒரு சுவையான விளையாட்டாக மாறும். நிற்பதும் உட்காருவதுமான விளையாட்டை நடத்த வேண்டுமென்பதில்லை. கை உயர்த்துவதோ அல்லது பொருத்தமான பிற செயல்பாடுகளையோ சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்தலாம். இதற்குத் தேவையான குறிப்புகளை ஆசிரியர் தேர்ந்தெடுக்கலாம்.

### செயல்பாடு -2 : தை தை - தக தக

- குழந்தைகள் வட்டமாக நிற்கிறார்கள் தை தை தை தை என்ற வாய்மொழிச் சிந்திற்கேற்ப தாளத்திற்கும், வேகத்திற்கும் ஏற்ப வலப்பக்கமாக நடக்கிறார்கள்/ ஓடுகிறார்கள். குழந்தைகள் தாளத்திற்கேற்ப நடக்கும் போது வாய்மொழி சிந்து தக தக தக என மாறும். அப்பொழுது குழந்தைகள் திரும்பி நடக்க வேண்டும். இந்தக் கட்டளைகளையெல்லாம் குழந்தைகளுக்குச் சரியாகக் கொடுக்க வேண்டும். கட்டளைகளுக்குக் கட்டுப்படாதவர்கள் வட்டத்திற்கு வெளியே செல்ல வேண்டும். ஒன்றிரண்டு முறை விளையாட்டை திரும்பத் திரும்ப விளையாடிய பிறகு நிபந்தனைகள் கூடுதலுள்ள வேறொரு விளையாட்டை விளையாடலாம்.

### செயல்பாடு -3 : எலுமிச்சம்பால் சூட்டுக்கு ரண்டு

- வகுப்பில் குழந்தைகள் ஒன்றாகப் பங்கு கொள்வதற்கு உரிய ஒரு நாட்டுப்புற விளையாட்டே இது. இறுதியில் வேகத்தில் ஒலிக்கும் ஆறு வரிகளின் நாட்டுப்புறப் போக்கே இந்தப் பாட்டின் தாளமும் விதியும் தீர்மானிக்கிறது.

  * *எலுமிச்சம் பால் சூட்டக்கு ரண்டு*
  *இலைகள் பச்சை பூக்கள் மஞ்சள்*
  *ஓடிவரும் கள்வனைப் பிடித்தோம்...*

  * *அரிப்போ திரிப்போ*
  *அக்குத்திக்கு..*
  *ஆரானயில் போகிறார்?*

- இரு குழந்தைகள் எதிர் எதிராக நின்று கைகள் உயர்த்திப் பிடித்து வாசல் போன்ற வடிவத்தில் ஆக்கி அதன் கீழ் குழந்தைகள் வரிசையாக நடந்து போகுமாறு நிற்கின்றனர். பிற குழந்தைகள் பாடலின் தாளத்துக்கு ஏற்ப வாசல் வாயிலாகச் செல்கின்றனர். கள்வனைப் பிடித்தோம் எனப்பாடும் போது வாசலில் உள்ளேயுள்ள நபரை கைகள் இறுக்கிப் பிடித்துக் கொள்கின்றனர். பிடிக்கப்பட்ட நபர் வெளியே செல்ல வேண்டும். பாடலும் விளையாட்டும் தொடர்கிறது.( நடத்தல், ஓடுதல், குதித்தல் என்பவற்றின் தாள உணர்வு உறுதிப்படுத்தப்படுகின்றன மேலும் பல விளையாட்டுகளைச் சூழலுக்கு ஏற்ப கண்டுபிடிக்கலாம்.

## அலகு – 2 : நான் உண்டும் தண்டுண்டும்

கதை சொல்லும் முறையை இரண்டாம் நிலை கற்றல் செயல்பாடுகளை அடைவதற்காக நாம் இங்கே மேற்கொண்டுள்ளோம். ஆசிரியரும் குழந்தைகளும் கூட்டுப் பொறுப்புணர்வுடன் ஒரு கொடுக்கல் வாங்கல் செயல்பாட்டின் மூலமே இந்த நிலை முன்னேறுகிறது. ஜீவராசிகளின் சப்தங்களும், பயணமுறைகளும் அசைவுக

ளின் தனித்தன்மைகளையும் போலச் செய்தல் திறனை இந்த செயல்பாட்டின் மூலம் அடையலாம். ( எல்லா கற்றல் அடைவுகளும் முழுவதுமாக இந்த செயல்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.)

***நிலை-1***

- முத்துவும் மீனாவும் திருவிழாவிற்குப் போவதற்காகத் தாயாராகிறார்கள். பாட்டியின் வீட்டிற்கு அருகிலுள்ள சித்திரம் காவில்தான் திருவிழா. போவதற்கு தயாராகும் போது புள்ளிக் கோழியும் குஞ்சுகளும் ஓடி வந்தார்கள். புள்ளிக் கோழி முத்துவிடம் கேட்டது.

  *'முத்து முத்து நாங்களும் திருவிழா பார்க்க வரட்டுமா?'*
  *'வேண்டாம் வேண்டாம், கோழிகளையெல்லாம் திருவிழாவிற்கு கொண்டு போக முடியாது*
  *கோழிக்குஞ்சு மீராவிடம் கேட்டது*
  *'மீரா மீரா... நாங்களும் உங்களுடன் திருவிழா பார்க்க வரட்டுமா?'*
  *'வேண்டாம் வேண்டாம் கோழிக்குஞ்சுகளை எல்லாம் கொண்டு போக முடியாது, வேகம் கூட்டிற்குள் ஏறுங்கள் அந்த கிட்டு நரி வந்தால்...!*
  *'ஏய் நாங்கள் கூட்டிற்குள் ஏறமாட்டோம். நாங்கள் கொத்தித் தின்னப் போகிறோம் கூட்டிற்குள் ஏறுவதற்கு நேரமாகவில்லை.'*

## செயல்பாடு 1

- குழந்தைகள் அனைவரும் கோழிக் குஞ்சுகளாகவும் ஆசிரியர் தாய் கோழியாகவும் மாறவும். குழந்தைகள் கோழிகளைப் போல நடந்து சப்தம் போடட்டும் சிறிது நேரத்திற்குப் பிறகு கூட்டத்திலுள்ள இரண்டு குழந்தைகள் முத்தாகவும் மீராவாகவும் மாறட்டும். வகுப்பின் ஒரு பக்கத்தில் ஒரு வட்டம் வரைந்து கோழிக்கூடு அமைக்கவும். முத்துவும், மீராவும் தாய்கோழியையும் கோழிக் குஞ்சுகளையும் கூட்டில் ஏறச் சொல்லுதல்
- நடத்தல், ஒலி போன்றவற்றின்- பங்களிப்பு குழு உணர்வு, தாள அறிவு போன்றவற்றை ஆசிரியர் மதிப்பீடு செய்யவேண்டும்.
- ஆசிரியர் கதையைத் தொடர்கிறார். கோழிகளைக் கூட்டில் அடைத்துவிட்டு முத்துவும் மீனாவும் போவதற்குத் தயாரானார்கள்

  *'மே.... மே... '*
  *மினிக்குட்டி என்ற ஆட்டுக்குட்டி ஓடி வந்தது*
  *'என்னையும் திருவிழா பார்க்க கொண்டு போவாயா?' மினிக்குட்டி கொஞ்சிக் கொண்டே கேட்டது*
  *மீரா: 'ஏய் இல்லை ஆட்டுக் குட்டிகளையெல்லாம் திருவிழாவிற்கு கொண்டு போகமுடியாது. அந்த வரயன் நரி இங்கே சுற்றி நடக்கிறது வேகம் அம்மாவின் அருகில் போ'*

## செயல்பாடு 2

- ஆசிரியர்: 'நரி எப்படி பயப்படுத்தும்...?'
- குழந்தைகள் அனைவரும் நரியைப் போல சத்தம் போடுகிறார்கள்.
- கதை தொடர்கிறது:

- முத்துவும் மீனாவும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். படியிலிருந்து இறங்கி பொண்ணாரம் வயல் வரப்பு வழியாக நடக்கிறார்கள். அதோ வயலில் கொஞ் சம் வாத்துகள். அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

**செயல்பாடு 3**

குழந்தைகள் வாத்துகளாகிறார்கள். வாத்தைப் போல் நடக்கிறார்கள்..

ஆசிரியர் பாட்டு பாடுகிறார். வாத்துகள் விளையாடுகின்றன. எல்லோரும் சேர்ந்து பாடுகிறார்கள். ( பாடலுக்குப் பொருத்தமான சைகைகளை காட்டி குழுவாக வும், தனியாகவும் வெளிப்படுத்தும் திறன் இந்த செயல்பாட்டின் வழியாகப் பெறவேண்டும்) பொருத்தமான சைகைகளை பயன்படுத்தும் திறன், தலைமைப் பண்பு, தாள அறிவு போன்றவற்றை மதிப்பீடு செய்ய வேண்டும்.

பாட்டு

*நீரில் நீந்த என்ன சுகம்*
*ஆகாயம் காண என்ன சுவை*
*நீரில் நீந்தும் மீனின் பின்னால்*
*மூழ்கி அலைய என்ன சுவை*
*ஆம்பல் பூ காண என்ன சுவை*
*புல்லில் ஒளிக்க என்ன சுவை*
*துள்ளி ரசிக்க என்ன சுவை*
*குரோம் குரோம் காட்ட என்ன சுவை*
*குரோம் குரோம் காட்ட என்ன சுவை*

**செயல்பாடு 4**

- குழுவிலுள்ள இரண்டு குழந்தைகள் முத்துவாகவும், மீராவாகவும் வந்து வாத்துக ளிடம் போய் வருகிறோம் என்று சொல்கிறார்கள். குட்டி வாத்துகளெல்லாம் அவர் களுடைய இருப்பிடத்திற்குப் போகிறார்கள்.

***நிலை-2***

- கதையின் சூழ்நிலைக்கேற்ப கதாபாத்திரத்தை நடித்துக் காட்டுதல். பொருத்தமான உடல் அசைவுகள், உரையாடல்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கதையைப் பாவனையுடன் வெளிப்படுத்துதல். மதிப்பீடு மொழியைப் பயன்படுத்தும் திறன் உரையாடல், உடல் அசைவுகளின் பொருத்தம் போன்றவற்றை இங்கு மதிப்பிட வேண்டும்.
- ஆசிரியர் கதையைத் தொடர்கிறார்.

*வாத்திடம் விடை பெற்ற முத்துவும், மீராவும் மீண்டும் நடந்து மிகப் பெரிய ஆலமரத்திற்கு கீழே சென்றார்கள். ஆலமரத்திற்கு கீழுள்ள கிளைகளில் கொடிகள் படர்ந்து ஒரு காட்டுப் பொந்தாக மாறியிருக் கிறது. தீடீரென்று காட்டு பொந்திலிருந்து ஒரு அசைவு. இருவரும் பயந்து பின்னால் செல்கிறார்கள். அருகிலிருந்த தேக்கு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து மெதுவாக கவனித்தார்கள். மரக்கிளையில் தொங்கி ஆடிக் கொண்டே இவர்களைப் பார்த்து கேலி செய்கிறது சிண்டுக் குரங்கு. மரக்கிளையிலிருந்து தாவி அவன் பாடினான்*

*இந்த சிண்டு குரங்கு யாரென்று தெரிய வேண்டாமா? முத்துவின் நண்பன் தான் இந்த சிண்டு குரங்கு. பெரிய குறும்புக்காரன் இவன். வீடுகள் தோறும் சென்று உணவை திருடுவான். பள்ளி விட்டு வரும் குறும்புக்கார சிறுவர்களை மரக்கொம்பை ஆட்டி பயப்படுத்துவான். மீராவின் வீட்டுமுற்றத்தில் கொய்யாப் பழம் காய்த்திருந்தாள் பறித்து தின்பான். இப்படியெல்லாம் அவன் செய்தாலும் சிண்டுவினால் சில நன்மைகளும் உண்டு கோழிக்குஞ்சுகளை பிடிக்க வரும் கோங் கண்ணி காகத்தையும், கிட்டுக் குரங்கையும் சத்தம் போட்டு விரட் டுவான் அப்படி....*

*திருவிழாவிற்குப் போகும் குழந்தைகளைப் பார்த்த பொழுது சிண்டு ஆவேசத்துடன் குழந்தைகளிடம் கேட்டான்*

*தாணுண்டு தண்டுண்டு பின்னாலே*
*தண்டுண்டு தானுண்டு வரலாமா*
*சிண்டு குரங்கும் வரலாமா*

*அப்போது குழந்தைகள் இவ்வாறு கூறினர்?*

## செயல்பாடு 1

- எல்லாக் குழந்தைகளையும் மூன்று குழுக்களாக்கவும். குழந்தைகள் குரங்காக வும், முத்துவாகவும், மீராவாகவும் மாறட்டும் ( வகுப்பறையில் அங்குமிங்குமாக நிற்கட்டும்) இவர்களின் உரையாடலை எல்லாக் குழுக்களும் ஒரே நேரத்தில் பேசட்டும். தொடர்ந்து குழந்தைகளை வட்டமாக அமரச் செய்து ஏதாவது ஒரு குழுவை மையத்தில் உட்கார வைத்து அவர்களின் உரையாடலை சத்தமாகச் சொல்ல வைக்கலாம். ஒன்றோ, இரண்டோ குழுக்களுக்கு வாய்ப்பளிக்க வேண் டும். ( கதாப் பாத்திரங்களுக்குப் பொருத்தமான உரையாடலை தயாரித்து வெளி யிடவும் பொருத்தமான உடல் அசைவுகளுடனும் பாவனையுடனும் கதையை கூறுதல் போன்ற திறன்களை இந்த செயல்பாடுகளின் மூலம் பெறலாம். மொழி வெளியீட்டுத் திறன் பொருத்தமான உடல் அசைவுகள், பாவனை போன்றவற்றை மதிப்பிட வேண்டும்.

- கதை தொடர்கிறது.

  முத்துவும் மீராவும் என்ன சொன்னார்கள் தெரியுமா?

  *நானுண்டு தண்டுண்டு பின்னாலே*
  *தண்டுண்ட்டு நானுண்டு வரலாமா*
  *வேலவிளக்கிற்காய் டும் டும் டும் கொட்ட*
  *சிண்டும் குரங்கும் வரலாமா.*

- (குழந்தைகளிடம் மீண்டும் பாடச் சொல்லுதல்.)

  *திருவிழாவிற்கு அழைத்துச் செல்ல முடியாதென்று முத்துவும், மீரா வும் கூறியதால் சிண்டுக்குரங்கு கவலைப்பட்டது.சிண்டுமரத்தின் மேலே தாவி ஏறி உட்கார்ந்து கொண்டது. முத்துவும், மீராவும் வேக மாக நடந்தார்கள். அண்ணன் கோபாலின் வாழைத் தோட்டத்திற்கு அருகில் சர்க்கரைப் பாறைக்கு கீழ் தெச்சிக்காட்டின் நிழல் வழி*

யாக நடந்து அவர்கள் கோரப்புழைக்கு அருகில் சென்றார்கள். இனி ஆற்றைக் கடந்து செல்ல வேண்டும். ஆற்றில் இறங்கி நீந்திச் செல்லலாம் என்று நினைத்த போது அதோ ஒரு முதலை. ஒன்றல்ல. அம்மாவும் குழந்தைகளுமாக ஒரு கூட்டம் முதலைகள். மீராவையும் முத்துவையும் பார்த்த போது அவைகள் தலையை உயர்த்தி வாய் பிளந்து நிற்கிறார்கள்.

'ஐயோ இனி என்ன செய்வது?' மீராவும் கவலைப்பட்டாள். ச்..செ. அந்தச் சிண்டுக் குரங்கு இருந்தாலாவது ஏதாவது ஒரு வழி கண்டு பிடித்திருக்கலாம்.

என்ன செய்வதென்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது வழியருகிலிருந்த மரக்கிளையில் ஒரு அசைவு தெரிந்தது. பார்த்தால் மரக்கிளையிலிருந்து தாவி இறங்கி வருகிறது நம்முடைய சிண்டுக் குரங்கு. அவன் இவ்வாறு பாடினான்.

நானுண்டு தண்டுண்டு பின்னாலே
தண்டுண்டு நானுண்டு பின்னாலே

சிண்டுவைப் பார்த்த இருவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

'முத்து: எடா சிண்டு இந்த அருவியை எப்படி கடந்து செல்வது? இதில் ஏராளம் முதலைகள். பார்க்கவில்லையா வாய் பிளந்து பார்ப்பதை.'

'சிண்டுக்குரங்கு: அதுவா பிரச்சினை? அதற்கொரு வழி இருக்கிறது. கீழே சிறிது தூரம் நடந்து சென்றால் அருவியின் நீளம் குறுகிய இடம் வரும். அங்கே சாய்ந்து நிற்கும் மரக்கிளையில் தொங்கிக் கொண்டு அக்கரைக்குப் போகலாம்.

சிண்டுக் குரங்கன் முன்னாலும், முத்துவும், மீராவும் பின்னாலுமாக அருவிக்கரையின் வழியாக நடக்கத் தொடங்கினார்கள். மரங்களைப் பார்க்கும் போதெல்லாம் சிண்டு அதில் பாய்ந்து ஏறி அடுத்த மரத்தின் மேல் தாவுவான்.

ஒரு நீலப் பொன்மான் ஆற்றில் மீன் பிடிப்பதை மீரா பார்த்தாள். பொன்மான் தண்ணீரில் மூழ்கி மீன் பிடிப்பதைப் பார்ப்பதற்கு எவ்வளவு அழகு. ஆற்றங்கரைக்கு அருகில் தண்ணீரைப் பார்த்துக் கொண்டு அசையாமலிருக்கிறது வயதான ஒரு கொக்கு. அருவியின் வேறொரு இடத்தில் உருண்டையான பாறைகள் உயர்ந்து நிற்கிறது. சில நண்டுகள் வெயில் காய்ந்து கொண்டிருப்பதை முத்து பார்த்தான். சிண்டுக் குரங்கு காட்டை குலுக்கிய போது சில காட்டுக் கோழிகள் பயந்து ஓடியது.

நடந்து நடந்து சிண்டுக் குரங்கன் கூறிய இடத்தை அவர்கள் சென்றடைந்தார்கள். மரக்கிளைகள் அருவியின் மறுகரை வரை சாய்ந்து கிடக்கிறது. முத்துவும் மீராவும் ஓடிச்சென்று சாய்ந்து கிடக்கும் மரக்கிளையைப் பிடித்து தொங்கிக் கொண்டு அக்கரையைச் சென்றடைந்தார்கள்.

*நானுண்டு தண்டுண்டு பின்னாலே*
*தண்டுண்டு நானுண்டு வரலாமா*
*வேல விளக்கிற்காய் டும்டும்டும் கொட்ட*
*சிண்டு குரங்கும் வரலாமா*
*அப்போது குழந்தைகள் இவ்வாறு கூறினர்*
*எங்களுடன் வந்திடண்டாம்*
*வேலவிளக்கினாய் டும்டும்டும் கொட்ட*
*எங்களுடன் வந்திடண்டாம்*

## செயல்பாடு 2 : ஆற்றைக் கடக்கலாம்

சாக்பீஸ் பயன்படுத்தி வகுப்பறையில் ஒரு ஆறு வரையலாம். ஆற்றுக்கு நடுவில் அகலம் குறைந்த மூன்றோ நான்கோ மரப் பாலங்கள் ( ஒரே மரத்தில்) வரையலாம்.

***நிலை-1***

- குழந்தைகளைக் குழுவாகப் பிரித்து பாலத்திற்கு மேலாக

(படம்)

- கடந்து செல்லக் கூற வேண்டும். அகலம் குறைந்த பாலமானதால் கவனமாகக் கடந்து செல்லக் கூறவேண்டும். கீழே விழுந்தால் முதலை பிடித்துவிடும். குறிப்பிட்ட நேரத்திற்குள் மறு கரையை அடையும் குழு வெற்றி பெறும். போட்டி இதுதான் ( பாலம் அமைப்பதற்காக மூங்கில் கம்பையோ பாக்கு மரக் கம்பையோ பயன்படுத்தினால் விளையாட்டு உற்சாகமாக இருக்கும்)

***நிலை-2***

- பாலத்தின் ஒரு பக்கமாக மட்டுமல்லவா நடந்தார்கள். இனி இருபக்கமாக நடக்கட்டும். அங்குமிங்குமாக ஒன்றாக நடக்கும் போது எதிரில் வருபவரை இடிக்கமால் பார்த்துக் கொள்ளவேண்டும். ஒரு குழந்தையும் கீழே விழாமல் மறுகரையை அடையும் குழு வெற்றி பெறும். தனியாகவும் குழுவாகவும் தாளத்துடன் நடந்தும் ஓடியும், குதித்தும் இந்த விளையாட்டைச் செய்யலாம். மதிப்பீடு குழு உணர்வு, பிறரை மதித்தல், சுயக் கட்டுப்பாடு, ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை போன்றவற்றை ஆசிரியர் மதிப்பிட வேண்டும்.

# இரண்டாம் வகுப்பு

## அலகு – 1 : காட்சிப்படுத்துதல்

முதல் வகுப்பில் நாட்டியம், நாடகம் போன்றவற்றில் அடிப்படை அனுபவங்கள் பெற்ற குழந்தைகளே இரண்டாம் வகுப்பிற்கு வருகிறார்கள். ஒன்றாம் வகுப்பில் படித்தவற்றை மீண்டும் உறுதிப்படுத்துவதுடன் புதிய மண்டலங்களை அறிமுகம் செய்யவும் வேண்டும். குழு மனப்பான்மை, தாள அறிவு, குழு நடனம் மனிதர்களின், மிருகங்களின் செயல்களைப் போலச் செய்தல் போன்ற செயல்பாடுகளை இரண்டாம் வகுப்பில் செயல்படுத்த வேண்டும். சப்த அசைவு ஒழுங்கமைப்பு, அவற்றின் புனர்அமைப்பு, உயரினங்களின் வாழ்க்கைச் சூழல்களை தனியாகவும் குழுவாகவும் போலச் செய்து காட்டுதல், தொழில்களைப் போலச் செய்தல், கதைப்பாடல்கள், எளிய பாடல்கள், போன்றவற்றை செய்தல். உரையாடல் பாடல்களை விளையாட்டு முறையில் குழுவாக வெளியிடுதல். விரல் பாவைகளைப் பயன்படுத்தி வாழ்க்கைச் சம்பவங்களை செய்தல்.

குழந்தைகளைக் கற்றல் செயல்பாடுகளில் ஒன்றிணைக்கும் விதத்தில் சில அடிப்படைச் செயல்பாடுகளும் தொடர்ந்து வலைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கற்றல் அடைவுகளை அடைவதற்கு உதவும் கற்றல் செயல்பாடுகள் இணைந்த ஒரு முழுமையான செயல்பாடாகும் இரண்டாம் வகுப்பில் தயாராக்கியிருப்பது. கதை சொல்லும் போது குழந்தைகள் தனியாகவும், குழுவாகவும் செய்யும் செயல்பாடுகளை ஆசிரியர் ஒருங்கமைக்க வேண்டும்.

### கற்றல் அடைவுகள்

- சத்தத்தையும் சலனத்தையும் ஒருங்கிணைத்தல்.
- உடல் அசைவுகளை உற்றுப் பார்த்து----.
- உயரினங்களின் வாழ்க்கையில் நடைபெறும் சிறு நிகழ்ச்சிகளை தனியாகவும் குழுவாகவும் போலச் செய்தல்.
- பல்வேறு தொழில்கள், செயல்கள் போன்றவற்றைப் போலச் செய்யவும் மதிப்பிடவும் செய்தல்.
- கதைப் பாடல்களுக்குப் பொருத்தமான அசைவுடனும் பாவனையுடனும் இயல்பாக வெளியிடுதல்.
- எளிய பாடல்களுக்கு இசை அமைத்தல்.
- உரையாடலும் ஒலியைச் சேர்ந்து வருமாறு உரையாடல் பாடல்களை குழுவாக வெளியிடுதல்

- சூழ்நிலைக்கேற்ப விரல் பொம்மைகளுக்கு உரையாடல் எழுதி வெளியிடு தல்.
- தெரிந்த காரியங்களை உரையாடல் அசைவு போன்றவற்றின் மூலம் குழுவாக வெளியிடுதல்.

## கருத்து, திறன்

- சப்த அசைவுகளின் பொருத்தமின்மை.
- உற்றுநோக்கலின் மூலம் உடல் அசைவுகளைப் பிரித்தறியலாம்.
- சிறந்த அசைவுகளை மறு சீரமைக்கும் போது
- வெவ்வேறு உயிரினங்களின் பழகும் முறைகள் வேறுபட்டதாகும். உயரினங்க ளுக்கு தனித்தன்மை வாய்ந்த ஒலி அசைவுகள் உள்ளது.
- சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பறவை விலங்கினங்களின் சப்தம். அசைவு பழகும் முறைகள் போன்றவை மனிதர்களைப் போல மாறுபடுகிறது.
- தொழில்களின் வேறுபாட்டைப் பிரித்தறிகிறார்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் வெவ்வேறான உடல் அசைவுகள் தேவையென்றறிகிறார்கள்.
- உடல் அசைவுகளையும் பாவனைகளையும் ஒன்றிணைக்கும் போது வெளியி டுதலில் தெளிவு ஏற்படுகிறது.
- உடல் அசைவுகளுடன் பாவனையும் சேரும் போது வெளியிடுதல் கவர்ச்சிகர மாகிறதென்று பிரித்தறிகிறார்கள்.
- டாப்ளே காட்சிப்படுத்துவதற்கு உற்றுநோக்குதல் அவசியமாகும்.
- பொருத்தமான காட்சியை விவாதத்தின் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- உரையாடலுடன் ஒலிகளும் சேரும்போது கருத்துப் பரிமாற்றம் சிறப்பாக நடை பெறுகிறதென்று பிரித்தறிகிறார்கள்.
- சூழ்நிலைக்கேற்ப உரையாடல் தயாரிப்பதற்கான திறன் பெறுகிறார்கள்
- உரையாடலுக்குப் பொருத்தமான அசைவுகள் கருத்துப் பரிமாற்றத்திற்கு தேவை யாகும்.

### செயல்பாடு -1 : பின்னால் வரும், எதைக் காட்டினாலும் நாங்களே காட்டுவோம்

- குழு அசைவு போலச் செய்தல் போன்றவற்றை உறுதிப்படுத்தும் ஒரு விளை யாட்டாகுமிது. விளையாடுவதற்கு முன்னர் வகுப்பை தாளத்திற்கேற்ற சூழ்நி லைக்கு கொண்டு வருவதற்கு ஒரு எளிய விளையாட்டை விளையாடலாம். ஆசி ரியர் சரியான நேர அளவை மனதில் கொண்டு 1,2,3,4 என்று எண்ணுகிறார். நான்கு என்று எண்ணுவதற்கு பதிலாக கைதட்ட வேண்டும். 5, 6, 7 என்று எண்ணி 8 ற்கு பதிலாக கைதட்ட வேண்டும். சிறிது நேரம் இந்த விளையாட்டைத் தொடர வேண்டும். 1,2,3,4 எண்ணாமலே சரியான இடைவேளையில் கைதட்ட வேண் டும். இதே தாளத்தில் ஆசிரியர் எழுந்து நடக்க வேண்டும். முன்னரே கூறிய நிபந்தனைகளுக்கு ஏற்பக் குழந்தைகள் வரிசையாக ஆசிரியர் பின்னால் ஒரு வரிசையில் நடக்கிறார்கள். எல்லாக் குழந்தைகளும் வரிசையில் சேர்ந்தால்

புதிய விளையாட்டை ஆரம்பிக்கலாம்.

- வரிசைக்கு முன்னால் உள்ள குழந்தை கார், பஸ், ரயில், பறவைகள் பல விலங்குகள் போல செய்யலாம். பின்னால் வரும் குழந்தைகள் முன்னால் நடக்கும் குழந்தையின் அசைவு, பாவம், சத்தம் போன்றவற்றை போலச் செய்து பின்னால் நடக்க வேண்டும். குறிப்பிட்ட இடைவேளையில் ஆசிரியர் கைதட்டும் போது முன்னால் நிற்கும் குழந்தை விளையாட்டை நிறுத்திவிட்டு பின்னால் சென்று நிற்கவேண்டும். அடுத்து கைதட்டும் போது முன்னால் நிற்கும் குழந்தை வேறொரு சந்தர்ப்பத்தைப் போலச் செய்ய வேண்டும். இந்த விளையாட்டை ஆசிரியரின் யோசனைக்கேற்ப ஒழுங்கமைக்க வேண்டும்..

## செயல்பாடு -2 : முருங்கையும் நண்பர்களும்

- குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டச் செய்வதற்கான கதை செயல்பாடாகுமிது. பல்வேறு கற்றல் அடைவுகளை அடைவதற்கான ஒரு செயல்பாடாக இந்தக் கதையை கருதலாம். பல்வேறு தொழில்களின் போலச் செய்தல், உயிரினங்கள் மனிதர்களின் சத்தத்தைப் போலச் செய்தல், உடல் அசைவிற்கேற்ற பாடல் விரல் பொம்மைகளுக்கான உரையாடல் தயாரித்தல். ரோல் பிளே கதைப்பாடல் போன்றவை இந்தக் கதையின் பல்வேறு நிலைகளில் குழந்தைகளும் ஆசிரியரும் சேர்ந்து செயல்படுத்தலாம்.

*தேவுட்டிக்கு நான்கு சகோதரர்கள். சகோதரர்கள் வேலைக்கு போனால் முற்றத்திலுள்ள முருங்கை மரம்தான் தேவுட்டிக்கு துணை. என்ன கேட்டாலும் ங்கும்... ங்கும் என்று சொல்ல மட்டும் தான் முருங்கை மரத்திற்குத் தெரியும். ஆனாலும் முருங்கையும், தேவுட்டியும், சகோதரர்களும் நல்ல நண்பர்களாக இருந்தார்கள்.*

*அந்த காலத்தில் ஒரு யக்ஷி கிராமத்திற்கு வந்து தொல்லை கொடுத்து கொண்டிருந்தாள். தனியாக இருக்கும் குழந்தைகளையெல்லாம் ஏதாவது தந்திரம் செய்து பிடித்துச் சென்று தொந்தரவு செய்வாள். அதனால் சகோதரர்கள் வேலைக்கு போனவுடன் தேவுட்டி வீட்டிற்குள் சென்று கதவை அடைத்து விடுவாள். வாசலில் யாராவது தட்டினால் யக்ஷியா என்று முருங்கை மரத்திடம் தேவுட்டி கேட்பாள். அப்போது முருங்கை ங்கும்... ங்கும்... என்று சொன்னால் தேவுட்டி கதவைத் திறக்கமாட்டாள்.*

*ஒரு நாள் யக்ஷி வந்து கதவைத் தட்டிய போது தேவுட்டி முருங்கையை கூப்பிட்டுக் கேட்டாள்.*

*முருங்கை மரமே முருங்கை மரமே வாசலை தட்டுவது யார்?*

*அப்போது முருங்கை மரம் ங்கும்... ங்கும்... என்று கூறியது.*

*அதைக் கேட்டபோது வாசலைத் தட்டுவது யக்ஷி என்று தேவுட்டி தெரிந்து கொண்டாள். முருங்கை மரம் சத்தமிடுவதால் தான் தேவுட்டி கதவைத் திறக்காமல் இருக்கிறாளென்று யக்ஷி புரிந்து கொண்டாள். யக்ஷி முருங்கை மரத்திடம் ஓடிச் சென்று முருங்கை மரமே முருங்கை மரமே நான் வாசலைத் தட்டும் போது நீ பேசக் கூடாது. பேசினால் நான் உன் கையை வெட்டுவேன் என்று கூறியது. பின்னர் யக்ஷி மீண்டும் வாசலைத் தட்டியது. தேவுட்டி அழைத்துக் கேட்டாள். முருங்கை மரமே முருங்கை மரமே வாசலைத் தட்டு*

வது யார்? முருங்கை மரம் ங்கும் ங்கும் என்று சொன்னது. முருங்கையின் சத்தத்தைக் கேட்ட தேவுட்டி யக்ஷி என்று தெரிந்து கொண்டாள். அதனால் தேவுட்டி கதவைத் திறக்கவில்லை. கோபம் கொண்ட யக்ஷி ஓடிச் சென்று முருங்கை மரத்தின் ஒரு கிளையை வெட்டியது. இனி நீ கதவைத் தட்டினால் சத்தம் போடக்கூடாது. சத்தம் போட்டால் உன் அடுத்த கையையும் உடைத்து விடுவேன் என்று யக்ஷி கூறினாள். மீண்டும் கதவைத் தட்டினாள் யக்ஷி. தேவுட்டி மீண்டும் கேள்வி கேட்டாள் ( யக்ஷி தட்டுவதையும் தேவுட்டி கேட்பதையும் முருங்கை சொல்வதையும் ஒன்று போல திரும்பக் கூறலாம் குழந்தைகளிடம் கேள்வியும் பதிலும் கூறச் சொல்லலாம்)

முருங்கை மரத்தின் இரண்டாவது கையும் உடைந்து விட்டது. மூன்றாவது கையும் உடைந்து விட்டது. அடிமரமும் போய் விட்டது. முருங்கைக்கு பேச முடியவில்லை. யக்ஷி மீண்டும் கதவைத் தட்டினாள். தேவுட்டி அழைத்தாள். முருங்கை மரமே முருங்கை மரமே கதவைத் தட்டுவது யார்? முருங்கை பேசவில்லை. தேவுட்டி கதவைத் திறந்தாள். காத்திருந்த யக்ஷி தேவுட்டியைத் தூக்கிக் கொண்டு ஓடினாள்.

மாலையில் தேவுட்டியின் சகோதரர்கள் வந்த போது வீட்டின் கதவு திறந்திருந்தது தேவுட்டியைக் காணவில்லை. அவர்கள் முருங்கை மரத்திற்கு அருகில் ஓடிச் சென்றார்கள். முருங்கை மரத்தின் கிளைகளும் தாய்த் தண்டும் ஒடிந்திருப்பதைப் பார்த்த போது தேவுவை யக்ஷி பிடித்துக் கொண்டு போயிருப்பாள் என்று உறுதிப்படுத்தினார்கள்.

தேவுவின் சகோதரர்கள் 4 பேரும் அந்த நிமிடமே சகோதரியைத் தேடிச் சென்றார்கள். வழியில் பார்த்த மனிதர்களிடமும், மிருகங்களிடமும், பறவைகளிடமும், மரங்களிடமும் கேட்டுக் கொண்டே போனார்கள். வீட்டிலிருந்து நடைபாதையை கடந்து வயலினருகிலுள்ள குறுக்கு வழியைக் கடந்து வயலை ஒட்டியுள்ள ஒற்றையடிப் பாதை வழியாக அவர்கள் நடந்து சென்றார்கள். அப்போது ஒரு பக்கத்தில் கொஞ்சம் ஆட்கள் வேலை செய்வதைப் பார்த்தார்கள். கொஞ்சம் பேர் சேர்ந்து வீடு கட்டுகிறார்கள். ஒருவர் பாறை உடைக்கிறார். ஒருவர் கூடையில் மண்ணை நிரப்புகிறார். வேறொருவர் அதை ஒரு பெண்ணின் தலையில் தூக்கி விடுகிறார். வேறொருவர் மர வேலை செய்கிறார்.

தேவுவின் சகோதரர்கள் அங்கே நின்றார்கள்.

" அண்ணன்மார்களே எங்கள் சகோதரியை காணவில்லை யக்ஷி பிடித்துக் கொண்டு போயிருப்பாள் என்று நினைக்கிறோம், நீங்கள யாராவது பார்த்தீர்களா?"

வேலை செய்வதற்கிடையில் சகோதரர்கள் பேச்சை யாரும் கவனிக்கவில்லை கவலையடைந்த சகோதரர்கள் ஒவ்வொருவரிடமும் கேள்வியைத் திரும்பக் கேட்டார்கள்.

பாறை உடைக்கும் சகோதரா எங்கள் தங்கையை பார்த்தீர்களா? எங்கள் தங்கையை இந்த வழியாக தூக்கிக் கொண்டு போவதை பார்த்தீரா?

பாறை உடைத்துக் கொண்டிருந்தவர் தலைதூக்கிப் பார்த்தார். பின்னர் கூறினார்.

'சகோதரர்களே நான் பார்க்கவில்லை? நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள் அந்த மர வேலைக்காரனிடம் கேட்டுப் பாருங்கள்.

சகோதரர்கள் மரவேலைக்காரனிடம் சென்றார்கள். மர வேலைக்காரரே, மர வேலைக்காரரே எங்கள் தங்கையைப் பார்த்தீர்களா? எங்கள் தங்கையை யக்ஷி பிடித்துக் கொண்டு இந்த வழியாக போனதைப் பார்த்தீர்களா?

மரவேலைக்காரன் வேலை செய்து கொண்டே தலையைத் தூக்கிக் கூறினான்:

" அண்ணன்மாரே நாங்கள் பார்க்கவில்லை. நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். மண் சுமக்கும் அந்த அக்காவிடம் கேளுங்கள்."

அண்ணன்மார்கள் மண் சுமக்கும் அக்கா வரும் வரை காத்திருந்தார்கள். அக்கா வந்தவுடன் அவர்கள் கேட்டார்கள். மண் சுமக்கும் அக்கா, மண் சுமக்கும் அக்கா எங்கள் தங்கையை பார்த்தீர்களா? இந்த வழியாக எங்கள் தங்கையை யக்ஷி பிடித்துக் கொண்டு போவதைப் பார்த்தீர்களா?

அக்கா சொன்னாள்: "மண் சுமப்பதற்கிடையில் நானொன்றும் பார்க்கவில்லை. ஆனால் ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது."

சகோதரர்கள்: "ஐயோ அழுகை சத்தம் கேட்டதா?"

அக்கா " ஒரு அழுகை சத்தம் ஆற்றைக் கடந்து போனது. நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். அந்த ஆற்றங்கரையில் ஒரு மூங்கில் காடு உள்ளது. மூங்கில் கூட்டத்தில் ஒரு வாத்துக் கூட்டம் உள்ளது. அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர்கள் பார்த்திருப்பார்கள். அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்"

அண்ணன்மார்கள் ஆற்றங்கரையைத் தேடி நடந்தார்கள். நேராகச் சென்று ஒரு வளைவு திரும்பிய போது அவர்கள் பெரிய மூங்கில் கூட்டத்தைப் பார்த்தார்கள். அங்கே நிறைந்திருந்த வாத்துக் கூட்டத்தையும் பார்த்தார்கள். வாத்துகளின் கலபில சத்தமும் காற்றில் மூங்கில் ஆடும் சத்தமும், ஆறு ஓடும் சத்தமும் சேர்ந்து அந்த இடமொரு சங்கீத கச்சேரியாக இருந்தது. மூங்கில் காடுகளுக்கருகில் சென்ற சகோதரர்கள் வாத்துக் கூட்டத்தினரிடம் கேட்டார்கள்:

" மரகத பச்சையும் பவழப் பொன் சுண்டுமாய்
கலபில காட்டும் வாத்துகளே
எங்கள் தங்கையை யக்ஷி பிடித்துக் கொண்டு
போவதை யாராவது பார்த்தீர்களா?"

இதைக் கேட்டவுடன் வாத்துகளெல்லாம் கலபில காட்டி பறந்து வந்தார்கள். நூற்றுக்கணக்கான வாத்துகள். ஒரு பச்சைக் கடல் அவர்களைப் பார்த்து வருவதாக அவர்களுக்குத் தெரிந்தது. கொஞ்சம் பயத்துடன் அண்ணன்மார்கள் கேட்டார்கள். நீங்கள் எதற்கு இப்படி கூட்டமாக பறந்து வந்து எங்களை பயமுறுத்துகிறீர்கள்?"

அதற்கு பதிலாக வாத்துகளின் அரசன் அவர்களின் கதையைக் கூறியது.

(கதைப்பாட்டு)

காடுகள் தோறும் குன்றுகள் தோறும்
கண்டு நடந்த காலத்தில்
வயல்கதிர் கொத்தி
கூடனையும் நேரத்தில்

காணோம் செல்லக் கிளிகள் ரண்டினை
போயின எங்கோ பாவங்கள்?
கதிரும் கொத்தி வரும் நேரம்
வழியறியாது வருந்தினவோ?
முற்றிப் பழுத்த பழம் கண்டு
பார்த்து பதுங்கியிருந்தனவோ?
ஏனோ காணோம் அந்தி
நேரமிதே தாமதம் கண்டோமிலலையே
கூடிலிருக்கும் தாய்கிளிதன்
பாட்டில் துன்பம் நிறைந்திடவே
கண்ணும் நட்டிருந்திடும் கிளியின்
இதயமுடைந்து படபடத்திடவே
வேடர் வனவயிலகப் பட்டதோ
வேதனையுடனிருந்திடவே
காடு நிறைய இறுகிய கூரிருள்
வீழ்ந்து நனைந்து கருத்திடவே
பச்சிலைக் கொடிகளில் கிளிகள்
ஒலித்துக் கொண்டே பறந்திடவே
வைத்துப் பிடித்த வஞ்சக வலையில்
பச்சை சிறகு சிக்கிடவே
வேடரின் ஹோய் ஹோய் ஒலியில்
காடுமுழுதும் நடுங்கியதே
பொரித்த மாமிச கனவு கண்டு
சிரித்து நின்றனர் வேடர்
ஆசை பெருக பச்சை சிறகரிய
ஆர்வமாய் நின்றனர் கொடியோர்
கண்ணீருப்பு தீண்ட கிளிகள்
எண்ணின எண்ணின நிமிடங்கள்
நட்பினர் காணதிறுதியில்
சஞ்சலராய் கிளிக்கூட்டம்
ஒன்றாயவர் வானிலுயர்ந்தனர்
கண்ணும் காதும் இணைந்திட
உயிர்காய் கிளிகள்
கேவும் நேரம்
பாய்ந்தன அருகில் பச்சைக் கடல்கள்
உயர்ந்தன பச்சை சிகரங்கள்
காட்டாளர்களானந்தமாய்
காப்பிரிக்கருவி இசைத்தனர்
கூட்டமாய் கிடைத்த மாமிச
உணவுசிக்காய் ஆரவாரி
கனவு கண்ட காட்டாளர்
வானம் பார்த்திருந்திட

வலையும் கொத்தி பாய்ந்து பறந்தனவே
அலைகடல் போல் பைகிளிகள்
ஆகாயத்திலோ பச்சை வயல்
அதுகண்டரவமும் காகங்களும்
வேடர்கள் தன் வலையினுள்
பேடை மிருகம் போல் பதைத்திடவே
காட்டாளரினோலம் காற்றில்
முழுதாய் கரைந்து நிலைத்தன
தனியரெனில் தோற்போமெளிதாய்
ஒற்றின் முன்னா் வீழ்ந்திடாமல்
புதுவஞ்சகக் கண்ணிகள் கிளிகள்
கொத்தியெடுத்து பறந்தனவே
ஒருமையாய் பிடித்தால் யார்க்குமே
ஒன்றாய் மலையையுமசைத்திடலாம்.

வாத்துகளின் கதையை கேட்ட சகோதரர்கள் கவலைப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு தேவுவை கண்டுபிடிக்க வேண்டாமா? அவர்கள் வாத்துகளிடம் திரும்பவும் கேள்வி கேட்டார்கள்:

" மரகத பச்சையும் பவழப் பொன் சுண்டுமாய்
கலபில காட்டும் வாத்துகளே
எங்கள் தங்கையை யக்ஷி பிடித்துக் கொண்டு
போவதை யாராவது பார்த்தீர்களா?"

வாத்துக் கூட்டத்திற்கு காரியம் புரிந்தது. அவர்கள் சொன்னார்கள், " நாங்கள் பார்த்தோம். உங்களுடைய தங்கையை தோளில் வைத்துக் கொண்டு யக்ஷி போனது இந்த வழியாகத்தான். நேராக இந்த வழியாகச் சென்றால் பாலத்தைக் கடக்கலாம். பாலத்தைக் கடந்தால் கிழவனான ஒரு மரத்தைப் பார்க்கலாம். வேருகள் தொங்கி ஜடை பிடித்த ஆலமரத்தின் கீழாக நடந்தால் பெரிய ஒரு பாறைக் கூட்டம் வரும். அதற்குள் தான் யக்ஷியின் குகை. அந்த குகைக்குள் உங்கள் தங்கை இருப்பாள். வேகமாகப் போங்கள் இப்போது சென்றாள் யக்ஷி இருக்கமாட்டாள்."

சகோதரர்கள் நேரத்தை வீணாக்கவில்லை. வேகமாக ஆற்றைக் கடந்து ஆலமரத்திற்கு கீழே சென்றார்கள். அப்பொழுது தான் தெரிந்தது ஆலமரத்திற்கு கீழே மனிதர்கள் செல்ல முடியாதென்று. என்ன செய்யலாம்? சகோதரர்களில் ஒருவருக்கு ஒரு யோசனை உதித்தது.

"நாம் மிருகங்களாக வேடம் மாறலாம்."

'அதெப்படி?"

மூவரும் ஒன்றாக கேட்டார்கள். அப்போது முதலாமவர் கூறினார். :

" நாம் மிருகங்களைப் போல முகமூடி அணிந்து மிருகங்களை ஏமாற்றலாம்."

இந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். முகமூடியை எப்படி தயாரிப்பது? முகமூடியை எப்படி தயாரிப்பதென்று ஆலோசித்துக்

கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு பாட்டி வந்தார். கவலையுடன் இருக்கும் சகோதரர்களைப் பார்த்த பாட்டி ஏன் கவலையுடன் இருக்கிறீர்கள் என்று கேட்டார். சகோதரர்கள் அவர்களின் கவலைக்கான காரணத்தைக் கூறினார்கள்.

" அதற்கென்ன, உங்களுக்கு நான் உதவுகிறேன் என்று கூறி அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். அங்கே ஒரு அற்புதப் பெட்டி இருந்தது. எதை நினைத்து அந்தப் பெட்டியில் கை வைக்கிறோமோ அது கிடைக்கும். அத்தியாவசியமான காரியங்களுக்கு மட்டும் அந்தப் பெட்டியை உபயோகிக்க முடியும். பேராசையுடன் அற்புதப் பெட்டிக்குள் கை வைத்தால் அதனுடைய சக்தி போய்விடும்..

மந்திரப் பெட்டியிலிருந்து கிடைத்த முகமூடிகளை அணிந்து கொண்டு சகோதரர்கள் ஆலமரத்திற்குக் கீழே மெதுவாக நடந்தார்கள். அவர்களைப் பார்த்த போது ஆலமரத்திற்கு மிருகங்கள் என்றே தோன்றியது. நடந்து நடந்து அவர்கள் பாறைக்கு அருகில் சென்றார்கள். அவர்களுக்கு அங்கிருந்த குகையைக் கண்டுபிடிப்பதற்கு சிரமமொன்றும் ஏற்படவில்லை. யக்ஷியின் குகைக்குள் கடந்து சென்ற அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். என்னென்ன பொருட்களெல்லாம் அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. குகையின் ஒரு மூலையிலிருந்த ஒரு கல் தூணில் கட்டப்பட்டிருந்த தேவுவைப் பார்த்தார்கள். கண்ணையும், காதையும் மூடி கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையிலிருந்தாள் தேவு. பாவம் தேவுவிற்கு அசையக் கூட முடியவில்லை.

சகோதரர்கள் ஓடிச் சென்று கட்டுகளை அவிழ்த்து தேவுவை விடுவித்தார்கள். அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். யக்ஷி பிடித்ததையும் வழியெல்லலாம் அவள் அழுது கொண்டு வந்ததையும் குகைக்குக் கொண்டு வந்து கட்டி வைத்த கதைகளையெல்லாம் சகோதரர்களிடம் தேவு கூறினாள்.

யக்ஷி பிடித்து வந்த கதையையெல்லாம் கேட்ட அனைவருக்கும் பசிக்கத் தொடங்கியது. அவர்கள் யக்ஷியின் குகைக்கு உள்ளேயும் வெளியேயும் சுற்றிப் பார்த்தார்கள். வெளியில் ஒரு பசு நிற்பதைப் பார்த்தார்கள். ஒருவர் அந்தப் பசுவிலிருந்து பால் கறந்தார். சமையலறைக்குச் சென்று பாத்திரத்தையெடுத்து தேவு பாயசம் தயாரித்தாள். சகோதரர்கள் அவளுக்கு உதவினார்கள். பாயசம் குடிக்கத் தொடங்கும் போது வெளியில் ஒரு காலடிச் சத்தம் கேட்டது. சென்று பார்த்த போது அவர்களுக்கு உதவிய பாட்டி பொக்கை வாயைக் காட்டி சிரித்துக் கொண்டு நிற்கிறார். பாட்டியை உள்ளே வருமாறு அழைத்தார்கள்.

"யக்ஷி வரும் நேரமாகி விட்டது. " .

வேகமாகப் தப்பித்துப் போங்கள். பாட்டி கூறினாள்.

அவர்கள் வேகமாக பாயசத்தைக் குடித்தார்கள். நல்ல ருசியான பாயசம்.

அந்த நேரத்தில் சகோதரர்களில் மூத்தவர் ஒரு காரியத்தைக் கூறினார்.

இந்த யக்ஷிக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் இல்லையென்றால் அவள் இனியும் ஆட்களை தொந்தரவு செய்து கொண்டிருப்பாள்.

யக்ஷியை எப்படி பழி வாங்குவது? சக்தியினால் யக்ஷியை கீழடக்க முடியாது. அப்போது பாட்டி ஒரு உபாயத்தைக் கூறினாள். தேவு தயாரித்த பாயாசத்தை யக்ஷி குடித்தாளென்றாள் யக்ஷி ஒரு சாதாரண பெண்ணாக மாறிவிடுவாள் அத்துடன் அவளால் ஏற்படும் தொந்தரவு தீரும். எல்லோரும் பாட்டியின் கருத்தை ஆமோதித்தார்கள்.

யக்ஷி சாப்பிடும் பாத்திரத்தை அவர்கள் கண்டுபிடித்தார்கள். யக்ஷி வருவதற்கு முன்பு ஆவி பறக்கும் பாயசத்தை அதில் நிரப்பி வைத்தார்கள். பின்னர் எல்லோரும் ஒரு தூணிற்கு பின்னால் மறைந்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் பெரிய சத்தத்துடன் யக்ஷி குகைக்கு உள்ளே வந்தாள். தன்னுடைய பாத்திரத்தில் ஏதோ நிறைந்திருப்பதை பார்த்தாள். அதை எடுத்து அவள் ருசித்துப் பார்த்தாள். இரத்தத்தையும், மாமிசத்தையும் மட்டும் உண்டு பழகியிருந்த யக்ஷிக்கு பாயசத்தின் ருசி பிடித்திருந்தது. ஒன்றும் சிந்திக்காமல் சூடான பாயாசத்தை அவளெடுத்து குடித்தாள். அப்போது என்ன நடந்தது தெரியுமா?

யக்ஷியின் எத்துப் பற்கள் உதிர்ந்து விழுந்தன.

வளைந்த அசிங்கமான புருவம் நிமிர்ந்து அழகானது.

கொத்தான ஜடை முடி உதிர்ந்து போனது

அட்டகாசம் புன் சிரிப்பானது

கொடூரமான நடைக்கு பதில் எழிலான நடை வந்தது.

அவள் ஒரு சாதாரணப் பெண்ணாக மாறினாள்.

அப்போது சகோதரர்களும் தேவுவம் பாட்டியும் வெளியில் வந்தார்கள். அவர்களெல்லாம் உருவம் மாறிய யக்ஷிக்கு சுற்றிலுமாக நின்றார்கள். எல்லோரும் மகிழ்ச்சியாக பாட்டு பாடினார்கள். யக்ஷியை அவர்கள் தோழியாக ஏற்றுக் கொண்டார்கள்.

அப்போது தான் தேவுவிற்கும் அவளுடைய சகோதரர்களுக்கும் அவர்களுடைய நண்பனான முருங்கை மரத்தைப் பற்றிய நினைவு வந்தது. யக்ஷியை பாட்டியின் வீட்டில் தங்கியிருக்குமாறு சொல்லி விட்டு அவர்களுடைய வீட்டிற்குப் போனார்கள். போகும் வழியில் அவர்களுக்கு உதவி செய்த அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

வீட்டை அடைந்த போது முருங்கை மரக் கம்பிலிருந்து ஒரு புதிய கிளை முளைத்திருப்பதைப் பார்த்தார்கள். தேவு ஓடிச் சென்று தண்ணீரெடுத்து முருங்கை மரத்திற்கு ஊற்றினாள் பின்னர் எல்லோரும் கேட்டார்கள்:

" முருங்கை மரமே முருங்கை மரமே உனக்கு மகிழ்ச்சிதானே?"

புதிய கிளையை ஆட்டிக் கொண்டு முருங்கை மரம் கூறியது

"ங்கும்...ங்கும்...ங்கும்.."

அதைக் கேட்ட தேவுவும் சகோதரர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

# மூன்றாம் வகுப்பு

## அலகு – 1 : ரூபம் பாவம்

வாழ்க்கைச் சூழல்களில் உயிரினங்கள், மனிதர்களின் ஒலி அசைவு போன்ற வற்றை உற்றுநோக்கவும் போலச் செய்ய முயற்சி செய்தல் போன்ற செயல்பாடு களை முன் வகுப்புகளில் ஆரம்பித்துள்ளோம். இதன் தொடர்ச்சியும் உறுதிப்ப டுத்தலுமே மூன்றாம் வகுப்பிலுள்ள செயல்பாடுகள் மூலம் நாம் அடைய நினைக்கி றோம். கதைப் பாடல்களை வெளியிடும் போது பாடல்களுக்கேற்ப உடல் அசை வுகளை ஒழுங்கமைப்பதற்கான பயிற்சியைக் குழந்தைப் பெற்றிருக்கிறது. வேறு பட்ட சூழல்களில் தாளம், அசைவை ஒருங்கிணைப்பதற்கு தேவையான செயல் பாடுகள் மூன்றாம் வகுப்பில் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. உயர்ந்த தரத் திலுள்ள கருத்துகளையும் ஆரம்ப கட்டமும் உரையாடல் தயாரிப்பதற்கான திற னையும் பெறுவதற்கான செயல்பாடுகள் முன்றாம் வகுப்பில் உட்படுத்தப்பட்டுள் ளன.

### கற்றல் அடைவுகள்

- மனிதர்களிடம் காணப்படும் பலதரப்பட்ட செய்கைகளையும் சலனங்களையும் போலச் செய்ய முடிகிறது.
- மனிதர்களுடையவும் பறவை, விலங்கினங்களுடையவும் குறிப்பிட்ட சூழ்நிலை களின் நடத்தை முறைகளை வெளியிடுதல்.
- வேறுபட்ட சூழ்நிலைகளிலுள்ள நடத்தை முறைகளை போலச் செய்து வெளி யிடுவதற்கான திறன்.
- சங்கீதத்திற்கேற்ப அசைவு தாளம் போன்றவற்றின் வேகத்தை ஒருங்கமைபதற் கான திறன் பெறுதல்.
- கதாப் பாத்திரத்தை இயல்பாக வெளியிடுவதற்கு உடலையும் சப்தத்தையும் பொருத்தமாக பயன்படுத்துதல்.
- எளிய பாடல்களுக்கு நல்குதல்.
- மற்றொருவருடை அசைவு தாளம் போன்றவற்றை உற்றுநோக்கவும் அதற்கேற்ப தாளத்தையும் அசைவையும் கட்டுப்படுத்தவும் செய்தல்.
- இயற்கையிலுள்ள பல்வேறு சப்தங்கள் அசைவுகள் போன்றவற்றை உற்றுப் பார்த்து போலச்செய்யவும் அவற்றை குழுவினருடன் பங்கிடவும் தனியாகவும் குழுவாகவும் வெளியிடவும் செய்தல்.
- பழக்கமான வாழ்க்கைச் சூழல்களையும் செயல்களையும் நபர்களையும் மூக நடிப்பின் மூலம் நடித்துக் காட்டுதல்.

- பழக்கமான நபர்கள், சுற்றிலுமுள்ள உயரினங்கள், பொருட்கள் முகமூடி வேடம் போன்றவற்றை உபயோகித்து நடித்தல்.
- ஒலி அசைவு செய்கை உடலமைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி மிருகங்கள் பறவைகள் தெரிந்த நபர்கள் போல நடித்தல்.
- ஒரு நிகழ்ச்சிக்கு முன்பும் பின்பும் உள்ள சூழல்களை கண்டுபிடித்து அவை மூன்றையும் வெளியிடுதல்.
- சூழலுக்கும் கதாப்பாத்திரங்களுக்கும் பொருத்தமான உரையாடல்களை தயாரித்து வெளியிடுதல்.
- சூழல், கதாப்பாத்திரங்கள் போன்றவற்றிற்குப் பொருத்தமான ஒலி ஒழுங்கமைப் புகள் செய்தும் பாடல்களை பாடியும் பொம்மை நாடகத்தை வெளியிடுதல்

## கருத்து அறிவு

- வெவ்வேறு அசைவுகளுக்கு வெவ்வேறு பொருள் உள்ளது.
- செய்கைகள் தெளிவான கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுகிறது.
- ஒரு நபரிடமிருந்தே வெவ்வேறு சூழல்களின் நடத்தை மாற்றங்களைப் பிரித்த றிதல்.
- வெவ்வேறு முறைகளில் மனிதர்கள் பழகுகிறார்கள்.
- சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மனிதர்களின் உயரினங்களின் நடத்தை முறையில் வேறுபாட்டைப் பார்க்கலாம்.
- சங்கீதத்தின் தாளத்திற்கேற்ப அசைவின் தாளத்தையும் ஒழுங்கமைக்க வேண்டும்.
- தாளத்திற்கேற்ப அசைவை ஒழுங்கமைக்கும் திறன்.
- மனிதர்களுக்கும் உயரினங்களுக்கும் இயல்பான சேட்டைகள் உள்ளது
- சத்தத்தையும் உடலசைவையும் ஒழுங்கமைக்கும் திறன் பெறுகிறார்கள்.
- கூர்மையான உற்றுநோக்கல் தேவையாகும்.
- பொருத்தமான காட்சியை கலந்துரையாடல் மூலம் தேர்ந்தெடுக்க முடிகிறது.
- ஒவ்வொருவருக்கும் சுயமான அசைவும் தாளமும் உள்ளது.
- அவற்றில் சிலவற்றை போலச் செய்ய முடியும்
- அசைவுகளை போலச் செய்து வெளியிடும் திறன்.
- இயற்கையில் பல்வேறு வகையான ஒலிகளும் அசைவுகளும் உள்ளது.
- சொந்தம் அனுபவங்களை குழுவில் பங்குவைப்பதன் மூலம் குழுவின் வெளி யிடுதலுக்கு உதவிகரமாக இருப்பதற்கும் தன்னுடைய அனுபவங்களை பரிசோ தனை செய்து மேம்படுத்தவும் செய்யலாம்.
- உடல் அசைவுகள் மூலம் கருத்துப் பரிமாற்றம் நடத்தலாம்
- உடல் அசைவுகள் மட்டும் உபயோகித்து கருத்துப் பரிமாற்றம் நடத்தும் போது அசைவுகளில் ஒழுங்கு, நுட்பம் போன்றவை ஏற்பட வேண்டும்.
- கருத்துப் பரிமாற்றத்திற்கு பொருட்கள் முகம்மூடி, வேடம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்

- பொருட்கள் முகம்மூடி வேடம் போன்றவற்றைப் பயன்படுத்தும் போது நடிப்பில் காட்சியழகு அதிகரிக்கிறது.
- அசைவுகளைப் போலச் செய்யும் திறன்.
- முகம்மூடி தயாரித்தல், பயன்படுத்துதல் போன்றவற்றில் திறன்
- ஒலி அசைவு செய்கை உடலமைப்பு போன்றவற்றைப் பயன்படுத்தி விலங்குகள் பறவைகள் நபர்கள் போன்றவற்றைப் போல நடித்துக் காட்ட வேண்டும்.
- ஒலி, அசைவு செய்கை உடலசைவுகளை ஒருங்கிணைத்து கருத்துகளை வெளியிடும் போது பரிமாற்றத் திறன் அதிகரிக்கிறது.
- வெளியிடும் திறன்
- கருத்துகளுக்கேற்ப தயார் செய்யும் திறன்
- சூழல்களுக்கும் கதாபாத்திர அறிமுகங்களுக்கும் பொருத்தமான உரையாடல் தயாரிக்கும் திறன்
- பொம்மை நாடகத்தின் மூலம் சந்தர்ப்பங்கள் கருத்துகள் போன்றவற்றை வெளியிடலாம்.
- பொம்மை நாடகத்தின் மூலம் கருத்துகளை வெளியிடுவது சிறந்ததாகும்
- சப்தநடிப்பு நன்றாக வளர்ச்சி அடைவதற்கு பொம்மை நாடகங்கள் உதவும்.

## செயல்பாடு –1 : தாளத்தில் கைதட்டுதல்

தாளமும் அசைவும் ஒன்றிணைதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். குறிப்பிட்ட தாளத்திற்கேற்ப உடல் அசைவுகளை ஒழுங்கமைப்பதற்கு முறையான பயிற்சி தேவையாகும். உதாரணமாக வேளாண் செயல்களின் தாளம் இயந்திர வேகங்களின் தாளத்திலிருந்து வேறுபட்டதாகும். நடிப்பில் நடிகனின் அசைவுகள், உபகரணங்களின் பயன்பாடு போன்றவை பின்னனி இசைக்கு பொருத்தமானதாக இருக்க வேண்டும். இதில் தாள வித்தியாசம் ஏற்பட்டால் இரசனையில்— குறைவு ஏற்படும். உடல் அசைவுகளை தாளத்திற்கேற்ப மாற்றுவதற்கான பயிற்சியே இந்தச் செயல்பாட்டின் நோக்கமாகும்.

- ஆசிரியர் குழந்தைகளை வட்டமாக நிறுத்துகிறார். சரியான தாளத்தில் ஒன்று முதல் எட்டு வரை எண்ணுகிறார். நான்கு என்று எண்ணும் போதும் எட்டு என்று எண்ணும் போதும் குழந்தைகள் கைதட்டட்டும். தாளத்திற்கேற்ப எண்ணுவதையும் கைதட்டுவதையும் இரண்டு மூன்று முறை திரும்பச் செய்யலாம். அதற்குப் பின் அதே தாளத்தில் குழந்தைகளிடம் மனதிற்குள் எண்ணக் கூறுதல். ஒன்று, இரண்டு என்று ஆசிரியர் எண்ணத் தொடங்குகிறார். பின்னர் குழந்தைகள் மனதிற்குள் எட்டு வரை எண்ணுகிறார்கள். நான்கு எட்டு என்ற எண்களுக்கு கைதட்டுகிறார்கள். முதலில் குழந்தைகள் தாளத்தைத் தவற விடலாம். மெதுவாகக் குழந்தைகள் சரியான தாளத்திற்குள் நுழைகிறார்கள். ஒவ்வொரு தாளத்திற்குச் செல்கிறார்கள்.

- இனி ஒவ்வொரு தாளத்திற்கேற்றவாறு வரிசையாக நடக்குமாறு குழந்தைகளிடம் கூறவேண்டும். ஒவ்வொரு காலடியும் ஒரு எண்ணிக்கையாகும். நான்காவது காலடி சுவடிலும் எட்டாவது சுவடிலும் கைதட்டுதல். அமைதியான சூழலில் சரியான இடைவேளைகளில் ஏற்படும் சத்தத்தை மட்டும் கேட்கலாம்.

- தொடர்ந்து எண்ணுவதற்கு பதிலாக அந்தந்த வட்டாரத்திலுள்ள வாய்மொழி சிந்துகள் இசைக் கருவிகள் போன்றவற்றிற்கேற்ப குழந்தைகள் கைதட்டி தாளம் போடுகிறார்கள். அதற்கேற்ற உடல் அசைவுகளுடன் சுவடு வைக்கிறார்கள்.

## செயல்பாடு –2 : ஒலியும், அசைவும், பாவமும் போலச் செய்தல்

ஒலி, சலனம் பாவ ஒருங்கிணைப்பைச் சரியான சில நாடக விளையாட்டுகளின் மூலம் ஒருங்கிணைக்கலாம். இத்தகைய பயிற்சி முறைகளைத் தயாரிக்கும் போது குழந்தை களின் வயது விருப்பம் போன்றவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். எட்டோ ஒன்பதோ வயதுள்ள குழந்தைகளுக்கு மிருகங்களின் கதையைக் கேட்பதற்கும் அவைகளின் ஒலி, சலனம், பாவம் போன்றவற்றைப் போலச் செய்வதிலும் தனி கவ னம் செலுத்துவார்கள். பல்வேறு மிருகங்களின் ஒலியையும் சலனத்தையும் போலச் செய்வது, தாள சலன ஒருங்கிணைப்புப் பயிற்சிகளின் ஆரம்பமாகும்.

- ஏதாவது பறவை, மிருகத்தைப் போல நடித்துக் காட்டுதல். ஆசிரியர் ஆரம்பித்து வைக்க வேண்டும்.
- நான் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்ட போது வீட்டிலுள்ள கன்றுக்குட்டி துள்ளிக்குதித்து வந்து என்னிடம் கூறியது பே... பே...
- ஒவ்வொரு குழந்தையும் முன் வரட்டும். ஏதாவது ஒரு பறவை அல்லது விலங் கின் ஒலி, அசைவு, பாவத்தை நடித்துக் காட்டட்டும்.
- செய்ததைத் திரும்பச் செய்யாமலிருக்க ஆசிரியர் கவனிக்க வேண்டும்.

## செயல்பாடு –3

நிபந்தனைகளுக்கேற்ப முன் திட்டப்படியில்லாமல் பல்வேறு தொழில் மண்டலங்க ளில் உள்ளவர்களைப் போல நடிக்கும் செயல்பாடாகும். விளையாட்டு முறையில் வரிசைப்படுத்தினால் இச் செயல்பாட்டைக் குழந்தைகள் இயல்பாக ஏற்றுக் கொள் வார்கள். சாதாரணமான வாழ்க்கைச் சூழ்நிலைகளில் நேரடி பிரதிபலிப்புகளுக்கு பிரச் சினை எதுவும் இல்லையென்றாலும் நிபந்தனைகளுக்கேற்ப இத்தகைய பிரச்சினை களில் ஈடுபடும் போது குழந்தைகளுக்கு கஷ்டம் ஏற்படுவதைப் பார்க்கலாம். இந்த முயற்சியின் பயனாக இத்தகைய செயல்களின் மூலம் கூச்சம் மாறும்.

***நிலை–1***

- செயல்பாட்டின் ஆரம்பத்தில் குழந்தைகளை அங்குமிங்கும் வகுப்பில் நடப்ப தற்கு அனுமதிக்க வேண்டும். மிகவும் மகிழ்ச்சியுடன் இந்த உலகிலேயே மிகப் பெரிய அழகி, அழகன் என்ற எண்ணத்தில் ஒவ்வொரு குழந்தையும் நடக்க வேண்டும். குழந்தைகளுக்கு மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் ஏற்படுமாறு ஆசிரியர் நிபந்தனைகளை கொடுக்க வேண்டும். மகிழ்ச்சியுடன் சிரித்துக் கொண்டு உலகிலேயே சிறந்த அழகன்/ அழகி தலைநிமிர்ந்து என சந்தர்ப்பத் திற்கேற்ப நிபந்தனைகள் வழங்கி குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் இருப்ப தற்கு ஆசிரியர் தயாராக வேண்டும்.

***நிலை–2***

- நடந்து கொண்டிருக்கும் போதே இடையில் ஆசிரியர் கைதட்டும் போது

குழந்தைகள் நடப்பதை நிறுத்தி நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு செயல்பட வேண்டும். உதாரணமாகக் கைதட்டி " மீன்காரன் " என்று கூறும் போது குழந்தைகள் மீன்காரனைப் போல நடிக்க வேண்டும். அடுத்து கைதட்டும் போது நடிப்பதை நிறுத்தி நடக்கத் தொடங்க வேண்டும். மீண்டும் கைதட்டுதல் நிபந்தனையைக் கூறுதல்- தலைமை ஆசிரியர், தபால்காரர், பாட்டி போன்ற பாவனை நிறைந்த குறிப்பை சூழ்நிலைக்கேற்றவாறு ஆசிரியர் தரவேண்டும்.

*நிலை-3*

- குழந்தைகள் நடப்பதை நிறுத்தி வட்டமாக நிற்கிறார்கள். முன்னர் நடித்த நடிப்பை சில குழந்தைகள் மற்றவர்களுக்கு முன்னால் நடித்துக் காட்டுகிறார்கள். நடிப்பைப் பகுப்பாய்வு செய்கிறார்கள். கலந்துரையாடல் மூலமும் மதிப்பிடுதல் மூலமும் சீரமைத்து வெளியிடுகிறார்கள்.
- நடிப்பிலுள்ள நுணுக்கம், உற்றுநோக்கும் திறன், பங்களிப்பு போன்றவற்றை ஆசிரியர் மதிப்பிடுகிறார்.

## செயல்பாடு -4

காட்சியமைப்பு வேளைகளில் இயல்பாக உரையாடுவதற்கான பயிற்சியே இந்த செயல்பாட்டின் நோக்கமாகும். அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் குழந்தைகளுக்கு உரையாடல்களில் ஈடுபடுவதற்கு சிரமம் தோன்றுவதைக் காணலாம். குழந்தைகளின் இயல்பான விருப்பங்களை வெளிப்படுத்தும் முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமே இதைச் சரி செய்ய முடியும். பொம்மைகள் குழந்தைகளை பொருத்த வரையில் எப்பொழுதும் ஆச்சரியமுண்டாக்கும் ஒன்றாகும். இயல்பான உரையாடலுக்குத் தடையாக இருக்கும் கூச்சத்தை அகற்றுவதற்கு பொம்மை விளையாட்டு உதவியாக இருக்கும். பாவைகள் மேடையில் தோன்றும் போது திரைக்கு பின்னால் இருந்து உரையாடல்களை உருவாக்குவதன் வாயிலாக மேடையில் வெளியிடுவதற்குத் தேவையான இயல்பான உரையாடல்களை உருவாக்கும் திறனைக் குழந்தைகள் அடையமுடியும்

- விரல்களில் கண், மூக்கு வரைந்து பொம்மைப் படம் வரைவது குழந்தைகளுக்கு விருப்பமான பொழுதுபோக்காகும். பேப்பரைப் பயன்படுத்தித் தொப்பியும், கர்சீப்பைப் பயன்படுத்தி அதனுடைய அழகைக் கூட்டுவதுண்டு. இதை நாடகத்தின் ஒவ்வொரு கதாபாத்திரங்களாக்கி மாற்றினாலோ?
- எளிய கதைகளைக் கண்டுபிடித்து ஒவ்வொரு குழுவும் பொருத்தமான உரையாடல்கள் எழுதட்டும். உரையாடலுக்கு ஏற்ப விரலை அசைத்துப் பயிற்சி செய்வதற்கு தேவையான நேரம் கொடுக்க வேண்டும். ஆசிரியரின் அறிவுரையும் உதவியும் இருக்க வேண்டும்.
- பாவைக் கூத்தைப் போன்று சிறிய திரைக்கு மேல் விரல் கதாப் பாத்திரங்களை வெளியிடுவதற்கான வாய்ப்பையும் அறிவுரைகளையும் கூற வேண்டும். வெவ்வேறு குழுக்கள் செய்து காட்டுவதைப் பற்றி வகுப்பில் கலந்துரையாட வேண்டும். உரையாடலில் ஏதாவது தவறுகள் இருந்தால் அதைத் திருத்தி வெளியிடுவதற்கான வாய்ப்பு கொடுக்க வேண்டும். எந்தவொரு குழுவையும் இகழ்த்திக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

## செயல்பாடு –5

உற்றுநோக்கல், போலச் செய்தல், முக பாவ ஒற்றுமை போன்றவற்றில் பயிற்சி பெற்று மேடை நிகழ்ச்சிகளில் சிறந்து விளங்குவதற்கு மூகநடிப்பு துணைபுரியும். குழந்தைக ளையும் பெரியவர்களையும் கவரும் ஒரு சுதந்திரமான கலை வடிவம் என்ற நிலை யில் மூக நடிப்பை அணுகலாம்.

### *கண்டுபிடிக்கலாம், நடிக்கலாம்*

**மூகநடிப்பு**

- குழந்தைகளை பல குழுக்களாக்குதல். முன்னரே தயாரித்த குறிப்புகள். இந்த குழுக் களில் இரயில்வே ஸ்டேசன், பேருந்து நிலையம், மருத்துவமனை, திருமணம், திருவிழா போன்ற வாழ்க்கை சந்தர்ப்பங்களை எழுத வேண்டும்
- குறிப்பு கிடைத்த குழுக்கள் மூகநடிப்பின் மூலம் இந்த சந்தர்ப்பங்களை நடித்துக் காட்ட வேண்டும். நடிப்பதற்கு முன்பு விரிவான கலந்துரையாடலும் பயிற்சியும் நடத்தவேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஆசிரியர் உதவியும் அறிவுரையும் வழங்க மறக்கக் கூடாது.
- குழுவினர் நடித்துக் காட்டிய பிறகு கலந்துரையாடலும், மதிப்பிடலும் நடைபெற வேண்டும்.

## செயல்பாடு –6

கதைகளிலிருந்து டாப்ளோ காட்சிகள் வடிவமைப்பது கருத்துகளின் வளர்ச்சிக்கு உதவுகின்ற நாடக கேளியாகும். குழந்தைகளின் இயற்கையான பாவனை அம் சத்தை உணரச் செய்வதற்கு உதவுகிறது. இது கதைகள் வாயிலாக குழந்தைகளின் கற்பனைத் திறனை உற்சாகப்படுத்தவும் வளரச் செய்யவும் செய்யும் ஒரு செயல் பாடாகும்.

**கதை வாசிப்பு**

***நிலை–1***

- புகழ் பெற்ற ஒரு கதையை மனதை தொடுமாறு ஆசிரியர் வகுப்பில் கூற வேண்டும். கதையைக் கூறிய பிறகு கதையிலுள்ள வாக்கியத்தை மிகைப்படுத் திக் கூறுதல். அந்த வாக்கியம் சுட்டிக்காட்டும் கதைப் போக்கின் முன்பு என்ன நிகழ்ந்ததென்று குழந்தைகளிடம் கேடகலாம். குழந்தைகள் நினைவுபடுத்தி கூற வேண்டும். உதாரணமாக மண்ணாங்கட்டியும் கரியிலையும் என்ற கதையில் மழை வந்தபோது கரியிலை மண்ணாங்கட்டிக்கு மேலே ஏறி நின்றது. என்ற வாக்கியத் திற்கு முன்னும் பின்னும் என்ன நிகழ்ந்ததென்று கேட்டாள் குழந்தைகள் ஆவ லுடன் பதில் கூறமாட்டார்களா?
- மேற்கூறிய காரியத்தை ஆசிரியரின் உதவியுடன் குழந்தைகள் வெளியிடு கிறார்கள்

*நிலை-2*

- தெரிந்த கதைகளை வகுப்பில் வெளியிட்டு அதிலிருந்து சில வாக்கியங் களை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குதல். அதற்கு முன்னும் பின்னு முள்ள கதைப்பகுதிகளை நினைவுபடுத்தி முழு கதையையும் குழந்தை கள் வெளியிடுகிறார்கள். தேவையான முகமூடியையும் வேடங்களை யும் உபயோகித்துச் சிறந்த முறையில் நடித்துக் காட்டலாம். கொக்கும் நண்டும், தாகமுள்ள காகம், இரண்டு நண்பர்கள் போன்ற கதைகளை இதற்குப் பயன்படுத்தலாம்.

# நான்காம் வகுப்பு

## அலகு 1- நடிப்புக் களம்

அரங்க அமைப்பின் உயர்ந்த நிலைக்கு நுழையும் செயல்பாட்டை நான்காம் வகுப்பில் அடைய வேண்டும். சத்தம் அசைவு போன்றவற்றிற்கேற்ப உடல் அசைவுகளை ஒழுங்கமைத்தல் வாழ்க்கைச் சூழல்களில் மூகநடிப்பு போன்றவற்றின் மூலம் பொருட்கள், மேக்கப் போன்றவற்றைப் பயன்படுத்தி கூடுதல் மிகைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை அறிமுகம் செய்தல். வித்தியாசமான பாடப்பகுதிகளை நாடகத்தின் மூலம் வெளியிடுதல் போன்ற பல்வேறு கற்றல் செயல்பாடுகளின் மூலம் குழந்தைகளிடம் அறிமுகப்படுத்தும் விதத்தில் செயல்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன .

### கற்றல் அடைவுகள்

- நபர்களின் சிறப்பான அசைவுகளை மீண்டும் வெளியிடுதல்.
- தாளத்திற்கேற்ப பல்வேறு அசைவுகளிலிருந்து கிடைத்த அனுபவங்களை நடிப்பாக மாற்றி வெளியிடுதல்.
- ஒலி, அசைவு நடிப்பு போன்றவற்றை ஒழுங்கமைக்கவும் பின்னணி இசைக் கேற்ப தாளலயமாக்குவதற்கும் முடிகிறது.
- இயற்கையிலிருந்து தெரிந்து கொண்ட ஒலிகளை மேடையில் பயன்படுத்துதல்.
- ஒரு கருத்தை அந்தந்த இடத்தில் கிடைக்கும் பொருட்கள் நிறங்கள் வேடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி குழுவாக நடித்தல்.
- எளிய நாடகங்கள் நடித்தல்
- எளிய பிரச்சினைகளைக் குழுவாக வெளியிடுதல்.
- உரையாடல் மூலமும், ஒலி ஒழுங்கமைப்புடனும் கதாப்பாத்திரங்களை வெளியிடுதல்.
- தொடர் நிகழ்ச்சி ஒன்றை சப்த சங்கீத பின்னணியை உபயோகித்து ரேடியோ நாடகமாக வெளியிடுதலும் மதிப்பிடுதலும்.
- ஒரு நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் ஏற்படுத்துவதற்கு வாய்ப்புள்ள நிகழ்ச்சிகளை ஆலோசித்து கண்டடைந்து அதை வெளியிடுதல்.
- கதாப்பாத்திரங்களின் தன்மை காட்சியமைப்பு பொருத்தமான உரையாடல் மேக்கப், இடம் போன்றவற்றை கவனத்தில் கொண்டு வெளியிடுதல்.
- மொழியிலும் பிற விசயங்களிலும் பாடத்துடன் தொடர்புடைய நபர்கள், சம்பவங்கள், பிரச்சினைகள் கருத்துகள் போன்றவற்றை நாடக வடிவில் வெளியிடுதல்.

## கருத்து அறிவு

- அசைவிலும், பாவனையிலும் தனி வேறுபாடு உள்ளது.
- இயல்பான குறும்புகள் ஆளுமையின் சிறப்புத் தன்மைகளாகும்.
- தாளத்துடனான அசைவுகள் நடிப்பின் இரசிப்புத் தன்மையை வளர்க்கிறது.
- ஒலியும் அசைவும் நடிப்பும் தாளத்திற்கேற்ப சேரும் போது இரசிப்புத் தன்மை டுகிறது.
- பின்னணி குரல்களுக் கேற்ப நடிப்பைக் கட்டுப்படுத்தும் திறன் பெறுதல்.
- இயற்கையில் பல்வேறு ஒலிகள் உள்ளன.
- இத்தகைய சத்தங்களை பின்னனி இசையாகப் பயன்படுத்தலாம்.
- பொருட்கள் நிறங்கள், வேடங்கள் போன்றவற்றை சேர்க்கும் போது நடிப்பு கூடு தல் சிறப்புடையதாகிறது.
- கிடைத்த பொருட்களைக் கதாப்பாத்திரத்திற்குத் தேவையான பொருட்களாக உப யோகிக்கும் திறன்.
- நாடக விளையாட்டுகளில் ஈடுபடும் திறன்
- குழுவாகச் செயல்படுவதற்கான திறன்.
- அன்றாய வாழ்க்கையில் நாம் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.
- வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ப நடத்தை முறைகளில் பயிற்சி பெறும் திறன்.
- உரையாடலில் ஒலி ஒழுங்கமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.
- ஒவ்வொரு கதாபாத்திரத்திற்கும் தனி ஆளுமை உள்ளது.
- பாவனை அசைவுகளின் மூலமும் உரையாடல் மூலமும் ஆளுமையின் தனித் தன்மைகளை வெளிப்படுத்த முடியும்.
- ஒலி ஒழுங்கமைப்புடன் கதாப்பாத்திரங்களை வெளிப்படுத்தும் திறன்.
- ஒலி ஒழுங்கமைப்பின் வழியாக மட்டுமே கருத்துப் பரிமாற்றம் செய்யமுடியும்.
- சைகைகளின் உதவியில்லாமல் உரையாடல்களை வெளியிடும் திறன்
- நாடகத்தின் தனித்தன்மையை மனதில் கொண்டு எளிய நாடகங்களைத் தயாரிக்கும் திறன்
- அரங்க அமைப்புடன் தொடர்புடைய அடிப்படை உண்மைகள்
- கதைகள், கவிதைகள், வாழ்க்கை வரலாறு போன்றவற்றில் நாடகத்தின் கூறுகள் உள்ளன.
- இவற்றைப் பகுப்பாய்வு செய்து நாடகமாக்குவதற்கான ஒரு நிகழ்ச்சியை பகுப் பாய்வு செய்து அதன் காரணங்களும் கண்டுபிடிக்கும் திறன்.
- உருவாக்கும் திறன்

## செயல்பாடு–1 : கதை சொல்லி நடிக்கலாம்

பல்வேறு செயல்பாடுகளின் மூலம் தாளம் ஒலி போன்றவற்றைக் கவனிக்கவும். போலச் செய்வதற்கான வாய்ப்புகள் 1, 2, 3 வகுப்புகளில் பல்வேறு செயல்பாடுக ளின் வாயிலாக குழந்தைக்குக் கிடைத்திருக்கிறது. தாளலயத்துடனான அசைவுகள், வாழ்க்கைச் சூழல்களிலிருந்துள்ள தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சந்தர்ப் பங்களின் போலச் செய்தல், குழுசெயல்பாடு, உயிரினங்களின் மனிதர்களின் தனித் தன்மை வாய்ந்த அசைவுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு செய பாடாகுமிது.

- குழந்தைகளுக்குத் தெரிந்த ஒருகதையின் போலச் செய்தல் முலமே செயல் பாடுகளைத் தொடங்க வேண்டும். கற்றல் செயல்பாடுகளின் தொடக்கம் என்ற

முறையில் ஆசிரியர் ஒரு குடத்தில் பல்வேறு அடுக்குகளிலுள்ள எண்களை எழுதிப் போடுகிறார். குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் எண்கள் கிடைப்பதற் கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

- தனியாகவும், குழுவாகவும் போலச்செய்யவும், வெளியிடுவதற்கும் வாயப்புள்ள சந்தர்ப்பங்கள் வரும் விதத்திலுள்ள ஒரு கதையை வகுப்பில் வெளியிடுதல். (ஆமையும் முயலும், மண்ணாங்கட்டியும் கரியிலையும் போன்ற கதைகளை உப யோகப்படுத்தலாம்) கதையின் உண்மையான பின்னணியை மாற்றலாம். உதார ணமாக மண்ணங்கட்டியும் கரியிலையும் காசிக்குப் போகும் வழியில் பஸ்சிலும் ஆட்டோவிலும் பயணம் செய்வதாகவும் ஹோட்டலில் சென்று டீ குடிப்பதாக வும் கதையின் கருத்தில் மாற்றம் செய்வது குழந்தைகளிடம் ஆர்வத்தையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும்.
- கதை தொடர்ந்து கொண்டிருக்கும் போது ஆசிரியர் முன்னரே உறுதி செய்து வைத்திருந்த ஒரு எண்ணை சத்தமாக கூறுதல். உதாரணமாக 3 என்ற எண்ணை கூறும் போது 3 என்ற எண் கிடைத்த குழந்தைகள் குதித்தெழுந்து ஆசிரியரின் கட்டளைப்படி காற்றாகவும் மழையாகவும் மாறவேண்டும். பிற குழந்தைகள் கதை நிகழ்விற்கேற்ற விதத்தில் அதனுடன் பிரதிபலிக்க வேண்டும் ( காற்று வரும் போது ஆடுதல், ஆட்டோ ரிக்ஷாவில் ஏறுதல்)
- அனைவரும் கலந்து கொள்ளும் முறையில் இந்தச் செயல்பாட்டைக் கொண்டு செல்ல வேண்டும். இயற்கை நிகழ்ச்சிகள், வாழ்க்கைச் சூழல்கள் போன்றவற்றை சப்தம் சலனம் போன்றவற்றின் நுண்ணிய அம்சங்களுடன் வெளியிடுவதற்கான வாய்ப்புகள் உண்டாகும் விதத்தில் செயல்பாடுகளை வரிசைப்படுத்த வேண் டும். இவ்வாறான செயல்பாடுகளுடன் குழந்தைகள் ஒருவருக்கொருவரும், ஆசி ரியர் உதவியுடனும் எளிய முறையிலான மதிப்பீடும் செய்யலாம். அத்துடன் சந் தப்பத்திற்கு ஏற்ப குழந்தைகளை உற்சாகப்படுத்தி நடிக்க வைக்கவும் மறக்கக் கூடாது.

## செயல்பாடு –2 ; இசை நாற்காலியில் தோற்றவர் நடிக்கிறார்

மனித சமூகம் தனித்தன்மையுள்ள வேறுபட்ட தனித்தன்மை வாய்ந்த கூட்டமா கும். பாட்டி, காவலர், போஸ்ட்மேன், பஸ் கண்டக்டர் போன்றவர்கள் வெவ்வேறு அசைவுகளும் பழக்க வழக்கமுள்ளவர்களுமாவார்கள். மனிதர்களை மாதிரியாக்க லாம். சமூகத்தில் தனித்தன்மை வாய்ந்த சேட்டை உள்ளவர்களை போலச் செய்து வெளியிடுவதற்கு உதவிகரமான ஒரு செயல்பாட்டை குழந்தைகளுக்கு அறிமுகப் படுத்த வேண்டும்.

- எந்த வயதினருக்கும் ஆவேசமுண்டாக்கும் ஒரு விளையாட்டாகும் இசை நாற் காலி. இதில் சிறயதொரு மாற்றம் ஏற்படுத்தி வகுப்பில் விளையாட வேண்டும். வகுப்பிலுள்ள மொத்தம் குழந்தைகளில் ஒருவரைக் குறைத்து நாற்காலிகளை வட்டமாக போட வேண்டும். ஒரு நாற்காலியை வட்டத்திற்கு வெளியில் போட வேண்டும். பாட்டிற்கேற்ப விளையாட்டு நடக்கும் போது வெளியேறும் நபர் வெளியிலுள்ள நாற்காலியில் உட்கார வேண்டும். வெளியிலுள்ள நாற்காலியு டன் ஒரு நாற்காலியை சேர்க்க வேண்டும்.
- பல்வேறு சேட்டைகளுள்ள மனிதர்களுடைய ( போலிஸ், போஸ்ட் மேன் முத லியவர்) பெயர் எழுதிய பேப்பர் துண்டுகளை பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள

குடத்திலிருந்து, வெளியேற்றப்பட்ட குழந்தைகள் ஒன்றை எடுத்து அதில் எழுதப்பட்ட கதாப் பாத்திரத்தை நடித்துக் காட்ட வேண்டும். எல்லா குழந்தைகளுக்கும் வாய்ப்பு கிடைக்கும் முறையில் இந்தப் போட்டியை நடத்த வேண்டும். வெளியில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் உற்றுநோக்கவும், மதிப்பிடவும் செய்ய வேண்டும். ஆசிரியர் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப ஈடுபடவும் விளையாட்டின் இயல்பான சூழல்.

## செயல்பாடு –3 : பெயர் சொல்லலாம், கூட்டுச் சேரலாம்

அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் பழக்க வழக்கங்களை ஒழுங்கமைப்பதன் மூலம் சமூக வாழ்க்கையில் கருத்துப் பரிமாற்ற செயல் சிறந்த முறையில் நடைபெற உதவும் இத்தகைய வாழ்க்கைச் சூழலை உற்றுநோக்கவும், வெளியிடுவதற்குமான வாய்ப்பைக் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். வாழ்க்கைச் சூழலில் போலச் செய்தல் போன்ற இவ்வாறான செயல்பாடுகள் இத்தருணத்தில் சிறப்பானதாக இருக்கும்.

*நிலை–1*

- குழந்தைகள் வகுப்பில் அங்குமிங்கும் நடக்கட்டும். நடப்பதன் தாளத்தையும், சுவடு வைப்பதையும் ஆசிரியர் தீர்மானிக்கலாம். நடந்து கொண்டிருக்கும் போதே இடையிடையே ஆசிரியர் சில எண்களையும் அதனுடன் சில காரியங்களையும் சொல்லலாம். உதாரணமாக 3 ஆட்டோரிக்ஷா என்று கூறும் போது அடுத்தடுத்து நிற்கும் குழந்தைகள் 3 பேர் வீதம் ஆட்டோரிக்ஷாவைப் போல் அசையாமல் நிற்க வேண்டும். ஆட்டோரிக்ஷாவின் பல அசையா மாதிரிகள் நிறைந்து நிற்கும். சிறிது நேரத்திற்குப் பிறகு ஆசிரியர் கைதட்டும் போது மீண்டும் நடையை தொடரலாம்.
- குறிப்பிட்ட இடைவேளைகளில் எண்ணையும் காரியங்களையும் சொல்ல வேண்டும். சந்தை, சமையலறை, மருத்துவமனை, பள்ளி, அலுவலகம் போன்றவற்றைக் குழந்தைகளின் நடிப்பிற்காகப் பயன்படுத்தலாம்.
- இவ் விளையாட்டில் வித்தியாசம் ஏற்படுத்துவதற்காக நடையின் போக்கை மாற்றலாம். தாவித் தாவி நடத்தல், வலப்பக்கமாக திரும்பி நடத்தல், நடந்து கொண்டிருக்கும் போதே வித்தியாசமான முறையில் கைவீசி நடத்தல் போன்றவை குழந்தைகளிடம் இரசிப்புத் தன்மையை ஏற்படுத்தும்.
- விளையாட்டின் அடுத்த கட்டத்தில் இதே காட்சிகளை நடித்தும் காட்டலாம். ஆட்டோரிக்ஷாவைப் போல அசையாமல் நிற்பதற்குப் பதிலாக ஓடுவது போலவும் காட்டலாம். குளக்கரை, பூந்தோட்டம் போன்ற இயற்கையுடன் தொடர்புடைய மாதிரிகளை உருவாக்குமாறு குழந்தைகளிடம் அறிவுறுத்தலாம்

*நிலை–2*

- கடினமான கருத்துகளை போன்று எளிய கருத்துகளையும். முன்னரே பிரித்த குழுக்களுக்கு அன்பு வறுமை வறட்சி கருணை போன்ற கருத்துகளை கொடுக்கலாம். பயிற்சிக்குப் பின்னர் கருத்துத் தெளிவு ஏற்படும் விதத்தில் ஆக்கலாம். சுதந்திரமாக உள்ள ஒரு குழு இவர் வெளிப்படுத்தும் கருத்து என்னவென்று கூறவேண்டும். கருத்துப் பரிமாற்ற முறை குழந்தைகளின் விவாதத்தின் வாயிலாகவும் ஆசிரியரின் உற்றுநோக்கல் மூலமும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

*நிலை-3*

- கருத்துகளை----தொடர்ந்து மூகநடிப்பாகவும் அதனை நடித்துக் காட்டலாம். தேவையான பயிற்சிக்குப் பிறகு குழு அடிப்படையில் குழந்தைகள் மேடையில் வெளியிடட்டும்.

*நிலை-4*

- பொருத்தமான பின்னணி இசையின் உதவியுடன் ( வயலின், தபலா, புல்லாங்குழல் இவற்றில் ஏதாவது) மூகநடிப்பை மேம்படுத்தி வெளியிடலாம். அமைதியாகவும் இசையின் பின்னணியிலும் வெளியிடும் போதுள்ள வேறுபாட்டை குழந்தைகள் கண்டுபிடிக்கட்டும்.
- பல்வேறு கட்டங்களில் பங்களிப்பு, நுணுக்கமான நடிப்பு, மேடையில் நடிக்கும் திறன், தாள அசைவு ஒற்றுமை போன்றவற்றை குழந்தைகளின் மொத்த செயல்பாட்டையும் ஆசிரியர் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

## செயல்பாடு -4:பொருட்களும் வெளியீடுகளும்

சிறந்த முறையிலான கருத்துப் பரிமாற்றத்தை பொதுவான உரையாடலுக்கு அப்பாற்பட்டு பொருத்தமான உடல் அசைவுகள் உதவியாக இருக்கும். உபகரணங்களை உபயோகிப்பது கருத்துகளை சரியாக வெளியிடுவதற்கும் கடினமான கருத்துகளை வெளியிடுவதற்கும் உதவியாக இருக்கும். சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு கருத்துகளை கற்பனை செய்யும் மனிதனின் திறனை நாடகங்களில் தாராளமாக உபயோகிக்கலாம். இத்திறன் குழந்தைகளிடம் அதிகமாக காணப்படுகிறது. வயது செல்லும்தோறும் பிற தலையீடுகள் குழந்தைகளின் இத்தகைய திறன்களை குறைத்துக் கொண்டு வருகிறது. இதனை சரியாக கண்டறிந்து இத்திறனை மேம்படுத்த வேண்டும். அன்றாட வாழ்க்கையிலும், வகுப்பறைச் செயல்பாடுகளிலும், நாடக வெளியீட்டிலும் உபயோகம் தேவையாகும். இவ்வகையான காரியங்களை குழந்தைகளிடம் அறிமுகம் செய்வதற்கான செயல்பாடே கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- குழந்தைகள் எளிதாகக் கையாளும் பொருட்களை வரிசைப்படுத்த வேண்டும். கம்பு, பேனா, துண்டு, வேஷ்டி பொம்மைகள் போன்றவற்றை இதற்காக ஒழுங்குபடுத்தி வைக்க வேண்டும். குலுக்கல் முறையில் ஒவ்வொரு குழுவிற்கும் அடுக்கி வைக்கப்பட்டுள்ள பொருட்களிலிருந்து ஒவ்வொன்றைக் கொடுக்க வேண்டும். கிடைத்த பொருளை அதேபடி உபயோகிக்கிறார்களா என்று குறிப்பாக கவனிக்க வேண்டும். தடி கிடைத்தால் அதை வாள், மைக் ஸ்டேண்ட், பைக்கின் ஹேண்டில் பார் போன்றவையாக பயன்படுத்தலாம். குழுவிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைத்த பொருளை வித்தியாசமான முறையில் பயன்படுத்த வேண்டும். ஒருமுறை வந்த பொருள் மீண்டும் வராமல் இருக்குமாறு அறிவுரை கொடுக்க வேண்டும்.
- ஒவ்வொருவரும் நடித்துக் காட்டும் போது பிற குழந்தைகள் அவர்கள் நடித்துக் காட்டியது என்னவென்று பிரித்தறிய வேண்டும். தொடர்ந்து இதனுடன் தொடர்புடைய விவாதம் நடத்தி மேலும் மேம்படுத்தவும் பொருத்தமான நேரத்தில் உபயோகிப்பதற்கான அறிவுரையையும் கொடுக்க வேண்டும்.

## செயல்பாடு –5: நாடகத்தின் மூலம் படிக்கலாம்

பாடப்பகுதிகளை நாடக வடிவத்தில் வெளியிடுவதால் பாடப்பகுதிகளில் தெளிவும் நாடக வெளியீட்டின் பல்வேறு கட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக இருக்கும். இவ்வாறான செயல்பாட்டையே திட்டமிட வேண்டும்.

<u>மூகநடிப்பு</u>

- பாடப்பகுதிகளும் நாடக வெளியீட்டையும் ஒன்றாக அறிமுகம்படுத்தும் விதத்தில் இந்த செயல்பாட்டை ஒழுங்கமைக்க வேண்டும். பாடப்புத்தகத்திலுள்ள எந்தப் பகுதியை வெளியிட வேண்டுமென்று குழந்தைகளே கலந்துரையாடி கண்டுபிடிக்கட்டும். இதற்காக குழந்தைகளை ஐந்து குழுக்களாக பிரிக்க வேண்டும். குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப கவிதை, புவியியல், கணிதம், அறிவியல், ஆங்கிலம் போன்ற பாடப்பகுதிகளாகப் பிரித்துத் துண்டுப் பேப்பரில் எழுதி குலுக்கல் முறையில் குழுக்களைப் பிரிக்கவேண்டும். பாடப்பகுதிகளை தேர்ந்தெடுக்கும் போது ஆசிரியரின் சரியான வழிகாட்டுதல் இருக்க வேண்டும்.
- பாடப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு காட்சிப்பாடங்கள் வடிவமைக்கும் போது பல்வேறு நிலைகள் வாயிலாக கடந்து செல்ல வேண்டியுள்ளது. காட்சி வெளிப்பாட்டைக் குறித்துத் தொடக்க கலந்துரையாடல்கள் குழுவிற்குள் நடத்தியும் குழந்தைகள் பொதுவாக வெளியிடவும் வேண்டும். பொது விவாதத்தில் உயர்ந்து வருகின்ற அறிவுறுத்தல்களை உட்கொண்டு முன்னரே தயாராக்கிய காட்சிபடங்கள் புனரமைக்க வேண்டும். இந்த காரியங்களில் எல்லாம் ஆசிரியரின் மேற்பார்வையும் அறிவுறுத்தல்களும் இன்றியமையாததாகும். பாடப்பகுதியிலுள்ள உள்ளடக்கம் பரிமாற்றம் செய்யும் விதத்தில் குழந்தைகளின் திட்டமிடல் ஆசிரியர் கவனிக்க வேண்டும்.
- மறு சீரமைப்பு செய்த நாடக பாடங்களை மீண்டும் வெளியிட்டு கலந்துரையாட வேண்டும். இதற்குப் பின் உரையாடல் உபயோகிக்க வேண்டியவைற்றை தீர்மானிக்க வேண்டும். முன் குழந்தைகள் குழுவாகப் பிரிந்து பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பளிக்க வேண்டும்.